வரு. 75 இல. 49 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 டிசம்பர் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
December 10 Sunday, 2023




/ Thinakaran.lk / ThinakaranLK













# தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் ரூ. 1,700

## அதிகரிக்கப்படும் சம்பளம் குறித்து 31ஆம் திகதிக்கு முன் அறியத்தரவும்

### பெருந்தோட்டக் கம்பனி பிரதானிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



**சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கூட்டு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளுமாறும் தோட்டத் தொழிலாளர்கள் கோரும் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 1,700 ரூபாவை வழங்குதல் அல்லது அதிகரிக்கப்படும் சம்பளம் தொடர்பாக டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறும்

06

# சட்டத்துக்கு முரணாக 200 சொகுசு வாகனங்கள் இறக்குமதி

# அரசுக்கு ரூ. 500 கோடி இழப்பை ஏற்படுத்திய வர்த்தகம் அம்பலம்

அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய சுமார் 500 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரித் தொகையை இல்லாமல் செய்து, நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட 200 சொகுசு வாகனங்கள் தொடர்பான விசாரணையை ஆரம்பித்துள்ளதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது.




சட்டத்துக்கு முரணான இந்த வாகன இறக்குமதி வர்த்தகம் தொடர்பாக கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் இரகசிய மற்றும் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் (08) அறிவித்தனர்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் கணினி தரவுக் கட்டமைப்பில் தவறான தகவல்களை உட்புகுத்தி, இலங்கை சுங்கத்தின் முறையான அனுமதியின்றி, இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 200 சொகுசு வாகனங்கள் தொடர்பான விசாரணையின் போது, ஒவ்வொரு வாகனமும் இலங்கைக்கு வெவ்வேறு பொருட்கள் மற்றும் ஏனைய வகை வாகனங்களைக் கொண்டுவரும் போர்வையில் இறக்குமதி செய்யப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

KA 1141 இலக்கத்தின் கீழ் முறையற்ற முறையில் பதிவு செய்யப்பட்ட டொயோட்டா ரக ஜீப் மற்றும் GF 8409 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட லேண்ட் குரூஸர் ரக ஜீப் இறக்குமதி செய்யப்பட்டு, சுங்க மோசடியில் ஈடுபட்டமை காரணமாக இலங்கை அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டிய 500 கோடி ரூபா வரி இழக்கப்பட்டுள்ளதாகவும்,

06

தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு

## அதிகார சபைச் சட்டம் அடுத்த ஆண்டு முதல் நடைமுறைக்கு

### சட்டமூலம் தயாரிப்பு நடவடிக்கை நிறைவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டத்தை அடுத்த வருடம் நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். சட்டமூலம்

06

## மின் கட்டண திருத்தம் ஜனவரியில் செய்யப்படும்

### மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் சபையில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனவரி மாதம் முதல் மின் கட்டணத்தில் திருத்தம் செய்யப்படுமென, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதேவேளை, மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான ஆலோசனையை எதிர்க்கட்சியினர் முன்வைக்க வேண்டுமெனவும், அமைச்சர் கஞ்சன விஜேசேகர வலியுறுத்தினார்.



மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில்

06

## ஐக்கிய அரபு இராச்சியத்தில் விரைவில் பௌத்த விகாரை

### அமைச்சர் அலி சப்ரியின் யோசனைக்கு இணக்கம்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் பௌத்த விகாரையொன்றை நிர்மாணிப்பதற்காக இலங்கையுடன் இணைந்து செயற்பட ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் எச்.எச்.ஷேக் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யான் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணிபுரியும் இலங்கையர் உட்பட அனைத்து பௌத்த சமூகத்தினர் சார்பாக ஐக்கிய அரபு இராச்சியத்தில்

06

### எங்கள் கருத்து...

## சிறுவர் உரிமைகளில் விழிப்புணர்வு அவசியம்!

சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக இலங்கையில் மாத்திரமன்றி, உலகின் பெரும்பாலான நாடுகளிலும் கடுமையான சட்டதிட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது அடிப்படை உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சமவாயத்திலும் கண்டிப்பான விதிமுறைகள் உள்ளன. ஐ.நாவில் அங்கம் வகிக்கின்ற நாடுகள், சிறுவர் உரிமைகள் தொடர்பான விதந்துரைகளை கட்டாயமாகக் கடைப்பிடிப்பதும் முக்கியமாகும்.

இவ்வாறான விதிமுறைகள் நடைமுறையில் உள்ள போதிலும், உலகின் பெரும்பாலான நாடுகளில் சிறுவர்களுக்கு எதிரான சம்பவங்கள் தொடர்ந்தபடியே உள்ளன. இலங்கையும் அதற்கு விதிவிலக்கு அல்ல. அன்றாடம் ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளில், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக ஒரு செய்தியையாவது காணாமல் இருக்க முடிவதில்லை.

எமது நாட்டிலும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாக கண்டிப்பான சட்டவிதிகள்

06

ஆறு மாத காலத்தினுள்

## 'லன்ச் சீற்' பாவனைக்கு பதிலாக மாற்றுத் திட்டம்

### பரிந்துரைக்குமாறு பணிப்பு

உணவுப் பொதிகளுக்கான லன்ச் சீற் (Lunch Sheet) பாவனையை தடை செய்து, அதற்குப்

06



**ஜனாதிபதியின் யோசனையை வரவேற்கிறோம்**

## சம்பள முன்மொழிவு என்பது தற்காலிக தீர்வாகவே அமையும்

### எமக்கு நிரந்தர தீர்வு அவசியமென்கிறார் அமைச்சர் ஜீவன்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாள் சம்பள முறைமை மாற்றப்பட வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு நியாயமான வருமானமும் இலாபமும் கிடைக்கக்கூடிய வகையில் புதிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை தாம் முன்னெடுப்பதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான

06



## வருட இறுதிக்குள் அனைத்து விவசாயிகளுக்கும் நட்டஈடு

### கோழி இறைச்சி, முட்டை விலை அடுத்த மாதம் மேலும் குறையும்: -மஹிந்த அமரவீர



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்த வருட இறுதியினுள் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள அனைத்து நட்டஈடும் வழங்கி நிறைவு செய்யப்படுமென, விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன், பண்டிகைக் காலமென்பதால் சற்று விலை அதிகரித்துள்ள கோழி இறைச்சி மற்றும் முட்டை விலை அடுத்த

06

2ஆவது கட்ட வடக்கு ரயில் பாதை புனரமைப்பு

## கொழும்பு கோட்டை–KKS ரயில் 06 மாதங்கள் நிறுத்தம்

கொழும்பு, கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்கான ரயில் சேவை எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி 7ஆம் திகதி முதல் 6 மாத காலத்துக்கு தற்காலிகமாக

06






ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

**2024 ஆம் ஆண்டுகான வழங்குநர்களை பதிவுசெய்தல்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை இடம் 2024 ஆம் ஆண்டுக்காக பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக பதிவு செய்வதற்கு விரும்புகின்ற உற்பத்தியாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உற்பத்திகள் / சேவைகளின் பிரிவுகள் | |
|---|---|
| **1.0** | **அலுவலக உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள்** |
| 1.1 | அலுவலக பொருட்கள் - பேனை, பென்சில், கடித உறை, ஸ்டேப்லஸ், தட்டச்சு காகிதம், நிழற்பிரதி காகிதம், தூசி தட்டும் துணி, கோப்பு அட்டை, bulldog clips, கணிப்பான் முதலியன. |
| 1.2 | கணினி மற்றும் தொடர்புடைய உருப்படிகள், கணினி வன்பொருட்கள் மற்றும் கணினி உபகரணங்கள், மடி கணினி, UPS, எலிப்பொறி மற்றும் விசைப்பலகை, power adapter, அச்சுப்பொறி மற்றும் அச்சுப்பொறி உபகரணங்கள் (Dot matrix, Laser Jet Printers, Colour Printers, Photoconductors முதலியன) |
| 1.3 | தொலைநகல் இயந்திரங்கள், நிழற்பிரதி இயந்திரங்கள், கூட்டல் இயந்திரம், முகம்/ கைரேகை ஸ்கேன் வருகை பதிவு இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் முதலியன |
| 1.4 | தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு தீர்வுகள், கணினி நுகர்பொருட்கள் (அச்சுப்பொறி, டோனர், ரிப்பன்ஸ், பென் டிரைவ், Recordable CDs/DVDs முதலியன.) |
| 1.5 | மின் உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (குளிர்சாதனப்பெட்டிகள், மின்விசிறிகள், வளிச்சீராக்கிகள், முதலியன) |
| 1.6 | செவிப்புல-கட்புல உபகரணம் மற்றும் தொலைத்தொடர்பு உபகரணம் (கெமராக்கள், வீடியோ கெமராக்கள், திரைபெருக்கி மற்றும் ப்ரொசிங் இயந்திரங்கள், வானொலி, ஒலிநாடா, தொலைபேசி அமைப்புகள் மற்றும் தொலைபேசி உபகரணம், முதலியன) |
| 1.7 | அலுவலக தளபாடங்கள் - மரப்பலகை/உருக்கு/∴பைபர் (மேசை, கதிரை, சிற்றலுமாரி, அலுமாரி, நிலைத்தட்டு முதலியன) |
| 1.8 | திகதி முத்திரை, இறப்பர் முத்திரை, பெயர் பலகை (அலுமினியம்/பிளாஸ்டிக்/பித்தளை முதலியன) |
| 1.9 | சிற்றூழியர்களுக்கான சீருடை பொருட்கள் (சட்டை மற்றும் காற்சட்டை பொருட்கள் மற்றும் காலுறை, சாரி) |
| **2.0** | **அலுவலக உபகரணங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்** |
| 2.1 | அலுவலக உபகரணங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் (கணிப்பான், தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம், கூட்டல் இயந்திரம், முகம்/ கைரேகை ஸ்கேன் வருகை பதிவு இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணம் முதலியன.) |
| 2.2 | வளிச்சீராக்கிகளின் பழுதுபார்த்தல், சேவை வழங்கல் மற்றும் பராமரிப்பு |
| 2.3 | அச்சுப்பொறி, கணினி பழுதுபார்த்தல் மற்றும் கணினி சேர்வர் பராமரிப்பு |
| 2.4 | அலுவலக தளபாடங்களை (மரப்பலகை/உருக்கு/ இரும்பு) பழுதுபார்த்தல் மற்றும் குஷன் இடுதல் |
| 2.5 | தொலைபேசி பழுதுபார்த்தல் |
| **3.0** | **மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்கல்** |
| 3.1 | வாகனங்களுக்காக டயர், டியூப் மற்றும் பெட்டரி, வீல் எலைன்மன்ட்ஸ் மற்றும் அஜெஸ்மன்ட்ஸ் |
| 3.2 | வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்காக உதிரிப்பாகங்கள் |
| 3.3 | சைலென்சர், ரேடியேட்டர் பழுதுபார்த்தல் |
| 3.4 | வாகனங்களின் Upholstery வேலைகள் (வாகன இருக்கை மெத்தை, இருக்கை உறை, இறப்பர் விரிப்பு மற்றும் கென்வெஸ் உறை) |
| 3.5 | வாகன நன்னிலைப்படுத்தல்கள் (தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகத்திற்காக ஒவ்வொரு நிறுவனங்களில் இருந்தும் 10 கிலோமீற்றருக்கு உட்பட்டது, கொழும்பு, யாழ்ப்பாணம், குருநாகல், மாத்தறை, கண்டி) |
| 3.6 | மோட்டார் வாகன வளிச்சீராக்கி பழுதுபார்த்தல் |
| 3.7 | வாகன மின் பழுதுபார்த்தல் |
| 3.8 | மோட்டார் வாகனங்களின் டிங்கரிங் மற்றும் வண்ணப்பூச்சு |
| 3.9 | மோட்டார் வாகன பழுதுபார்த்தல் கராஜ் - 20 கி.மீ. இற்குள் |
| **4.0** | **விளம்பரம், ஊக்குவிப்பு பணிகள் மற்றும் அச்சுப் பொருட்கள்** |
| 4.1 | விளம்பரம்/ வெளிப்புற விளம்பரம் (பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், LED பெனல், பெயர் பலகைகள், சுவரொட்டிகள், முதலியன) |
| 4.2 | ஓடியோ/வீடியோ ஆவணங்கள் தயாரிப்பு |
| 4.3 | கோட்பாட்டு மேம்பாடு, வடிவமைப்பு கலை வேலைகள், சஞ்சிகைகள், பதாகைகள், அழைப்பு/ வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை தயாரித்தல் மற்றும் அச்சு (உள்நாடு/ வெளிநாடு) |
| 4.4 | கண்காட்சி/ கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறைகளுக்கான ஒலி அமைப்புகள் (ஒலிவாங்கி, ஓடியோ பதிவு வசதி, ஒலிபெருக்கி முதலியன.) |
| 4.5 | அச்சு மற்றும் புத்தகம் கட்டல் (ரசீது புத்தகம், புத்தகம், பதாகை மற்றும் சுவரொட்டி) |
| 4.6 | வர்த்தக நாமம் (கூட்டு நிறுவன வர்த்தக நாமம்/ முகவர் வர்த்தக நாமம்) |
| 4.7 | ஊக்குவிப்பு உருப்படிகள் (கிண்ணங்கள், கேடயங்கள், பதக்கங்கள், டீசேர்ட், பைகள், பரிசுகள், முதலியன) |
| **5.0** | **ஏனைய சேவைகள்** |
| 5.1 | ஆலோசனை சேவைகள் (வர்த்தக மேம்பாடு, வர்த்தகக்குறி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் ஆய்வு, உற்பத்தி மேம்பாடு, சந்தைப்படுத்தல் போன்றவை, பொதுமக்கள் உறவுகள், சமூக ஊடக சந்தை) |
| 5.2 | நிகழ்ச்சி முகாமைத்துவம்/ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல் |
| 5.3 | E- வர்த்தகம் E- வணிகம், E- கட்டண வசதிகள், E- சந்தைப்படுத்தல் வசதிகள் மற்றும் முதலியன |
| 5.4 | நிலையம் நிறுவுதல், ஒளியூட்டல் மற்றும் பராமரிப்பு (வடிவமைப்பு, நிறுவுதல் மற்றும் பராமரித்தல்) |
| 5.5 | மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்தில் இருந்து தமிழ், ஜப்பான், சீனம் மற்றும் ஏனைய வெளிநாட்டு மொழிகள்) |
| 5.6 | அலுவலக பாதுகாப்பு |
| 5.7 | அலுவலக பிரித்தொதுக்கல், உட்புற வடிவமைப்பை புதுப்பித்தல் மற்றும் நிர்மாணங்கள் (வனைப்பொருள், நிறம்பூசுவோர், புனைவு, இருக்கைகளுக்கு மெத்தையிடல் முதலியன) |
| 5.8 | மின்சாரம் மற்றும் தொலைபேசி கம்பியிணைப்பு (சர்க்யூட் பிரேக்கர்ஸ், மின்குமிழ், சுவிட்ச் பலகை முதலியன) |
| 5.9 | அலுவலக போக்குவரத்து சேவை, மோட்டார் வாகனங்கள் வாடகை (கார், வேன், பஸ் போன்றவை) |
| 5.10 | தகவல் தொழில்நுட்ப மென்பொருள் தீர்வு (செயற்பாட்டு அமைப்பு, SW அனுமதிப்பத்திரம், தரவுத் தளம், பயன்பாட்டு மென்பொருள், வணிக நுண்ணறிவு, பணிப்போக்கு தீர்வு, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தீர்வு, கிளவுட் தீர்வு முதலியன.) |
| 5.11 | இணையதளம், பிரோட்பாண்ட், கைபேசி தீர்வு |
| 5.12 | தளபாடங்கள் மற்றும் சரக்கு பகிர்தல் - வான், கடல் மற்றும் பொதிச் சேவை |
| 5.13 | அரங்கியற் கலைகள் - நடனக் குழு மற்றும் ஏனைய அரங்கியற் குழு (உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகள் முதலியன) |
| 5.14 | பூச்சிக் கட்டுப்பாடு |
| 5.15 | நிறுவன அடையாள அட்டை தயாரித்தல் |

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை**

- மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்திற்கு பிரவேசித்து "Announcements" இன் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். உற்பத்தி/ சேவை பலதுக்காக பதிவு செய்வதற்கு ஒரு விண்ணப்பப் படிவத்தை பயன்படுத்த முடியும்.
- 2024 ஆம் ஆண்டுக்காக ஒரு உப பிரிவுக்காக 500 ரூபா மீளளிக்கப்படாத பதிவு செய்யும் கட்டணம் ஒன்றை செலுத்த வேண்டும் என்பதோடு விண்ணப்பதாரர்கள் மூலம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் இலங்கை வங்கி லேக் வியுவ் கிளையில் 306605 என்ற கணக்கு இலக்கத்திற்கு வரவு வைத்த சீட்டின் பிரதி ஒன்றை விண்ணப்பத்துடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு அனுப்ப வேண்டும். வரவு வைத்த படிவத்தின் பிரதி இன்றி அனுப்பும் விண்ணப்பங்கள் செல்லுபடியான விண்ணப்பம் என ஏற்கப்படமாட்டாது.
- பணம் செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து "2024 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 2023.12.29 ஆம் திகதி பி.ப. 3.00 க்கு முன்னர் கிடைக்குமாறு, பெறுகைப் பிரிவு, 6ஆவது மாடி, NDB – EDB கோபுரம், இலக்கம் 42, நவம் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது நேரடியாக கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**வழங்குநராக பதிவு செய்வதற்கு தகைமை அளவுகோல்**

- அனைத்து வழங்குநர்களும் வர்த்தகப் பதிவு சான்றிதழ், மாகாண சபை மூலம் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ், நிறுவன விபரம், ஆகியவற்றின் பிரதி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநராக 02 வருடங்கள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு தற்போது சேவை பங்களிப்பு அளிப்பவர்கள் விபரக் குறிப்பு ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
- வழங்குநர்கள் மூலம் குறைந்தபட்சம் 30 நாள் கடன் காலம் ஒன்றை பெற்றுத் தருவதற்கு இணங்குதல் வேண்டும்.
- வாகன நன்னிலைப்படுத்தல்கள் தொடர்பில் குறித்த கராஜ், குறித்த மாகாண சபையுடன் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**பதிவு செய்தல் மற்றும் மதிப்பீட்டு ஒழுங்குமுறை**

- பதிவு செய்தல், மதிப்பீடு செய்தல்/ மதிப்பீட்டு ஒழுங்கு முறையின் கீழ் மேற்கொள்ளப்படுவதோடு வழங்குகின்ற தகவல்கள் பிழையானது அல்லது தவறானது என கண்டறியப்பட்டால் நிராகரிக்கப்படும்.
- வழங்கல் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும்போது பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரல் மேற்கொள்ளப்படும்.
- இறுதித் திகதியை பூர்த்தி செய்வதற்கு, எதிர்பார்க்கும் அளவு மற்றும் தரத்தை பேணுவதற்கு முடியாமல்போகும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு நிறுவன வழங்குநர் பட்டியலில் இருந்து அகற்றப்படும்.
- தேவைகளுக்கு அமைய பதிவுசெய்யப்படாத வேறு வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களிடம் இருந்தும் விலைமனுக்கள் கோரல் மற்றும் வழங்கல் மற்றும் சேவையை பெற்றுக்கொள்ளும் உரிமை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை வசமானதாகும்.

தபால் மூலம் மற்றும் Promise.lk வழியாக தொடர்புடைய பிரிவுகளின் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிடம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை பொதுவாக அழைப்புகளை விடுக்கும்.
மேலதிக விபரங்களை 011 2300702 என்ற தொலைபேசி இலக்கம் வழியாக பெறுகை/ பதில் உதவி பணிப்பாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**
**NDB – EDB கோபுரம்**
**இல.: 42, நவம் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை**
**தொலைபேசி: +94112300700/ தொலைநகல்: +94112300728**
**இணையதளம்: www.srilankabusiness.com**


# ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கும் விழா



ஊடகவியலாளர்களுக்கான சிறப்பு விருது வழங்கல் விழா எதிர்வரும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு கல்கிஸை ஹோட்டலில் மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

24ஆவது தடவையாக நடத்தப்படும் இந்த வருடாந்த ஊடகவியலாளர் விருது வழங்கல் விழாவை இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

இவ்விழாவில் 36 ஊடகவியலாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதுடன், 16 ஊடகவியலாளர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், பத்திரிகைத்துறையில் நீண்டகாலமாக சேவையாற்றி வரும் ஊடகவியலாளர்கள் 5 பேருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஸ்டான்லி சமரசிங்க, எப்.எல்.டீ.மஹிந்தபால, சீதா றஞ்சனி, எஸ்.தில்லைநாதன் மற்றும் ஏ.எல்.எம்.நிலாம் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தமிழ் பத்திரிகைகளின் ஆலோசகராக இருந்த ஏ.எல்.எம்.நிலாம் மற்றும் தினகரன் பத்திரிகையின் கரவெட்டி நிருபராக இருக்கும் எஸ்.தில்லைநாதன் ஆகியோர் வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

# "PRAANA"Live in Concert 2023

இலங்கையில் உள்ள சில கிராமப்புற மருத்துவமனைகளின் மருத்துவ தேவைகளை பூர்த்திசெய்வதற்காக நிதி திரட்டுவதை முக்கிய நோக்காகக் கொண்ட "PRAANA"Live in Concert 2023" நாளை மறுதினம் 10ஆம் திகதி நெலும் பொக்குண மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் (உட்புறம்) மாலை 6.30 மணி முதல் நடைபெறும்.
உள்ளூரின் மூன்று இசைப் பிரபலங்கள் மற்றும் உள்ளூரின் பிரபலமான இசைக்குழுவின் (இலங்கையில் டிரெண்டிங் பேண்ட்) நிகழ்ச்சிகளைக் கொண்ட ஒரு உள்ளரங்க நேரடி இசை நிகழ்ச்சியாக இது அமையவுள்ளது.
உள்ளூர் சூப்பர் ஸ்டார்களான ஷிஹான் மிஹிரங்கா, உமாரியா சின்ஹவன்சா, ஜெயஸ்ரீ மற்றும் ஹாட் சொக்லேட் இசைக்குழுவினர் இணைந்து இவ்விசை நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.
இன் அண்ட் அவுட் நிறுவனம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.





உலகத் தமிழ், கலை, பண்பாட்டு கலைக்கூடத்தின் சர்வதேச தலைவர் டாக்டர் எஸ் எம் ரஷ்மீ ரூமி கொழும்பில் நடைபெற இருக்கும் மனித உரிமை நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக நேற்றைய தினம் சென்னையில் இருந்து ஏர் லங்கா விமான மூலம் கொழும்பு வந்தடைந்தார். அவருக்கு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. கிறிஸ்தவ மத போதகர் சந்துரு பெர்னாண்டா உடன் இருந்தார்.

# 'மலையகம் 200' – கட்டுரை, சிறுகதைப் போட்டியும் ஓவியக் கண்காட்சியும்

சந்திரகுமார் தமயந்தி

மலையகம் 200 மலையக மக்களின் வலியும் வாழ்வும்' என்ற ரீதியில் லண்டனில் இயங்கும் 'விம்பம்' அமைப்பினர் சிறுகதை, ஓவிய, கட்டுரைப் போட்டிகளை நடாத்தினர். இப்போட்டிகள் நடந்து முடிந்து மிகக் குறுகிய காலத்திற்குள் அதன் முடிவுகளும் அறிவிக்கப்பட்டன. அறிவிக்கப்பட்ட முடிவுகளின் படி ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு தலா ரூபாய் 50000.00, 30000.00, 20000.00 என்ற ரீதியில் பணப்பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டதோடு, தெரிவுசெய்யப்பட்ட 10 ஆக்கங்களுக்கு ஆறுதல் பரிசாக ரூபாய் 10000.00 பணப்பரிசும் வழங்கப்பட்டது. போட்டி முடிவுகளின் படி சிறுகதைப் போட்டியில் முதல் 3 இடங்களை தவமுதல்வன் (தமிழ்நாடு), எம். மகேந்திரன் (பொகவந்தலாவ), பிரமிளா பிரதீபன் (வத்தளை) ஆகியோர் பெற்றனர். அதேபோல் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசை தவச்செல்வன் சுப்ரமணியம் (டிக்கோயா), திருமதி. சந்திரகுமார் தமயந்தி (ஹட்டன்), சிவனு இராஜேந்திரன் (கொட்டகலை) மூவரும் தட்டிச்சென்றனர். ஓவியப் போட்டிகளில் முதல் இடத்தினை . ஜே. தங்கேஸ்வரன் (புசல்லாவ), திருமதி. சு.மு.ளு. குரே (பேராதனை), இரண்டாவது இடத்தையும், மூன்றாவது இடத்தை திருமதி. ஹமீரா ராஜீவ் (அக்கரைப்பற்று), திமோத்தி பிரான்ஸிஸ் (ஹட்டன்) ஆகிய இருவரும் தட்டிச்சென்றனர்.

மலையக மக்கள் மலைகள் சூழ்ந்த இப்பிரதேசத்தின் பனிக்குள்ளும் குளிருக்குள்ளும் எப்படி அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டிருந்த அடிமைச் சமூகத்தின் யதார்த்தத்தினை முழுமையாக உணர்த்தும் முகமாக வரையப்பட்டு, போட்டிக்காக அனுப்பப்பட்ட ஓவியங்கள் அனைத்தும் மலையக மக்களின் 200 ஆண்டுக்கால வாழ்வியல் நிலைகளை விளக்கும் முகமாக பல்வேறு இடங்களில் ஓவியக் கண்காட்சியை விம்பம் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். இவ் ஓவியக் கண்காட்சி கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை இலங்கையின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டன.







# விலகிச் சென்றோருக்கும் நேசக்கரம் நீட்டும் பொதுஜன பெரமுன




இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்திய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, பல சவால்களுக்கு மத்தியில் மிகக் குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற கட்சியாக வரலாற்றில் இடம்பிடிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தார்மீக மற்றும் நெறிமுறையான அரசியல் கலாசார நோக்குடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி 2016 நவம்பர் 2ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்சி உருவாவதற்கு பல அரசியல் காரணிகள் இருந்தன. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்ததையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கைகளுக்குச் சென்றது. அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு மதிப்பளிக்கும் அந்த அரசியல் சித்தாந்தத்தை கொண்டவர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆசன அமைப்பாளர் பதவி தொடக்கம் மத்திய செயற்குழு பதவி வரைக்கும் பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பலர் அப்பதவிகளிலிருந்து நீக்கப்பட்டார்கள். பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பலர் சிறையிலும் அடைக்கப்பட்டார்கள். அதன் பின்னர் ஆரம்பத்திலிருந்தே ஸ்ரீ.ல.சு கட்சியில் இருந்து வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு விசுவாசமான அதிகார முகாம் தமக்கு அரசியல் செய்வதற்கு பொருத்தமான இடம் தேவை என்ற கோரிக்கையை முன்வைத்தது. அதன் அடிப்படையில் 2016ஆம் ஆண்டில் மக்களிடமிருந்து வந்த கோரிக்கைக்கு அமைவாக தெற்காசியாவிலேயே அரசியல் ஆளுமையான மகிந்தராஜபக்ஷவின் தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உருவானது. இந்தக் கட்சியை உருவாக்குவதற்கான முன்மொழிவும் தேவையும் நாட்டைச் சுற்றி வலம் வரும் மஹிந்த காற்றாக மாற்றமடைந்தது. மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் அதிகார முகாமுடனேயே அரசியல் செய்யவே வேண்டும் என்ற தேவை இந்த தரப்புக்கு இருந்தது.

மக்களிடமிருந்து இந்த யோசனை தோன்றினாலும் இந்த சக்தியை ஏற்பாடு செய்யும் மிக கஷ்டமான பணிகளை மேற்கொண்டது பெஷில் ராஜபக்ஷவாகும். நல்லாட்சி அரசாங்கத்தினால் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெசில் ராஜபக்ஷ சிறையில் இருந்து கொண்டே இந்த கட்சியைக் கட்டியெழுப்பும் திட்டங்களை முன்னெடுத்தார். சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்ததன் பின்னர் கட்சியை கட்டியெழுப்பும் மிகவும் கஷ்டமான பணிகளை முன்னெடுத்ததும் அவரேயாகும்.

2017ம் ஆண்டு மே தினம் கட்சியை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் தீர்க்கமான அரசியல் மைல்கல்லானது. இது மிகவும் சவாலான மற்றும் ஆபத்தான செயலாக இருந்த போதிலும், அந்த சவாலை கட்சியால் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது. இது கட்சியைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு பெரும் உந்து சக்தியாக அமைந்தது என்பது மறுக்க முடியாதது. மிகவும் வலிமையான, முறையான அரசியல் கட்சி அரசியல் இயக்கமாக கட்டியெழுப்பப்பட்டிருப்பதற்கு அன்று கூடியிருந்த மக்கள் சாட்சியாகினர். கட்சியை கட்டியெழுப்பியதன் பின்னர் அதற்கு இணையாக பிரதான இரண்டு இணைக் குழுக்களாக பொதுஜன மகளிர் முன்னணியும் பொதுஜன இளைஞர் முன்னணியும் பலம் மிக்கதாக உருவாக்கப்பட்டது.



அதன் பின்னர் பொதுஜன பெரமுனவுடன் அரசியல் ரீதியாக கைகோர்த்துக் கொள்வதற்கு விருப்பமுள்ள சகோதர அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அண்மைக்கால வரலாற்றில் பல சவால்களுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குறுகிய காலத்தில் பல வெற்றிகளைப் பெற்ற அரசியல் கட்சியாகும். இதன் முதலாவது வெற்றி 2018ஆம் ஆண்டில் இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தலாகும். இத்தேர்தலில் கட்சி மிக சிறப்பான வெற்றியை பெற்றுக் கொண்டது. அந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியோடு கூட்டணி அமைத்திருந்தால் பாரிய அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேர்ந்திருக்கும். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி 18 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் பொதுஜன பெரமுன 50 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருந்தது.



2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலிலும் கட்சி மிகச் சிறப்பான வெற்றியைப் பெற்றது.

இந்த நேரத்தில் எதிர்பாராத விதமாக கொவிட் தொற்றுடன் இந்த நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. இந்த நாடு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து 1970ம் ஆண்டு வரை ஒரு வெற்றிகரமான பயணத்தை முன்னெடுத்து வந்தது. இதனிடையே பல்வேறு சமூக நெருக்கடிகள் ஏற்பட்டன. அவற்றுக்கு மத்தியில் நாடு முன்னேற்றப் பாதையில் பயணித்து வந்தது. அதேபோன்று மக்களுக்காக பாரிய வேலைத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. காபனிக் உரக் கொள்கை உள்ளிட்ட அனைத்து பணிகளையும் செய்ய முடிந்தது மக்கள் நலனுக்காகவே ஆகும். இதன் அடிப்படையில் அபிவிருத்திகளை திட்டங்களோடு தொழில் வாய்ப்புகளும் வழங்கப்பட்டன. இந்த வேலை திட்டங்களை ஆரம்பித்து மூன்று மாதத்திற்குள் அதாவது 2020ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இந்நாட்டில் கொவிட் தொற்று ஏற்பட்டதன் காரணமாக நாடு முழுமையாக முடக்கப்பட்டது. வெளிநாட்டுப் பணியாளர்கள் பணம் அனுப்புவது நிறுத்தப்பட்டமை, சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்தமை, குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5000 ரூபாய் வழங்கப்பட்டமை, தனிமைப்படுத்தலின் போது அவர்களுக்கு அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வது, அரச ஊழியர்களின் சம்பளம், பொதுச் சேவைகளை முன்னெடுத்துச் சென்றமை, மக்களை பாதுகாப்பதற்காக தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்ததோடு, இது இந்நாட்டை ஆட்சி செய்த ராஜபக்ஷக்களினால் உருவாக்கப்பட்டது எனக் காட்டுவதற்கு இந்நாட்டில் சிலர் முயற்சி செய்தார்கள். வங்குரோத்து அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் நலன்களை நிறைவேற்றுவதற்காக அவதூறுகள், பொய்களைப் பரப்புதல், சேறு பூசுதல் போன்றவற்றை முன்னெடுத்தனர்.

இங்கு நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி முடிவடைந்து நல்லாட்சி அரசாங்கத்திடம் நாட்டைக் கையளிக்கும் போது 8.2 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு இருந்தது. நல்லாட்சி அரசாங்கத்தினால் இந்த தொகை 7.1 பில்லியனாகக் குறைக்கப்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. 30 வருடகால யுத்தத்தை முடித்து நாட்டையும் அபிவிருத்தி செய்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் 8.2 பில்லியன் டொலர் கையிருப்புகளை சேமிக்கவும் முடிந்தது.



எவ்வாறாயினும் கொவிட் தொற்றின் காரணமாக நாட்டுக்கு டொலர் வரும் அனைத்து வழிகளும் மூடப்பட்டதன் பின்னர் தொடர் பற்றாக்குறை ஏற்பட்டது பொதுவானதே. அந்த சந்தர்ப்பத்தில் பொருளாதார நெருக்கடிக்கு நாடு உள்ளானது. மின்சாரம், எரிபொருள் போன்றவை தொடர்பில் நெருக்கடி நிலைமை தோன்றியது. இதுவே ஆட்சி கவிழ்ப்புக்குச் சரியான தருணம் என காத்திருந்த தரப்பு அரசியல் ரீதியாக இதனைப் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற நிலைக்கே போராட்டத்தை முன்னெடுத்தது. அதிகாரத்துக்காக மனித கொலைகள் இடம்பெற்ற நாட்டில், பதவிக்காகக் கிளர்ச்சி செய்த நாட்டில், அந்த அரசியல் கலாசாரத்தை பொதுஜன முன்னணி பின்பற்றவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்திற்காக அந்த ஒழுக்கக்கேடான முறைகளைக் கடைப்பிடிக்காமல் விட்டது ஒழுக்க மிகு அரசியல் கலாசாரத்துக்கு மதிப்பளித்தேயாகும். அவர் ஜனநாயக வழியில் அந்தப் பதவியிலிருந்து விலகினார். அதேபோன்று அந்த அரசாங்கமும் விலகியது. அதன் பின்னர், ஒரு கட்சியாக பொதுஜன பெரமுன பல சறுக்கல்களை எதிர்கொண்டது.

என்றாலும் மிகக் குறுகிய காலத்தினுள் மீண்டும் சாம்பலில் இருந்து எழ ஆரம்பித்துவிட்டது. தொகுதி அமைப்புக் குழுக்களை மீண்டும் பலப்படுத்தி ஆயிரக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி நாடு முழுவதிலும் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. கட்சிக் கிளைகள் மீண்டும் வலுவூட்டப்பட்டன. அதன் இறுதி நிகழ்ச்சியாக வரும் 15ஆம் திகதி தேசிய மாநாடு நடத்தப்பட உள்ளது. அடுத்த வருடம் தேர்தல் வருடமாகும். அந்த தேர்தல் ஆண்டில் கட்சியின் எதிர்கால செயல்பாடுகள் அந்த மாநாட்டில் வைத்து தேசத்தின் முன் வெளிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த தேர்தல்களின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து போட்டியிட்டு தற்போது ஏனைய குழுக்களுடன் இணைந்துள்ள எவரும் உண்மையை புரிந்து கொண்டு தமது கட்சியில் இணைந்து கொள்வதாயின் சகோதரத்துவத்தின் கரங்களை நீட்டுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தயங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி சாகர காரியவசம் கூறினார்.

**சுபத்ரா தேசப்பிரிய**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# மின்சாரமயமாகும் போக்குவரத்துச்சேவை

## தேசிய கொள்கை வெளியீடு

அனைத்து அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் தனியார் துறை பங்காளர்களின் ஆதரவுடன் எதிர்வரும் 2024ஆம் ஆண்டை இலங்கையின் மின்சார போக்குவரத்து ஆண்டாக பிரகடனப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். இதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பும் மிகவும் முக்கியமானது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். மின்சார போக்குவரத்து தொடர்பான தேசியக் கொள்கை வரைவு தொடர்பில் பங்குதாரர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.




நிலையான மற்றும் வினைத்திறனான பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பு முறையை மேம்படுத்தும் நோக்கில், அடுத்த வருட மார்ச் மாதத்தில் மின்சார வாகன கண்காட்சி, உலகளாவிய கருத்துப் பரிமாற்றம் மற்றும் முதலீட்டாளர்களுக்கான இலங்கையின் வாய்ப்புகளை விஸ்தரித்தல் தொடர்பான கலந்துரையாடல் உள்ளிட்ட கூட்டு ஒத்துழைப்பை கலந்துரையாடும் மாநாட்டை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் கடந்த காலத்தில் புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான போக்குவரத்து அமைப்பிலிருந்து மின்சார அடிப்படையிலான போக்குவரத்து முறைக்கு மாறுவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருவதாகவும், கொள்கைகள் மற்றும் மூலோபாய முறைகளினுள் மற்றும் பல்வேறு ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள் மூலம் மின்சார போக்குவரத்து அமைப்புக்கு மாற்றுவதற்கு தேவையான முன்முயற்சி எடுக்கப்பட்டதாகவும் போக்குவரத்து அமைச்சர் கூறினார்.

இலங்கையில் மின்சார வாகனப் பாவனையை ஊக்குவிப்பதற்குத் தேவையான பின்புலத்தை உருவாக்குவதற்கும், தரம்மிக்க மின்சார வாகனங்களை உற்பத்தி செய்தல் மற்றும் பொருத்துதல், அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் என்பனவற்றுக்கும், மின்சார வாகன இணை திட்டங்களை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினால் தற்போது பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக நீண்ட கால நோக்குடனான மின்சார வாகன கொள்கைக்கான தேவை இருந்ததாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். மின்சார வாகன பாவனையை ஊக்குவிப்பதற்காக கொள்கை மற்றும் வழிகாட்டல்கள் உடனான மூலோபாயத் திட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

மின்சார போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கை வரைபுக்கு பங்குதாரர்களிடமிருந்து கிடைத்த ஆலோசனைகளுடன் அதனை மீண்டும் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதாகவும், அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

போக்குவரத்து கட்டமைப்பிலிருந்து காபன் வெளியேற்றத்தை தடுத்தல், தனிப்பட்ட வாகன பயன்பாட்டை குறைத்தல், வீதியில் போக்குவரத்து நெருக்கடியை குறைத்தல் மற்றும் போக்குவரத்தின் சுற்றாடல் தாக்கங்களை தடுத்தல் போன்றன மின்சார போக்குவரத்து கட்டமைப்பின் இலக்குகள் என்றும், அடுத்த மார்ச் மாதத்தில் இடம்பெறும் மாநாடு வெற்றி பெறுவதற்கும் மற்றும் அதற்கப்பால் இந்த செயற்பாட்டை வெற்றியாக்கிக் கொள்வதற்கும் ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் ஒத்துழைப்பை போக்குவரத்து அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கூறினார்.



ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பொதுப் போக்குவரத்து சேவை மின்சார இயக்கத்துக்கு மாறுவதைத் துரிதப் படுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் ஆசிய பசுபிக் பொருளாதார மற்றும் சமூக ஆணைக்குழுவின் போக்குவரத்து பிரிவின் மதன் பாண்டு ரெஜ்மி கூறுகையில், ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் அமைச்சரின் தலைமையின் கீழ் இந்த கொள்கையை உருவாக்கும் செயல்முறைக்கு போக்குவரத்து அமைச்சு மேற்கொண்ட அர்ப்பணிப்பையிட்டு தான் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். அதேபோன்று அவர் தனக்குள்ள இது தொடர்பான அனுபவங்களையும் இதன் போது பரிமாறிக் கொண்டார்.

இந்தியாவின் உலகளாவிய வளங்கள் நிறுவனத்தின் நிலையான நகர மற்றும் போக்குவரத்து ஆலோசகர் கௌஸ்புட் எஸ். கொசவி, மின்சார போக்குவரத்து கொள்கையை நடைமுறைப்படுத்துதல், நிதி மற்றும் இயக்க மாதிரிகள் பற்றிய அதன் உலகளாவிய மற்றும் பிராந்திய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதுடன் மாறும் செயற்பாட்டுக்காக முன்னேறிச் செல்லும் அனைத்து இலங்கை தரப்பினரின் முயற்சிகளைப் பாராட்டினார்.

பிலிப்பைன்ஸின் போக்குவரத்து திணைக்களத்தின் ஜொயிஸ் ரிவேரா, மின்சார இயக்க கொள்கையை நடைமுறைப்படுத்தல், மக்கள் உபயோக வாகனங்களை நவீன மயப்படுத்தும் வேலை திட்டம் மற்றும் மக்கள் பங்குபற்றல் போன்ற விடயங்களில் பிலிப்பைன்ஸின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்

போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்ன, மின்சார இயக்கம் தொடர்பில் அனைத்து தரப்பினரையும் இணைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் சட்டபூர்வ ஆதரவுடனான விரிவான மின்சார இயக்கக் கொள்கை ஆவணத்தை வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார்.

GodeGen ஸ்ரீலங்கா நிறுவனத்தின் ஸ்தாபகரும் அதன் தலைவருமான கலாநிதி ஹர்ஷ சுபசிங்க, டுமாரோ பைசைக்கிள் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி தாரிக் பிறந்தால், இலங்கை ஆட்டோ மொபைல் உதிரிப்பாக உற்பத்தியாளர்களின் சங்கத் தலைவர் திமந்த ஜயவர்த்தன, இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் (வளங்கல் மற்றும் அபிவிருத்தி) லக்சித வீரசிங்க போன்றோர் இலங்கையில் தற்போதுள்ள மின்சார இயக்க மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிற்துறை தொடர்பில் தங்கள் அனுபவங்களையும் திறமைகளையும் பகிர்ந்து கொண்டார்கள்.




**வஜிர லியனகே**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

# வங்குரோத்து நிலையிலிருந்து 18 மாதத்தில் மீண்டது இலங்கை!

**பொருளாதார நெருக்கடியால் பல்வேறு சவால்களைச் சந்தித்துள்ள நாட்டை மீட்டெடுத்து சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், வங்குரோத்து நிலையிலிருந்து இலங்கை மீண்டுள்ளது என்ற அறிவிப்பு சர்வதேச நாணய நிதியத்தினால் இம்மாதத்தில் வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தி வெளியாகியுள்ளது.**



சர்வதேச நாடுகள் உள்ளிட்ட கடன்வழங்குனர்களுடன் கடன்மறுசீரமைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டு, சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி உதவியின் இரண்டாவது தவணை கிடைப்பதற்கான சமிக்ஞைகள் வெளியாகியிருக்கும் நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகும் என்ற கருத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த புதிய பொருளாதார முறைகளின் அடிப்படையில் முன்னேறிச் செல்ல வேண்டும். அவ்வாறில்லாமல், பழைய பொருளாதார முறைகளை அமுல்படுத்தினால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றும் ஜனாதிபதி கூறியிருந்தார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் கடந்த 2022ஆம் ஆண்டு மிகவும் சவால் மிக்க வருடமாக அமைந்தது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான பொருளாதாரத் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைச் சாத்தியமற்ற அணுகுமுறைகளால் நாடு வெகவாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக பெறுமதிசேர் வரியைக் கணிசமாகக் குறைப்பதற்கு எடுத்த முயற்சி பொருளாதாரத்தை முற்றாகப் பாதிப்புக்குள் தள்ளியது. தமக்கு நெருக்கமான வர்த்தகத் தரப்பினரை ஊக்குவிக்கும் வகையில் நாட்டிற்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக் கருத்தில் கொள்ளாமல் வரியைக் குறைப்பதற்கான தீர்மானத்தை முன்னைய அரசு எடுத்தது.

இதனால் ஏற்பட்ட விளைவு நாட்டைப் பொருளாதார ரீதியில் கடுமையாகப் பாதித்தது. இதனைத் தொடர்ந்து வெளிநாடுகளிடம் பெற்ற கடன்களை மீளச்செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையச் சமாளிக்கும் நோக்கில் மத்திய வங்கியின் ஆளுநர் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த அறிவிப்பை வெளியிட்டமை குறித்து மாற்றுக் கருத்துக்கள் காணப்படுகின்ற போதும், நாட்டை பாதிப்பிலிருந்து மீட்பதற்கு அந்த அறிவிப்பை வெளியிடுவதைத் தவிர வேறு மாற்றுத் தெரிவு இருக்கவில்லையென மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்திருந்தார். இவ்வாறான நிலையில் நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என்ற அறிவிப்பினால் கடன்களை செலுத்தாமல் இருப்பது மாத்திரமன்றி, இலங்கைக்குக் கிடைத்துவந்த பல்வேறு கடன் உதவிகள் மற்றும் நிதி உதவிகள் என்பனவும் நிறுத்தப்பட்டன.

மத்திய வங்கியின் ஆளுநர் தன்னிச்சையாக முடிவெடுத்தார் என்றும், நாட்டின் நிதி குறித்த கட்டுப்பாட்டைக் கொண்ட பாராளுமன்றத்தின் கருத்துக் கேட்கப்படவில்லையென்றும் பல்வேறு அரசியல்வாதிகள் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இவ்வாறான பின்னணியிலேயே இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவியைக் கோரியது. இதற்கு அமைய 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.



இதன் முதலாவது தவணை ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், இரண்டாவது தவணையைப் பெறுவதற்கு கடன் மறுசீரமைப்பில் இணக்கப்பாடு அவசியம் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. உள்நாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைக்குப் பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்த நிலையில், கடந்த வாரம் சர்வதேச கடன்படுனர்களும் கடன்மறுசீரமைப்புக்கு இணக்கம் தெரிவித்தனர். இதன் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணை விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறான நிலையிலேயே இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுள்ளது என்ற அறிவிப்பை இம்மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் வெளியிடும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஜனாதிபதி நன்றி

அண்மையில் பிட்டகோட்ட பிரதேசத்தில் நடைபெற்ற அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். நாட்டை 18 மாதங்களில் வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டுள்ளதாகவும், இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

மத்திய வங்கி ஏற்கனவே பணம் அச்சிடுவதை நிறுத்தி விட்டது. அத்துடன் அபிவிருத்திக்காக அரச வங்கிகளில் இருந்து கடன் பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிபந்தனைகள் இல்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது. நாட்டுக்கு நிதி ஒழுக்கம் தேவை. பொருளாதாரத்தை நிதி ஒழுக்கத்துடன் நிர்வகித்தால், எதிர்காலத்தில் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்க முடியும்.

இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளி மற்றும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அரசின் செலவினங்களை குறைக்கவும், அரசின் வருவாயை அதிகரிக்கவும் புதிய திட்டங்களை தயாரித்துள்ளோம். சுற்றுலாத்துறையின் மூலம் அதிக அந்நிய செலாவணியை ஈட்ட முடியும்.

அடுத்த ஆண்டு 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர திட்டமிட்டுள்ளோம். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 50 இலட்சமாக உயர்த்தினால் இந்நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு விரைவான தீர்வுகளைப் பெற முடியும் என நம்புவதாகவும் ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, வங்குரோத்து நிலையிலிருந்து நாடு விடுவிக்கப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு வெளியிடப்படும் பட்சத்தில் இடைநிறுத்தப்பட்டுள்ள சர்வதேச கடன் உதவிகள் மற்றும் நிதி உதவிகள் என்பன கிடைக்கப்பெறும். குறிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்தான கடன் உதவிகளால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கும் 20 பில்லியன் ரூபா கடனின் ஊடாக கிராமிய வீதிகள் உள்ளிட்ட பல்வேறு வீதிக் கட்டமைப்புக்களை முன்னெடுக்க முடியும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருந்தார். இதுபோன்று பல்வேறு வீதி அபிவிருத்திப் பணிகள் மற்றும் பாலம் அமைப்புப் பணிகள் என்பன இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவற்றையும் ஆரம்பிப்பதற்கு இயலுமானதாக அமையும்.

அதேநேரம், ஜனாதிபதி கூறியதைப் போன்று பழைய பொருளாதாரக் கொள்கைகளை மீண்டும் கடைப்பிடிப்பது பாரிய பின்னடைவை மீண்டும் நாட்டுக்கு ஏற்படுத்தும். எனவே, அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள மறுசீரமைப்புக்களும் நாட்டை முன்னேற்றமான நிலைக்குக் கொண்டு செல்ல உறுதுணையாக இருக்கும். இதற்கு அரசாங்க நிறுவனங்கள் வினைத்திறனான முறையில் செயற்படுவதும் அத்தியாவசியமானதாகும்.

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 48 மாதங்களில் 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி

பி.ஹர்ஷன்...

---

# காஸா மீதான இஸ்ரேல் யுத்தம்; உலக மக்கள் முன்பாக விடை புரியாத கேள்வி!

**காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துள்ள யுத்தம் இரண்டு மாதங்களாக நீடித்து வருகின்றது. கடந்த ஒக்டோபர் 07 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல்களை மேற்கொண்ட ஹமாஸ், 240 பேரை பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றது. அதனைத் தொடர்ந்து காஸா மீதான போரை ஆரம்பித்த இஸ்ரேல் கடல், வான் மற்றும் தரை மார்க்கங்கள் ஊடாகத் தொடரான தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது.**

காஸாவிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் நலன்புரி நிலையங்கள் என அனைத்தும் இந்த யுத்தத்தில் இலக்காகியுள்ளன.

இதன் விளைவாக இரத்தம் சிந்துதல்களும், உயிரிழப்புக்களும் காஸாவில் மலிந்துள்ளன. சாம்பல் மேடாகக் காட்சியளிக்கிறது காஸா. இற்றைவரையும் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதோடு, 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். இந்நிலையில் காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு உலகெங்கிலும் இருந்து கோரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலும் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை வலியுறுத்தி தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இஸ்ரேலிய மக்கள் கூட யுத்தத்தை நிறுத்தி ஹமாஸ் பிடியிலுள்ள பணயக்கைதிகளை விடுவிக்குமாறு ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர்.

இந்த யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னமெரிக்க நாடுகள் உள்ளிட்ட பல நாடுகள் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொண்டுள்ளன. யுத்தத்திற்கு முதலில் ஆதரவு நல்கிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் கூட காஸா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியுள்ளது.

இச்சூழலில் அமெரிக்கா, எகிப்து ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் கட்டார் முன்னெடுத்த இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையிலான யுத்தநிறுத்த முயற்சியின் பயனாக இப்போர் ஆரம்பமாகி 48 ஆவது நாள் முதல் கைதிகளை விடுவிக்கும் வகையில் நான்கு நாட்கள் தற்காலிக யுத்தநிறுத்தம் இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்டது. நவம்பர் 25ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்த இப்போர்நிறுத்தம் இரண்டு தடவைகளில் நீடிக்கப்பட்டு ஏழு நாட்கள் அமுலில் இருந்தது. இக்காலப்பகுதியில் ஹமாஸ் பிடியிலிருந்த 110 இஸ்ரேலிய பணயக் கைதிகளும் இஸ்ரேலிய சிறைகளில் இருந்த 240 பலஸ்தீன சிறைக்கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் மேலும் இஸ்ரேலின் 137 பணயக் கைதிகள் ஹமாஸின் பிடியிலிருக்கும் நிலையில், கடந்த முதலாம் திகதி இஸ்ரேல் யுத்தத்தை மீண்டும் தொடங்கியது. இப்போர்நிறுத்தத்தை நீடிக்கும் வகையில் அமெரிக்காவின் சி.ஐ.ஏ மற்றும் இஸ்ரேலின் மொஸாட் உளவுப்பிரிவுகளின் தலைவர்கள் கட்டாரில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம், பேச்சை முறித்துக் கொண்டு நாடு திரும்புமாறு இஸ்ரேலிய பிரதமர், மொசாட் தலைவரை திருப்பி அழைத்தார்.

யுத்தநிறுத்தத்தை மீறும் வகையில் ஹமாஸ் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிட்டு இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்த போதிலும், ஹமாஸ் தம்பிடியில் இருக்கும் பெண் பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க நாம் தயார். ஆனால் அவர்களில் இராணுவத்தில் இணைய காத்திருப்பவர்களும் உள்ளனர். அவர்களை விடுவிக்க மற்றொரு உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டும் என நாம் குறிப்பிட்டோம். அதற்கு பதிலளிக்காமலேயே இஸ்ரேல் யுத்தத்தை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் சிறைகளிலுள்ள அனைத்து பலஸ்தீனிய சிறைக்கைதிகளையும் விடுவிப்பதற்கு இஸ்ரேல் முன்வந்தால் எமது பிடியில் இருக்கும் இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுவிக்கத் தயார்' என்றுள்ளது ஹமாஸ்.



இந்த யுத்தத்திற்கு எதிராக ஹமாஸ் மாத்திரமல்லாமல் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பும் தாக்குதல்களை முன்னெடுக்கின்றது. அத்தோடு இஸ்ரேலில் இருந்து 2000 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள யெமனின் கௌதி போராட்டக்காரர்கள் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை முன்னெடுத்துள்ள அதேநேரம், ஈராக்கிலுள்ள போராட்டக்குழுக்கள் காஸா மீதான இஸ்ரேலின் யுத்தத்திற்கு எதிராக ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவ நிலைகள் மீது தாக்குதல்கள் நடத்துகின்றன.

இந்நிலையில் கௌதி போராட்டக்காரர்கள், காஸா மீதான யுத்தத்தை நிறுத்தும் வரை யெமனுக்கு அருகிலுள்ள செங்கடல் பாம் அல் மண்டாப் சர்வதேச கடல் கப்பல் போக்குவரத்து பாதையை இஸ்ரேலியருக்கு சொந்தமான கப்பல் பயன்படுத்தக் கூடாது. எம் எச்சரிக்கையை மீறி பயணிக்கும் கப்பல்கள் தாக்கப்படும், கைப்பற்றப்படும்' என்றுள்ளனர்.

அந்த வகையில் 'கலெக்ஷி லீடர்' என்ற கப்பலை 22 மாலுமிகள் உட்பட 52 பேருடன் கைப்பற்றி யெமனுக்கு கொண்டு சென்றுள்ள இவர்கள், 'த சென்றல் பார்க்', 'யுனிட்டி எக்ஸ்புலோரர்', 'நொம்பர் நைன்' ஆகிய சரக்கு கப்பல்கள் மீதும் பிரித்தானியாவுக்கு சொந்தமான சரக்கு கப்பல் மீதும் இவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

மேலும் இஸ்ரேலிய தொழிலதிபருக்குச் சொந்தமான 'சி.எம். ஈ சி.ஜி.எம் சைனி' என்ற கப்பல் இந்து சமுத்திரத்தில் வைத்து ஆளில்லா விமானம் மூலம் தாக்கப்பட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க, ஈராக் பிரதமரின் ஆலோசகர் பர்கட் அலாடி, 'காஸா மீது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க இடமளிக்க வேண்டாம். அது ஈராக் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுக்கும். இங்குள்ள அமெரிக்க இராணுவ நிலைகள் மீது போராளிக்குழுக்கள் தாக்கத் தொடங்கும். ஹமாஸ் இஸ்ரேல் யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் இடம்பெற்ற மோதலில் ஈராக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினர் 50 பேருக்கு மூளைக்காயம் ஏற்பட்டது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சூழலில் மத்திய தரைக்கடல் நீரைக் கொண்டு ஹமாஸின் சுரங்கங்களை நிரப்புவதற்கு இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கு அமெரிக்காவின் சில அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. பூமிக்குள் கடல் நீரை அதிகளவில் செலுத்தும் போது அப்பகுதி மண்ணின் தன்மை முற்றிலும் மாற்றமடைந்து விடும். அத்தோடு காஸா மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தையும் அது பாதிக்கும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலியப் பிரதமரைச் சந்தித்துள்ள பணயக் கைதிகளின் உறவினர்கள், 'ஹமாஸின் சுரங்கங்களுக்குள் கடல்நீரை செலுத்தி ஹமாஸுடன் சேர்த்து எமது உறவினர்களையும் அழித்து விட வேண்டாம்' எனக் கோரியுள்ளனர்.

இவ்வாறு காஸா மீதான யுத்தத்தை நிறுத்தக் கோரி சர்வதேச ரீதியிலும் இராஜதந்திர மட்டத்திலும் ஜனநாயக வழிகளிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. யுத்தம் காரணமாக காஸா மக்கள் முகம்கொடுத்துள்ள துன்பங்கள், அவர்களது இழப்புக்கள் உலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன. ஐ.நா.வும் உலக நாடுகளும் யுத்தத்தை நிறுத்தி அமைதி வழிக்கு திரும்புமாறு கோரிய வண்ணமுள்ளன. இஸ்ரேல் உட்பட உலகின் பல நகரங்களிலும் மீண்டும் ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன.

இருந்த போதிலும் இக்கோரிக்கைகளும் வலியுறுத்தல்களும் செவிடன் காதில் ஊதிய சங்காக உள்ளன. ஐ.நாவோ வேறு எவருமோ எம்மைக் கேட்க முடியாது என்ற தோரணையில் யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. தம் நாட்டு பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்க நடவடிக்கைகளை முன்னெடுக்காது, யுத்தத்தில் அதிக ஆர்வம் காட்டுகிறது இஸ்ரேல். உலக மக்கள் மத்தியில் இந்த யுத்தம் குறித்து எழுந்துள்ள சந்தேகங்களும் ஐயங்களும் இவையாகும்.





## போரை நிறுத்துமாறு சர்வதேச ரீதியில் வேண்டுகோள்!



மர்லின் மரிக்கார்...



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# கடன் வழங்குநர்கள் வழங்கிய இணக்கப்பாடு இலங்கைக்கு கிடைத்திருக்கும் வெற்றி!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் சந்திப்பு

**கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் கடன்வழங்குநர்கள் இணக்கப்பாட்டுக்கான உத்தரவாதம் வழங்கியிருப்பது இலங்கைக்குக் கிடைத்த வெற்றியாகும். இதன் மூலம் இடைநிறுத்தப்பட்ட பல்வேறு நிதியுதவிகள் எமது நாட்டுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய எமக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

**கே: சர்வதேச ஊடகங்களில் அறிவிக்கப்பட்டமைக்கு அமைய இலங்கையின் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்கள் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் முதற்கட்ட இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். இந்த மறுசீரமைப்பு உண்மையில் எப்போது இடம்பெறும்?**

பதில்: இணக்கப்பாடு (இந்தியா, ஜப்பான் மற்றும் பரிஸ் கிளப் ஆகியவற்றுடன்) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மாத இறுதிக்குள் இது தொடர்பான விடயங்களைப் பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம். கடன்மறுசீரமைப்புக் குறித்த ஒப்பந்தம் எமக்குப் பாரிய வெற்றியைத் தந்துள்ளது எனக் கூறலாம். ஏறத்தாழ 8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடன், மீதமுள்ளவை உள்நாட்டு கடன். உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு ஏற்கனவே நடந்துள்ளது. இது மிகவும் சவாலான சூழ்நிலை.

நாங்கள் ஒரு பாரம்பரிய எதிர்க்கட்சியைச் சமாளிக்க வேண்டியிருந்தது. வெளிநாட்டுக் கடன்களில் பலதரப்புக் கடனின் ஒரு பகுதியைச் செலுத்தினோம். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றில் இருந்து பெற்ற கடன்களை நாங்கள் தொடர்ந்து செலுத்தினோம். இவற்றை மீளச்செலுத்துவதை நிறுத்த முடியாது. அதற்கான அடிப்படை அடித்தளத்தை தயாரித்து வருகிறோம். அதேசமயம், வரவுசெலவுத்திட்ட ஆவணத்தில் அதற்கான கடன் கணக்கை மாற்றுவதற்கான அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். கடன் மறுசீரமைப்பு மிகவும் தீவிரமான விஷயம். திவாலான நாட்டில் இது மிகவும் கடினமான மற்றும் சிக்கலான செயன்முறையாகும். ஆனால் தாமதிக்காமல் முடித்து விடலாம்.

**கே: நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து எதிர்வரும் காலத்தில் மீட்க முடியும் என அரசாங்கம் உறுதியளிக்கிறது. தடைப்பட்ட அனைத்து வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்களையும் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நிதி உதவிகள் கிடைக்கப்பெறும் எனக் கருதுகின்றீர்களா?**

பதில்: நிச்சயமாக, அடுத்த மாதத்தின் நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணையுடன் புதிய திட்டங்களைத் தொடங்குவோம் என்று நம்புகிறோம். நிறுத்தப்பட்டுள்ள பலதரப்பு மற்றும் இருதரப்பு கடன்கள் எதிர்காலத்தில் கிடைக்கும். குறிப்பாக நெடுஞ்சாலைகள், அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் நீர்மின் அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க முடியும். அனைத்து சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிலும் மறுமலர்ச்சிக்கான வாய்ப்புகள் ஏற்படும். இது பொருளாதார எழுச்சி மாத்திரமன்றி நாட்டை அபிவிருத்தி செய்வதில் மிக முக்கியமான விடயமாகும்.

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதியின் இரண்டாவது தவணை பெறப்பட்டால், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பிற நிறுவனங்கள் மேலும் நிதி வசதிகள் அல்லது உதவிகளை வழங்குமா?**

பதில்: 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை விட எங்களுக்கு முக்கியமானது சர்வதேச நாணய நிதியத்தின் சர்வதேச நிதி நம்பிக்கை, இது மிகவும் முக்கியமானது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தற்காலிகமாக கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது என்று அறிவித்ததன் மூலம் நாங்கள் எதிர்கொண்ட நிலைமையையும் நாம் அறிவோம். இன்று பெரிய வெற்றியை அடைந்துள்ளோம். வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது சவாலாக உள்ளது. இரண்டாம் தவணைக்கான கட்டணம் கிடைத்தால் நம் மீதான நம்பிக்கை 100 சதவீதம் மீட்டெடுக்கப்படும். இது மற்ற நிறுவனங்களுடனான பரிவர்த்தனைகளை மேம்படுத்துவதற்கு உதவியாகவிருக்கும்.

**கே: இலங்கை நாட்டின் மொத்த வருமானத்தில் 72 வீதத்தை கடன்களுக்கான வட்டி கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதாக உலக வங்கியின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையின் மொத்த கடன் 91 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டியுள்ளது. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: அதுதான் நாங்கள் ஒரு பெரிய பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டியமைக்கான காரணமாக அமைந்தது. கடனின் அளவு நம் நாட்டிற்கு தாங்க முடியாததாகி விட்டது. மொத்தக் கடனைக் குறைப்பதே எங்களின் தற்போதைய இலக்கு. அந்த இலக்கை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். கடன் வட்டித் தொகையை முறையாகக் குறைக்கவும் நாங்கள் உழைத்துள்ளோம். நெருக்கடியை விரைவில் தீர்க்க முடியாது. இது குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

**கே: வரவுசெலவுத் திட்டத்தில் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிவாரணம் போதுமானது என்று நினைக்கிறீர்களா? உரிய நிவாரணம் கிடைக்கவில்லை என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனரே?**

பதில்: இன்னும் சலுகைகள் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதிகபட்ச நிவாரணம் கொடுத்தோம். 1.3 மில்லியன் அரசு ஊழியர்களுக்கு மாதம் 10,000 ரூபாய் என்பது மாதத்திற்கு ரூ.13 பில்லியன் புதிய அதிகரிப்பு. மறுபுறம், ஓய்வூதியம் பெறும் 730,000 பேருக்கு 2,500 ரூபா அதிகரிப்பு வழங்கப்படுகிறது. அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவின் அதிகரிப்பு ஏப்ரல் மாதம் முதல் தொடங்குவதாக இருந்தது. ஆனால் அதில் பாதியையாவது ஜனவரி மாதம் முதல் வழங்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்த விவகாரங்களில் அவர் மிகுந்த கவனம் செலுத்துகிறார். மேலும், எமது நாட்டில் காணி உறுதிப்பத்திரம் இல்லாத 200,000 குடும்பங்கள் உள்ளன.

அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் சுமார் 50,000 பேருக்கு இலவச உரிமையும், 200,000 பேருக்கு அஸ்வசுமாவும் வழங்கப்படும். குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு மாதம் 15,000 ரூபாய், சிறுநீரகம் மற்றும் ஊனமுற்றோர் உதவித்தொகை ரூ. 2,500, முதியோர் நலத்திட்டம் ரூ. 3,000. காத்திருப்போர் பட்டியலில் உள்ள அனைவருக்கும் அடுத்த ஆண்டு பலன்கள் கிடைக்கும். இதுபோன்ற நேரத்தில் அரசு தன்னால் முடிந்ததைச் செய்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

**கே: ஏழைகள் மீது வரிச்சுமை சுமத்தப்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. வரி வலையில் சிக்காமல் வரி விதிக்கும் முறையை அரசு தொடர்ந்து மாற்றி வருகிறதா?**

பதில்: இவை அப்பட்டமான குற்றச்சாட்டுகள். வரி இல்லாமல் ஒரு நாடு இயங்க முடியாது. நாங்கள் முதன்மையாக வரி செலுத்துபவர்களிடமிருந்து வசூலிக்க முயற்சிக்கிறோம். உதாரணமாக, எங்களிடம் 20 சதவீதம் நேரடி வரி, VAT போன்ற 80 சதவீதம் மறைமுக வரி உள்ளது. மொத்த வரி கலவையை எடுத்துக் கொண்டால், அது வரி வருவாயில் 1/5 ஆகும். அரசாங்கத்தால் சமூகத்தில் ஊக்கப்படுத்தப்பட வேண்டிய துறைகளுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது. உதாரணமாக, சூதாட்டப் பதிவுக்காக ரூ.5,000 மில்லியன் வசூலிக்கப்படுகிறது. கசினோ உரிமையாளரிடம் இருந்து 40 சதவீதம் வரி வசூலிக்கிறோம். ஊக்கமளிக்காத துறைகளுக்கு அதிகபட்ச வரி விதித்துவிட்டு மற்ற துறைகளை மட்டுமே பார்க்கிறோம்.

**கே: 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வரிக்கோப்புகளைத் திறப்பதில் முன்னேற்றம் உள்ளதா?**

பதில்: 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு கோப்பு வழங்கப்படும் என்று பயப்படத் தேவையில்லை. அதற்காக அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்பதில்லை.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உலகின் பல நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அது ஒரு பொதுவான நடைமுறை. இவ்வாறு, சமூகத்தின் 14 வகுப்புகளுக்கான வரி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம். குறிப்பாக தொழில் வல்லுநர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொறியியலாளர்களைக் கொண்டு இதைத் தொடங்கினோம்.

> **கடன் மறுசீரமைப்பு மிகவும் தீவிரமான விஷயம். திவாலான நாட்டில் இது மிகவும் கடினமான மற்றும் சிக்கலான செயன்முறை; வெளிநாட்டுக் கடன்களில் பலதரப்புக் கடனின் ஒரு பகுதியைச் செலுத்தினோம். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றில் இருந்து பெற்ற கடன்களை நாங்கள் தொடர்ந்து செலுத்தினோம்**



# பா.ஜ.கவை வீழ்த்துவதென்பது காங்கிரஸுக்கு இயலாத காரியம்!



## ஐந்து மாநிலங்களின் தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்து அரசியல் வல்லுநர்கள் கருத்து!

இந்தியாவின் பதினெட்டாவது மக்களவைத் தேர்தல் 2024 ஆம் வருடம் நடைபெறவுள்ளது. இந்தியாவின் பதினேழாவது மக்களவைக்கான மக்களவை பொதுத்தேர்தல் கடந்த 2019 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

2024 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க மூன்றாவது முறையாக வெற்றி பெறும் என்பது தற்போது உறுதியாகிவிட்டது. ஐந்து மாநிலங்களில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல்களில், பாரதீய ஜனதா மூன்று மாநிலங்களைக் கைப்பற்றியதையடுத்து 2024 பாராளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராவது உறுதியாகியுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க அமோக வெற்றி பெற்றுள்ளது. இதன் முடிவுகள் சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தன. மூன்று மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தல்களில் பா.ஜ.கவுக்குக் கிடைத்த வெற்றியானது முன்னெப்போதும் இல்லாத மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்கதென்று பா.ஜ.கவினர் கூறுகின்றனர்.

இப்போது 3 மாநிலங்களில் பா.ஜ.கவுக்கு கிடைத்த வெற்றியானது, 2024 மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க 3 ஆவது முறையாக வெற்றி பெறும் என்பதை உறுதி செய்வதாக உள்ளது என அவர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவின் மீது உலக நாடுகள் வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்வதாக இந்த வெற்றி அமைந்துள்ளதென்றும், சர்வதேச முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையை அதிகரித்துள்ளது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஐந்து மாநிலங்களில் நடந்த சட்டசபை தேர்தல்களில் மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் ஆகிய 3 மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெற்றுள்ளது. தெலுங்கானாவில் காங்கிரஸ் முதன் முறையாக வெற்றி பெற்றுள்ளது.

மத்திய பிரதேசத்தில் ஆட்சியைக் காப்பாற்றுவதில் வெற்றி பெற்ற பா.ஜ.க, அண்டை மாநிலமான சத்தீஸ்கரில் காங்கிரஸைத் தோற்கடித்து மீண்டும் ஆட்சியைப் பிடித்தது. அதேசமயம் ராஜஸ்தானில் ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சியை மாற்றும் வழக்கத்தை மாற்ற நினைத்த காங்கிரஸ் தோல்வியடைந்துள்ளது. தெலுங்கானாவில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

இந்தத் தேர்தல்கள் 2024இல் நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலின் அரையிறுதிப் போட்டியாகக் கருதப்படுகின்றன.

பா.ஜக.வை தோற்கடித்து ஆட்சியில் இருந்து அகற்றும் நோக்கத்துடன் 28 எதிர்க்கட்சிகள் இணைந்து இந்திய தேசிய வளர்ச்சியை உள்ளடக்கிய கூட்டணி (இந்தியா) என்ற பெயரில் கூட்டணி அமைத்தன.முதல் நாளிலிருந்தே 'இந்தியா கூட்டணி' பல சவால்களைச் சந்தித்து வருகிறது. அதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பல மாநிலங்களில் ஒருவருக்கொருவர் மிகப்பெரிய போட்டியாளர்களாக இருப்பதைப் போலவே, அவை தொடர்ந்து ஒன்றுக்கொன்று எதிராக தேர்தலில் போட்டியிடவும் செய்கின்றன. இதனுடன், பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தலைப்புகளில் அவர்களது கருத்தும் நிலைப்பாடும் வேறுபட்டவையாக உள்ளன.

தேர்தல் முடிவுகளை ஆய்வு செய்யும் மூத்த பத்திரிகையாளர் சீமா சிஷ்டி கருத்துத் தெரிவிக்கையில், "இந்தியக் கூட்டணியும், காங்கிரஸும் இந்தத் தேர்தல்களில் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்த தவறவிட்டன" எனக் கூறியுள்ளார்.

"இந்தத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அரசியல் மாற்றத்தைத் தொடங்குவதற்கு ஒரு முன்முயற்சி எடுக்கப்பட்டிருக்கலாம். இது இந்திய கூட்டணியின் உணர்வை வலுப்படுத்தியிருக்கும். ஆனால் சிறிய கட்சிகளை தன்னுடன் சேர்த்துக் கொண்டதன் மூலம் கிடைத்த பலன்களை காங்கிரஸ் பயன்படுத்திக் கொள்வதில் தவறு செய்துவிட்டது" என்றும் சீமா சிஷ்டி கருத்துத் தெரிவித்துள்ளார்.

"கூட்டணி அமைத்துக் கொண்டதால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. உதாரணமாக தெலுங்கானாவில் சி.பி.ஐயுடன் கூட்டணி வைத்தார்கள், ஆனால் சி,பி,எம் உடன் கூட்டணி அமைக்கவில்லை. இதே போல மற்ற இடங்களிலும் சிறிய கட்சிகளை ஒன்றிணைப்பதால் பலன் உண்டு. அவர்களால் அந்தப் பலனை எடுக்க முடியவில்லை" என்று அவர் கூறினார்.

காங்கிரஸ் மீது அபிப்பிராயம் தெரிவித்த மூத்த பத்திரிகையாளர் சீமா சிஷ்டி "இடதுசாரி கட்சிகளுக்கு சில இடங்களை நீங்கள் கொடுத்திருந்தால், நீங்கள் ஒரு புதிய அரசியலைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் நீங்கள் இந்துத்துவா எனும் அதே வெளிச்சத்தில் விழுந்தீர்கள். நீங்கள் இந்துத்துவாவை கேள்வி கேட்கவும் இல்லை, அல்லது நீங்கள் அதை வைத்து காய்களை நகர்த்தவும் இல்லை. பிறகு ஏன் உங்களை மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்?"என்று குறிப்பிட்டார்.





**காங்கிரஸ் தலைமையிலான 'இந்தியா' கூட்டணிக்குள் உட்பூசல்கள்; பா.ஜ.கவை எதிர்ப்பதற்குத் திராணியற்ற நிலைமை! 2024 தேர்தலிலும் மூன்றாவது பிரதமராக நரேந்திர மோடி**

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவைத் தோற்கடிக்கும் வாய்ப்பு முன்பை விட இப்போது கடினமாகி விட்டது என்பதே இந்திய அரசியல் ஆய்வாளர்களின் பொதுவான கருத்தாக இருக்கின்றது.

சட்டசபைத் தேர்தலில் நடந்ததுதான் மக்களவையிலும் நடக்கும் என்று உறுதியாகக் கூற முடியாது. ஆனால், ஆட்சி மாற்றத்தை விரும்புபவர்களின் உறுதி தளர்ந்திருப்பதையே சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன.

"மத்தியில் இருந்து பா.ஜ.கவை அகற்ற வேண்டும் என்றால், குஜராத்தில் தொடங்கி பீகார் வரை வடஇந்தியாவில் அக்கட்சியைத் தோற்கடிக்க வேண்டும். ஆனால் காங்கிரஸால் அது முடியாத காரியம் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் தேசியளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. அடுத்தாண்டு மக்களவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், இந்த தேர்தல் முடிவுகள் பல விடயங்களை உணர்த்துகின்றன. பிரதமர் மோடியின் 'இமேஜ்' என்பது பாராளுமன்றத் தேர்தலைத் தாண்டி சட்டசபைத் தேர்தல்களிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளதையே இது காட்டுவதாக அரசியல் வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மோடியின் வாக்குறுதிகள் என்று பிரதமர் மோடியை முன்னிறுத்தியே பா.ஜ.க பிரசாரம் செய்தது. எனவே, இது பிரதமர் மோடியின் இமேஜுக்கு கிடைத்த வெற்றி என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

அடுத்து 2024 லோக்சபா தேர்தலில் காங்கிரஸுக்கு கடும் போட்டி இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது.

பா.ஜ.கவின் பலம் என்பது 'ஹிந்தி ஹொர்ட் லேண்ட்' எனப்படும் வட மாநிலங்கள் ஆகும். கடந்த 2019 லோக்சபா தேர்தலில் இந்த பிராந்தியத்தில் பா.ஜ.க 225 இல் 177 இடங்களில் வென்றது. காங்கிரஸ் கட்சி அங்கே தொடர்ந்து பலவீனமாகி வருகிறது. இந்தத் தேர்தல் முடிவுகளும் அதையேதான் காட்டுகின்றன. மத்திய பிரதேசத்தில் தொடர்ந்து 10 ஆண்டுகளாக பா.ஜ.க ஆட்சியில் இருக்கும் நிலையில், அதையும் தாண்டி பா.ஜ.கவால் வெற்றி பெற முடிந்துள்ளது.

மேலும், பா.ஜ.கவினால் எந்தளவுக்கு வாக்காளர்களை நெருக்க முடிந்தது என்பதையும் இது காட்டுகிறது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கரில் பா.ஜ.கவுக்கு உட்கட்சி பூசல்கள் இருந்த போதிலும், அதையெல்லாம் சமாளித்து பா.ஜ.க போட்ட திட்டமே வெற்றியை வாங்கிக் கொடுத்துள்ளது.

பொதுவாகப் பழங்குடியினர் எப்போதும் காங்கிரஸ் கட்சிக்கே ஆதரவாக இருப்பார்கள், ஆனால் இப்போது அந்த நிலைமை மாறத் தொடங்கியுள்ளனர். பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த திரௌபதி முர்மு இந்தியாவின் குடியரசுத் தலைவர் ஆக்கப்பட்டார். இது தேர்தல் களத்தில் பா.ஜ.கவுக்குப் பலன் கொடுத்துள்ளது. வடமாநிலங்களில் பா.ஜ.க அசைக்கவே முடியாத சக்தியாக மாறி இருப்பதையே இத்தேர்தல் முடிவு காட்டுகிறது.

அடுத்து முக்கியமானது இன்னொரு விடயம்.

2014 ஆம் ஆண்டு முதலே வட இந்தியாவில் பா.ஜ.கவின் ஆதிக்கத்திற்குப் பெண்களின் ஆதரவே முக்கியமானதாக இருந்துள்ளது. இந்த முறையும் அதுவேதான் நடந்துள்ளது. மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் மாநிலங்களில் பெண்களின் வாக்குகள் அதிகரித்து இருந்தன. இவ்வாக்குகள் பா.ஜ.க பக்கம் வந்ததே வெற்றிக்குக் காரணம்.

எஸ்.சாரங்கன்...

வடக்கில்

# இந்திய மீனவர்கள் வருகை கட்டுப்படுத்தப்பட வேண்டும்

கோப்பாய் குறூப் நிருபர்



வடக்கு கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய வருகையை கட்டுப்படுத்த இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாம் வலியுறுத்துவதாக, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கிராமிய அமைப்புகளின் சமாசத் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய நடவடிக்கைகள் அதிகரிக்குமாயின், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் நேற்று முன்தினம் (08) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரித்த போது,

"கடந்த 6ஆம் திகதி யாழ். மாவட்ட கடற்பரப்பில் அத்துமீறி வந்த இந்திய ரோலர் படகுகளால் எமது கடற்றொழிலாளர்களின் சுமார் 60 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அறுத்து நாசம் செய்யப்பட்டன.

இந்திய எல்லை தாண்டிய கடற்றொழிலாளர்களால், பல வருடகாலமாக எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, கடற்றொழில் உபகரணங்களையும் இழந்த நிலையில் அவர்களுக்கு எவ்வித இழப்பீடும் வழங்கப்படவில்லை.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையால் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்ற நிலையில், இலங்கை மற்றும் இந்திய அரசாங்கங்கள் எவ்வித கரிசனையும் கொள்ளவில்லை" என்றார்.

# ஹட்டன் பள்ளிவாசலில் திருட்டு; காவலாளி பலி

ஹற்றன் சுழற்சி நிருபர்

ஹட்டன் ஜும்மா பள்ளிவாசலில் இருந்த உண்டியல் பணம் நேற்று அதிகாலை ஒருவரால் திருடப்பட்டதுடன், அப்பள்ளிவாசல் காவலாளியும் அந்நபரால் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இப்பள்ளிவாசலில் சுமார் 2 வருடங்களாக காவலாளியாக கடமையாற்றிவந்த ஹட்டன், ஹிஜிரபுரவைச் சேர்ந்த சி.எம். இப்ராஹிம் (வயது 67) என்பவரே உயிரிழந்துள்ளார். நேற்று அதிகாலை ஒரு மணியளவில் பள்ளிவாசல் சுவர் ஏறிக் குதித்து வந்த ஒருவர் இந்தச் சம்பவத்தை புரிந்துள்ளதாக, பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

பள்ளிவாசலினுள் இந்நபர் வருவது, உண்டியல் உடைப்பது போன்ற சம்பவங்கள் சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ள நிலையில், அதன் உதவியுடன் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணையை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சாந்தபுரத்தில் தங்க நகை திருட்டு ; மூவர் கைது

கிளிநொச்சி, சாந்தபுரம் பிரதேசத்தில் 88 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான 47 பவுண் நிறை கொண்ட தங்கநகைகளை திருடிய குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். வெளிநாடொன்றிலிருந்து வந்த பெண் ஒருவரின் தங்கநகைகளே திருடப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த நவம்பர் 11ஆம் திகதி தம்மிடம் பாதிக்கப்பட்ட பெண்ணால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட போது, பிரதான சந்தேக நபர், அவரது மனைவி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

தோட்டக் கம்பனிப் பிரதானிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை வழங்கியுள்ளார். பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று முன்தினம் (08) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்பணிப்புரையை விடுத்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் பிரகாரம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தமது வேலைத்திட்டங்களை எவ்வாறு தயாரிப்பதென்பதை அறிந்து கொள்வதற்காகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்காக குழுக்களை நியமிக்க எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தேவைகள் தொடர்பாக ஆலோசிக்க குழுவொன்றை நியமிக்கவும், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பெருந்தோட்டக் கம்பனிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இன்னுமொரு குழுவை நியமிக்கவும் முன்மொழிந்தார். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் தமக்கு வலுவான நம்பிக்கை இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை வெற்றியடைய செய்வதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியமென்றார். எதிர்காலத்தில் ஆசிய நாடுகளின் சனத்தொகை அதிகரிப்புடன் உணவுத் தேவையும் அதிகரிக்குமெனவும் இதற்காக இந்நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரம் தயாராக வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகள் பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## ஐக்கிய அரபு இராச்சியத்தில்...

பௌத்த விகாரை நிர்மாணிக்க இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வேண்டுகோள் விடுத்தார்.

டுபாயில் நடைபெற்ற COP 28 மாநாட்டைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிவிவகார அமைச்சர் எச்.எச்.ஷேக் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யானை கடந்த திங்கள் (04) இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்துக் கலந்துரையாடிய போதே, இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

## அதிகார சபைச் சட்டம்...

தயாரிக்கும் நடவடிக்கை தற்போது நிறைவாகியுள்ளதைத் தொடர்ந்து அடுத்த வருடத்தில் அதனை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இதன் மூலம் சிறந்த ஊடகக் கலாசாரம் உருவாக்கப்படுமென்றார்.

இந்நிலையில், எந்த ஊடக நிறுவனங்களுக்கும் இதன் மூலம் எத்தகைய பாதிப்பும் ஏற்படாதென்பதுடன், எந்த ஊடக நிறுவனமும் தடை செய்யப்பட மாட்டாதெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஊடகத்துறை அமைச்சின் கீழ் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அடுத்த வருடத்தில் இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

சமூக ஊடகங்கள் உட்பட ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு சமூகவிரோத செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுவதை சுட்டிக்காட்டிய அமைச்சர், ஊடக நெறிமுறையைக் கடைப்பிடிப்பதற்கு ஊடகங்கள் நியாயமான முறையில் கண்காணிக்கப்பட வேண்டுமென்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (08) 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஊடகத்துறை மற்றும் துறைமுகம், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சினுடைய செலவுத்தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்,

"எமது அமைச்சின் கீழியங்கும் நிறுவனங்கள் நீண்டகாலமாக நட்டத்தில் இயங்குவதுடன், அவற்றை ஆபத்து முகாமைத்துவம் செய்து இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

தேசிய ரூபவாஹினி கூட்டுத்தாபனம் கடந்த வருடத்தில் 541 மில்லியன் ரூபா நட்டம் அடைந்ததுடன், தற்போது அதன் நட்டத்தை 274 மில்லியன் ரூபாயாக குறைக்க முடிந்துள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கடந்த வருடத்தில் 239 மில்லியன் ரூபா நட்டம் அடைந்ததுடன், தற்போது அதன் நட்டத்தை 147 மில்லியன் ரூபாயாக குறைக்க முடிந்துள்ளது. அதேபோன்று, ஐ.ரி.என் நிறுவனம் கடந்த வருடத்தில் 361 மில்லியன் ரூபா நட்டம் அடைந்ததுடன், தற்போது அதன் நட்டத்தை 181 மில்லியன் ரூபாயாக குறைக்க முடிந்துள்ளது. லேக்ஹவுஸ் நிறுவனம் 198 மில்லியன் ரூபா நட்டம் அடைந்ததுடன், தற்போது 66 மில்லியன் ரூபா இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது. தபால் திணைக்களம் 7 பில்லியன் ரூபா நட்டம் அடைந்ததுடன், தற்போது அது 2 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டுவதாக மாற்ற முடிந்துள்ளது. இலங்கை மன்றக் கல்லூரியின் நட்டத்தையும் குறைக்க முடிந்துள்ளது.

இந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் மேற்கொண்ட நடவடிக்கையின் பலனாக சுய விருப்பின் அடிப்படையில் ஊழியர்கள் சேவையிலிருந்து விலகியதால், அடுத்த வருடத்தில் இந்த நிறுவனங்களை இலாபம் ஈட்டும் நிறுவனங்களாக மாற்ற முடியும்.

நாம் அரசியல் பழிவாங்கலின்றி அனைவரும் சுயாதீனமாக செயற்பட சந்தர்ப்பம் வழங்கியுள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகள் கொள்கை ரீதியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அது தொடர்பான சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், அதனை அடுத்த வருடத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு குறைந்தளவான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. நான் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான சம்பளத்தை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதில்லை. அரச நிதியை மோசடி செய்யாமல் அரசியலில் ஈடுபடுபவன் நான். எனினும், நாட்டில் நிலவிய குழப்ப சூழ்நிலையின் போது எனது வீடும் தீக்கிரையாக்கப்பட்டது.

பொருளாதார பாதிப்புக்கு முன்னைய காலப்பகுதியிலும், அதன் பின்னைய காலப்பகுதியிலும் ஊடகங்களின் செயற்பாடுகள் அவதானத்துக்குரியவை. ஒருசில ஊடகவியலாளர்களும் ஊடகவியலாளர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களும் தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காகவும் பழிவாங்கலுக்காகவும் ஊடகத்துறையை பயன்படுத்துகின்றனர்.

சமூக ஊடகங்களின் செயற்பாட்டால், இன்று ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாலியல் துஷ்பிரயோகங்கள், சமூக விரோத செயற்பாடுகள், சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டே இடம்பெறுகின்றன. அந்த வகையில் ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களை கண்காணித்து, வினைத்திறனான சேவைகளை முன்னெடுக்கவே ஒளி மற்றும் ஒலி ஒழுங்குப்படுத்தல் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது.

எந்த ஊடகத்தையும் இலக்காகக் கொண்டு இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் நெறிமுறைகளுக்கமையவே இந்தச் சட்டமூலத்தை உருவாக்க ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அந்த ஆலோசனைக்கமையவே இந்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது. இந்தச் சட்டமூலத்தை அடுத்த ஆண்டு செயற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்" என்றார்.

## மின் கட்டண திருத்தம்...

சில குறைபாடுகள் காணப்படுவதால், திருத்தத்துடன் அவ்வர்த்தமானி அறிவித்தல் மீள வெளியிடப்படுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் முதல் வாசிப்புக்காக எதிர்வரும் 12 அல்லது 13ஆம் திகதியில் சபையில் சமர்ப்பிக்கப்பட இருந்த போதும், அத்தினத்தில் அச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட மாட்டாதெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பாக எதிர்க்கட்சியினர் சபையில் முன்வைக்கும் கருத்துகள் அடிப்படையற்றவை. மின்சார சபையை மறுசீரமைப்பது தொடர்பாக கடந்த 14 மாதகாலமாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் மறுசீரமைப்பு தொடர்பான பரிந்துரைகளை முன்வைக்க துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள 225 உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்தேன். எனினும், அவர்களில் 12 பேர் மாத்திரமே அதற்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர்களாக பதவி வகித்த கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க, அஜித் பெரேரா ஆகியோரும் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர். மின்சாரத்துறையுடன் தொடர்புடைய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லையென்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மின்சார சபையுடன் தொடர்புடைய 34 தொழிற்சங்கங்களுடனும் 4 தடவைகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டேன். வேண்டுமாயின் அதன் காணொளியையும் என்னால் வழங்க முடியும்.

அதேபோன்று மின்சார சபையின் 114 உயர்மட்ட அதிகாரிகளுடனும், மனிதவள பிரிவிடமும் 3 முறைகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இந்த மறுசீரமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மின்சாரத்துறை அமைச்சின் செயலாளர் மாபா பத்திரண உட்பட குழுவின் உறுப்பினர்கள் கொடுப்பனவுகள் எதையும் பெற்றுக்கொள்ளாமலே இந்தக் குழுவில் பணியாற்றினர்.

மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில், ஒருசில குறைப்பாடுகள் காணப்படுவதை ஏற்றுக்கொள்கிறோம்.

அத்துடன், தமிழ் மொழிபெயர்ப்பில் 2 உறுப்புரைகள் நீக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அந்த வகையில், இந்த வர்த்தமானியில் முன்னெடுக்கப்பட வேண்டிய 42 திருத்தங்களை சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். திருத்தங்களுடன் வர்த்தமானி மீண்டும் வெளியிடப்படும்.

பாராளுமன்ற கூட்டத்தொடரை நிறைவு செய்ய முன்னர் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டிய தேவை எமக்கு கிடையாது. மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஜெய்கா நிறுவனம் ஆகிய சர்வதேச நிறுவனங்களிடம் தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புகளை பெற்றுக்கொண்டுள்ளோம்.

மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான குழுவை பாராளுமன்ற சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்குமாறு எதிரணி உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். அந்தக் குழுவை நானே நியமித்தேன். அமைச்சர் என்ற ரீதியில் நானே பொறுப்புக்கூற வேண்டும். ஆகவே, என்னை சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்கலாம்.

மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டமை தொடர்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. மின்சார சபை சட்டத்தை திருத்தம் செய்யாமல் மின் கட்டமைப்பில் எவ்வித முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் மின்கட்டணத்தை திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்தது.

மழை வீழ்ச்சி அதிகளவில் கிடைத்துள்ளதால் அடுத்த மாதம் மின் கட்டணத்தை திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மின் கட்டணத்தை குறைப்பது தொடர்பான ஆலோசனைகளை எதிரணியினர் எதிர்வரும் 12ஆம் திகதி முன்வைக்க வேண்டும்" என்றார்.

## சம்பள முன்மொழிவு...

ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து தாம் உட்பட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி தெரியப்படுத்தியுள்ளார். அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் சம்பள உயர்வு அவசியமெனவும் ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் இம்முயற்சியை, யோசனையை தாம் வரவேற்பதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார். கொட்டகலையில் நேற்று முன்தினம் (08) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது, "கூட்டு ஒப்பந்த முறைமையினூடாக குறைந்தபட்ச நாள் சம்பளமாக ஆயிரத்து 700 ரூபா வழங்குமாறும் அவ்வாறில்லையெனின், மாற்று முன்மொழிவை டிசெம்பர் 31ஆம் திகதியினுள் முன்வைக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார். ஆயிரத்து 700, 2 ஆயிரமென இலக்கங்களை மையப்படுத்தாமல், நாள் சம்பள முறைமையிலிருந்து மாற வேண்டும். இந்த விடயத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். தற்போதைய சம்பள முன்மொழிவென்பது தற்காலிக தீர்வாகவே அமையும். எமக்கு நிரந்தர தீர்வு அவசியம். எமது மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வருமானம் கிடைக்கும் வகையில் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். மாவட்டத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளோம். சிவில் அமைப்புகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமும் பேச்சு நடத்தி வருகின்றோம். எமது அமைச்சினூடாகவும் சம்பள பொறிமுறையொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. கூட்டு ஒப்பந்தத்தின் அவசியத்தை அதை விமர்சித்த தரப்புகளே இன்று ஏற்றுக்கொண்டுள்ளன. எனவே, அந்த முறைமை மீண்டும் வரும்" என்றார்.

## அரசுக்கு ரூ. 500 கோடி...

நீதிமன்றில் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். 2001ஆம் ஆண்டு இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட GF 8409 இலக்கத்தில் பதிவு செய்யப்பட்ட Land Cruiser ரக ஜீப் வண்டி தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் இலக்கம் 81, Barnes Place, Colombo 07 என்ற முகவரியில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், விசாரணையின் போது 2022ஆம் ஆண்டில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாதாரண ஒரு பிரஜையின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2005 ஜூலை 4 இல் பதிவு செய்யப்பட்ட கே. ஏ. 1141 என்ற இலக்க டொயோட்டா ரக ஜீப்புக்கு வருமான அனுமதிப்பத்திரமோ, சொகுசு வாகன வரியோ, இலக்கத் தகடோ 2015ஆம் ஆண்டு டிசெம்பர் 22ஆம் திகதி முதல் வழங்கப்படவில்லையென்பதுடன், இந்த வாகனம் இலங்கை சுங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ளதா என விசாரணை செய்த போது, இறப்பர் மற்றும் அதனுடன் தொடர்பான தயாரிப்புகள் கொண்டு வரப்பட்டமைக்கான பதிவுகள் காணப்பட்டுள்ள தகவல்களை நீதிமன்றில் மேற்படி பிரிவினர் சமர்ப்பித்தனர்.

இந்த இரண்டு வாகனங்களையும் இலங்கைக்கு இறக்குமதி செய்யும் போது, 235ஆவது அதிகார சபையின் சுங்க கட்டளைச் சட்டம், 136 பிரிவு மற்றும் 137ஆம் பிரிவு தொடர்பான விசாரணைக்காக, தற்போது சாதாரண பிரஜைகளின் பாதுகாப்பிலுள்ள இந்த வாகனங்களை இலங்கை சுங்கத்திடம் ஒப்படைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இதற்கமைய உரிய உத்தரவைப் பிறப்பித்த நீதிமன்றம், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை டிசெம்பர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

தினகரன் வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

# சிறுவர் உரிமைகளில் விழிப்புணர்வு அவசியம்!

கடைப்பிடிக்கப்படுகின்றன. சிறுவர் விவகாரங்களைக் கையாள்வதற்கென பொலிஸ் திணைக்களத்தில் தனியான பிரிவொன்றும் உள்ளது. சிறுவர்களின் உரிமைகளை மீறுகின்றவர்களுக்கு நீதிமன்றங்களில் விதிக்கப்படுகின்ற தண்டனைகளும் கடுமையானதாகும். அதேசமயம் இலங்கை அரசாங்கமும் சிறுவர்களின் விடயத்தில் விசேடமான அக்கறை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தனை கண்டிப்பான நடைமுறைகள் இலங்கையில் உள்ள போதிலும், இங்கும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் ஆங்காங்கே இடம்பெற்ற வண்ணமே உள்ளன. சிறுவர் குற்றங்களுக்கு எதிரான மிகக்கடுமையான தண்டனைகள் நமது நாட்டில் உள்ள போதிலும், அவற்றை அறியாதவர்களாக அல்லது அலட்சியம் செய்பவர்களாக குற்றத்தில் ஈடுபடுவோர் அதிகம் உள்ளனர். அவர்களில் கல்வியறிவுள்ளவர்களும் உள்ளனர் என்பதுதான் வியப்பான விடயம்!

சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மிக நெருங்கிய உறவினர்களாகவும், அக்குடும்பத்துக்கு நெருங்கிய நண்பர்களாகவும் உள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே சிறுவர் பாதுகாப்பு விடயத்தில் அவர்களது பெற்றோரே விசேடமான கவனம் செலுத்த வேண்டும் என்பது தெளிவாகின்றது.

இது ஒருபுறமிருக்க, சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடருவதற்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட வேண்டியதும் அவசியமாகின்றது. கைத்தொலைபேசி பாவனை காரணமாக பாலியல் ரீதியான குற்றங்கள் பெருகுவதாக பலதரப்பினரும் அபிப்பிராயம் கூறுகின்றனர். எதுவித கட்டுப்பாடுகளுமின்றி சீர்கேடான விடயங்களெல்லாம் சமூக ஊடகங்கள் வாயிலாக வந்து குவிவதால் பலரும் குற்றங்களுக்குத் தூண்டப்படுவதாக கல்விப்புலத்தில் உள்ளோர் கவலைப்படுகின்றனர்.

அதேசமயம் வெளிநாடுகளில் பணிப்பெண்களாகப் பணியாற்றும் இலங்கையரின் பிள்ளைகள் அவர்களது வீடுகளில் உரிய பாதுகாப்பின்றி உள்ளதால், அவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகும் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. ஆகவே பெற்றோரின் பராமரிப்பு அவர்களது பிள்ளைகளுக்கு அவசியமாகின்றது.

இதுபோன்ற குற்றங்களைக் கட்டுப்படுத்துவது சட்டத்தினால் மட்டும் முடியாததாகும். சமூகத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் பொதுநல அமைப்புகள் விசேடமான கவனம் செலுத்துவது முக்கியம்.

## 'லன்ச் சீற்' பாவனைக்கு...

பதிலாக மாற்றுத் திட்டத்தை அறிமுகப்படுத்த 6 மாத காலஅவகாசம் வழங்க மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பரிந்துரைத்துள்ளது.

இலங்கையில் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையை குறைத்தல் மற்றும் மீள்சுழற்சி செயன்முறையை மேம்படுத்துதல் தொடர்பாக கலந்துரையாட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தலைமையில் சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு கடந்த செவ்வாய் (05) கூடிய போதே, இவ்வாறு பரிந்துரைக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை சுங்கம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இந்தக் குழுவில் உள்ளனர்.

லன்ச் சீற்களை (Lunch Sheet) பயன்படுத்துவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பாகவும் அதில் காணப்படும் தலேட் எனும் புற்றுநோய்க் காரணி மனித உயிருக்கு ஏற்படுத்தும் பாதிப்பு தொடர்பாகவும் நீண்டநேரமாக கலந்துரையாடப்பட்டது. இந்நிலையில், சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பைக் கவனத்திற்கொண்டு, லன்ச் சீற்களை பயன்படுத்துவதை தடை செய்தல் மற்றும் இதற்கான மாற்றீடுகளை அறிமுகப்படுத்தவும் இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. உலகில் எந்த நாட்டிலும் லன்ச் சீற்கள் பயன்படுத்தப்படுவதில்லையென சுட்டிக்காட்டிய சுற்றாடல் அமைச்சு அதிகாரிகள், லன்ச் சீற்களை பயன்படுத்தாமல் இருப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினர்.

சுற்றாடல் சட்டத்தை திருத்த தற்பொழுது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாகவும் கவனத்திற்கொள்ளப்பட்டதுடன், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க விசேட விடயங்கள் முன்வைக்கப்பட்டதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிளாஸ்டிக் போத்தல்களை மீள்சுழற்சிக்கு மீண்டும் சேகரிக்கும் நடவடிக்கையை, அவற்றை உற்பத்தி செய்து விநியோகிப்பவர்களுக்கே வழங்க வேண்டுமெனவும், இந்தக் குழு முன்மொழிந்தது. புதிய தொழில்நுட்பத்தின் மூலம் QR குறியீட்டைப் பயன்படுத்தி பல்வேறு தேவைகளுக்காக விநியோகிக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் மீண்டும் சேகரிக்கப்பட்டு, மீள்சுழற்சி செயன்முறைக்கு உட்படுத்தப்படுவதைக் கண்டறியும் முறையை தயாரிப்பது தொடர்பான சட்டத்தை திருத்துவதும் நோக்கமாக உள்ளதாகவும், அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். பிளாஸ்டிக் போத்தல்கள் மீள்சுழற்சி செய்யப்படுவதை வினைத்திறனாக மேற்கொள்ள வெற்றுப் போத்தல்களுக்கு குறிப்பிட்டளவு பணம் வழங்கப்பட வேண்டுமென, இந்தக் குழுவின் தலைவர் வலியுறுத்தினார். அத்துடன், இலங்கைக்கு தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் ஒரு முறை மாத்திரம் பயன்படுத்தும் பிளாஸ்டிக் உபகரணங்கள் மற்றும் பொருட்களைக் கண்டறிந்து, அவற்றை பட்டியலிட்டு, தமது குழுவுக்கு அறிக்கை வழங்குமாறும் அதிகாரிகளுக்கு துறைசார் மேற்பார்வைக் குழுத் தலைவர் பணித்துள்ளார். இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெடகொட, வைத்தியக் கலாநிதி திலக் ராஜபக்ஷ, வருண லியனகே ஆகியோரும், சுற்றாடல் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகார சபை, இலங்கை சுங்கம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## வருட இறுதிக்குள்...

மாதத்தில் குறையுமெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுகளுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டுக் குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த சில மாதங்களுக்கு முன்பு முட்டை விலை 70 ரூபாவரையும் கோழி இறைச்சி 1,700 ரூபாவரையும் சென்றது. நாம் குற்றச்சாட்டுகள் விமர்சனங்களுக்கு மத்தியிலும் முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம்.

அந்த வகையில் தற்போது பண்டிகைக்காலமென்பதால் முட்டை, கோழி இறைச்சி விலை சற்று அதிகரித்தாலும், ஜனவரி முதல் விலை குறையும். அதற்குப் பின்னர் விலை அதிகரிப்பதற்கான எந்த அவசியமும் இருக்காது. உற்பத்திகளும் அதிகரிக்கும். நாம் இப்போதும் இறைச்சி மற்றும் முட்டை ஆகியவற்றை இறக்குமதி செய்து வருகின்றோம். 2024 ஆம் ஆண்டு எமது இலக்கின்படி எமது உற்பத்தியான கோழி இறைச்சியையும் முட்டையையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுப்போம்.

பெருந்தோட்டக் கைத்தொழில் துறையைப் பொறுத்தவரையில் நான் புதிதாக அந்த அமைச்சை பொறுப்பேற்றுள்ளேன். தேயிலை உற்பத்தியை அதிகரித்து அதன் மூலமான வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் கறுவா மூலமான ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்கான அதிகார சபை ஒன்றை ஸ்தாபிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவித்து அதன் மூலமாக வருமானத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயிகளுக்கான நட்ட ஈடுகள் முறையாக வழங்கப்படும். அதில் எந்த தடையும் கிடையாது. இதுவரை காலமும் பல வருடங்களுக்கு பின்னரே நட்ட ஈடு வழங்கப்பட்டது. எனினும் நாம் உரிய காலத்தில் அதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்" என்றார்.

## கொழும்பு கோட்டை...

நிறுத்தப்படுவதாக, ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. மஹவ சந்தி முதல் ஓமந்தைவரை வடக்கு ரயில் பாதை புனரமைப்பு திட்டத்தின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணி, மஹவ முதல் அநுராதபுரம்வரை எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதனால் தற்காலிகமாக 6 மாதங்களுக்கு மஹவ முதல் அநுராதபுரம்வரை ரயில் சேவை நிறுத்தப்படவுள்ளதாகவும், அத்திணைக்களம் தெரிவித்தது. எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி முதல் கொழும்பு, கோட்டையிலிருந்து வடக்கு நோக்கி புறப்படும் ரயில் மஹவவரை மட்டுமே செல்லும். இதேவேளை, காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் ரயில் அநுராதபுரம்வரை மட்டுமே சேவையில் ஈடுபடுமெனவும், ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள ரயில்வே திணைக்களத்தின் 1971 என்ற அவசர இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும், ரயில்வே திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.



# நாட்டின் பிரச்சினைகளுக்கு எதிர்க் கட்சிகளிடம் தீர்வுகள் இல்லை

**அண்மையில் ஜனாதிபதியின் துபாய்க்கான விஜயத்தில் பெரும் நன்மைகள் கிடைத்துள்ளன. இது பற்றி கூறுங்களேன்?**

இந்த விஜயத்தின் போது எமக்கு கிடைத்த நன்மைகள் ஏராளம் உள்ளன. மிகவும் பிரச்சினைக்குரிய ஒன்றான காலநிலை மாற்றம் தொடர்பில் அதிகமானோர் பேசினாலும் அதற்கு தீர்வுகள் வழங்குவதில்லை. காலநிலை மாற்ற நீதி மையத்தை நாங்கள் முன்மொழிந்தோம். அதன் ஊடாக அனைத்து நாடுகளையும் ஒன்று சேர்த்துக்கொண்டு அதற்காக குரல் எழுப்ப முடியும். 1983ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே குரல் எழுப்பிய நாடு. அவ்வாறான ஒன்றை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு இந்த சுற்றுப்பயணத்தில் எம்மால் முடிந்தது.

**தற்போது, சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்டத்தின் முடிவை அரசாங்கம் வெற்றிகரமாக நெருங்கியுள்ளது. இரண்டாவது கடன் தவணை எப்போது வழங்கப்படும்?**

சர்வதேச நாளைய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை நிச்சயமாக இந்த மாதத்தில் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். இதன் ஊடாக சர்வதேச சமூகத்திற்கு எமது நாடு தொடர்பில் பாரிய நம்பிக்கை ஏற்படும் என்று நான் நம்புகிறேன். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது நாம் எந்த அளவு சரியான பாதையில் சென்றிருக்கிறோம் என்பதை எவராலும் பார்க்க முடியும். ஏப்ரல் மாதத்தில் நாம் அரசை பொறுப்பேற்கும் போது எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக பல நாட்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை இருந்தது. நாடு முழுதும் பல்வேறு வரிசைகளில் மக்கள் அவதிப்பட்டார்கள். 13 மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் முடங்கின. மின்சாரம், எரிபொருள் இல்லாமையால் எமது நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருவது தடைப்பட்டிருந்தது. மருந்துகளுக்கும் உரங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. டொலர் இல்லாமல் சமையல் எரிவாயு இறக்குமதி செய்ய முடியாமல் போனது. இன்றைய நிலை முற்றிலும் மாற்றமானது. இன்று நாம் பண வீக்கத்தை கட்டுப்படுத்தி உள்ளோம். வரிசைகளை இல்லாமலாக்கி உள்ளோம். சுற்றுலா பயணிகள் மீண்டும் நாட்டுக்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றங்களை பார்க்கும் போது எமது பயணம் சரியானது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

**இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவின் சாதகமான பதில்களைக் குறிப்பிட்டால்? IMF இன் இரண்டாம் தவணைக்கு இந்த நிலை எந்தளவிற்கு வெற்றிகரமான பதிலாக இருக்கும்?**

முதலாம் கடன் தவணையிலிருந்து இரண்டாம் தவணை வரை நாம் மிகுந்த கஷ்டமான பயணத்தை கடந்து வந்திருக்கிறோம். இவ்வாறான கஷ்டமான பயணத்தை கடந்த வெனிசுவேலா, ஆர்ஜன்டீனா, சிம்பாப்பே, லெபனான் போன்ற நாடுகள் 10 முதல் 15 வருடங்கள் வீழ்ந்திருந்த நாடுகளாகும். இன்னமும் அவர்களால் எழுந்திருக்க முடியாத நிலை உள்ளது. அந்த வகையில் பார்க்கும்போது நாம் வெற்றியடைந்து இருக்கிறோம். கஷ்டமான பயணத்தை சரியான முகாமைத்துவத்துடன் கடந்து வந்துள்ளோம்.

**ஜனாதிபதி அண்மையில் பல வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டார். தற்போது சர்வதேச ரீதியில் எமக்கு கிடைத்துள்ள நலன்கள் எவை?**

பாரிஸ் கிளப்பின் 14 நாடுகள் மற்றும் இந்தியா, ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகளின் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கம் இதுவரை எங்களுக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகும். இது ஒரு அதிசயமாக சர்வதேச அளவில் பார்க்கப்படுகிறது.

ஒரு நீண்ட செயல்முறையை மிகக் குறுகிய காலத்தில் முடிக்க எம்மால் முடிந்துள்ளது. இது நம் நாட்டுக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

மேலும், பிரான்ஸ், ஜேர்மனி போன்ற மேற்கத்திய நாடுகளுடனும், மத்திய கிழக்கு, ஈரான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளுடனும் நல்ல இருதரப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள எம்மால் முடிந்துள்ளது. இதன் ஊடாக தொழில் வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

முதலீட்டு சந்தர்ப்பங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத் துறைக்கான பின்புலத்தை உருவாக்கும் விமான பயணத்திற்கான சந்தர்ப்பங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி சர்வதேச ரீதியில் இந்த செயற்பாடுகளை மிகவும் சிறப்பான முறையில் முகாமைத்துவம் செய்கிறார்.

**சுபாஷிணி ஜயரட்ன**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**



# மக்கள் தொடர்ந்தும் போராட்டம் நடத்துவார்கள்

ஜே.வி.பியின் அரசியல் பீட உறுப்பினர் கே.டி.லால் காந்த

**வரவு செலவுத் திட்டத்தில் சம்பளத்தை அதிகரிப்பதாக அரசாங்கம் தெளிவாக கூறியது அதேபோன்று அதிகரித்தும் உள்ளதே?**

வரவு செலவுத் திட்ட காலங்களில் அரசாங்கம் சில விடயங்களை கூறும். அளவுகளையும் கணக்குகளையும் செய்யும். அவற்றில் மக்களுக்கு போதுமான அளவு ஏதும் இருந்தால் ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் நிறுத்தப்படும்.

இல்லையென்றால் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் இன்னும் அதிகரிக்கும். தற்போது தொழிற்சங்க கூட்டணி என்ன கேட்டது? 20000 ரூபாய் சம்பள அதிகரிப்பை கேட்டது. அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? 10000 ரூபாய் சம்பளம் அதிகரிப்பை வழங்கி இருக்கிறது. அதுவும் 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து.

**ஏன் 20000 ரூபாயை கேட்கின்றீர்கள்? இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் 10 ஆயிரம் ரூபாயால் சம்பளத்தை அதிகரிப்பது போதுமானதாக இல்லையா?**

அரசாங்கம் செய்யும் வரி அதிகரிப்பை பார்க்கும்போது எம்மால் அதில் திருப்தி அடைய முடியாது.

அரசாங்கம் தற்போது ஒரு குடும்பத்துக்கு 18 ஆயிரம் ரூபாய் மறைமுக வரியை அறவிடுகின்றது. அரசாங்கம் புதிதாக எதிர்பார்க்கும் வரி இலக்கின் அடிப்படையில் ஒரு குடும்பத்தில் மேலும் 12,300 ரூபாய் வரி அறவிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு குடும்பத்தில் சுமார் 30 ஆயிரத்துக்கு அதிகமான வரியை அறவிட்டு 10 ஆயிரம் ரூபாய் சம்பளத்தை அதிகரித்திருப்பது எந்த வகையிலும் போதுமானதாக இல்லை.

எனினும் அரசாங்கம் நேரடி வரி செலுத்துவோரை தேடி அவர்களிடமிருந்து வரியை பெற்றுக் கொள்வதற்கான முறையான நடைமுறைகளை மேற்கொண்டுள்ளது. அந்த வகையில் பெறுவதும் அரசாங்க மற்றும் தனியார் துறையின் சம்பளம் பெறுவோரின் சம்பளத்தில் நேரடியாக அறவிடும் வரிகள் தானே? இந்த அரசாங்கத்தின் தெளிவான மூன்று முறைகளைக் காண முடிகிறது.

ஒன்று வரிகளை அதிகரித்தல். மற்றையது வளங்களை விற்றல். மூன்றாவது கடன் பெறுதல். இதற்கு வெளியில் வேறு எதுவும் வரவு செலவு திட்டத்திற்கு முன்பும் இல்லை பின்பும் இல்லை.

**இதற்காக மக்கள் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

கண்டிப்பாக மக்கள் எழுந்து நிற்பார்கள். போராட்டங்கள் நடத்துவார்கள். பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள்.

**என்றாலும் இந்தப் போராட்டங்களை வழிநடத்தியது நீங்கள் தானே?**

ஆம், மக்களுக்காக அரசாங்கம் முன்வராது விட்டால் நாம் மக்களுக்காக முன் வருவோம்.

எளிமையான கதை ஒன்றை எடுப்போமே. அன்றாடம் கூலி வேலை செய்யும் ஒருவரை எடுத்துக் கொள்வோம். பொருட்களின் விலைகள் அதிகம் என்பதால் அவரின் நாள் கூலியை அதிகரிப்பார். தென்னை மரம் ஏறுபவரை எடுத்துக் கொண்டால் அவரும் ஒரு மரத்துக்கான கூலியை அதிகரிப்பார். சலூனில் முடி வெட்டுபவரும் கட்டணத்தை அதிகரிப்பார். முச்சக்கர வண்டி ஓட்டுநர்களும் தங்களது கட்டணத்தை அதிகரிப்பார்கள்.

**அப்படியாயின் தங்களது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியாமல் இருக்கும் தரப்பினர் யார்?**

அவர்கள் அரசாங்க துறை மற்றும் தனியார் துறை ஊழியர்களும் தோட்டத் தொழிலாளர்களும் ஆகும். கடந்த நான்கு வருடங்களில் அவர்களுக்கு எந்த விதமான நிவாரணங்களும் கிடைக்கவில்லை. அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் சொகுசாக வாழ்கிறார்கள் என்பது அர்த்தமல்ல. அரசாங்க மற்றும் தனியார் துறை மற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்காகவே தொழிற்சங்கங்கள் முன் நிற்கின்றன.

**தாயக விக்ரமசேகர**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

---



# மத்திய கலாசார நிதிய நிதி முறைகேடு சபையில் தொடரும் சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியம்




லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த குழு நிலை விவாதம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து அதற்கான நேரத்தை விழுங்கும் வகையில் ஏதாவது வேறு விவகாரங்கள் சபையில் கொண்டுவரப்பட்டு அந்த விவகாரங்கள் தொடர்பில் ஆதரவாகவும் எதிராகவும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் மூலம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு தினமும் சில மணி நேரங்கள் சபையில் சர்ச்சை ஏற்படுவது வழமையாகி விட்டது.

அவ்வாறு ஏதாவது பழைய பிரச்சினையை புதிதாக உருவாக்கி அதை பூதாகாரமாக கொண்டு வராவிட்டால் தமக்கு தூக்கம் வராது என்ற நிலையில் சிலர் செயற்படுவதையும் காண முடிகின்றது.

இன்றைக்காவது சபை நடவடிக்கைகளை வழமை போன்று முன்னெடுத்துச் செல்ல முடியுமா என காலையிலேயே பெருமூச்சுடன் சபா பீடத்தில் வந்து அமரும் சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் ஆகியோரின் பாடு தினமும் பெரும்பாடாகி விடுகின்றது.

சம்பந்தப்பட்ட விவகாரத்தை ஒருவர் ஆரம்பிக்கும் போது அவர் அதனோடு சம்பந்தப்படுத்தி யாராவது ஒருவருடைய பெயரை சாடைமாடையாக குறிப்பிட்டாலும் உடனே அவர் எழுந்து ஒழுங்குப்பிரச்சினை என சபையில் குரல் எழுப்பி அதற்காக பல நிமிடங்களை வீணாக்குவதும் தொடர்கிறது.

அதனால் குறித்த நேரத்தில் வழமையான நடவடிக்கைகளுக்குச் செல்ல முடியாது சபாநாயகரும் பிரதி சபாநாயகரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி சபையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாவது, அதனைத் தொடர்ந்து சில நிமிடங்களுக்கு சபையை ஒத்தி வைக்கும் நிலை கூட ஏற்படுவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

அவ்வாறு இந்த வாரத்தில் சூடு பிடித்த ஒரு விடயம்தான் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கடந்த அரசாங்க காலத்தில் கலாசார அமைச்சராக பதவி வகித்தபோது கலாசார நிதியத்தின் நிதியை முறைகேடாக கையாண்டுள்ளார் என்ற விவகாரமாகும்.

இந்த விவகாரத்தில் கதாநாயகனாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவும் வில்லனாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் சிறப்பாக தமது வகிப்பாகங்களை முன்னெடுத்துச் செல்வதை காண முடிகிறது. கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் உதவுவதாக நினைத்து அவ்வப்போது சபையில் குரல் எழுப்புவோர் நேரத்தை வீணடிப்பதில் முக்கிய பங்கு வகிப்பதுடன் அதனை சர்ச்சையாகக் கொண்டு செல்லும் விடயத்தை கைங்கரியமாக முன்னெடுத்து செல்வதையும் காணமுடிகிறது.

கலாசார நிதியத்தின் நிதியை முறைகேடாக கையாண்டது மட்டுமன்றி எதிர்க்கட்சித் தலைவர் அவரது மனைவி நடத்தும் சலூன் நடவடிக்கைகளுக்கு கலாசார நிதியத்தின் ஊழியர்களை பயன்படுத்தினார் என்றும் அவர்களுக்கான சம்பளத்தையும் அதன் ஊடாகவே வழங்கினார் என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டை முன் வைத்து வருகின்றார்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் ஆதாரமாக சில ஆவணங்களையும் அவர் சபையில் சமர்ப்பித்ததுடன் அந்த ஆவணங்கள் போலியானவை அது உரிய முறையில் உரிய அதிகாரியால் உறுதிப்படுத்தப்படாதவை என்ற தர்க்கத்தை முன் வைத்து எதிர்க்கட்சித் தலைவர் அவரது தரப்பு ஆதாரங்களான சில ஆவணங்களை சபையில் சமர்ப்பித்துள்ளதையும் குறிப்பிட வேண்டும். மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் போலியானவை என்று குறிப்பிடும் எதிர்க்கட்சித் தலைவர் அந்த ஆவணங்கள் உண்மையானவை என ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டால் தாம் பதவி விலகுவதாகவும் சபையில் சவால் விடுத்ததைக் குறிப்பிட வேண்டும். சபையில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் போது இடை நடுவில் யாராவது இந்த விவகாரம் தொடர்பில் ஓரிரு வார்த்தைகளை அவிழ்த்து விடும்போது அதிலிருந்து ஆரம்பமாகின்றது சர்ச்சை. இனி வாத விவாதங்களைப் பார்ப்போம்.

மஹிந்தானந்த அளுத்கமகே எம்பி

கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த நிதி முறையற்ற விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் விடுத்த சவாலுக்கமையை உடனடியாக பதவி விலக வேண்டும்.

கலாசார நிதியத்தின் நிதி பிரயோகம் சட்டத்திற்கு முரணானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த நிதியை அவ்வாறு உபயோகிப்பதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என மத, புத்த சாசன, சமய விவகார, கலாசார அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதற்கான கணக்காய்வு அறிக்கையை தான் சபையில் சமர்ப்பித்துள்ளதாகவும், அதன் மூலம் இந்த மோசடி உறுதியாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் தமது மனைவியின் சலூனுக்கு ஆட்களை சேர்த்துக் கொண்டுள்ளமை தொடர்பிலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கலாசார நிதியத்தை பயன்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தின் திருத்தப்பணிகளுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கின்றது. அதேபோன்று சஜித் பிரேமதாசவின் மனைவிக்கு 10 பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு அரசாங்கத்தினால் சம்பளம் வழங்கப்பட்டிருப்பதாக கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது .

அந்த வகையில் அவர் பாராளுமன்றத்தில் விடுத்த சவாலுக்கமைய பாராளுமன்றத்தின் கௌரவத்தை மதித்து உடனடியாக பதவி விலக வேண்டும் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

மஹிந்தானந்த அளுத்கமகே எம்.பி கலாசார நிதியத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக கூறி ஆவணம் ஒன்றை சபையில் சமர்ப்பித்துள்ளார்.

எனக்கும் எனது மனைவிக்கும் சேறு பூசும் நோக்கில் மொட்டுக் கட்சி ஆதரவாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு அறிக்கையே இவ்வாறு சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான உண்மையான அனைத்து ஆவணங்களையும் சபையில் நான் சமர்ப்பித்துள்ளேன்.

அந்த வகையில் எனக்கும் எனது மனைவிக்கும் சேறு பூசும் வகையில் இந்த சபையில் அரச பொறியியல் கூட்டுத்தாபன உள்ளக கணக்காய்வு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அது தொடர்பில் ஆராய்ந்தபோது அது அரச பொறியியல் கூட்டுத்தாபன உள்ளக கணக்காய்வு அதிகாரி என்.வி.டி.தம்மிக என்ற நபரால் தயாரிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை என்பது தெரியவந்தது



இந்த தம்மிக்க என்ற நபர் 2020 பெப்ரவரி 3ஆம் திகதி முதல் வர்த்தக கைத்தொழில்கள் மற்றும் சேவைகளுக்கான முற்போக்கு சங்கத்தின் அதிகாரிகள் குழுவின் குழு உறுப்பினராக செயல்படுகின்றார்.

18, பெப்ரவரி, 2020 அன்று பொதுஜன பெரமுன தொழிற்சங்கத்தின் மற்றொரு கடிதத்தின் மூலம் இவரை செயற்பாட்டு உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு நியமிக்குமாறு அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உப தலைவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கிணங்க உள்ளக கணக்காய்வு அறிக்கை அந்தக் கட்சியிலுள்ள தொழிற்சங்க உறுப்பினர்களை பயன்படுத்தி தவறாக தயாரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கணக்காய்வு பதவிக்கு நியமிக்கப்படும் நபர் அடிப்படை பட்டமும் 12 வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவரால் இத்தகைய கணக்காய்வு பதவியை வகிக்க எந்த தகுதியும் கிடையாது. குறைந்தபட்சம் AAT தகுதி கூட இல்லாத ஒரு நபரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். அதனை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது அவை அனைத்தும் போலியான உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் என்பது புலனாகிறது.

அத்துடன் இந்த நபர் ஏற்கனவே சுயவிருப்பின் மூலம் பதவியை விட்டு விலகியவர். அவ்வாறான நபரையே குறித்த பதவிக்கு மீண்டும் நியமித்துள்ளனர். சுயவிருப்பின் மூலம் சேவையை விட்டு வெளியேறியவரை மீண்டும் அந்த பதவியில் இணைத்துக்கொள்ள முடியாது. அதுதான் நியதி. அது மாத்திரமல்லாது அவருக்கு பதவி உயர்வும் கூட வழங்கப்பட்டுள்ளமை விந்தையானது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்ற ஆரம்பத்திலேயே மத்திய கலாசார நிதியத்தின் ஊடாக 11 பில்லியன் ரூபா நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து அதனை ஆராய்வதற்காக குழு நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த ஹரிகுப்த ரோஹணதீர எனும் நபர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சட்டத்தரணிகளில் ஒருவராவார்.

அவர் 2010 தேர்தலில் போட்டியிட்ட அக் கூட்டணியின் வேட்பாளர்களில் ஒருவர். அத்துடன், அவர்கள் மேற்கொண்ட விசாரணை அறிக்கையில் உறுப்பினர்கள் எவரும் கையெழுத்திடவில்லை. எனினும் இந்த அறிக்கை 2020ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலிலுக்காக அவர்களால் பயன்படுத்தப்பட்டதையும் குறிப்பிட வேண்டும்.

இந்த அறிக்கை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவோ இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் செயற்படுவதற்கு போதிய காரணங்கள் அதில் காணப்படவில்லை என தெரிவித்திருந்தது. அதன் பின்னர் கோப் குழு அது சம்பந்தமான விசாரணைகளை முன்னெடுத்தது. சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் அதிகாரிகளை அழைத்து புதிய குழுவை நியமித்தது. அந்த குழுவின் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

ஏனெனில் அந்த விசாரணையின் அறிக்கையில் இந்த குற்றச்சாட்டுக்களில் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எவரும் குற்றவாளிகள் அல்ல என நிரூபிக்கப்பட்டுள்ளமையே அதற்குக் காரணம் என்றும் தெரிவித்தார்.

இதில் உண்மை எது பொய் எது என்பதெல்லாம் ஒரு புறம் இருக்க, இந்த விவகாரம் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அவ்வப்போது விடயங்களை கிளறி விடுவதும் அதற்கு எதிர்க்கட்சியினர் பதிலளிக்கப் போய் விவகாரம் பூதாகரமாவதும் அதனால் சபை நடவடிக்கைகளில் நேரம் வீண் விரயமாவதும் அடிக்கடி நடக்கின்றது.

சபைக்கு ஒவ்வாத வார்த்தைப் பிரயோகங்கள் முன்வைக்கப்படுவதாலும் அடிக்கடி இந்த பிரச்சினை சர்ச்சைகளுக்கு வழிவகுப்பதாலும் அதற்கு ஏதாவது ஒரு வகையில் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அத்துடன் உயரிய சபையில் சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகள், மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

**லோரன்ஸ் செல்வநாயகம்**



# பாராளுமன்றத்தின் மாண்பு தரமுயர்த்தப்பட வேண்டும்!




சம்யுக்தன்

**பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரித்தானியாவிலிருந்தே பாராளுமன்ற ஜனநாயகம் தோற்றம் பெற்றது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் கிழக்கு மற்றும் மேற்குலக நாடுகளில் ஏராளமானவை பிரித்தானியாவின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட நிலையில், அந்தந்த நாடுகள் சுதந்திரம் அடைந்த பின்னரும் பிரித்தானியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட பாராளுமன்ற ஜனநாயக முறைமையை ஏற்றுக்கொண்டு அதனைப் பின்பற்றி நிர்வாகம் செய்யத் தொடங்கியிருந்தன.**

குறிப்பாக நாடொன்றின் ஆட்சிமுறையானது பெரும்பாலும் பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையில் அடையாளம் காணப்படுகிறது. தற்போது பெரும்பாலான வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் ஜனநாயகத்தை தங்கள் அரசாங்க வடிவமாக தேர்ந்தெடுத்துள்ளன.

ஒரு நாட்டில் ஜனநாயகம் திறம்பட செயற்படுவதற்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரண்டு முக்கிய கூறுகள் அல்லது ஒருங்கிணைந்த பகுதிகள் இருக்க வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் சில சமயங்களில் ஆட்சியைப் பிடிக்க சில ஜனநாயகக் கட்சிகள் கூட்டணி அமைத்து, எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்வதை சமீப காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மக்னாகாட்டா ஒப்பந்தம் மூலம் பாராளுமன்ற ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்திய முதல் நாடு பிரித்தானியா. அதிகாரத்தில் இருக்கும் கட்சி எதுவாக இருந்தாலும், ஐக்கிய இராச்சியத்தில் அதாவது பிரித்தானியாவில் ஜனநாயகம் என்பது நடைமுறையில் தூயவடிவில் பலப்படுத்தப்பட்டது.

இந்தப் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையின் கீழ் தேசத்தின் நலனில் எதிர்க்கட்சிக்கு முக்கிய பங்கு உள்ளது. இவ்வாறான நாடுகளில் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சியுடன் நல்லுறவைப் பேணும் அதேநேரம், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்து விடயங்களையும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் என்ற பொதுவான எதிர்பார்ப்புக் காணப்படுகிறது.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அல்லது தேசிய பாதுகாப்பு அல்லது நாட்டின் பிராந்திய ஒருமைப்பாட்டை அச்சுறுத்தும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எதிர்க்கட்சி எப்போதும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும் அல்லது தேசத்தின் பெரிய நலனுக்காக கட்சிக் கொள்கைகளை தற்காலிகமாக ஒதுக்கி வைக்க வேண்டும் என்பது பின்பற்றப்பட்டு வரும் சம்பிரதாயமாகும்.

இந்த ஜனநாயகத் தன்மை இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானியாவில் தெளிவாகப் புலப்பட்டிருந்தது. இலங்கையை எடுத்துக் கொண்டால் பல தசாப்தங்களுக்கு முன்னர் இக்கட்டான சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சிகள் பூரண ஒத்துழைப்பு வழங்கியதை மறுக்க முடியாது.

அரசியல் ரீதியாக ஏற்படக் கூடிய பாரிய பாதிப்புக்களிலிருந்து ஆளும் கட்சிகளை எதிர்க்கட்சிகள் காப்பாற்றிய பல நிகழ்வுகள் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையைக் கொண்ட நாடுகளில் காணப்படுகின்றன. எதிர்க்கட்சிகள் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்த தெரிவுக் குழுக்களில் தமது தீவிரமான பங்களிப்பைச் செலுத்தி தூய்மையான நிர்வாகத்திற்கான பங்களிப்பைச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் எதிர்காலத்தைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களில் எதிர்க்கட்சிகளின் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் எப்போதும் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆளும் கட்சியால் செயற்படுத்தப்படும் ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகள் கைகொடுக்குமென்பது நம்பிக்கையாகும்.

எதிர்க்கட்சிகள் எப்போதுமே அமைச்சுக்கள் மற்றும் துறைகளின் செயற்பாடுகளை ஆராய்வதுடன் தொடர்புடைய மற்றும் துல்லியமான தகவல்களை பொதுமக்களின் முன்பாக வெளிப்படுத்தவும் வேண்டும். அதன் பங்குதாரர்களின் எந்தவொரு பிரிவினருக்கும் அல்லது பிரிவினருக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தவொரு தன்னிச்சையான முறையிலும் அதிகாரிகள் செயற்பட இடமளிக்காது இருக்க உதவும்.

இவ்வாறான பின்னணியில் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பின்பற்றும் நாடு என்ற ரீதியில் சுதந்திரத்துக்குப் பின்னரான ஆரம்பகாலப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமான விமர்சனங்களைக் கொண்டவையாக இருந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் வாய்மூலமான கருத்துப் பரிமாற்றங்கள் கடுமையாக இருந்தாலும் பாராளுமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கும் வகையில் அவை அமைந்திருந்தன.

முன்னைய நாட்களில் அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்,

## நீண்டகால ஜனநாயக பாரம்பரியம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் அனைத்துத் தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாடு



## உறுப்பினர்கள் சிலரின் வரம்புமீறிய செயல்களால் மக்கள் வேதனை!

அனைவருமே நன்கு படித்த, கண்ணியமான மற்றும் சமூகத்தின் உயர்மட்டத்தில் இருந்து பண்பட்ட அரசியல்வாதிகளாகவும், மக்கள் மத்தியில் மரியாதையைப் பெற்ற நபர்களாகவும் இருந்தனர். அவர்கள் கொள்கை விடயங்களில் சபைக்குள் காரசாரமான வாக்குவாதங்களை மேற்கொண்டனர், ஆனால் அவர்கள் ஒருபோதும் பாராளுமன்றத்தில் பயன்படுத்தத் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை அல்லது தங்களுக்கு எதிரான நிலைப்பாட்டில் உள்ளவர்களை இழிவுபடுத்துவதற்காக சபையில் உள்ள எவருக்கும் எதிராகவும் அநாகரிகரமான அல்லது வெறுக்கத்தக்க வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை.

பாராளுமன்றத்தின் சம்பிரதாயங்கள் சரியான முறையில் பின்பற்றப்பட்டன.

சில அரசியல் தலைவர்கள் தங்கள் உண்மைகளை நிரூபிக்கவும், எதிர்நிலைப்பாட்டில் உள்ள தமது அரசியல் போட்டியாளர்களுக்கு எதிராகக் கண்ணியமான வார்த்தைகளைப் பயன்படுத்தி வேடிக்கையான முறையில் கேலி செய்த சந்தர்ப்பங்கள் இருந்தன, ஆனால் ஒருபோதும் அசிங்கமான, அநாகரிகமான அல்லது வெறுக்கத்தக்க வார்த்தைகளைப் பயன்படுத்தவில்லை.

இறுதியில் இந்தக் கருத்துக்களை சபையில் இருதரப்பினரும் ரசித்து கைகுலுக்கி அமைதியான முறையில் கலைந்து சென்றனர். இவ்வாறான சம்பிரதாயம் இலங்கைப் பாராளுமன்றத்தில் மாத்திரமன்றி பிரித்தானியப் பாராளுமன்றத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

இருந்தபோதும், தற்பொழுது இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் செயற்பாடுகள் அன்றைய காலங்களுடன் ஒப்பிடுகையில் முற்றுமுழுதாக மாறுபட்டதாக அமைந்துள்ளன. பாராளுமன்றத்தில் அவ்வப்போது நடைபெறுகின்ற சம்பவங்கள் மற்றும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் பயன்படுத்தும் வார்த்தைகள், அவர்களின் நடத்தைகள் மோசமாக இருப்பது துரதிர்ஷ்டவசமாக அமைந்துள்ளன.

சிலருடைய செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும், பலவந்தம் மிக்கதாகவும் காணப்படுகின்றன. சில உறுப்பினர்கள் புனிதமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதில்லை மற்றும் அவர்களின் அறியாமையை வெளிப்படுத்தி ஊடகங்களின் ஈர்ப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு நிலவுகின்றது.

இருந்தபோதும் 2022ஆம் ஆண்டில் மாற்றத்தை எதிர்பார்த்து வீதிக்கு இறங்கிப் போராடிய மக்கள் இந்த அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை வலுவாக முன்வைத்திருந்தனர். அரசியல்வாதிகளில் சிலர் அரச சொத்துக்களை அபகரித்து அரசியலுக்கு வந்தவர்கள் என்ற கருத்து வாக்காளர்களாகிய நாட்டு மக்கள் மத்தியில் காணப்படுகிறது. மக்களின் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன.

பாராளுமன்றத்தின் தரநிலையை உறுதிப்படுத்துவது தொடர்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டமூலம் குறித்து கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இது விடயத்தில் விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டுள்ளது. கொள்கை அளவில் பாராளுமன்றத்தின் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதில் அனைத்துத் தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை தொடர்பில் இந்த வாரம் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒருமாத காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி பாராளுமன்ற வளாகத்தில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்ஜய் பெரேரா மற்றும் ரோஹண பண்டார ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் குறித்தே இந்தத் தடை விதிக்கப்பட்டது.

இவர்கள் மூவர் சம்பந்தப்பட்ட விடயம் குறித்த வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் விசாரிப்பதற்கு பிரதி சபாநாயகர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், இதன் அறிக்கை பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே ஒரு மாத காலத் தடை விதிக்கப்பட்டது.

மக்கள் மத்தியில் பாராளுமன்றம் குறித்துக் காணப்படும் பார்வையை மாற்றுவதற்கு அரசியல்வாதிகள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய காலத்தில் சபையில் நடந்துகொள்ளும் விதம் மற்றும் பயன்படுத்தும் வார்த்தைகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுதான் மக்களின் எண்ணமாக உள்ளது.

---




# சென்னையை புரட்டியே போட்ட பேய் மழை; பிசாசு வெள்ளம்

**இந்த வெள்ளமும், நிவாரண பணிகளும் அரசியல் ஆக்கப்படலாம். அடுத்த அல் நினோ காலப்பகுதியில் மற்றொரு வெள்ளம் வரத்தான் செய்யும். சேதங்களை தவிர்ப்பதற்கு அரசுகள் என்ன செய்கின்றன என்பதை விட மக்கள் பங்களிப்பு என்ன என்பதே முக்கியம்**

தமிழகத்தை, குறிப்பாக சென்னை நகரை மழையும் வெள்ளமும் வாட்டுவதில்லை என்பதே பொதுவான வரலாறு. அறுபது, எழுபது, எண்பதுகளை எடுத்துக் கொண்டால் தமிழகம் வரட்சியில் தவிக்கும். சென்னை மக்கள், தண்ணீர் லொறிகளுக்காக குடங்களுடன் தவமிருப்பார்கள். தாகமும் வரட்சியும் தொடர் பிரச்சினைகளாக இருந்ததால் தான் பல சிறுகதைகள், நாடகங்கள், திரைப்படங்கள், தண்ணீரையும் தாகத்தையும் மையமாகக் கொண்டிருந்தன. உதாரணத்துக்கு பாலசந்தரின் தண்ணீர், தண்ணீர் திரைப்படத்தை குறிப்பிடலாம்.

ஆனால் இயற்கையின் இந்த வழமையான போக்கு கடந்த 15 ஆண்டுகளாக மாறி வந்திருக்கிறது. அதிக மழைவீழ்ச்சி காணப்படும் மாநிலமாக தமிழகம் மாறி வருவதை அவதானிக்க முடிகிறது. உதாரணத்துக்கு இந்த ஆண்டையே எடுத்துக் கொள்ளலாம். தொடர்ச்சியாக அவ்வப்போது மழை பெய்து கொண்டிருந்தது. இதற்கான காரணம், உலகளாவிய ரீதியாக குளிர்காலம் மிகக் கடுமையாகி வருவதையும் அங்கே கோடைக் காலத்தில் வெயில் மிகக் கடுமையாக வாட்டி வருவதையும் இந்த ஆண்டில் பார்த்தோம். தற்போது தான் துபாயில் காலநிலை தொடர்பான மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. வளர்ந்த நாடுகள் காலநிலை பாதிப்பைத் தவிர்க்க செயலளவில் வேகம் காட்டுவது இல்லை என்ற பொதுவான அபிப்பிராயம் ஒரு பக்கமிருக்க, இயற்கையோ தன் சீற்றங்களை அதிகரித்து வரத் தொடங்கியிருக்கிறது.

தென் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் இது மழை பெய்யும் காலம். எவ்வளவு அதிகமாகப் பெய்கிறதோ, அந்த அளவுக்கு தண்ணீர் பிரச்சினை தீரும்; விவசாயம் செழிக்கும். சென்னை, டில்லிக்கு அடுத்ததாக இரண்டாவது பெரிய நகரமாக, பரப்பளவில், கருதப்படுகிறது. நகரின் மொத்த சனத்தொகை 64 லட்சமாக அறியப்படுகிறது. சென்னையை அண்டிய புறநகர்களையும் சேர்த்துக் கொண்டால் மொத்த சனத்தொகை ஒரு கோடியே 20 லட்சத்துக்கும் அதிகம். சென்னை நகரின் ஒரு சதுர கி.மீட்டரில் 25 ஆயிரம்பேர் வசிப்பதாக ஒரு புள்ளி விவரம் உள்ளது.

இந்தப் பின்னணியை வைத்துக் கொண்டு பார்த்தால்தான் சென்னை வெள்ளம் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கும் என்பதை யூகிக்கக்கூடும். பெரு வெள்ளத்துக்குக் காரணமான மிக்ஜாங்புயல் சென்னைக்கு அருகே நிலை கொண்டிருந்ததாலும் அது மெதுவாகவே ஆந்திராவை நோக்கி நகர்ந்ததாலுமே சென்னையில் பலத்த மழை கொட்டியது. இப்புயலுக்கு மியன்மாரே ‘மிக்ஜாங்’ எனப் பெயரிட்டது. இது, அந்நாட்டில் ஓடும் நதியொன்றின் பெயராம். வலிமை அல்லது நெகிழ்ச்சி என்பது இதன் பொருளாம். வங்கக் குடாவில் தோன்றிய இப்புயல் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி, வலுப்பெற்று புயலாக மாறியது. முன்கூட்டியே கணிக்கப்பட்டபடி அது தமிழகத்தை நெருங்கி வந்தது. சென்னையில் இருந்து 90 கி.மீ. தொலைவில் அசையாமல் நின்றிருந்தது. எல்லாப் புயல்களும் மழையைக் கொண்டு வருவதில்லை. பெருங் காற்றையும் ஏற்படுத்துவதில்லை. சில வழியிலேயே வலுவிழந்துவிடும். சில, பலத்த காற்றை ஏற்படுத்தும்; மழையைத் தராது. ஆனால் மிக்ஜாங் புயல் கடும் மழையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. அப்புயலின் மையச் சின்னத்தைச் சுற்றி பாரிய மேக வலயங்கள் சூழ்ந்திருந்தன. கடலில் அது நின்று கொண்டிருந்ததால் மென்மேலும் அது கடல் நீரை உறிஞ்சிக் கொண்டிருந்தது. அதன் வலயங்கள் சென்னைக்கு மேலாக சுற்றிக் கொண்டிருந்தன. எனவே சென்னைக்கு மழை நிச்சயமென்றும் முதலாம் திகதி மாலையில் இருந்து அடுத்த 12 மணித்தியாலங்களுக்கு கடும் மழை பெய்யுமென்றும் காலநிலை அவதான நிலையம் தெரிவித்துமிருந்தது. சில தினங்களுக்கு முன்னர் சென்னையில் பெருமழை பெய்தபோது தேங்கிய நீர் விரைவிலே வடிந்து விட்டது. எனவே பெய்யவிருக்கும் மழை நீரையும் சமாளித்துவிடலாம் என சென்னை மேயர் பிரியா நினைத்திருந்தார். ஆனால் நடந்ததோ வேறு!



அன்றிரவு 36 செ.மீ. மழை அகோரமாகப் பெய்தது. சென்னையில் ஒரு பகுதி வெள்ளக் காடானது. இரண்டாம் திகதி இரவும் கடும் மழை தொடர்ந்தது. மொத்தம் 50 செ.மீ. மழை. அதாவது மூன்று மாதங்களில் பெய்யக்கூடிய மழை, 48 மணித்தியாலங்களில் பெய்தால், சன நெரிசலும் புதிது புதிதாக எழுப்பப்பட்டு வரும் கொன்கிரீட் சட்டடங்களும் நிறைந்த சென்னை தண்ணீரில் தத்தளிக்காமலா இருக்கும்?

(19ஆம் பக்கம் பார்க்க)

அருள்சத்தியநாதன்...

# டிசெம்பரில் கரம் நிறைய வாசி தரும் People's Discount

CLOTHING · HOUSEHOLD ITEMS & ELECTRONICS · 75% வரையில் கழிவு · LEISURE · RESTAURANTS · INSTALMENTS · ONLINE STORES · SUPER MARKETS · SHOES & LEATHER

## People's Credit Cards உடன் சேமியுங்கள்

## Leisure

**50%** – Sennya Resorts Belihuloya (Credit : 50%, Debit : 50%, Till 31st December, 0773138844); Melheim Kandy Villas (Kandy) (Credit : 50%, Debit : 50%, Till 31st January 2024, 0702354466); Melheim Beach (Kalpitiya) (Credit : 50%, Debit : 50%, Till 31st January 2024, 0702354466); Melheim Resort & Spa (Haputale) (Credit : 50%, Debit : 50%, Till 31st January 2024, 0702354466)

**45%** – Uga Bay (Pasikuda) (Credit : 45%, Debit : 45%, Till 14th December, 0115671000, 0112117100, Online Booking Only); Uga Jungle Beach (Trincomalee) (Credit : 45%, Debit : 45%, Till 14th December, 0115671000, 0112117100, Online Booking Only); Jungle Hut Resort Sigiriya (Credit : 45%, Debit : 45%, Till 31st December, 0773130336); Sigiriya Kingdom Gate Hotel (Dambulla) (Credit : 40%, Debit : 40%, Till 31st December, 0772253867, 0777421000, 0763170170)

**40%** – The Other Corner Habarana (Credit : 40%, Debit : 40%, Till 30th December, 0773327995 / 0772613115); Sungreen Resort & Spa Habarana (Credit : 40%, Debit : 40%, Till 30th April 2024, 0664380009 / 0766754040, 0768055050); The Swiss Residence Kandy (Credit : 40%, Debit : 40%, Till 30th December (Excluding 24th December), 0812204646 / 0773770246); Hotel Cassendra (Kandy) (Credit : 40%, Debit : 40%, Till 31st December, 0771880688)

**Up to 38%** – Earl's Regency (Kandy); Turyaa Kalutara; Amethyst Resort Passikudah; Heritance Tea Factory (Kandapola); Heritance Kandalama; Heritance Ahungalla; Heritance Negombo (Credit : Up to 38%, Online Booking Only); Villa Serenity by Jat (Dichoya) (Credit : 35%, Debit : 35%, Till 31st December, 0777777528)
- Booking Period: Till 30th November
- Travel Period: Till 15th December
- Please Refer Website For Reservation Link

**Up to 35%** – Victoria Golf Resort (Digana) (Credit : Up to 35%, Till 31st December, 0777183433); Tropical Life Resort & Spa (Dambulla) (Credit : 35%, Debit : 35%, Till 31st December, 0772251151, 0662030300); Simpson's Forest (Kandy) (Credit : 35%, Debit : 35%, Till 20th December, 0772515172, 0812071700); The Lake Hotel Polonnaruwa (Credit : 35%, Debit : 35%, Till 30th November, 0771111415, 0272224411); Lavendish Grand Tamarind Lake (Kataragama); Lavendish Ohrin (Kataragama); Lavendish Miridiya Lake Resort (Anuradhapura); Lavendish Wild Safari (Wasgamuwa) (Credit : 35%, Debit : 25%, Till 22nd December, 0753555946)

**30%** – Elephas Resort (Sigiriya) (Credit : 35%, Debit : 25%, Till 31st March 2024, 0763157330 / 0662054111, 0662054112); Inidi Leisure (Wadduwa) (Credit : 30%, Debit : 30%, Till 15th December, 0778645203); Pigeon Island Beach Resort Nilaveli (Credit : 30%, Debit : 30%, Till 20th December, 0267388388 / 0112683383 / 0777899773); Sigiriya Jungles (Sigiriya); Gedara Villa Kalutara; Cottage 42 Nuwara Eliya; Birds Park (Polgahawela); Dream Lodge (Hanthana); South Lake Resorts (Koggala); Sathmin Villa (Ahangama); Villa Indrasiriya (Ahangama); Villa Wijesiriya (Ahangama); Maalu Maalu Resorts & Spa Pasikuda; Scottish Planter Glendevon Bungalow Nuwara Eliya; Aliya Resort & Spa Sigiriya; Kithala Resort Tissamaharama; Mountbatten Bungalow Kandy; Wild Glamping Knuckles; Wild Glamping Gal Oya; Tea & Experience Factory Mandaramnuwara; Koragaha Lodge (Yala); Villa Hundira (Negombo); Tamarind Tree Garden Resort (Negombo); The Calm Resort & Spa (Pasikuda); Hotel Sigiriya; Club Hotel Dolphin (Negombo); Birds Resort Hambantota; Amaara Forest Hotel (Sigiriya); Amaara Sky Hotel (Kandy); Hotel Athgira (Udawalawa); Athgira River Camp Galle; Elephant Trail (Udawalawa)

**Up to 25%** – Kalu's Hideaway Udawalawa (Credit : Up to 25%, Till 31st December, 0770498823 / 0117150250); Centauria Wild (Udawalawa); Tamarind Hill Galle; The River House (Balapitiya); Four Points Resort (Anuradhapura); The Thinnai (Jaffna); Wilroma Resort (Anuradhapura) (Credit : 25%, Debit : 25%)

**Up to 20%** – Oak Ray Regency (Kandy); Oak Ray Elephant Lake (Habarana); Oak Ray Summer Hill Breeze (Nuwara Eliya); Oak Ray Ella Gap (Ella); Oak Ray Wild Yala (Tissamaharama); Oak Ray Beach (Wadduwa); Oak Ray Serene Garden (Kandy); Oak Ray Tea Bush Ramboda; Fresco Water Villa (Sigiriya); Senani Hotel (Kandy); Pelwehera Village Resort (Dambulla); Tribe Yala; Apa Villa Thalpe; Era Beach Thalpe; Joe's Resort Bentota; Joe's Resort Unawatuna; Handun Villas (Talalla); EKHO Lake House Polonnaruwa; EKHO Surf Bentota; EKHO Safari Tissa (Tissamaharama); EKHO Ella; EKHO Sigiriya; Queen's Hotel (Kandy); Hotel Suisse (Kandy); Rice of Life by Tissa Inn (Tissamaharama); Amaya Lake (Dambulla); Amaya Hills (Kandy); Amaya Beach (Pasikudah); Abhaya Mandapa (Anuradhapura); Sea Horse Hotel & Spa Negombo; The Rockwall (Induruwa); The Firs (Nuwara Eliya); Hotel Elephant Park (Pinnawala); Hotel Pinnalanda (Pinnawala)

## Household Items & Electronics

**Up to 75%** – Softlogic; Softlogic MAX (Credit : Up to 75%, Debit : Up to 75%, Till 31st December, On Selected Consumer Electronics & Furniture)

**Up to 60%** – Laksala & Laksala Life Style (Credit : Up to 60%, Debit : Up to 60%, Till 31st December)

**Up to 52%** – Abans (Credit : Up to 52%, Debit : Up to 52%, Till 31st December, On Selected Items)

**Up to 25%** – Hunters (Credit : Up to 25%, Debit : Up to 25%, Till 31st December, On Selected Items); Ceylon Furniture (Credit : 25%, Debit : 25%, Till 31st December)

**Up to 20%** – Smart Life Music (Credit : Up to 20%, Debit : Up to 15%, 1st to 31st December); Arpico Furniture; MKM Luxe Suisse; Damro; Unilever Pureit; Singer

**Up to 15%** – Dankotuwa Porcelain; House Of Gifts; London Sleep Company; Dinapala

## Restaurants

**30%** – Catamaran Beach Restaurant (Mt. Lavinia) (Credit : 30%, Debit : 20%, For Seafood Platters, 15th November to 31st December, 0779090090)

Ramada by Wyndham Colombo (Credit : 20%, For Cardenia, Alhambra, High Tea, Dinner Buffet & A La Carte Only, Excluding Beverages & Speciality Buffets, Christmas Day & New Year's Eve, Till 31st December)

**20%** – Indian Affair; Full'r; Wrap Co; Solo Bowl; Sugar Beach (Mt. Lavinia); Sugar Bistro (Crescat); Sugar Bistro (Galle); Soy & Szechuan; Pranzo On The Edge (By Waters Edge); Boardwalk (By Waters Edge); Bavarian Garden On The Edge (By Waters Edge); Thuna Paha At The Edge (By Waters Edge); Kobe At The Edge (By Waters Edge); Diyatha Station (By Waters Edge); The Bakery At The Lake (By Waters Edge); The Bakery At The Edge (By Waters Edge); The Warehouse Colombo; Chinese Dragon Cafe; La Luna Pizzeria & Cafe (Colombo 04); Virticle by Jetwing; Jetwing Blue The Kitchen; Jetwing Lagoon Blue Lagoon; Jetwing Lighthouse Cardamom Cafe; Jetwing Colombo Seven – Ward 7; Jetwing Sea Café C; Jie Jie Beach by Jetwing All Day Dining Restaurant; Jetwing Jaffna Peninsula
- Exculding Special Promotional Days & Festive Days – 24th & 25th December
- Not Applicable For Beverages
- Dining Discounts Are Not Applicable For Liquor & Tobacco

**15%** – Burley's (Credit : 15%, Debit : 10%, 29th & 30th November)

## Clothing

**Up to 55%** – Boss (By Abans); Under Armour (By Abans); Skechers (By Abans) (Credit : Up to 55%, 18th & 19th December)

**30%** – The Brands Warehouse; The Factory Hub; Cotton & Thread; Zigzag; Aurelia; W; Avi; U.S. Polo Assn.; Aditi Infinity; Junior Warehouse; Amante

**25%** – Hameedia; Adidas Exclusive; Signature; Envoy Mansion; The Factory Outlet; Saree Mandir; Mimosa; Spring & Summer; House of Fashions; Saman Mal; The Vanta Studios; Double XL; Dilly & Carlo; Shopimo; Diliganz; Dirali; Beverly Street; Fashion Enuli; The Kids Warehouse; Piyarathna Tex; Crocodile; Emerald; SWX; Chenara Dodge; The Brands Warehouse; ODEL; Galleria; Cotton Collection; COCO; LUV SL; Odel Sports; Levi's; Calvin Klein; Tommy Hilfiger; Armani Exchange; Samsonite; MANGO; ALDO; Nike; Adidas Originals; Adidas; Skechers; Ralph Lauren; Sacoor Brothers; Furla; Diesel; Fossil; International Watches & Sunglasses; Luxe Bags; Yamamay; Carpisa; Mothercare; The Toy Store; Clarks; Vero Moda; RV Fashion; Scylla Zelus; Kelly Felder; Redvers Buller; Molly Boulevard

**20%** – Cool Planet; Exbit; Nick Nack; CIB Shopping Centre; CIB Curtains; AriElle; Wijaya House of Tailors; Wijaya Saree Mandir; Chamathkara; Haamaa; Handloom Gallery; Nirmani Dress Point; New Manel; Prasad Fashion Square; Prasad Textiles; Sarathchandra Textiles; Sriyani Dress Point; Sunimal's; Super Fashion (Panadura); G C S Fashions (Polonnaruwa); Calle City Stores (Polonnaruwa); Kreation; Cotton Island; Velona; Arista; Supul Collection; Zuzi; Atukorala Textiles; Uptown Kandy; NOLIMIT; Level Outfitters; Piyara Fashion; Vidumini Fashion; Jump Clothing; Kadapatha; Nora Reed; Thilakma Fashion; Nithijaya Saree Fashion; Will by Zac; Sting Clothing (CCC & OGF); MAGS; Differ; Fashion Bug; Rich Look; Kandygs Handlooms; Arienti; Choice Park; AMA Dresspoint; ASB Fashion; Bayleee (CCC); Emma Fashion; The Kids Warehouse; Gayan Inlook; Absolute Basics

**15%** – Midnight Divas (Credit : 15%, Debit : 15%, 1st to 6th December, Excluding Durex & Shins Products)

**10%** – Thilakawardhana Textiles (Credit : 10%, Debit : 10%, 1st & 2nd December, Valid Only For Shoes & Clothing)

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

www.peoplesbank.lk · 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation

A (lka) ஃபிட்ச் ரேட்டிங், AAA பிராண்ட் ஃபினான்ஸ் ரேட்டிங்
மக்கள் வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.



# SHOPPING FIESTA 2023

## தொடங்கிவிட்டது பண்டிகைக் காலம் ....

பண்டிகைக் காலம் தொடங்கியுள்ளதால், சம்பளம் வந்தவுடன் மக்கள் பொருட்கள் வாங்கத் தொடங்கிவிடுவார்கள் அதற்கு சம்பளம் மட்டுமே போதுமானதாக இருக்காது அதற்காக அடுத்து அவர்கள் நாடுவது கடன் அட்டைகளைத்தான். பொருட்கள் வாங்குவதற்குப் பணம் செலுத்துவதற்குப்பிறகு சில நாட்கள் கழித்து பணம் செலுத்த அனுமதிக்கின்றனர். இதனுடன், கடனட்டைகளும் வாடிக்கையாளர்களின் கிரெடிட் ஸ்கோரை உருவாக்கவும் உதவுகின்றன. கடனட்டைகள் மிகவும் முக்கியமானவை. எனவே வாடிக்கையாளர்கள் அவற்றை சரியாக பயன்படுத்தவேண்டும் அவ்வாறு இல்லை அவசர தேவைக்கும் கடன் வாங்க இயலாமல் போகலாம், அதனால் கடன் வரவு செலவு அறிக்கைகளை அவ்வப்போது சரிபார்க்க வேண்டும். எதற்காக எந்த கட்டணத்திற்கு நீங்கள் கடனட்டையைப் பயன்படுத்தியுள்ளீர்கள்? உங்கள் கடனட்டையின் எண்கள் மற்றும் விதிமுறைகளை நீங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் இதைச் செய்யாவிட்டால், வரம்புக்கு மேல் செலவழிப்பீர்கள், பின்னர் நீங்கள் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். உங்கள் கடனட்டை அறிக்கையில் நீங்கள் கவனிக்க வேண்டிய ஐந்து விஷயங்களை பார்ப்போம்...



**1. பரிவர்த்தனை கட்டணத்தை அறிந்து கொள்ளுங்கள்**

கடனட்டை ரசீதில் உள்ள கூடுதல் பரிவர்த்தனை கட்டணங்களை பயனர்கள் முழுமையாக சரிபார்க்க வேண்டும். வங்கிகள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிகமாக வசூலிப்பது அடிக்கடி நடக்கிறது அவை குறித்த புகார்களும் அதிகமாக வருகின்றன. அதற்காக அவர்கள் நிலுவைத் தொகையையும் வசூலிக்கலாம்.

**2. கடன் வரம்பை சரிபார்க்கவும்**

கடனட்டை வரம்பை நீங்கள் சரிபார்த்தால், நிலுவைத் தொகை மற்றும் கடன் வரம்பு குறித்த புதுப்பித்த நிலையில் இருக்க இவை உங்களுக்கு அதிகமாக உதவும்.

**3. பரிசுப்புள்ளிகள்**

கடனட்டை வைத்திருப்பவர்கள் காலாவதியாகும் முன் தங்கள் பரிசுப்புள்ளிகளைப் பயன்படுத்த வேண்டும். அறிக்கையின் உள்ளே கடனட்டையில் கிடைக்கும் புள்ளிகள் புதிய சலுகைகளில் சேர்க்கப்பட்டிருக்கும், இது கடனட்டை பயன்படுத்துபவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## பண்டிகைக் காலத்தை கொண்டாட
# மக்கள் வங்கியின் நிகரற்ற கடனட்டை சலுகைகள்



தேசத்தின் பெருமையான மக்கள் வங்கி, தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வெகுமதியளிக்கும் வகையில், பீப்பிள்ஸ் கடனட்டைகளில் பல்வகைப்பட்ட சலுகைகள் மற்றும் இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களை வழங்கி, இந்த பண்டிகைக்கால உற்சாகத்தை மேம்படுத்தியுள்ளது.

பீப்பிள்ஸ் கடனட்டைதாரர்கள் தற்போது முன்னணி ஹோட்டல்கள் மற்றும் உல்லாச விடுதிகள், உணவகங்கள், சுப்பர்மார்க்கெட்டுக்கள், மோட்டார்வாகன சேவை மையங்கள், வைத்தியசாலைகள், ஒன்லைன் விற்பனை மையங்கள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் புத்தகங்கள், ஆடையணிகள், பாதணிகள், தோல் உற்பத்திப் பொருட்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், இலத்திரனியல் பொருட்கள் மற்றும் ஆபரணம் போன்ற வாழ்க்கைமுறைப் பொருட்களின் பல்வகைப்பட்ட தெரிவுகளை வழங்கும் பல்வேறுபட்ட விற்பனை மையங்களில் 75% வரை கணிசமான தள்ளுபடிகளைப் பெற்று அனுபவிக்க முடியும். மேலும், தெரிவு செய்யப்பட்ட விற்பனை மையங்களில் 24 மாதங்கள் வரையான வட்டியில்லா, இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களின் பயன்களையும் அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கியின், பிரதிப் பொது முகாமையாளர் (கொடுப்பனவு, செயல்முறை முகாமைத்துவம் மற்றும் தர நிர்ணயம்) நில்மினி பிரேமலால் அவர்கள் பண்டிகைக் காலத்தில் வழங்கப்படுகின்ற சேமிப்புக்கள் குறித்து கருத்து வெளியிடுகையில், “எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு பண்டிகைக் கால கொண்டாட்டங்களை விசேடமானதாக மாற்றும் முயற்சிகளை மக்கள் வங்கி எப்போதும் மேற்கொண்டு வருகின்றது. சலுகைகளைப் பொறுத்தவரையில், எமது வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான தேவைகள் இருப்பதை நாம் தெளிவாக புரிந்து கொண்டுள்ளதுடன், அவர்களுடைய வாழ்க்கைமுறைகளுக்கு ஏற்றவாறு பெறுமதிமிக்க மற்றும் தரமான சலுகைகளை வழங்குவது எமது நோக்கமாகும்,” என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் வீசா / மாஸ்டர் கிளாசிக், கோல்ட், பிளாட்டினம், சிக்னேச்சர், இன்ஃபினிட்டி மற்றும் மாஸ்டர் வேர்லட் அட்டைதாரர்கள் இப்பண்டிகைக்கால சலுகைகளை பெற உரித்துடையவர்கள் என்பதுடன், நாடளவிய ரீதியில் 3,500 க்கும் மேற்பட்ட விற்பனை மையங்களில், 2024 ஜனவரி 15 வரை இச்சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

மக்கள் வங்கி கடன் / டெபிட் அட்டைகள் இலங்கை எங்கிலும் விற்பனை மையங்கள் மத்தியில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதுடன், சர்வதேசரீதியாக பிரயாணம் செய்கின்றவர்களின் சௌகரியத்தை மேம்படுத்தும் பொருட்டு உலகில் 30 மில்லியனுக்கும் மேற்பட்ட விற்பனை மையங்களில் வாடிக்கையாளர்கள் தமது அட்டைகளை உபயோகிக்க முடியும்.

வாடிக்கையாளரின் தகவல் விபரங்களின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பாதுகாப்பு தராதரங்களைக் கடைப்பிடித்து, அட்டைதாரர்களுக்கு முழுமையான பாதுகாப்பினை மக்கள் வங்கி அட்டைகள் அனைத்தும் வழங்குகின்றன. அத்துடன் மக்கள் வங்கி வீசாஃமாஸ்டர் பிளாட்டினம் மற்றும் வீசா சிக்னேச்சர், இன்/பினிட்டி/மாஸ்டர் வேர்ல்ட் அட்டைதாரர்களுக்கும், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் பிரயாண காப்புறுதியையும் மக்கள் வங்கி வழங்குகின்றது.

மேலும், மக்கள் வங்கி வீசா சிக்னேச்சர், இன்ஃபினிட்டி மற்றும் மாஸ்டர் வேர்ல்ட் அட்டைதாரர்கள், விமான நிலைய சொகுசு ஓய்வறை வசதியை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், 148 க்கும் மேற்பட்ட நாடுகளில் 1,300 க்கும் மேற்பட்ட விமானநிலைய சொகுசு ஓய்வறைகளை (Lounge Facility) உபயோகிக்க இது அட்டைதாரர்களுக்கு இடமளிக்கின்றது.

பண்டிகைக்காலங்களில் மாத்திரமல்லாது, வருடம் முழுவதும் நிகரற்ற சலுகைகளையும், மேம்பட்ட சௌகரியத்தையும் பீப்பிள்ஸ் அட்டைகள் வழங்குகின்றன. நாடளவிலுள்ள 747 மக்கள் வங்கிக் கிளைகள் மற்றும் சேவை மையங்கள் கொண்ட விசாலமான வலையமைப்பு, பீப்பிள்ஸ் வேவ் மற்றும் பீப்பிள்ஸ் பே மொபைல் வங்கிச்சேவை செயலிகள், பீப்பிள்ஸ் வெப் இணைய வங்கிச்சேவை வசதி மற்றும் 280 க்கும் மேற்பட்ட சுய வங்கிச்சேவைப் பிரிவுகள் மூலமாக 24 மணி நேரமும் மக்கள் வங்கி கடனட்டைகளுக்கான கொடுப்பனவுகளை சௌகரியமாக மேற்கொள்ள முடியும்.




நீங்கள் ஏற்கனவே மக்கள் வங்கி கடனட்டைதாரராக இருப்பின், மேற்குறிப்பிட்ட தள்ளுபடிகளை வழங்கும் எந்தவொரு விற்பனை மையத்திலும் உங்கள் கடனட்டையை உபயோகித்து இச்சலுகைகள் அனைத்தையும் நீங்கள் இலகுவாக பெற்று அனுபவிக்க முடியும்.

மகத்தான இச்சலுகைகள் அனைத்தையும் பெற்று அனுபவிக்க விரும்புகின்றவராக நீங்கள் இருப்பின், மக்கள் வங்கி கடனட்டைக்கு விண்ணப்பிப்பதற்கு எந்தவொரு மக்கள் வங்கிக் கிளைக்கும் அல்லது சேவை மையத்திற்கும் சென்று நீங்கள் அதனை மேற்கொள்ள முடியும்.

மக்கள் வங்கி கடனட்டைகள் வழங்கும் சலுகைகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள விரும்பினால் 1961 என்ற மக்கள் வங்கியின் துரித சேவை அழைப்பு இலக்கத்தை தொடர்பு கொண்டோ அல்லது **www.peoplesbank.lk** என்ற இணையத்தளத்தினூடாகவோ அறிந்து கொள்ள முடியும்.

நாட்டின் முதன்மையான அனுமதி உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான மக்கள் வங்கி, 747 கிளைகள் மற்றும் சேவை மையங்களுடன் இலங்கையின் மிகப் பாரிய வங்கிச்சேவை அடிச்சுவட்டைக் கொண்டுள்ளது. 62 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுடன், 14.7 மில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு தனது சேவைகளை வங்கி வழங்கி வருவதுடன், நாட்டில் எந்தவொரு நிதியியல் சேவைகள் வழங்குனர் மத்தியிலும் இதுவே மிகப் பாரியதாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

PEOPLE'S BANK
Pride of the Nation



# உலக வங்கி தினத்தை சேவை மற்றும் புத்தாக்கத்தின் பாரம்பரியத்துடன் கொண்டாடும் மக்கள் வங்கி

இலங்கையின் வங்கிச்சேவை மற்றும் நிதித்துறையில் முன்னோடியாகத் திகழும் மக்கள் வங்கி, சர்வதேச வங்கி தினத்தை கொண்டாடுகிறது. சர்வதேச வங்கிகள் தினம் என்பது நமது அன்றாட வாழ்வில் வங்கிகளின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் ஒரு உலகளாவிய அனுட்டிப்பு நிகழ்வாகும். ஆண்டுதோறும் நடத்தப்படும், இந்த தினம் நமது நிதியியல் கட்டமைப்புகளின் முதுகெலும்பாக இருக்கும் ஸ்தாபனங்களுக்கு கௌரவம் செலுத்துகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு அனுசரணையளிப்பது, சேமிப்பை வளர்ப்பது மற்றும் உலகளாவில் தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு டிஜிட்டல் சேவைகளை வங்கி விரிவுபடுத்துகிறது.

மக்கள் வங்கி கடந்த பல ஆண்டுகளாக, நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்கை வகித்து, தேசத்தின் பெருமை என்ற பெயரைச் சம்பாதித்துள்ளது. நாடு முழுவதும் 747 சேவை நிலையங்களுடன், தனிநபர்கள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு முழுமையான சேவைகளை வங்கி வழங்குகிறது. அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு நிதியளிப்பதில் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதன் மூலம் தனது அர்ப்பணிப்பை அது மேலும் எடுத்துக்காட்டுகிறது.

அத்தியாவசிய நிதிச் சேவைகளை வழங்குவதில் வங்கிகளின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது. 14.7 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் தளம் மற்றும் ரூபா. 3 டிரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துக்களுடன், மக்கள் வங்கி இலங்கை முழுவதும் வங்கிச்சேவையை வெகுசனங்கள் மத்தியில் எடுத்துச்செல்வதில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது. வளர்ச்சிக்கான முன்னேற்றத்தைத் தழுவி, தொலைதூர பின்தங்கிய பிரதேசங்களிலும் கூட அதிநவீன

தொற்றுநோய்க் காலத்தில், மக்கள் வங்கி, அதன் Mahajana Mehwara வர்த்தக சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் மூலம், கொவிட் 19 நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் முக்கிய அரச வைத்தியசாலைகளுக்கு ரூபா. 20 மில்லியனுக்கும் அதிகமான மதிப்புள்ள முக்கிய மருத்துவ உபகரணங்களுக்கு நிதியளித்தது. சமூக சேவைக்கான வங்கியின் அர்ப்பணிப்பில் சீமாட்டி ரிட்ஜ்வே மற்றும் காசல் வைத்தியசாலைகளுக்கு நன்கொடைகள் ரூபா. 10 மில்லியனுக்கும் அதிகமானவை என்பதுடன், மற்றும் பின்தங்கிய பாடசாலைகளுக்கு சூரிய மின்சக்தியில் இயங்கும் மின்சார உற்பத்திக் கட்டமைப்புகளை வழங்குதல் ஆகியவை அடங்கும்.

1961ஆம் ஆண்டு சட்ட இலக்கம். 29 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி கூட்டுறவு வணிகம் மற்றும் கிராமிய வங்கிச் சேவைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. மொழியியல் தடைகளை தகர்த்து, சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, வங்கி சேவையை அனைவருக்கும் அணுகக்கூடியதாக வங்கி மாற்றியது.

# ஆர்பிக்கோவின் பண்டிகைக்கால தள்ளுபடி

ARPICO DAILY
ARPICO SUPERCENTRE

கிறிஸ்மஸ் பண்டிகைக்குத் தேவையான அனைத்தையும் நாடு முழுவதிலும் உள்ள 57 ஆர்ப்பிக்கோ சுப்பர்சென்டர்கள், சுப்பர்ஸ்டோர்ஸ் மற்றும் டெய்லி சுப்பமார்க்கட் காட்சியறைகளின் ஊடாக உற்சாகமான வாராந்த வெகுமதிகளுடன் பெற்றுக்கொள்ளக் கூடிய மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்த ‘ஆர்ப்பிக்கோவுடன் பண்டிகைக் காலத்தை அனுபவித்திடுங்கள்’ என்ற பிரசாரத்தை அறிவிப்பதில் ஆர்ப்பிக்கோ பெருமையடைகிறது.

வீட்டுப் பொருட்களுக்கான தரம் மற்றும் சௌகரியத்துக்கு ஒத்த பெயரைக் கொண்டு, பெறுமதி மிக்க அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பரந்துபட்ட தேவைகளை ஆர்ப்பிக்கோ பூர்த்திசெய்துவருகிறது. நாளாந்த அத்தியாவசியப் பொருட்கள், வேகமாக நகரும் அத்தியாவசியப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், தளபாடங்கள், மெத்தைகள், இறப்பர் உற்பத்திகள், நீர்த் தாங்கிகள், இலத்திரனியல் பொருட்கள், உடனடித் தயாரிப்புக்கள், பரிசுகள், பரிசுக் கூப்பன்கள், பரிசுப் பொதிகள் போன்ற பாரிய பொருட்களை ஆர்ப்பிக்கோ வழங்கி வருகிறது. அது மாத்திரமன்றி கிறஸ்மஸ் கொண்டாட்டத்துக்கான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய முடிவதுடன், இணையற்ற விலைக் கழிவுகள் 2024 ஜனவரி 15ஆம் திகதி மாத்திரமே காணப்படும்.

கிறிஸ்மஸ் அலங்காரங்களுக்குப் பரந்துபட்ட தெரிவுகளை ஆர்ப்பிக்கோ வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் தமது அலங்காரத் தேவைகளை ஒரே கூரையின் கீழ் பூர்த்திசெய்துகொள்ள முடியும்.

இந்தப் பண்டிகைக்காலத்தில் ஆர்ப்பிக்கோ வழங்கும் கொண்டாட்டகால பரிசுப்பொதிகளுக்கு சந்தையில் நல்ல வரவேற்புக் காணப்படுகிறது. வாடிக்கையாளர்கள் 10 வகையான ஈர்க்கக்கூடிய தெரிவுகளில் தமக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது.

இந்தப் பண்டிகைக் காலத்தில் மகிழ்ச்சியாக விழாவைக் கொண்டாடும் ஆர்பிக்கோ, வாராவாரம் உற்சாகமான பரிசுகளை வெல்லும் வாய்ப்பை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர்களை மேலும் சிறப்பான கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கு வழிவகுக்கின்றது.

கொள்வனவு செய்யும் அளவுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வர்த்தக நாமங்களின் அளவுகோல்களுக்கு இணையாக வெகுமதிகளை வெல்வதற்கான வாய்ப்புக்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிகரிக்கும். பரிந்துரைக்கப்பட்ட 67 வர்த்தக நாமங்களைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களிலிருந்து வாராந்த வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். பரிந்துரைக்கப்பட்ட மூன்று வர்த்தக நாமங்களில் 5000 ரூபா முதல் 7499 வரையில் செலவுசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு வாராந்த சீட்டிழுப்பில் விற்பனை செய்வதற்கான ஒரு வாய்ப்புக் கிடைப்பதுடன், பரிந்துரைக்கப்பட்ட ஐந்து வர்த்தக நாமங்களில் 6,499 ரூபா முதல் 9,999 ரூபா வரையில் செலவுசெய்த வாடிக்கையாளர்கள் வாராந்த சீட்டிழுப்பில் பங்குபற்ற 2 வாய்ப்புக்களும், மெகா சீட்டிழுப்பில் கலந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பும் கிடக்கும். அதேநேரம், பரிந்துரைக்கப்பட்ட 7 வர்த்தகநாமங்களில் 10,000 ரூபா முதல் 14,999 ரூபா வரையில் செலவுசெய்த வாடிக்கையாளர்களுக்கு வாராந்த சீட்டிழுப்பில் கலந்துகொள்ள 3 வாய்ப்புக்களும், மெகா சீட்டிழுப்பில் கலந்துகொள்ள 2 வாய்ப்புக்களும் கிடைக்கும். பரிந்துரைக்கப்பட்ட 10 வர்த்தகநாமங்களில் 15,000 ரூபாவுக்கு மேலதிகமாக செலவுசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு வாராந்த சீட்டிழுப்பில் கலந்துகொள்ள 5 வாய்ப்புக்களும், மெகா சீட்டிழுப்பில் கலந்துகொள்ள 3 வாய்ப்புக்களும் கிடைக்கும்.

அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர் டிவிகள் மற்றும் சோஃபாக்கள் போன்ற உயர் மதிப்புள்ள பொருட்களை வெகுமதியாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், ஆர்ப்பிக்கோவுக்கு மேற்கொள்ளும் ஒவ்வொரு விஜயமும் சிறப்புப் பரிசை வழங்குவதற்கான வாய்ப்பாக அமையும்.

இந்தச் சீட்டிழுப்புகள் ஆர்ப்பிக்கோவின் பிராந்திய சுப்பர்சென்டர்கள், சுப்பர்ஸ்டோர்ஸ் மற்றும் டெய்லி காட்சியறைகளில் இடம்பெறுவதுடன், நாடு முழுவதிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கும் வெற்றிகொள்வதற்கு சமமான வாய்ப்பு வழங்கப்படும்.

“பண்டிகை காலத்தில் வாடிக்கையாளர்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அல்லது தமது கொண்டாட்டங்களைத் திட்டமிடும்போது மகிழ்ச்சியான, வசதியான மற்றும் பலனளிக்கும் ஷொப்பிங் அனுபவங்களை உருவாக்க நாம் விரும்புகின்றோம்” என ரிச்சட் பீரிஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் ஜானக குமார தெரிவித்தார்.

“நாம் வழங்கும் விலைத் தள்ளுபடிகள் மற்றும் தெரிவுகளின் பல்வகைமைய எந்த சில்லறை விற்பனையாளர்களுடனும் ஒப்பிட முடியாது. எமது ‘ஆர்ப்பிக்கோவுடன் பண்டிகைக் காலத்தை அனுபவித்திடுங்கள்’ என்ற பிரசாரம் எந்த ஷாப்பிங் பட்டியலையும் ஒரே கூரையின் கீழ் எளிதாகவும் சுவாரஸ்யமாகவும் நிறைவேற்றுகிறது” என்றார்.

ஆர்ப்பிக்கோவுடன் பண்டிகைக் காலத்தை அனுபவித்திடுங்கள்’ பிரசாரத்தைத் தெரிவுசெய்து கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளவும், மகிழ்ச்சியைப் பரப்பவும், நீடித்த நினைவுகளை உருவாக்கவும் அனைவருக்கும் ஆர்ப்பிக்கோ அழைப்பு விடுக்கிறது. இந்தப் பண்டிகைக் காலத்தில் சிறந்த விடுமுறை ஷாப்பிங் அனுபவத்திற்கான இடமாக இது அமையும் என்பதில் ஐயமில்லை.

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## තාර දැමීම
සියළුම අමුද්‍රව්‍ය සමඟ
කර්මාන්ත ශාලා, හෝටල් රෙපෙයාර් කිරීම සහ පින්තාරු කිරීම
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට ප්‍රවාහනය කර දෙනු ලැබේ
තාර දැමීම, කාපට් කිරීම, බොරළු යොදා පාරවල් සකස්කිරීම, වී වේලන කමත් තාර දැමීම, බෝක්කු සහ කාණු සකස් කිරීම, ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම.
APSARA GLOBAL HOLDINGS
ඔබගේ නිවසේ හෝ ආයතනයේ සියලු ඉදිකිරීම් එකම තැනකින්...
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ.
Email. asankasameera417@gmail.com
0778 383 834

## Christmas Trees & Santa Costumes FOR SALE



2 Ft - Rs. 580
3 Ft - Rs. 1,400
4 Ft - Rs. 2,650
5 Ft - Rs. 4,800
6 Ft - Rs. 6,600
7 Ft - Rs. 8,900
0777 664 655/ 0742 864 600

## LUXURY VILLA FOR SALE IN KANDY



Experience Opulence in this Colonial 9000 SqFt Masterpiece on 90 Perch. With 9 Bedrooms, 7 Bathrooms, Ample Parking, a Lavish Swimming Pool. Indulge in Elegance.
EXPECTING 250 MILLION
+94 77 999 9025
www.ceylontropicallands.com

## WANTED HOUSE COLOMBO 7



Urgently Looking for a Livable House from Colombo 7
20 to 40 Perch
+94 77 999 9025
WWW.CEYLONTROPICALLANDS.COM
BUDGET UP TO 1.5 BILLION

## BARE LAND FOR SALE



NAWALA, KOSWATTA, HIGHLY RESIDENTIAL
• 30FT ROAD
• 20 PERCH
• SQUARE BLOCK
EXPECTING 4.5MILLION
CONTACT US
+94 77 999 9025
WWW.CEYLONTROPICALLANDS.COM

## කැලණිය තල්වත්තෙන්
ඔබගේ මුදලට කදිම ආයෝජනයක්
පර්චසය ලක්ෂ 5 1/2 කොළඹට, කටුනායක මාතර අධිවේගයට විනාඩි 5.
පර්චසය 10 ට වඩා ගන්නා අයට විශේෂ වට්ටම්
පර්චසර 10, 15, 20, 30 වශයෙන් අවශ්‍ය ප්‍රමාණයන්ගෙන් වෙන්කරවාගත හැක.
මෙවන් අඩු මිලකට කොළඹට සමීපව ඉඩම් නොමැත.
0777 708 268, 0706 965 984

## APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

## கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES
MOSQUITOES, ANTS
BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
(PV 120625)
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

## NUWARAELIYA
BANGALOW AT SHANTHIPURA
53 PERCHES, 6 ROOMS
CALM ENVIRONMENT
0714 598 552/ 0729 037 851

## BEAUTIFUL PROPERTY FOR SALE IN HANWELLA



63 perch beautiful property, landscaped and well maintained garden, 2000 Squre feet renovated fully tiled house which includes 4 bedrooms and 2 bathrooms. 25 metres to the main road and 1km away from the Hanwella town, An hours drive from Colombo, Including fully grown coconut, Jack, Mango and Rambutan trees. Highlight of the property is the beautiful Garden, one of the very few properties in the area in this calibre. Quiet and peacefull environment.
EXPECTING 38 MILLION BUT NEGOTIABLE WITH SERIOUS BUYERS
PLEASE CALL ANIL ON 0773 505 774
FOR MORE INFORMATION AND VIEWING APPOINTMENT

## ARCHITECT DESIGNED LUXURY HOUSE FOR SALE
IN COLOMBO 5
FIFTY METRES OFF KIRULA RD



PRICE 190 MILLION NEGOTIABLE
ARCHITECT DESIGNED SOLIDLY BUILT SIX BEDROOM LUXURY HOUSE IN CENTRAL COLOMBO 5 AREA (18 PERCH 5000 SQ FT ) FOR SALE.
EASY ACCESS TO LEADING HOSPITALS, BANKS, SCHOOLS ,GOVT DEPARTMENTS, RESTAURANTS, SUPERMARKETS EXTRA
Front and rear Garden, Garage Parking, Six large bedrooms, Five large washrooms, 5000 sq. ft. space, Separate pantry, kitchen,living dinning ,maids quarters for both floors, Separate water,3 phase Electricity supplies for both floors externally. Could be operated as two houses. With two different access roads.
CONTACT PHONE - 0778 043 220
Mail - c.d.bodaragama@gmail.com

## நீர்கொழும்பு குரணவில்
44 பேர்ச் முதன்மையான காணி விற்பனைக்கு.
குடிமனை பிரதேசத்தில் அமைந்துள்ளதும், சதுர வடிவானதும், சுற்றிவரவுள்ள எல்லைச் சுவர் மற்றும் வீதிக்கு முகப்பாகவுமுள்ளது. மட்டமான காணி, பல வகையான பழமரங்கள் காய்க்கும் நிலையிலுள்ளது. தெளிவான உறுதி. மினுவாங்கொடவிற்கு செல்லும் வீதியில் அமைந்துள்ளதும் இரு நிமிடங்களில் கொழும்பு பிரதான வீதிக்கு அருகாமையிலுமுள்ளது. அரிதான சந்தர்ப்பம்.
தொலைபேசி : 071-3218955

The National Gem & Jewellery Authority of Sri Lanka &
The Gemmologists Association of Sri Lanka
Present
## Jewels 2023
Gemmologists Association of Sri Lanka
GEM & JEWELLERY TRADE EXHIBITION & AWARDS



මැණික් ගන්න ජුවලේස් එන්න!
அழகான கற்கள் மற்றும் நகைகளைப் பார்க்கவும் வாங்கவும் ஜுவெலெஸ் வருக!
December 15 | 16 | 17
9am - 7pm
Taj Samudra Hotel
Colombo - Sri Lanka
Organised by
Supported by
EDB SRI LANKA
Sri Lanka YOU'LL COME BACK FOR MORE
SRI LANKA CONVENTION BUREAU





## WELLAWATTE
APARTMENT FOR SALE
3 ROOMS, 2 ATTACHED BATHROOMS, 1250 SQ.FT., 5TH FLOOR, GYM, SWIMMING POOL, PARKING
3.6 MILLION NEGOTIABLE
37 - 5/2, DAYA ROAD (OFF HAMPDEN LANE), WELLAWATTE, COLOMBO 06
0703 724 560

## தளபாடங்களுடன் வீடு விற்பனைக்கு
கொழும்பு-04
பம்பலப்பிட்டிய சந்தி
(மெஜஸ்டிக் சிட்டிக்கு அருகில்)
* 19.6 பர்ச்சஸ் (அண்ணளவாக 5300 சதுர அடி)
* இத்தாலிய தரை ஓடு பதிக்கப்பட்டுள்ளது
* 07 பெரிய ஏசி படுக்கையறைகள்
* இணைந்த குளியலறைகளுடன் அலுவலக அறை
* கார்ப்பட் ஏசி பெரிய ஹால் மற்றும் இரண்டு மேலதிக உட்காரும் பகுதிகள்
* வெளிநாட்டிலிருந்து பிரத்தியேகமாக தயாரித்த தளபாடங்கள் நீராவி குளியலறை
* சமையலறை, பென்ட்ரீ மற்றும்
* சாப்பாட்டு அறைகள்
* மேல்மாடியில் மற்றமொரு பென்ட்ரீ
* 02 களஞ்சியசாலைகள்
* மொட்டை மாடி
* சாரதி மற்றும் பணியாளருக்கான குளியலறையுடன் அறைகள்
* 05 வாகனங்கள் நிறுத்தும் வசதி
* 03 நுழைவாயில்கள்
* 4.5 பர்ச்சஸில் முன் பூந்தோட்டம்
* கட்டப்பட்டு 14 வருடங்கள் மற்றும் நன்றாக
* பராமரிக்கப்பட்டுள்ளது
0765 831 372

# வடமராட்சியில் உதித்து கிழக்கில் பிரகாசித்த பேராசிரியர் செ.யோகராசா





கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் மூத்த பேராசிரியர் செ.யோகராசா கடந்த 7ஆம் திகதி மதியம் கொழும்பில் காலமாகிய செய்தி தமிழ் உலகை மிக்க கவலையுறச் செய்துள்ளது.

பேராசிரியர் செ. யோகராசாவைப் பற்றியும் ஈழத்து இலக்கியப் பரப்பில் அவரது பாரிய பங்களிப்பு பற்றியும் வெறும் எழுத்துக்களில் சுருக்கி விட முடியாது. பேராசிரியர் செ. யோகராசா பல்துறைப் பரிமாணங்களைக் கொண்ட படைப்பாளியாகவும், ஆற்றல் மிக்க ஆய்வாளராகவும், பலராலும் மதிக்கப்படுகின்ற பண்பாளனாகவும் இருந்து கொண்டு, சிறந்த திறனாய்வாளராக என்றும் உயர்ந்து நிற்கிறார்.

கரவெட்டியைச் சேர்ந்த பேராசிரியர் செ.யோகராசா இளமைக் காலத்தில் கருணை யோகன் என்ற புனைப்பெயரில் கவிதைகளும், சிறுகதைகளும் எழுதியுள்ளார். பேராசிரியர் செ.யோகராசாவின் தமிழ் இலக்கியப் பணி மிக காத்திரமானது. இதுவரையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்பு நூல்களை படைத்துள்ளார். இவரது நூல்களில் இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள், ஈழத்து நவீன இலக்கியம், ஈழத்து நவீன கவிதை, ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு போன்றவற்றைச் சிறப்பாகக் கூறலாம்.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக நவீன இலக்கியம் சம்பந்தமான பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்', ஈழத்து சிறுவர் பாடல் களஞ்சியம்' என்ற இவரது நூல்கள் இரண்டையும், ஆழ்ந்த அகன்ற அறிவிற்காய் 'குமரன் புத்தக இல்லம்' வெளியிட்டுள்ளது.

செ. யோகராசா 'ஈழத்துத் தமிழ் சிறுகதைக் களஞ்சியம்' என்னும் நூல் இலங்கையில் வெளிவந்த மிக முக்கிய, மிகச் சிறந்த சிறுகதைகளின் தொகுப்பாக அமைகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கங்களையும் கொண்ட இத்தொகுப்பு இலங்கைச் சிறுகதை வரலாற்றில் முக்கிய தடம் பதித்த சிறுகதை ஆசிரியர்கள் பற்றிய குறிப்பினையும் கொண்டுள்ளது என்ற வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது.

நவீன இலக்கிய வளர்ச்சியில் இவரது இலக்கிய பங்களிப்பு விசாலமாக அமைந்துள்ளது. எந்த ஆய்வரங்கிலும் தமது காத்திரமான கட்டுரைகளை முன்வைத்து ஆற்றுகின்ற உரை புதிய அணுகுமுறைகளைப் பிரதிபலித்து நிற்பதைக் காணலாம். அத்துடன் ஈழத்தில் வெளிவந்த அதிக நூல்களுக்கு அணிந்துரை எழுதியவரும் இவரே. தனது எழுத்துக்கள் மூலம் பல இளம் படைப்பாளிகளின் இலக்கிய வாழ்வுக்கு உந்து சக்தியாகவும் விளங்கியவர்.

பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்து இலக்கிய வரலாறு, புகலிட இலக்கியம், போரிலக்கியம், பெண்ணிய இலக்கியம் நாட்டார் இலக்கியம், சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த ஆய்வுகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அத்துடன் 'ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் புதிய தரவுகள் புதிய போக்குகள்' என்ற நூலுக்காக 2007இல் தேசிய சாகித்திய விருதை பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளார். 'பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை – பிரதேச சாகித்திய விருதை 2007இலும், பின்னர் 'ஈழத்து நாவல் வளர்ச்சியும் வளமும்' பிரதேச சாகித்திய விருதை 2008இலும் பேராசிரியர் செ. யோகராசா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்து எழுத்திலக்கிய உலகின் முக்கிய ஆய்வாளரை, பேராசிரியரை தமிழ் கூறும் நல்லுலகம் இழந்துள்ளது.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# போய்வாறோம் தாயே..." கண்கலங்க வைக்கும் கவிஞர் அஸ்மினின் பாடல்



"ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்" பாடல் புகழ் பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் எழுதிய புதிய பாடல் "போய் வாறோம் தாயே" உலகத் தமிழர்களின் உள்ளங்களை உலுக்க ஆரம்பித்துள்ளது. ஜேர்மனியை சேர்ந்த இயக்குனர் சிபோ சிவகுமாரன் இயக்கியுள்ள "நாளைய மாற்றம்" திரைப்படத்தில் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

பாடலுக்கு பிரபாளினி பிரபாகரன் இசையமைக்க, தென்னிந்திய பின்னணிப் பாடகர் ஸ்ரீநிவாஸ் பாடியுள்ளார். இப்பாடல் கேட்போரை கண்கலங்க வைக்கிறது. பாடலைக்கேட்டு கவலை தாங்கமுடியாமல் பலரும் அழுவதாக சமூக வலைத்தளங்களில் கருத்துக்களை எழுதிவருகின்றனர்.



பாடல் பற்றிய அனுபவத்தை தென்னிந்திய பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் எம்மிடம் இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

தாயைப்பிரிவதும் தாய் மண்ணைப்பிரிவதும் ஒன்று.

தாயை, தாய்நாட்டை பிரியும்போது ஏற்படும் மரணவலியை நான் பாடலாக்கியுள்ளேன்.

கடைசிப்போரின் கந்தகப்பொழுதுகளை..

முள்ளிவாய்க்காலின் சொல்லில்லடங்கா நிமிடங்களை..

நாலைந்து வரிகளுக்குள் நறுக்கி வைத்துள்ளேன்...

ஈழத்தமிழர்களின் வாழ்வியல் வலியை பாடலின் ஊடாக பதிவு செய்ய வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு இதன்மூலம் நிறைவேறியிருக்கிறது.

ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல உலகத்தமிழர்களே பாடலைக்கேட்டு கண்கலங்க ஆரம்பித்துள்ளனர். பாடலை எனது பாடலாசிரியர் அஸ்மின் முகநூலிலும் YouTube தளத்தில் Poai Varom Thaye என்று தேடுவதினுடாக ரசிகர்கள் பார்வையிடலாம். அமெரிக்காவில் வாழும் இசையமைப்பாளர் பிரபாளினி பிரபாகரன் இசையில், இயக்குனர் சிபோ சிவகுமாரன் இயக்கத்தில் வெளிவரவுள்ள புதிய படத்துக்காகத்தான் இப்பாடலினை நான் எழுதியுள்ளேன். மரணவலிதரும் இப்பாடலினை பிரபல பின்னணிப்பாடகர் ஸ்ரீநிவாஸ் பாடியுள்ளார்.

தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு மொழிகளில் 2000க்கும் அதிகமான பாடல்களை பாடியிருக்கும் திரைப்படப் பாடகர். இளையராஜா, தேவா, ஏ. ஆர். ரகுமான், வித்யாசாகர் போன்றவர்களின் இசையில் தென்னிந்திய மொழிகளிலும் இந்தியிலும் திரைப்பாடல்கள் பாடியவர். தமிழக அரசின் சிறந்த பாடகருக்கான விருதினை பெற்றவர் ஸ்ரீநிவாஸ் அவர் என் பாடலைப் பாடுவது நான் பெற்ற பேறு. பாடலை உருக்கமாக அவர் பாடும் போதே கண்கள் கலங்கி நின்றதை கண்ணுற்றேன். பாடல் மிகவும் அருமையாக வந்துள்ளது

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்



சாரதிகள் (Drivers) - கொழும்பு பாதைகள் பற்றிய நல்ல அனுபவமுடைய வெள்ளவத்தை வீட்டில் தங்கி வேலை செய்யக்கூடிய Tinted jeep (Auto) ஓட்டத்தெரிந்த சாரதிகள் (Drivers) தேவை. வயதெல்லை 4050 இடைப்பட்டவர், Motor Bike License உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். இலவச தங்குமிட வசதி, நாள் சம்பளம் Rs. 2000 வழங்கப்படும். நேர்முக தேர்வுக்கு கிழமை நாட்களில் 2 P.M பின் கீழ்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெள்ளியமுன வீதி, ஹேகித்த, வத்தவளை. தொ.பே. இல. 075 1725768 081656

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்



ஓர் குரூப் ஓப் கம்பனிகளின் தலைவரான வயது முதிர்ந்த வெளிநாட்டு பிரஜையை பராமரிப்பதற்கு அனுபவமுள்ள, கொழும்பு08 இற்குள். 35 வயதிற்கு குறைந்த வயதுடைய முழுநேர பராமரிப்பாளர் தேவை. வேலை நேரம் மு.ப 6.00 மணி முதல் பி.ப. 6.0 0 மணி வரை. உணவு, தங்குமிடம் தேவைப்படின் வழங்க முடியும். தொடர்பு 0705363099, மின்னஞ்சல் careerke@gmail.com 081537



வீட்டுப்பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர் தேவை. வயது 17 முதல் 35 வரை. சம்பளம் 25000 மற்றும் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06. தொ.பே. இல. 0 0 12591169, 077745 2 4 47, 0755091379 077316

### வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்க



அப்பம், கொத்து, சோட்டிஸ் வேலை தெரிந்த அனுபமுள்ள பாஸ் தேவை 0714014373 கொஹுவலை 081240

கண்டி உள்ளூர் வெளிநாட்டு சுற்றுலா ஹோட்டலுக்கு கோக்கிமார் உடன் தேவை வயது 24 45 (Eastern, Western, Chinese ) 02 வருட அனுபவம் மாத்திரம் தேவை. தொ.பே 077 3 123135 080438

கம்பஹா செத்சிரி பெமிலி ரெஸ்டூரண்ட் இற்கு திறமையான ரைஸ் / கறி, சோட்ஈட்ஸ், ரொட்டி பாஸ்மார் உடன் தேவை. கூடுதல் சம்பளம் (வெளிமாகாணங்கள் விரும்பத்தக்கது) 076 8039890 081394

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

இலங்கை மருத்துவ சங்கத்தினால் ஒதுக்கப்பட்ட இரும்பு கேட் மற்றும் வெள்ளை இரும்பு பில்போர்ட் விற்பனைக்கு உண்டு. இப்பொருட்களை 2023.12.11 முதல் 2023.12.13 வரை பரீட்சிக்கலாம். பரீட்சித்தல் இல. 06, விஜேராம மாவத்த, கொழும்பு07. மேலதிக விபரங்கள் மருத்துவர் சஜித் எதிரிசிங்ஹ, கௌரவ செயலாளர் 0716090858. அல்லது திருமதி ஜயராணி தென்னகோன் 0112693656. 081680

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு



மதுரங்குளி கடையாமோட்டை பாதைக்கு முகப்பாக 25 ஏக்கர் உரித்துரிமை உறுதி சிறந்த விளைச்சல் உள்ள தென்னங்காணி விற்பனைக்கு. 0777 778483 081056

### 615 வீடு சொத்து சேவைகள்

எமது நிறுவனம் 15 வருட நம்பிக்கையான சேவையை வழங்கி உங்களது நாடளாவிய ரீதியில் உள்ள சொத்துகளை, தகைமையுடைய அனுபமுள்ள நம்பிக்கையான மதீப்பீட்டாளரின் கீழ் மதிப்பீடு செய்து மிகக்கூடிய விலைக்கு உடனடியாக விற்றுத்தருவதற்கு பொறுப்பேற்கப்படும். அழையுங்கள் 0767951560, 0703857617, மின்னஞ்சல் lankaproperty.lk@gmail.com. 081412

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொள்ளுப்பிட்டி ஸ்ரீ முஹந்திரம் வீதி, 03 அறைகள் மற்றும் 02 குளியலறைகளுடன் இருமாடி வீடு. விற்பனைக்கு உண்டு. 0775262362 079115

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

முழுமையான வீட்டுடன் 15 1/2 பேர்ச் காணி விற்பனைக்கு 85 இலட்சம் நிட்டம்புவ074 3229453070 2225599 081242

### வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

தங்கொட்டுவ பாதைக்கு முகப்பாக தம்பரவில கிராமத்தில் சிறந்த 80 பேர்ச் காணி விற்பனைக்கு 0777 778483 081057

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, திகன வீதி 12.1 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு, விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு, விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 9.7 மில்லியன்0773427535 081376



### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டு 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும் சிரிபால லாண்ட்ஸ். 0702484848 081658

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். முழுக் காணித்துண்டும் 35 இலட்சம் முதல். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக்கொள்ள அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ். 0702484848 081657

### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

பலாங்கொட புத்த ஜயந்தி மாவத்த 10.6 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 1.1 மில்லியன் 0773427535 081354

பலாங்கொட புத்த ஜயந்தி மாவத்த 25 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு, விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு, விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 2.5 மில்லியன் 0773427535 081371



### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தறை, தங்கல்ல வீதி 12 பேர்ச், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகலரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 4.2 மில்லியன் 077 3427535 081364

மாத்தறை, தங்கல்ல வீதி, 12 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை 4.2 மில்லியன். 0773427535 081357

மாத்தளற, தங்கல்ல வீதி 12 பேர்ச் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு, விலை விசாரணைகள் 2023.12.24 இற்கு முன்பு, விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு குறைந்த பட்ச கோரிக்கை 4.2 மில்லியன் 0773427535 081368

### 671 வீடு சொத்து தேவை



திருகோணமலை / மன்னார்/ வவுனியாவில் (Apartment வேண்டாம்) 3 அறைகள் Attached Bathroom, Hall, சமையலறை, பார்கிங் உடனான தனி வீடு வேண்டும். 076 7 011272. 077525


தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

மிகவும் பெறுமதிவாய்ந்த 150 பேர்ச் கடற்கரைக் காணி விற்பனைக்கு
அனைத்து வசதிகளுடனான வில்லா திட்டத்திற்கு உகந்தது
நீர்கொழும்பில் (மோரவள) 3 அறைகளுடனான பங்களா.





அழைக்கவும்: 0770 578 574

අමානෝ වැහිපීලි සහ සෙවිලි







0777 394 679 | 070 663 33 88

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

SELLING LESS THAN THE DEVELOPER PRICE
COLOMBO 03, ASTORIA
APARTMENT FOR SALE
Fully furnished, 2BR + Guest/ Study room, Living, Dining, Pantry, Store, 2 full toilets, spacious balcony, fully air conditioned at 15th level with sea & city view with all ultra modern facilities, Garden, Play area ets.





0777 963 129, 0779 233 766



### சார்க் கலாசார மையத்தின் 13ஆவது ஆட்சிக் குழுக் கூட்டம்

# முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு ஏகமனதாக அங்கீகாரம்

கொழும்பில் உள்ள சார்க் கலாசார நிலையத்தின் 13ஆவது நிர்வாக சபை கூட்டம் நவம்பர் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

பங்களாதேஷ், மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆட்சிக் குழு உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர், பூட்டான், இந்தியா மற்றும் நேபாளத்தைச் சேர்ந்த குழு உறுப்பினர்கள் ஆன்லைனில் இணைந்தனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களான பங்களாதேஷ் கலாசார அலுவல்கள் அமைச்சின் இணைச் செயலாளர் (நிர்வாகம்)மிசனுர் ரஹ்மான் *(Mizanur Rahman)*, பூட்டான் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட திட்ட அதிகாரி டிசேரின் சொக்கி *(Tshering Choki)*, இந்திய கலாசார விவகார அமைச்சின் சர்வதேச கலாசார விவகார ஒருங்கிணைப்பு தொடர்பான பணிப்பாளர் யாஷ் வீர் சிங் *(Yash Veer Singh)*, மாலைதீவு மொழி, கலாசாரம் மற்றும் மரபுரிமை தொடர்பான அமைச்சின் பாராளுமன்ற விவகார செயலாளர் சமூன் ஹமீத், நேபாள கலாசார, சுற்றுலா மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் கலாசாரப் பிரிவின் ஒருங்கிணைப்புச் செயலாளர் கலாநிதி சுரேஷ் சுராஸ் ஸ்ரேஸ்தா *(Dr. Suresh Suras Shrestha)*, பாகிஸ்தான் தேசிய பாரம்பரிய மற்றும் கலாசாரப் பிரிவு செயலாளர் ஹுமைரா அஹமட் *(Humaira Ahmed)* மற்றும் இலங்கை புத்த சாசன அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபதிரன ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

அத்துடன் நேபாளத்தின் காத்மண்டுவில் உள்ள சார்க் செயலகக் கல்வி, பாதுகாப்பு மற்றும்



கலாசார அலுவல்கள் பணிப்பாளர் இரோஷா குரே, வெளிவிவகார அமைச்சின் சார்க் பிராந்திய பிரிவின் பணிப்பாளர் நாயகம் டி. பி. தர்மசேன மற்றும் சார்க் கலாசார நிலையத்தின் பணிப்பாளர் திருமதி ரேணுகா ஏகநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சார்க் கலாசார நிலையத்தினால் 2023 இல் அமுல்படுத்தப்பட்ட வெற்றிகரமான வேலைத்திட்டங்கள் குறித்து அதன் பணிப்பாளர் ரேணுகா ஏக்கநாயக்க விளக்கமளித்ததுடன் 2024ஆம் ஆண்டிற்கான உத்தேச வேலைத்திட்டங்கள் அடங்கிய நிர்வாக சபை அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

2023ஆம் ஆண்டில், சார்க் கலாசார நிலையத்தினால் றோயல் ஆசிய சங்கத்துடன் இணைந்து ஓவியக் கண்காட்சி, சார்க் கதைத் தொடர், விசேட சார்க் உரைகள், தொல்பொருள் திணைக்களம், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய நூலகம் மற்றும் ஆவண சேவைகள் சபை என்பவற்றுடன் இணைந்து விசேட உரைகள் மற்றும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடன் சார்க் திரைப்பட தினம் போன்ற கூட்டுத்



திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு அந்த செயற்பாடுகளின் வெற்றியை நிர்வாகக் குழு பாராட்டியது.

2024ஆம் ஆண்டிற்காக முன்மொழியப்பட்டதிட்டங்கள்மற்றும் நடவடிக்கைகள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டதோடு உறுப்பு நாடுகள் அதற்கு முழு ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டன.

உணவு விழாக்கள், திரைப்படக் கண்காட்சிகள், இசை நிகழ்ச்சிகள், ஆடை மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகள், கலைஞர்களுக்கான முகாம்கள், ஆராய்ச்சி மாநாடுகள் மற்றும் பட்டறைகள் போன்றவற்றை 2024ஆம் ஆண்டில் சார்க் கலாசார நிலையத்தினால் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து மீள எழுச்சி பெற்ற பின்னர் சார்க் வலயமெங்கும் கலாசார மறுமலர்ச்சி நிறைந்த ஆண்டாக 2024 ஆம் ஆண்டை மாற்ற சார்க் கலாசார மையம் எதிர்பார்க்கிறது.

2009 இல் நிறுவப்பட்ட சார்க் கலாசார மையம் சார்க் பிராந்திய நாடுகளில் கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான முக்கிய மையமாக செயல்படுகிறது.

# பதுமம் 2023

ஆங்கிலேய காலனித்துவ ஆளுகையில் சிலோன் சிறைப்பட்டிருந்த 1932ஆம் ஆண்டு தலைநகரிலுள்ள தற்துணிவும் மிடுக்கும் நிறை வீர மங்கையர்கரசிகளால் சைவ மங்கையர் கழகம் எனும் நாமகரணத்துடன் வெறுமனே 7 மாணவிகளுடன் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பாடசாலை இன்று சுமார் 2400 மாணவிகளுடன் தலைநிமிர்ந்து வீறுநடை பயில்கின்றது. தாமரைத் தடாகத் திரையரங்கில் நிகழ்வொன்றை நடத்தி அதனையும் பெருநிகழ்வாய் வடித்து உள்நாட்டிலும் வெளிநாடுகளிலுமுள்ள பலரையும் அண்ணார்ந்து பார்த்து வியக்க வைத்துள்ளது.

வழமையாய் அரசாங்கத்தின் பெரு அரச நிகழ்வுகளும் வெளிநாட்டுத் தூதரகங்கள், பெரு வணிக நிறுவனங்களின் பிரமாண்ட நிகழ்வுகளும், ஏன் தேசிய விருது வழங்கல் விழாக்களும் மட்டுமே இத்தனை காலம் தாமரைத் தடாக திரையரங்கில் மேடையேற்றப்பட்டன. சனாதன தர்மத்தில் வேரூன்றிய ஒரு தமிழ் மகளிர் பாடசாலை விழா நடத்துவதெல்லாம் காலம் கடந்தும் வாழும் மாபெரும் சாதனைதான்.





கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்! இந்த அளவற்ற தனிப்பெரும் புகழுக்கு பாத்திரமானதுடன் வரலாற்றிலும் இணைந்து கொண்டமை எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.

'பதுமம் 2023' நிகழ்வினை கொழும்பு தாமரைத் தடாக திரையரங்கில் 5 மணியிலிருந்து 9.25 வரை வெற்றிவாகை சூடி இனிதே நடத்திய சைவ மங்கையர் வித்தியாலயத்தை கொண்டாடித் தீர்ப்பது காலத்தின் தேவை மட்டுமன்றி, வரலாற்றுக் கடமைகளிலும் ஒன்றெனும் கூற்றை நிகழ்வை நேரில் கண்டு வியந்தோர் நிச்சயம் ஆமோதிப்பர்.

"சுமார் 830 மாணவிகள் பதுமத்தில் பங்கேற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. அழகியல் நேரான எண்ணங்களைத் தருகின்றது. சகலவிதமான பண்புகளையும் மாணவிகளிடையே வளர்க்கின்றது. அழகியல் வெவ்வேறு கலைவடிவங்களினூடாக அற்புதங்களை நிகழ்த்தவல்லது என்பதை இங்கு நாம் கண்டோம். எதிர்வரும் நாட்களில் வெவ்வேறு வழிகளில் இந்திய அரசாங்கமும் இந்திய உயர்ஸ்தானிகராலயமும் உங்களுக்கு ஒத்துழைப்பு நல்கும் என்பதை அறியத் தருகின்றேன்" பதுமத்தின் பிரதம விருந்தினர் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் சுவாமி விவேகானந்தா இந்திய கலாசார நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர்.கலாநிதி. அங்குரான் டட்டா பிரதம விருந்தினர் உரையில் சைவ மங்கையர் வித்தியாலயத்தின் மீது பாரதத்தின் கடைக்கண் பார்வை பதிந்திருப்பதை சங்கேதமாய்ச் சொன்னார்.





வட , கிழக்கு மாகாணத்தின் ஓய்வுநிலை அழகியற்துறைப் பிரதிப் பணிப்பாளர் கலைஞர் வேல் ஆனந்தன், பதுமத்தை ரசித்து ருசித்து கலைப்பசி ஆறியமைக்கு அவர் அருகே அமர்ந்திருந்த அனைவருமே சான்று. நிகழ்ச்சிகள் முதற்தரம் என்பதே அன்றைய அவரின் முன்மொழிவாகவும் நிச்சயம் இருந்திருக்கும்.

" 90 ஆண்டுகள் பெண்களால் பெண்களுக்காக ஆளப்படும் பாடசாலை இது. எமது மாணவிகளின் உடல், உளநலன் விருத்தியைக் கருத்திற் கொண்டு விளையாட்டு கட்டடத்தொகுதியை வடிவமைக்கும் பணியை முன்னெடுக்கின்றோம். என வரிக்கு ஒரு தடவை இறையை போற்றிப் புகழ்ந்த சைவமங்கையர் வித்தியாலயத்தின் முகாமையாளர் சட்டத்தரணி செல்வி மாலா சபாரட்ணம், பள்ளியின் அத்தனை வெற்றிகளினதும் நதி மூலமும் ரிஷி மூலமும் இறையே என்பதை மீளவும் மிடுக்குடன் பதுமத்தில் கனிவாய் வலியுறுத்தினார்.





மும்முனைக் கலைக் கதம்பமாய் முப்பரிமாண நிகழ்ச்சி நிரல் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது.

முதற் பரிமாணத்தின் கீழ் முன்தோன்றிய மூத்தமொழியின் அழகை எடுத்தியம்பும் வண்ணம்இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் சுவை சிறிதளவேனும் குன்றாமல் நிகழ்ச்சிகள் அரங்கேறி அவைக்கு அடங்கி அவை அடக்கி கண்டோர் அகம், புறம் ஈர்த்து கரகோஷ மழை பொழியச் செய்தது.

இரண்டாவது பரிமாணத்தின் கீழ் காண்போரை வியக்க வைக்கும் அரங்காற்றுகை, ஆடல், பாடல், நிகழ்வுகள் கூந்தல் வாரி கொண்டை முடித்து மல்லிகை, முல்லை, மாலை சூடும் வனிதையர்நாம் சீன, போர்த்துக்கீச, மேற்கத்தேய கலாசாரக் கலைகளிலும் வல்லோம் என்பதை அரங்கிற்கு பறைசாற்றி பெரும்பாராட்டு மழையில் ஆழ்த்தின.





மூன்றாவது பரிமாணமாய் சிங்களப் பெருமக்கள் கலையிலும் எம் சிங்கப் பெண்கள் சளைத்தோர் அல்லர் என்பதை பிரதிபலிக்கும் நல்லிணக்கத்தின் அடையாளமாய் படைக்கப்பட்ட நிகழ்வுகள் அவையின் நன்மதிப்பைப் பெறுவதற்குத் தவறவில்லை.

மாணவியரின் மும்மொழி அறிவிப்பு அதிஉத்தமம். நிகழ்ச்சிக்கான அகலத்திரை, மேடை வடிவமைப்பு அற்புதம். வர்ண விளக்கொளி மாயாஜாலம் அதியற்புதம். பக்கவாத்தியம் உயர்ரகம். நட்டுவாங்கம் தனிரகம். ஆசிரியர்களின் பின்னணிக் குரல் ஆத்மார்த்தம். நெறியாள்கை பூரணம். விருந்தோம்பல் பரிபூரணம். கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிவந்து மூத்தோர், கற்றோர், பெற்றோர், விருந்தினரின் குறிப்பறிந்து இங்கிதமாய்வழிநடாத்திய கறுப்பாடை உடுத்து நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருந்த கருவேங்கை நிகர்த்த மங்கை நல்லாள்படை அபாரம்.

நிகழ்ச்சியில் அரங்கேறிய சுமார் 800 மாணவர்களையும் கீழிமையை ஓயாது சேர்ந்து காக்கும் மேல் இமையாய் இமைப்பொழுதும் பிரியாது காத்து நிகழ்வு முடிந்த பின்னர் எவ்வித விக்கினமும் இன்றி பெற்றோர் கரம் சேர்த்த ஆசிரியப் படையணியும் ஒழுக்கமும் அமைதியும் காத்த பெற்றோரின் பெருமித உணர்வும் எங்ஙனம் வியந்தாலும் அவை சொல்லத்தரமாகும்.

எப்படி இருந்திருக்கும் நிகழ்ச்சிகள் என மனக்குதிரையை கடிவாளம் இன்றி ஓட விடும் உங்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் அறுசுவை குறையாத பெரு விருந்து வேண்டுமாயின் *Hindu Ladies College| (Saiva Mangaiyar Vidyalayam)* எனும் FACE BOOKக்கு இப்போதே பிரவேசித்தால் அந்த மாபெரும் நிகழ்வின் நிகழ்ச்சிகளை கண்டு நீவிர் களிக்கலாம்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்துஅதனை அவன்கண் விடல். (திருக்குறள் 517) எனும் தெய்வத் திருக்குறளுக்கு அமைய பதுமத்தின் இத்தனை பணியையும் இவர் முடிப்பார் எனக் கருதி அதனை அவர்பால் ஒப்படைத்து தலைமை வகித்த அதிபர் திருமதி. அருந்ததி இராஜவிஜயனின் சாணக்கியத்தையும் அவரைத் தெரிந்ததால் இன்று உச்சிகுளிரும் சைவ மங்கையர் கழகத்தின் முகாமைத்துவத்தின் தீர்க்கதரிசனமும் அரங்கு வந்த ஆன்றோரை நிச்சயம் வியந்து போற்றச் செய்திருக்கும்.

பல்துறைகளிலும் வித்தகம் கொண்ட நூற்றுக் கணக்கான மங்கையர்கரசிகள் பழைய மாணவியராயும் இரசிகர்களாயும் தாமரைத் தடாக திரை அரங்கை நிறைந்திருந்தது பாக்கியம். அன்று அதுவோர் கண்கொள்ளாக் காட்சியும்கூட. நிறைவாக பதுமத்திற்கு வந்திருந்த பெற்றோர்கள் அனைவரும் அப்பாடா மகளை கரைசேர்த்து விட்டோம். இங்கிவள் கற்பதால் நாம் இல்லாவிட்டாலும் எம் புதல்வி இந்த நீளுலகில் இனிதிருப்பாள். மற்றவர் பயன்பெற இனித்திருப்பாள் என்பதை நிச்சயம் எண்ணத்தில் நிறுத்தி கன்னத்தில் நீர் சொரிந்திருப்பார்கள், என்பதில் வேறென்ன சந்தேகம் வேண்டியிருக்கின்றது உங்களுக்கு?

"தையல் பிறப்பே தகைமைசால் பிறப்பு "

"நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"

"வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" எனும் ஏதேனும் ஒரு கவி வரி நிச்சயம் பதுமத்தை நேரடியாய் பார்த்தவர்களின் மண்டைக்குள் மனசில்ஒரு மின்னல் வேகத்தில் வந்து போயிருக்கும் என்பது திண்ணம். பெண் பிள்ளைகள் கொண்டாடப்பட வேண்டியவர்கள். அவர்களை கொண்டாடும் கல்விசாலைகள் போற்றுதற்குரியன. பதுமம் 2024 இன் பாலபாடங்கள் இவை.

இலங்கையில் ஏறக்கூடிய அதியுயர் மேடையான கொழும்பு தாமரைத் தடாகம் திரையரங்கில் அரங்கேறிய கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயத்தின் சாதனைப் பெண்களுக்கு இனி மேற்குலகின் மேடைகளும் வானமும் தானே எல்லை.

ஈற்றில் பதுமம் தாமரை, அழகு, முருகு, பெருநிதி நிறைவாய் பொக்கிஷம். இனி ஆண்டாண்டு அரங்கேறி நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை.

இங்ஙனம் தமிழ் தெரிந்த ஊடகப் பெற்றோன்

**இராஜேந்திரன் கோகுல்நாத்**




# நறுமணம் வீசும் ஒற்றைப்பூ

உனக்குப் பிடித்தமானவர்கள்
உன்னைக் கொண்டாடுபவர்கள்
உன்னிடம் பிரியம்
கொண்டவர்கள்
உன்னைப் பெருஞ்சொந்தமென
ஏற்றவர்கள்

உன்னைப் பெருஞ்சொத்தென
நினைப்பவர்கள்
உன்னை நினைக்கும்
போதெலாம்
புன்னகை பூப்பவர்கள்
உனைப் பெரிய பலமென
எண்ணிக்கொண்டவர்கள்

இப்படி...
யார் உன் நெஞ்சுக்குழிக்குள்
உட்கார்ந்து
பேருவகையின் இன்பத்தேனைக்
குழைத்து வழிந்தோடச்
செய்கிறார்களோ

அவர்களைத் தவிர
வேறு யாரும்
வேறு எதுவும்
உலகில் அழகே இல்லை
உன் கண்களுக்குள்

அழகிய சாம்ராஜ்யம்
அமைத்து
அமைதியாக
உன்னைக் கைப்பற்றியவர்கள்
அவர்கள்...

உனக்குள் அவர்களும்
அவர்களுக்குள் நீயும்
அடங்கிக் கிடப்பது
நேசத்தின் நீட்சியன்றி
வேறென்ன?

அந்நேசம் சாத்வீகமெனும்
வெள்ளையாடை தரித்த
ஒற்றைப் பூவாக
நறுமணம்
வீசிக்கொண்டிருக்கிறது...!

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்03



# இனி வேண்டாம் யுத்தம்




யாரிங்கு நிரந்தரம்
எதைக்கொண்டு செல்லப்
போகிறோம்
பல்லாண்டு வாழ்வதென்றால்
பாரினிலே! ஏன் யுத்தம்
பலஸ்தீனம் பட்டபாடு
படுகவலை இனிவேண்டாம்
பச்சிளங்குழந்தை மரணம்
யார் மனதை நெருடவில்லை!

ரத்த ஆறு ஓடியிங்கு
இன்னும் முடியவில்லை
இடிந்த வீடு கட்டுவதற்கு
எத்தனை காலம் செல்லுமிங்கு
யுத்தச்செலவு எத்தனைகோடி
பட்ட கடன் தீர வழி தேடி
எத்தனை குடும்பங்கள்
அநாதையாய்
ஏன் வீழ வேண்டும் மனிதம்
பேதையாய்!

பெண்களென்ன சிறுவருமே
சிறைவாசம் காணும் நிலை
ஆண்டுகள் பல கடந்தும்
ஆறிடுமா இந்த வாழ்வு
வெற்றி ஒன்று இல்லை
அடுத்து தோல்விதானே
அதற்காக இத்தனைகோடி
இழப்புகள் தேவைதானா!'

பணயக்கைதிகள் சொன்ன
பக்குவக்கதை கேட்டோம்
பவனிவரும் இந்தவுள்ளம்
பட்டாளத்துக்கும்
தேவைதானே!
வேண்டாம் இனியொரு யுத்தம்
வீணாக அழியவேண்டாம்
யாரும்
பேசித்தீர்ப்போம் பிரச்சினைகள்
பிறக்கும் ஆண்டில்
அதைக்காண்போம்

தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்

# காரிருளில் பேரொளியாய்



காரிருள் சூழ்ந்த பூமி
காரிருள் மனம் படைத்த மாந்தர்
காரிருளாய் பரந்த நோய்கள்
காரிருளாய் மறைந்த மாந்தர்
காரிருளாய் யாவுமே
ஆனதொரு நாளில்
காரிருளில் பேரொளியாய்
காரிருள் நீக்கி பேரொளி தர
கருணை மகன் பிறந்தான்
கார்கால மேகம் சூழ் மாதமதில்
காரிருளை நீக்கி
பரிசுத்தமாக்கினான்
கண் திறந்து பார்த்திடுவோம்
கருணையாளனை

இணுவில் வாகீசன்

# எழுந்து வா...!

இருண்டு விட்டது ....
உன் வாழ்க்கை என்று ....
சுருண்டு வீழ்ந்து விடாதே!
நீண்ட பயணம் .....

கால்கள் வலிக்கும் .
அதிக சந்தோஷம் உன்
நெஞ்சமும் சலிக்கும்...

இழந்து விட்டதென்றெண்ணி..
இடிந்து போய் விட்டாயா?
இனித்தான் நீ விழிக்க வேண்டும்.
விழுந்த உன் கால்களுக்கு..
வீரம் கொடு...!

சோர்ந்து போன உள்ளத்துக்கு...
ஈரம் கொடு...!
உதிரத்தை கொதிக்க விடு....
உற்சாகம் குதித்தெழும்.!

வீழ்ந்த நீர்வீழ்ச்சி தான்...
அருவியாகிறது....
காட்டாறாகிறது.....
பெறுபேறை வைத்து
உன்னை தீர்மானிக்காதே....!
அதிர்ஷ்டத்தாலும் வரலாம்.....!

நிலைப்பதில்லை அது....
நிறைவுமில்லை அதில்....
நினைத்ததை அடையும் வரை....
முயற்சிதான் உன் வீரநடை....
முட்டுக்கட்டை எது வந்தாலும்..
முரண்டு பிடித்து எழுந்து வா....
இன்றோடு.....

முடிவதில்லை வாழ்க்கை.!
மூழ்கி எடுத்தால் தான்....
அது முத்து.....
முயற்சியில் கிடைத்தால் தான்...
உன் சொத்து.....

பலர் வார்த்தைகள் உன்னை
வதக்கி போடலாம்....

சிலர் பார்வைகள் உன்னை
சிதைத்தும் போடலாம்.....
சிறைப்பட்ட பறவை...
போலாகிடாமல்....
சிறகடித்து எழுந்து வா...
சிகரத்தை எட்டி வரலாம்.

கிண்ணியா எம்.நௌபர்

# கடந்து போ

குறை சொல்லியே
குத்திக் கிழிப்பார்
தினமொரு காரணத்தில்
திட்டித் தீர்ப்பார்
நிலை தளராதே
தொடர்ந்து போ
எல்லாத் தடையும்
கடந்து போ

உன்னால் இது
முடியாது என்பார்
பின்னால் நின்று
முதுகில் குத்துவார்
தரித்திடாதே
தொடர்ந்து போ
உன்னால் முடியும்
கடந்து போ

நல்லதாய்ப் பேசி
நயவஞ்சகம் புரிவார்
உன் பாதையில்
முட்களை விரிப்பார்
அஞ்சாதே தொடர்ந்து போ
அறிவீனர்களைக்
கடந்து போ

முகம் காணும் போது
புன்னகைப்பார்
முதுகுக்குப் பின்னால்
நின்று வம்பளப்பார்
மனம் தளராதே
தொடர்ந்து போ
மடையர்களை
நீ கடந்து போ

உன் வசமுள்ளதைக்
கொத்திப் பறிப்பார்
உன்னை அறியாதவர்
போல இருப்பார்
கணக்கிலெடுக்காதே
தொடர்ந்து போ
கடுமையான சனங்களைக்
கடந்து போ
உன் இலக்கினை
யவர் பரிகசிப்பார்
உனை வீழ்த்திடவே
குழி பறிப்பார்
நடுங்கி விடாதே
தொடர்ந்து போ
நச்சு மனங்களைக்
கடந்து போ..

கைகோர்த்திருந்தே
கழுத்தறுப்பார்
கையாலாகதவர் எனக்
கருத்துரைப்பார்
நொந்து விடாதே
தொடர்ந்து போ
நோய் கொண்ட
உள்ளங்களைக் கடந்து போ

பக்கத்திலிருந்தே
பகல்கனவென்பார்
பலதும்பத்துமாய்
விமர்சிப்பார்
கவலை கொள்ளாதே
தொடர்ந்து போ
கடுப்பேற்றும்
கொடியவரைக் கடந்து போ

என்ன செய்தாலும்
எகத்தாளம் பேசுவார்
எடுத்தெறிந்துனை
இழிவாக நோக்குவார்
துன்பம் அடையாதே
தொடர்ந்து போ
துணையென இறைவனைக்
கொண்டு கடந்து போ.

மக்கொனையூராள்

# காசா பரிதாபம்

காசா போர்
கண்ணீர்
இரத்தம் ஆனது
குழந்தை இரத்தத்தில்
எழுதி பழகும்
கொடூரம் இங்கு
நடக்கின்றது
அழக்கூடத் தெரியாத
மழலைகள் மீது
அணுகுண்டு விழுகின்றது
பூக்களுக்கு தீ வைத்து
போர் என்று பேர் வைத்து
அடுத்த தலைமுறை
சீரழித்து அழித்து
குழந்தைகள் விழுவதை
எந்த மனமும் விரும்பாது
இங்கு கொத்து கொத்தாய்
செத்து
விழுகின்றன தளிர்கள்
போதும் போதும்
இந்த ரணம்
வேண்டாம் வேண்டாம்
இது போன்று தினம்
வரும் செய்திகளால்
செத்துப் போகின்றது
எங்கள் மனம்
மழலைகளை கொல்வதை
நிறுத்துகள் வரும்
விடியலிலாவது மனிதம்
நேசிக்கும் மனிதனாக
மாறுங்கள்....
எங்கள் கண்ணீர் எல்லாம்
ரத்தம் ஆகவே விழுகின்றது

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.



# கனவுகளைச் சுமந்தாயே



கனவுகளைச் சுமந்தாயே
கதியென்று வந்தாயே

வந்தாயே என்னுள்ளே
வசந்தமும் தந்தாயே

தந்தாயே மெய்யன்பு
தழுவியெனை வென்றாயே

வென்றாயே மழையிரவை
கதகதக்கும் விண்மீனே

விண்மீனே விடிந்தாலும்
என்னுள்ளே நின்றாயே

நின்றாயே என்றென்றும
நெஞ்சூறும் செம்மொழியே

செம்மொழியே சீரழகே
சிறக்கின்றேன் இந்நாளே

இந்நாளே இதயத்தில்
சிறகுகளும் உன்னாலே

உன்னாலே கண்டேனே
உதயத்தின் கனவுகளை

கனவுகளைச் சுமந்தாயே
கதியென்று வந்தாயே

நுஸ்மியா அப்துல்கரீம், போருத்தொட்ட

# பெருமைகள் அறிவாய்

ஊட்டி வளர்த்தது தாய்மை
காட்டி கொடுத்தது கயமை
பாட்டி சொன்னது வாய்மை
பாடி பழகுவது வழமை

சீர் கொள்வது சிறப்பு
பார் புகழ்வது மதிப்பு
ஏர் பிடித்திழுப்பது உழைப்பு
கார் வண்ணன் நிறப்பு கருப்பு

பாட்டி சொன்னாள் கதை
மாட்டி வைத்தால் உதை
நாட்டி வளர்ப்பது விதை
எட்டி உதைத்தால் வதை

பாசம் கொண்டது தாய்மை
நேசம் பூண்டால் நன்மை
நாசம் செய்தால் கொடுமை
நாவால் பேசுவது வாய்மை
நாவுக்கு அறுசுவை ஊட்டி

நோவுக்கு மருந்தைக் கட்டி
பக்தி பாடல்கள் பாடி
அவளைப் பார்த்தேன் எட்டி
நகைப்புக்கு

சிரிப்பை வைத்து
காதலன் காதலியை அணைத்து
பகைக்கு சண்டையை ஏற்படுத்து
சுவைக்கு நாவை படைத்து

காலை ஆனதும் எழுந்திடுவோம்
மாலை வேளை விளையாடுவோம்
நாளை நாளை வரவேற்போம்
நன்மை செய்து பழகிடுவோம்

படித்து வாழ்வை உயர்த்திடடா..!!
நடித்து நானிலத்திலும்
வாழ்ந்திடடா..!!
கடித்து கரும்பை சுவைத்திடடா
மடித்து உடுப்பை அணிந்திடடா

அன்போடு வாழ்வை அமைத்திடு
பண்போடு உறவை பேணிடு
துன்பத்தோடு அவளை
அணைத்திடு
இன்பத்தோடு என்றும் பழகிடு

நாடு வளம்பெற உழைப்பாய்
பாடு பட்டுபட்டம் பெற்றிடுவாய்
காடு வெட்டி களனிஆக்கிடு
வீடு கட்டி நலமாய் வாழ்ந்திடு

உடப்பூர் வீரசொக்கன்



# ஒற்றை நன்றி

நடுநிசியில் ஏனோ
சட்டென்று முழிப்பு வர
சடுதியாய் வந்து சென்றது
சலனமில்லா
சில நினைவுகள்
ஒரு காலத்தில்

மனிதர்களின் தொடர்பும்
மகத்துவமான உறவுகளும்
துண்டிக்கப்படா நேசமும்
துரத்தியும்
விட்டகலாத பாசமும்
துளித் துளியாய் சேர்ந்து

பெருவெள்ளமாகிப் போனது
ஆனால் இப்போது
எங்கே அவர்களெல்லாம் என
உற்று நோக்கிப் பார்த்தும்
உயிர் ஆழம் வரை சிந்தித்தும்
பதில் மட்டும்
கிட்டவே இல்லை
கிட்டினாலும்
அதை ஏற்றிட
மனதும் தயாரில்லை
ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி
மனிதர்களும் மாறியாயிற்று
மனங்களும் மாறியாயிற்று
நானும் மாறி விட்டேன்
நீயும் மாறி விட்டாய்

மொத்தத்தில் இந்த
உறவுப் பாலங்களும்
சுக்கு நூறாய்
உடைக்கப்பட்டாயிற்று
இருந்தும்
என்னைப் போல்

யாருக்கேனும்
நடுநிசியில்
முழிப்பு வரா விட்டாலும்
பரவாயில்லை
என்னைக் கடந்து
போகையிலேனும்
என்னை நினைவிருக்கும்
அந்த ஒற்றை நன்றி
போதும் எனக்கு!

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை



# சுதந்திரம்



வானின் சுதந்திரம்
தூறல் மழையாக
பூவின் சுதந்திரம்
இனிக்கும் தேனாக

கடலின் சுதந்திரம்
ஒலிக்கும் அலையாக
பனித்துளியின் சுதந்திரம்
புல்நுனியில் பசுமையாக
நீரின் சுதந்திரம்
வற்றா நதியாக

வானவில்லின் சுதந்திரம்
வண்ண
நிறங்களில் வில்லாக
விதையின் சுதந்திரம்
வேர்கொண்ட விருட்சமாக
காற்றின் சுதந்திரம்
ஈர்க்கும் இசையாக
எழுத்தின் சுதந்திரம்
பத்திரமாக புத்தகமாக
தூரிகையின் சுதந்திரம்
அழகிய ஓவியமாக
கல்லின் சுதந்திரம்

செதுக்கிய சிற்பமாக
கதிரவனின் சுதந்திரம்
காலைக் கதிர்களாக
நிலவின் சுதந்திரம்
பௌர்ணமி வெளிச்சமாக
குழந்தையின் சுதந்திரம்

செல்லப் புன்னகையாக
நாவின் சுதந்திரம்
கவரும் வார்த்தைகளாக
இதயத்தின் சுதந்திரம்
நிஷப்த சுவாசமாக
எந்தன் சுதந்திரம்
வெள்ளைக்
காகிதத்தில் கவியாக
உந்தன் முன்னே
ஏர் கொண்ட வரிகளாக
எனக்குள் என்றும்
நீங்கா மகிழ்வாக

ஷஹாமா ஸனீர்

# புத்தம் புதிய ZTE ஸ்மார்ட்போன் வரிசையை அறிமுகப்படுத்தியுள்ள சிங்கர்




நாட்டின் முன்னணி நுகர்வோர் இலத்திரனியல் விற்பனையாளரான Singer Sri Lanka PLC மிகவும் எதிர்பார்க்கப்பட்ட Blade V50 Design உள்ளிட்ட சமீபத்திய ZTE ஸ்மார்ட்ஃபோன்களை ஃபிளாக்ஷிப் மாடலாக அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தியது.

'The Smarter Choice' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த வெளியீட்டு நிகழ்வு, தொழில்நுட்ப வல்லமையின் துடிப்பான கண்காட்சியாக அமைந்ததுடன், சிறந்த உலகளாவிய கண்டுபிடிப்புகளை இலங்கை சந்தையில் கொண்டு வருவதற்கான சிங்கரின் அர்ப்பணிப்பிற்கோர் சான்றாகவும் அமைந்தது.

ZTE Blade V50 DESIGN மாடல், அதன் சிறந்த வடிவமைப்பு மற்றும் மேம்பட்ட அம்சங்களுடன் தனிசிறப்பானதோடு, ZTE Blade V73 மற்றும் கேமிங்கை மையமாகக் கொண்ட ZTE Nubia Neo 5G மாடலுடன் 128GB மற்றும் 256GB வரையிலான தனித்தன்மையையும் கொண்டுள்ளது.

புதிய வரிசையில் உள்ள ஒவ்வொரு தொலைபேசியும் இலங்கை நுகர்வோரின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் செயல்பாடு, பாணி மற்றும் மலிவு விலையில் தேவைக்கேற்ற விதத்திலும் அமைந்துள்ளது.

ZTE Blade V50 DESIGN ஆனது அதன் புத்தம் புதிய தோற்றத்துடன் 6.82இன்ச் FHD+ டிஸ்ப்ளே, உயர் செயல்திறன் கொண்ட RAM மேம்பட்ட ஆக்டாகோர் செயலி மற்றும் பல லென்ஸ் கேமரா அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

# கண்டல் தாவரங்களில் கவனம் செலுத்தும் SLT–MOBITEL இன் 2024 நாட்காட்டி



சூழல் பாதுகாப்பில் தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, 2024ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை, "இலங்கையின் கண்டல்தாவர சூழல் கட்டமைப்பு" எனும் தொனிப்பொருளில் அறிமுகம் செய்துள்ளது. நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த கண்டல்தாவர கட்டமைப்பின் சூழல்சார் முக்கியத்துவத்தையும், அழகையும் கொண்டாடும் வகையில் இந்த நாட்காட்டி அமைந்துள்ளதுடன், நாட்டின் இயற்கை பாரம்பரியத்தின் பெறுமதியை வெளிப்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் கண்டல்தாவரங்கள் வேகமாக அழிவடைந்து வருகின்றன. இலங்கைக்கு உயிரியல் பரம்பலையும் காலநிலை மாற்ற மீண்டெழுந்திறனையும் வழங்குவதில் கண்டல்தாவரங்கள் ஆற்றும் பங்களிப்புக்கு முக்கியத்துவமளித்து தனது 2024ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியில் இதனை உள்வாங்குவதற்கு SLTMOBITEL தீர்மானித்திருந்தது. அத்துடன், நாட்டில் எஞ்சியிருக்கும் கண்டல் தாவரங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

SLT இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹாநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "தேசத்தின் டிஜிட்டல் மாற்றயமைப்புப் பணிகளை முன்னெடுப்பதில் முன்னோடிகள் எனும் வகையில், SLTMOBITEL தனது பொறுப்புணர்வு என்பது வியாபார இலக்குகளை எய்துவதற்கு அப்பாலானது என்பதை உணர்ந்துள்ளது." என்றார்.

இந்த நாட்காட்டி 12 வர்ணமயமான ஓவியங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும், இலங்கையின் வெவ்வேறு கண்டல் தாவர கட்டமைப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

# இலங்கையில் தமது பயண வெற்றியை கொண்டாடும் மூன்று ஹோட்டல்கள்



Radisson ஹோட்டல் கண்டி, Radisson ஹோட்டல் கொழும்பு மற்றும் Radisson Blu ரிசோட் காலி ஆகியன 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி பிரமுகர்கள், முக்கிய அதிகாரிகள் மற்றும் பங்காளிகளின் பங்குபற்றுதலுடன் தமது புதிய சந்தைப்படுத்தல் இலக்கு பிரசாரத்தை வெளியிட்டன.

Radisson மற்றும் Radisson Blu வர்த்தக நாமங்களின் கீழ் இலங்கையிலுள்ள மூன்று சொத்துக்களும் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய இடங்களில் அமைந்துள்ளதுடன் அவை நாட்டில் வெற்றிகரமாக ஓராண்டு பூர்த்தியை நிறைவுசெய்து முக்கிய மைற்கல்லை எட்டியது. சொத்து உரிமையாளர்களான Sino Lanka முகாமைத்துவ நிறுவனம், La Vie Hotels & Resorts மற்றும் Radisson Hotel Group ஆகியன இணைந்து Radisson Hotel Colombo இல் பிரமாண்டமான கொண்டாட்ட நிகழ்வை நடத்தின. இதில் பிரதம விருந்தினர்கள், உள்ளூர் வியாபார உரிமையாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் அதன் மூன்று ஹோட்டல்களுக்கான புதிய இலக்கு சந்தைப்படுத்தல் வீடியோ வெளியிட்டதன் மூலம் மகிழ்ச்சி இரட்டிப்பானது,

அது 2022 ஆம் ஆண்டு மே மாதம் அறிமுகப்படுத்தியதிலிருந்து இலங்கையில் உள்ள Radisson மற்றும் Radisson Blu ஹோட்டல்கள் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய மூன்று இடங்களில் விருந்தோம்பல் அனுபவத்தின் தரத்தை மேலும் அதிகரித்து,

# அறிமுக தேசிய கல்வி மாநாட்டை முன்னெடுத்த SLANSHEI




உயர் கல்வியின் எதிர்காலத்தை சீரமைப்பதில் முக்கிய படியாக, அரச சாராத உயர் கல்வி நிலையங்களின் இலங்கை சம்மேளனம் (SLANSHEI), தேசிய உயர் கல்வி மாநாட்டை முன்னெடுத்திருந்தது. இலங்கையின் உயர் கல்விக்கு TNE (Transnational Education) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்த குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு தொடர்பில் கவனம் செலுத்தும் வகையில் இந்த மாநாடு, கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் 2023 நவம்பர் 28ஆம் திகதி நடைபெற்றது.

2016 ஆம் ஆண்டு இலங்கையின் சில முன்னணி தனியார் உயர் கல்வி நிலையங்களினால், நாட்டின் அரச சாராத உயர் கல்வித் துறைக்கு தலைமைத்துவத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் SLANSHEI நிறுவப்பட்டது. அரச சாராத உயர் கல்வித்துறையின் விரிவாக்கம், தரம் மற்றும் நியமங்களை மேம்படுத்தல், வெளிநாட்டு மாணவர்களை கவர்ந்திழுத்தல், ஆய்வுக் கோவை மற்றும் ஆய்வு வெளிப்படுத்தலை மேம்படுத்தல் மற்றும் சர்வதேசமயமாக்கலை ஊக்குவித்தல் போன்றவற்றில் கவனம் செலுத்துவதாக மூலோபாயத் திட்டம் கவனம் செலுத்தியிருந்தது.

தேசிய உயர் கல்வி மாநாடு, வைபவ ரீதியில் பாரம்பரிய விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக கல்வி அமைச்சர் – கலாநிதி. சுசில் பிரேம்ஜயந்த் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ட்ரியு பெட்ரிக் ஆகியோர் பங்கேற்றனர்.

# Swedish Trading Company நடாத்திய "REIGNITE" வாடிக்கையாளர் தினம்

புதிய தலைமுறை தலைமைத்துவத்தின் கீழ் மீண்டும் எழுச்சி பெறும் வரலாற்று சிறப்பு மிக்க ஒரு நிறுவனமான Swedish Trading Company, தனது "REIGNITE" என்ற வாடிக்கையாளர் தினத்தை, அண்மையில் நடத்தியது. REIGNITE ஆனது, அதன் சகோதர நிறுவனங்களான General Sales Company மற்றும் Swedish Trading Audio Visual ஆகியவற்றுடன் இணைந்து **"தொழில்துறைக்கு வலுவூட்டுவதில், பூமியை நிலை நிறுத்துதல்"** (powering the industry, sustaining the planet) என்ற கருப்பொருளின் கீழ் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிறுவனங்கள் 50 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொழில்துறை அனுபவத்தைக் கொண்ட, புகழ்பெற்ற தொழிலதிபரும் தொலைநோக்கு சிந்தனையாளருமான சந்திர சேனாநாயக்கவினால் 1968 ஆம் ஆண்டு நிறுவப்பட்டன. இந்நிகழ்வு, வலுவான மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் கூட்டாண்மைகளை வளர்ப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் மற்றும் கூட்டாளர்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

# தனித்துவமான வங்கிக் காப்புறுதிப் பங்காளித்துவத்தில் நுழையும் கொமர்ஷல் வங்கியும் AIA ஸ்ரீலங்காவும்




இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி மற்றும் இலங்கையின் வங்கிக் காப்புறுதித் துறையில் முன்னோடி நிறுவனமான AIA இன்சூரன்ஸ் லங்கா ஆகியவை தனித்துவமிக்க நீண்ட கால வங்கி காப்பீடு கூட்டாண்மையில் நுழைந்துள்ளன.

இந்த தனித்துவமான மைல்கல், நாட்டின் இரண்டு பெருநிறுவனங்களுக்கு இடையிலான தனித்துவமான கூட்டாண்மையைக் குறிக்கிறது, மேலும் இரு நிறுவனங்களும் 100 ஆண்டுகளுக்கும் மேலான பெருமைமிக்க வரலாற்றைப் பகிர்ந்து கொள்கின்றன.

கொமர்ஷல் வங்கி மற்றும் AIA ஸ்ரீலங்கா ஆகிய இரண்டும் நிகரற்ற வலிமை, பரந்த அனுபவம் மற்றும் உயர் நற்பெயரைக் கொண்ட இரண்டு நிறுவனங்களாகும். ஆசியா முழுவதும் உள்ள AIA இன் பரந்த அனுபவமும், உள்ளூர் சமூகங்களுடனான கொமர்ஷல் வங்கியின் அர்த்தமுள்ள உறவுகளும் இணைந்து இலங்கையர்களுக்கு அழுத்தமான தீர்வுகளை வழங்குவதற்கான சிறந்த தளத்தை வழங்கும்.

இந்த கூட்டாண்மையின் மூலம், கொமர்ஷல் வங்கியானது, நாடு முழுவதும் உள்ள தமது 272 கிளைகளில் 3.5 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட ஆயுள் மற்றும் தேகாரோக்கிய காப்புறுதி தீர்வுகளை வழங்குவதற்கு AIA இன் உகந்த திறன்கள் ஊடாக வழங்கிய தனது சேவையாற்றலை வலுப்படுத்தும்.

மேலும் இந்த நீண்ட கால பிரத்தியேக பங்காளித்துவமானது அதிகமான இலங்கையர்களுக்கு அதிக நிதி பாதுகாப்பை வழங்குவதோடு காப்புறுதி மற்றும் நிதி உள்ளடக்கம் பற்றிய அவர்களின் தரநிலைகளை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நிலையான தொழில்துறை மாற்றத்தின் இரண்டாம் கட்டத்தை நிறைவு செய்துள்ள MAS Project Photon



MAS Holdings நிறுவனம், கூரை மீது பொருத்தப்பட்ட Photovoltaic (PV) சூரிய சக்தி திட்டமான Project Photon இன் இரண்டாவது கட்டத்தை நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம், MAS Holdings நிறுவனத்தை இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் முன்னோடியாக மாற்றியுள்ளது, இது இலங்கையின் மிகப் பெரிய கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தியாளராகவும், வழங்குநராகவும் ஆக்கியுள்ளது.

Project Photon க்கு முன்னர், MAS Holdings நிறுவனம் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த 1.7 MW சூரிய சக்தி திறனை மட்டுமே கொண்டிருந்தது. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதற்கான குழுமத்தின் உறுதிப்பாட்டின் கீழ், Project Photon தொடங்கப்பட்டது, 18 இடங்களில் 16 MW சூரிய சக்தி சேர்க்கப்பட்டது. இப்போது, இரண்டாம் கட்டத்தின் நிறைவுடன், கூடுதலாக 6 MW, MAS இன் மொத்த சூரிய உற்பத்தி திறனை 23.7 MW ஆக அதிகரித்துள்ளது. சூரிய சக்தி உற்பத்திக்கான முந்தைய தேசிய சாதனையை முறியடித்து, MAS இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலப்பரப்பை மாற்றி அமைக்கும் நிறுவனமாக தனது நிலையை உறுதிப்படுத்துகிறது.

இந்த மாபெரும் திட்டத்தின் பிரமாண்டத்தை சரியாக புரிந்து கொள்ள, MAS வசதிகளில் சுமார் 67,000 Solar Panelகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த சூரிய சக்தி திறன் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 18,000 தொன் கார்பன் டை ஆக்சைடை ($CO_2$) சேமிக்கிறது மற்றும் 10 கிரிக்கெட் மைதானங்களுக்கு சமமான பரப்பளவையும் அல்லது சுமார் 34,000 வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும் திறனையும் கொண்டுள்ளது.

# Brilliant Cuts நிறுவனத்துக்கு வெண்கலப் பதக்க விருது



இலங்கையின் மாணிக்கக் கற்கள் கைத்தொழில் துறையில் முதன்மையான நிறுவனமான Brilliant ஊரவள தனியார் நிறுவனம், இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம் (CNCI) ஏற்பாடு செய்த கைத்தொழில்துறையின் சாதனையாளர் விருதுகள் 2023 விருது வழங்கும் விழாவில் தேசிய அளவிலான பிரிவின் வெண்கலப் பதக்க விருதை வென்றுள்ளது. தேசிய பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கும் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்படுகின்ற மேற்படி விருது விழா அண்மையில் கொழும்பு கலதாரி ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. நாட்டின் மாணிக்கக் கற்கள் மற்றும் தங்க ஆபரணத் துறைக்கு பெரும் பங்களிப்பு செய்து வரும் Brilliant Cuts நிறுவனம் மேற்படி விருதை வென்றமை அந் நிறுவனத்தின் வெற்றிகரமான பயணத்தின் மைல்கல்லாகும். ஆரம்பம் தொடக்கம் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை தொடர்ச்சியாக வென்று தரமான உற்பத்திகளை மேற்கொண்டு வரும் தொழில்முயற்சியாக Brilliant Cuts நிறுவனம் தடம் பதித்துள்ளது.

Brilliant Cuts நிறுவனத்தின் ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில் துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கி வரும் அந் நிறுவனத்தின் உரிமையாளர் விந்தியா பெரேரா இதற்கு முன்னரும் உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகள் பலவற்றை வென்றுள்ளார்.

# மதிப்புமிக்க ISO 9001:2015 சான்றிதழை பெற்றுள்ள Lina Manufacturing நிறுவனம்



Sunshine Holdings PLC இன் மருத்துவப் பிரிவான Lina Manufacturing Pvt., கடவத்தை உற்பத்தி ஆலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ அமைப்புக்கான (QMS) ISO 9001:2015/SLS ISO 9001:2015 சான்றிதழைப் பெற்றுள்ளது. இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் (SLSI) வழங்கப்பட்ட இந்த மதிப்பீடு, அதன் பல்வேறு தயாரிப்பு நோக்கங்களில் தர முகாமைத்துவத்தின் மிக உயர்ந்த தரத்தை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ISO 9001:2015 சான்றிதழ் செயல்முறையானது, Dry powder inhalation, காப்ஸ்யூல்கள், சுவாசப் பொருட்கள், இருதய மருந்துகள், கிரீம்கள் மற்றும் Nasal Sprayகள் உட்பட Lina Manufacturing அனைத்து தயாரிப்பு நோக்கங்களையும் உள்ளடக்கியது. ஆகஸ்ட் 1, 2023 முதல், புதிதாக இணைக்கப்பட்ட கிரீம்கள் மற்றும் Nasal Spray வகைகளும் இந்த சான்றிதழில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த விரிவாக்கமானது, அதன் தர முகாமைத்துவ செயல்முறைகளை உலகளாவிய தரநிலைகளுடன் சீரமைப்பதற்கும் அதன் செயற்பாடுகள் முழுவதும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் தக்க வைத்துள்ளது.

Lina Manufacturing நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டி சயந்தன் கூறியதாவது, "ISO 9001:2015 என்பது உலகளாவிய தரத்தை பூர்த்தி செய்வதற்கும் அதை மீறுவதற்கும் எங்களின் அர்ப்பணிப்புக்கான சான்றாகும். இது எங்கள் குழுவின் கூட்டு முயற்சி மற்றும் எங்கள் மருந்து தயாரிப்புகளின் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதி செய்வதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது." எனத் தெரிவித்தார்.




அன்று மாலை ஆறு மணி போல் "ஆற்றுச்சேனை" கிராமத்தில் அந்த துயரமான செய்தி அங்குள்ள அனைவரையும் ஒரு உலுக்கு உலுக்கியது. 'சிவமணி செத்துப் போனாளாம்'. ஆளுக்காள் ஒரு மாதிரி பேசிக் கொண்டனர். 'நல்ல குணமானவளப்பா சிவமணி. நல்லாத்தான் இருந்தாள். அவளுக்கு என்னவோ பிரச்சினை போல. அதுதான் உயிரை மாய்த்து விட்டாள். பாவம் அவளது பிள்ளைகள்தான்'. அயல் வீட்டு அன்னம்மா தன் புருசன் சிவசம்புவிடம் சொல்லி வருத்தப்பட்டாள். அவளது தற்கொலை பலருக்கு வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருந்தது.

கடந்த வருடம் சுயதொழில் ஊக்குவிப்பு நுண்கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றின் ஆலோசனைக் கூட்டம் அங்கு ஏற்பாடாகியிருந்தது. மக்களின் வறுமை நிலையை நன்கு பயன்படுத்திக் கொண்ட நுண் கடன் வழங்கும் நிறுவனங்கள் பல மாவட்டத்தின் பின் தங்கிய கிராமத்தவர்களை தேடிச்சென்று சுயதொழில் ஊக்குவிப்புக்கடன் என்ற பெயரில் வழங்கிய கடனும் வட்டியுமாக அவர்களை மேலும் கடனாளியாக்க அவர்களை சொல்ல முடியாத துன்பங்களுக்குள் தள்ளியது. மிக பின் தங்கிய ஆற்றுச்சேனை கிராமத்தில் ஒரு சிலரைத் தவிர அனேகமானோர் கூலி வேலை செய்து கிடைக்கும் வருமானத்தில் தம் சீவியத்தை உருட்டுபவர்கள். ஒரு நாள் தொழில் இல்லாவிட்டாலும் அவர்கள் வீட்டு அடுப்படியில் பூனைதான் படுத்துறங்கும் நிலை. கொரோனாவும், தொடர்ந்து வந்த பொருளாதார நெருக்கடியும் கிராமத்தில் பல குடும்பங்களை வெகுவாக தாக்கியது. அதனால் கூலி வேலைகூட முன்பு போல் கிடைக்காமல் அவர்களின் வாழ்வு வறுமையுடன் ஓயாத போராட்டமாக மாறியது. நாட்டு நிலமை பலரை வீதிக்கு இறங்கி பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளிவிட்டிருந்தது.

'சிவமணி, நீ எங்க அவசரமாக போறா' பக்கத்து வீட்டு சிவகாமி தமது வீட்டு வேலியில் மறைப்புக்கு கட்டி இற்றுப்போயிருந்த தென்னமட்டை கிடுகு ஊடாக எட்டி பார்த்து கேட்டாள். அவளது வீட்டு 'கிடுகு வேலி' கூட அந்த கிராம மக்களது வாழ்க்கை நிலமையை போல ஓட்டையும் உடைசலாகவும் இருந்தது. 'அக்கா கஷ்டப்படும் குடும்பங்களுக்கு கடன் தரப் போறார்களாம். அந்த கூட்டத்துக்குதான் போறன். அட என்னக்கா நீ முழிக்கற உனக்கு தெரியாதா'. ' மறந்து போனன் சிவமணி நானும் வாறன்'. 'அப்ப வாக்கா போவம்.' 'அடுப்பில கறி கிடக்கு. சிவமணி அதை இறக்கிப் போட்டு வாறன் நீ முந்து.' 'சரி நீ கெதியா வாக்கா. நான் போறன்'. சிவமணிக்கு எதிலும் அவசரம்தான். அந்த அவசரந்தான் அவளுக்கு எமனாக வந்ததோ. குண்டும் குழியுமான ஊரின் குறுக்கு கிறவல் வீதியில் வேகமாக நடந்து போனாள் சிவமணி. பெண்கள் பலர் கூட்டத்துக்கு வந்திருந்தனர். கூட்டத்தில் கடன் பெறுவதற்கான விதி முறைகளை நுண்கடன் நிறுவன முகாமையாளர் சொல்லிக் கொண்டிருந்தார்.

'நாங்கள் முதற் கட்டமாக உங்களில் இருந்து பத்துப் பேரை தெரிவு செய்து கொள்வோம். ஒவ்வொரு பயனாளிக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபா கடன் வழங்குவோம். நீங்கள் விருப்பம் போல ஆடு, கோழி, கறவை மாடு வளர்க்கும் தொழில் ஒன்றை தெரிவு செய்யலாம். ஆறு மாதங்களின் பின் மாதா மாதம் ஒழுங்காக கடனை வட்டியுடன் செலுத்த வேண்டும்'. 'பத்துப் பேருக்கு மட்டுந்தானா சேர் கடன் தருவியள்' கூட்டத்தில் இருந்த சிவகாமி கேள்வி எழுப்பினாள்'. 'நல்ல கேள்வி தான் நீங்கள் கேட்டது. ஆறு மாதங்களின் பின் கடன் அறவீடு செய்ய ஆரம்பித்தவுடன் அடுத்த கட்டமாக மேலும் பத்துப் பேரை தெரிவு செய்து கடன் வழங்குவம். அப்படியே படிப்படியாக பயனாளிகளை கூட்டுவோம். நீங்கள் உரிய திகதியில் கடனை கட்டுவது மிக முக்கியம்'.

அன்று கூட்டத்தில் பத்து பேர் தெரிந்தெடுக்கப்பட்டனர். கடன் பெற்ற பத்துப் பேரில் தற்கொலை செய்து கொண்ட சிவமணியும் ஒருத்தி. மிகவும் வறுமையில் வாழ்ந்த இளம் குடும்ப பெண். அவளுக்கு முப்பது, முப்பத்திரண்டு வயதுக்கு மேல் இருக்காது. திருமணமாகி தனிக் குடும்பமாக வாழும் அவளுக்கு கூடப் பிறந்த இரு சகோதரிகள். தகப்பன் சுப்பையா தனது முயற்சியால் குடும்பத்தை பராமரித்து வந்தார்.

கிராமத்து பள்ளியில் ஐந்தாம் தரத்துக்கு மேல் சிவமணியினால் கற்க முடியவில்லை. ஆனால் அவள் நல்ல கெட்டிக்காரி. பெற்றாரின் குடும்பச் சுமையும், வறுமையும் அவளுக்கு கல்வியை எட்டாக் கனியாகியது. அவளைப் போல பலர் வறுமையால் கல்வியை தொலைத்து விட்டவர்கள் அங்கு அனேகர்.

சிவமணி நல்ல அழகி. அவளது அழகில் மயங்கிய இளசுகளில் ஒருத்தன் ருத்திரன். சிவமணியின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கியவன். அவளை எப்போதும் சுத்தியே வருவான். உறவு முறையானவன். சிவமணிக்கு இருபத்து நான்கு வயதான போது அவனுக்கே கல்யாணம் செய்து கொடுத்து விட்டனர். ருத்திரன் ஐந்தாம் வகுப்பு கூட தேறாதவன். நல்ல உழைப்பாளி. கூலி வேலை செய்து உரமேறிய உடல்வாகு. ஆள் கொஞ்சம் கறுவல்தான். சிவமணியைத் திருமணம் செய்த பின் தன் வீடுக்கருகில் ஒரு துண்டுக் காணியில் இரண்டு அறையில் வரிச்சு வைத்து களி மண்ணால் சிறிய வீட்டை கட்டினான் ருத்திரன். 'சிவமணி எனக்கு எந்த நாளும் வேலை கிடைப்பது கஷ்டமாய் இருக்கு. என்னமா ஏறிப் போச்சு சாமான்கள் விலை. ஒரு நாளைக்கு ஒரு விலை? கையில காசும் இல்ல. இனி நாம பட்டினிதான் கிடந்து சாக வேணும். இல்லாட்டா பிச்சைதான் எடுக்கணும். நான் என்னதான் செய்ய'. 'எனக்கும் எதுவும் சொல்ல தெரியல்லங்க.' சொல்லிய படி அவன் முகத்தை கவலையோடு பார்த்தாள். 'கிழமையில இரண்டு மூணு நாள் வேலை செய்து கிடைக்கிற காசு எதுக்கும் காணாது. நான் கட்டாருக்கு போனா உழைக்கலாம். வட்டிக்குக் காசு எங்காவது கிடைக்குமா என விசாரிக்க வேணும்'. தன் மனக் கிடக்கையை ருத்திரன் மனைவி சிவமணியிடம் சொன்னான். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள். இரண்டாவது குழந்தைக்கு ஒருவயது கூட ஆகவில்லை.

அவர்களது அதிர்ஷ்டம் அன்று நடந்த கூட்டத்தில், சுயதொழில் நுண் கடனுக்கு சிவமணியும் தெரிவு செய்யப்பட்டது தான். அது அதிர்ஷ்டமா அல்லது அவளுக்கான துரதிர்ஷ்டமா என்பது அவர்களுக்கு எப்படி தெரியும்? ஆடு வளர்ப்புக்கான நுண்கடன் இரண்டு இலட்சம் சிவமணி கையில் கிடைத்ததும் ருத்திரன் துரிதமாக செயற்பட்டான்.

'எனக்கும் நீண்ட நாள் விருப்பம் ஒன்றிருக்கு சிவமணி. இந்த பணத்தை நான் எடுக்கிறேன். கட்டார் போய் உழைத்து கடனை கட்டி முடிக்கிறன். ஏஜன்சியை போய்ப் பார்க்க வேணும்'. 'அது எப்படிங்க? ஆடு வளர்க்க வேணுமே கடன் தந்தவர்கள் விட மாட்டாங்களே?'. 'அதுக்கு ஒரு வழி இருக்கு நான் சொல்வதைக் கவனமாக கேள். உங்க அப்பா வீட்டில் இருக்கிற ஐஞ்சு ஆடுகள நம்ம கடன் தந்த காசுக்கு வாங்கியது போல நம்ப வைப்பம்', நம்ம வீட்டில ஆடுகள் வளரட்டும். நான் ஆட்டுக்கு கொட்டில் கட்டி விடுறன். கட்டாருக்கு போய் உழைச்சு கடன கட்டுவன் நம் கஷ்டம் போய் விடும். உன் வீட்ட கதைச்சு நீ அந்த ஏற்பாட்டபாரு, நான் போய் ஆட்டுக் கொட்டில் கட்டுவதற்கு மரம், தடிகளை பாக்கிறன்.' சொல்லியபடி கத்தியுடன் கிராமத்துக்கு பக்கமாயிருந்த சேனைக் காட்டுப் பகுதிக்கு போனான் ருத்திரன். ஒரு வாரத்துக்குள் தன் ஓடாவி நண்பன் உதவியோடு தகரம் வேயப்பட்ட ஆட்டுக் கொட்டில் செய்து எடுத்தான்.

சிவமணியின் தகப்பன் வீட்டு ஆடுகள் புதிய ஆட்டுக் கொட்டிலில் குடியேறின. ஆடுகளை விலைக்கு வாங்கி விட்டதாக எல்லோரும் நம்பினர். 'சிவமணி நான் ஏஜன்சிக்குப் போய் வாறன்.' சொல்லிவிட்டு உடனே போய் விட்டான் ருத்திரன். எண்ணி மூணு மாதங்களுக்குள் பாஸ்போர்ட், விசா அனைத்தும் முடித்து கட்டார் பயணமானான் ருத்திரன். இனி குடும்பக் கஷ்டம் எல்லாமே போய் விடும் என குதூகலப்பட்டது சிவமணியின் குடும்பம்.

நுண்கடன் திட்டத்துக்கு பொறுப்பான கடன் அறவீட்டு அதிகாரி ராகவன் கடன் பெற்றவர்களது வீடுகளுக்கு போய் தகவல்கள் திரட்டிஆலோசனை வழங்கினான். ராகவன் அழகான இளம் குடும்பஸ்தன். அவனது பேச்சும் செயற்பாடுகளும் கடன் பெற்றவர்களை நன்கு கவர்ந்தன. சிவமணி ஆடு வளர்ப்பில் காட்டிய ஆர்வம் ருத்திரன் கட்டார் போவதற்காக செய்யப்பட்ட ஏற்பாடு என்பது ராகவனுக்கு எப்படித் தெரிய வரும். ஆனால் சிவமணியின் தோழி சரோஜாவுக்கு மட்டும் தெரியும். சிவமணி தன் அந்தரங்கங்களை பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு அவளது நம்பிக்கைக்குரியவள். 'என்ன, சிவமணி ருத்திரன் கட்டார் போய் சேர்ந்தானா' வீட்டுக்கு வந்த சரோஜா கேட்டாள். சறோஜா நாலைந்து வீடுகள் தள்ளி இருப்பவள். 'ஓம். போய் சேர்ந்தாச்சாம் சறோஜா. ஆனா இன்னும் வேலைக்கு போகல்லையாம்'. 'சரி உனக்கும் கஷ்டந்தான். தனியாக புருசனை பிரிஞ்சு இருப்பதும் சும்மாவா' 'என்ன செய்ற பிள்ளைகளின் முகத்தைப் பாத்துக் கொண்டு காலத்த ஓட்ட வேண்டியதுதான்'.

'இந்த கஷ்டத்தப் பாத்தா, வருசம் முழுக்க கஷ்டப்பட வேணுமே சரோஜா. அதுதான் நானும் அவர போக சம்மதிச்சன்'. 'சரி, சிவமணி ருத்திரன் காசு அனுப்பினால் உன் கஷ்டம் தொலைந்து போகும். நான் பிறகு வாறன். இவரும் வயலுக்கு போனவர் வந்திடுவார். இன்னும் நான் சமைக்கல்ல' சொல்லிய படி சரோஜா தன் வீட்டுக்கு போய் விட்டாள். சிவமணியின் ஆடு வளர்ப்பு பற்றி அன்று பார்வையிட வந்த அதிகாரி ராகவன் 'நீங்கள்தானா சிவமணி. மற்றவர்களுக்கு முன் மாதிரி 'என பாராட்டினான்.

ஆடுகளையும் பார்த்தான். 'ஆறு மாதம் முடிய கடன் அறவீடு செய்ய வருவன் ஏற்பாடு செய்யுங்க' என்றவன் போய்விட்டான். அவனது பாராட்டில் மகிழ்ந்தாள். சிவமணியின் இளமையும், அழகும் அவளது பேச்சும் ராகவனையும் ஈர்த்ததில் வியப்பில்லைதான். சிவமணிக்கு அவளது தாயும் கூடமாட வந்து உதவினாள். அதனால் சமாளித்துக் கொண்டாள்.

கடன் பெற்றவர்கள் மாதாந்தம் கடனை செலுத்த தடுமாறினர். அது அவர்களை மேலும் மேலும் கடனாளியாக்கியது. கடனை கட்டுவதற்காக காதில, கழுத்தில இருந்த நகைகள் கூட அடகுக்கடைகளில் சிறைப்பட்டன. கட்டார் போன ருத்திரனிடமிருந்து காசு மட்டும் வரல்ல. Phone call மட்டுமே வந்தது. 'ஏனப்பா நீங்க Phone னும் எடுக்கல காசும் அனுப்பல்ல'. 'சிவமணி எனக்கு போன மாதம்தான் வேல கிடைச்சது வேலையும் கஷ்டம் சம்பளமும் குறைவு. ஏன்தான் வந்தனோ தெரியல்ல. அடுத்த மாதம் எனக்கு தெரிந்த இரண்டு பேரிடம் கடன் வாங்கி கொஞ்சம் அனுப்பி வைக்கிறன். சமாளிக்கப் பார். பிள்ளைகளை பார்க்க ஆசையாக இருக்கு'. 'சரிங்க. நீங்களும் உடம்ப பார்த்துக் கொள்ளுங்க'. 'சிவமணி நான் வீட்டுக் கஷ்டத்தால எல்லாத்தையும் விட்டுட்டு வந்து விட்டன். அதுதான் எனக்குக் கவலை'. என்னங்க செய்றது? எவ்வளவு காலம் அங்கு இருக்க வேணுமோ.' 'நாலு வருசம் எண்டாலும் இங்கு இருந்தால் நாலு காசெண்டாலும் மிச்சம் பிடிக்கலாம். சிவமணி'. 'நாலு வருசமா? என்னால எப்படிங்க முடியும். அதுக்கு முதலே வரப்பாருங்க 'சரி. சரி பாப்பம். நான் phone வைக்கிறன் '. 'சரிங்க...'

காலமும் வேகமாக சுழன்றது ருத்திரன் கட்டார் போய் ஒரு வருடம் உருண்டோடியது. அவனது சம்பளமும் போதவில்லை. கஷ்டப்பட்டு மிச்சம் பிடிச்ச காசுடன் கடனும் வாங்கி ஒருலட்சம் அனுப்பி வைத்தான் ருத்திரன். அது போதவில்லை. வீட்டுச் செலவும் ஆட்டுக் கடனும் சிவமணியை ஆட்டிப் படைத்தது.

ஆட்டுக்கடன் வட்டியுடன் மூணு லட்சத்துக்கு மேல் கட்ட வேண்டிய நிலை. சிவமணி தான் என்ன செய்வாள். ஒழுங்காக கடனை கட்டிய சிவமணிக்கு அடுத்து வந்து மாதம் நெருக்கடியாகிப் போனது. கடன் அறவீட்டு அதிகாரி ராகவனும் வந்து நின்றான். இந்த ஒரு வருடத்தில் நல்ல நட்பு இயல்பாக அவர்களிடையே ஏற்பட்டிருந்தது. 'சேர். என்னால இந்த மாசம் கடன் கட்டுவது கஷ்டமாக இருக்கும்'. என்ன சிவமணி இப்படி சொன்னா. நான் என்ன செய்ய முடியும் சொல்லுங்க 'என்றவன்? வீட்டு விறாந்தையில் கிடந்த கதிரையில் இருந்து விட்டான். சிவமணியும் தேநீர் கொடுத்து உபசரித்தாள் ராகவனை. 'இரண்டு நாள் கழித்து வந்து பார்க்கிறன் சிவமணி'. 'சேர் காசு வர தாமதிக்கும் அடுத்த மாதம் இதனையும் சேர்த்து தாறன்'. 'அது சரி வராது. சிவமணி'. 'எனக்கு வேறு எந்த வழியுமில்ல சேர்'. 'சரி உங்களுக்காக இந்த மாத பணத்தை நானே கட்டி விடுறன். கவலைப்படாதிங்க'. தனக்கு உதவ முன்வந்த ராகவனின் மீது இயல்பாகவே இன்னும் பிடிப்பு ஏற்பட்டது. 'நன்றி சேர்'என்றாள்.

கடன் கவலையில் இருந்தவளுக்கு அது சற்று ஆறுதலாக இருந்தது. கட்டாலிருந்து ருத்திரன் அன்றும் Phone ல் கதைத்தான். 'சிவமணி, அடுத்த வருடம் எனக்கு நல்ல வேல, நல்ல சம்பளம் கிடைக்கும். பிறகு நான் காசு அனுப்புவன். கவலைப்படாத'. 'சரிங்க. இப்ப மூணு ஆடுகள் குட்டி ஆறு போட்டிருக்கு நமக்குத்தான் அந்த கொடுப்பன இல்லையே'. சரி அதை விடு சிவமணி. நான் வந்து பார்க்கிறன்'. சிவமணியின் இரண்டாவது குழந்தைக்கும் இரண்டு வயது முடிந்திருந்தது. பிள்ளைகள் வளர வளர வீட்டு செலவுகளும் அதிகரித்துக் கொண்டு போனது. அன்று வீட்டுக்கு வந்திருந்த சறோஜா 'என்ன சிவமணி உன்ன காணவும் கிடைக்கல்ல.? ' 'இனியும் என்னால முடியாது சறோஜா'. நீ எதை சொல்லுறா சிவமணி'. 'எல்லாந்தான் சறோஜா. உனக்குத் தெரியாதா. உன்னை வந்து பாக்க இருந்தன். எனக்கு நேரமும் கிடைக்கல்ல. கட்டாரில் இருந்து அவரும் காசு அனுப்பல்ல. ஆட்டு கடனை கட்ட கஷ்டப்பட்டு போனன்'

'சரி அப்ப என்னடி செய்தா'. 'அந்த ராகவன் ஐயாதான் தன் காசில் இந்த மாத கடனை கட்டுவதாகச் சொன்னவர்'. 'ஓ, அப்படியா சரிடி பார்த்துக்கோ. நீயும் தனிய கிடந்து கஷ்டப்படுகிறாய். எனக்கும் உன்னப்பார்த்தா பாவமாகத்தான் இருக்கு. இதுக்குத்தான் கட்டின புருசன் பக்கத்தில இருக்க வேணும். எத்தனை வருசம் கழிச்சு வாறானோ? ருத்திரன் ஏதும் கதைத்தானா சிவமணி'. 'கதைச் சாரு நாலு வருசத்துக்கு பிறகுதான் வருவராம்'. 'சரிதான் அது உன் தலை எழுத்து' என்றவாறு பெருமூச்சு விட்ட சறோஜா', சரிடி காசு வேணுமெண்டா கேளு. நான் அவரிட்ட சொல்லி வாங்கித் தாறன். நான் வாறன்' சறோஜா' போய் விட்டாள்.

சறோஜவை நினைத்துப் பார்த்தாள் சிவமணி. வசதியான இடத்தில் வாழ்க்கைப்பட்டவள் சறோஜா. ருத்திரன் கட்டார் போகும் போது இரண்டு குழந்தைகள் அவளுக்கு. இப்ப இன்னொரு குழந்தைக்கும் தாயாகப் போகிறாள். அவளும் வாயும் வயிறுமாக இருக்காள். இந்த நான்கு மாதங்களுக்குள் சிவமணியின் வாழ்வில் பல சம்பவங்கள் அரங்கேறிவிட்டன. ருத்திரனும் காசு அனுப்பவில்லை. ஆனால் அவன் Phone எடுக்க தவறமாட்டான். சிவமணி மேல் அவனுக்கு கொள்ளைப் பிரியம்.

அன்று தான் ருத்திரன் phone ல் அழைத்தான். 'சிவமணி உனக்குத்தான் கஷ்டம் தந்து போட்டன். இந்த மாதத்திலிருந்து நல்ல சம்பளம் கிடைக்கும். இனி நம் கஷ்டம் எல்லாம் போய் விடும். கடன் எல்லாவற்றையும் கட்டி முடித்துவிடலாம். சிவமணியின் விசும்பல் கேட்டது. 'ஏன் அழுகிறாய் சிவமணி' 'ஒன்னுமில்லங்க. உங்களப் பிரிந்த தனிமையின் அவஸ்தைகளை நான் அனுபவித்து விட்டன். பிள்ளைகள் இருவரும் வளர்ந்து விட்டார்கள். அவர்களுக்காக எத்தன வருசம் இருந்ததாவது உழைச்சுக்கொண்டு வாங்க. இருவருக்கும் இரண்டு வீடுகள கட்டிக்கொடுங்க. கவனமாக இருங்க'. 'சரி சிவமணி'. 'சரிங்க. நானும் phone ஐ வைக்கிறன்'. மூணு மாதமாக வீட்டுச்செலவுக்கு சறோஜாவிடம் கொஞ்சமாக பெற்ற கடன் உதவியது.

ஆனால் ஆட்டுக் கடன் சுமையை அவளால் ஈடு செய்ய முடியவில்லை. ஒரு மாதம் தன் காசில் கடனை செலுத்திய ராகவன் அடுத்த மாதமும் வந்திருந்தான். அவளது கஷ்டங்கள் கண்டு அவன் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் அவளுக்கு தேவையாக இருந்தது. 'சேர். நீங்க இருந்து சாப்பிட்டு போங்க'. அவனும் மறுக்கவில்லை. அடுத்தடுத்த மாதங்களில் அடிக்கடி சிவமணி வீட்டுக்கு வந்து போவான் ராகவன்.

அவர்களிடையே நெருக்கம் இன்னும் அதிகமாகியது. ஆட்டுக்கடன் பற்றி அவன் இப்போ எதுவும் சிவமணியிடம் கதைப்பதில்லை. 'சேர் நீங்கதான் என் கஷ்டம் புரிந்து எனக்கு உதவி செய்திருக்கிறிங்க. நீங்க செய்த உதவிகள என்னால எப்போதும் மறக்க முடியாது'. 'சிவமணி அதை பாத்துக்கலாம் விடுங்க 'அவனும் வாஞ்சையோடு சொன்னான். 'இல்ல சேர் நாலு மாதங்கள் இப்ப முடிஞ்சு போச்சு. எனக்கு என்ன செய்வதென எதுவும் புரியல்ல. இப்ப எனக்கு நீங்க கட்டிய கடன் காசு பற்றி அவரிடம் சொல்லி இருக்கன். அனுப்பி விடுவார்'. 'அதை பிறகு பாத்துக்கொள்ளலாம். நானும் அதுபற்றி யோசித்துக் கொண்டு பிறகு வாறன்'. 'கட்டாயம் வாங்க சேர் நான் பார்த்திருக்கன்'. என்னவோ ராகவனிடம் ஒரு பிடிப்பும் தவிப்பும் சிவமணியிடம் இருந்தது.

நாட்கள் வேகமாக நகர்ந்தன. சிவமணிக்கு சறோஜாவைக் கண்டு கதைக்க வேணும் என்ற உந்துதல். அவள்தான் அவளது ஒரேயொரு உயிர்த் தோழி. தன் அந்தரங்களை பகிர்ந்து அவளிடமே ஆறுதல் பெறுவாள். பிள்ளைகள் இருவரையும் தாய்வீட்டுக்கு அனுப்பி விட்டு சறோஜா வீட்டுக்குப் போயிருந்தாள் சிவமணி. 'அடடா, சிவமணியா, உனக்கு நேரமே இருக்காதே என்னிடம் வருவதற்கு, என்ன ஏதாவது அவசரமோ.' 'அப்படி ஒண்ணுமில்ல சறோஜா நீ பதறாத. சும்மாதான், கொஞ்ச நேரம் கதைக்கலாமே என்றுதான் வந்தன்'. 'எங்க பிள்ளைகள்? நீ கூட்டி வரல்லையா. சரி சிவமணி கொஞ்சம் இரு, உனக்கு குடிக்க ஏதாச்சும் கொண்டு வாறன்'. 'அது ஒன்னும் எனக்கு வேணாம் நீ வா சறோஜா'. 'சரி சொல்லு, காலையில இருந்து எனக்கும் வேலதான். ஒரு இடமும் போக கிடைக்கல்ல. ருத்திரன் phone எடுத்தானா சிவமணி'. 'இப்பதான் சறோஜா அவரோட கதைத்துப் போட்டு வாறன். நல்ல சம்பளத்தோடு வேல கிடைச்சிருக்காம். அதுதான் இன்னும் நாலு வருடமாவது இருந்து உழைத்துக் கொண்டு வருமாறு நானே சொன்னன் இரண்டும் பொட்ட பிள்ளைகள். அதுகளாவது பின்னுக்கு நல்லாக இருக்கட்டும். உன்னிடம் வாங்கிய கடன், ராகவன் சேருக்கு கொடுக்க வேண்டியது எல்லாம் சொல்லியிருக்கன். 'அம்மாவிடம் பிள்ளைகள விட்டுபோட்டு வந்தன். நான் போகணும்'.

'என்ன சிவமணி நீ ஏதோ வித்தியாசமாக கதைக்கிறா'. 'நான் இதை உன்னிடம் மட்டுமே சொல்லுகிறன். அது உன்னுடன் மட்டுமே இருக்கட்டும். என்னோடு அது புதைந்து

போகட்டும் சறோஜா'. இந்த நாலு மாதங்களில் நடந்த முழுவதையும் ஒன்று விடாமல்

(17 ஆம் பக்கம் பார்க்க)

வெல்லாவெளி
**விவேகானந்தம்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
## இல: 99

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | | 04 | 05 | |
| 06 | | | | | 07 | | 08 |
| 09 | | 10 | | | 11 | | |
| | | 12 | | | | 13 | |
| 14 | 15 | | | | | | |
| 16 | | | | 17 | 18 | | 19 |
| 20 | | | | 21 | | 22 | |
| 23 | | | | | | 24 | |

**திரு/திருமதி.செல்வி** ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
**முகவரி** ........................................
........................................
........................................
.................... ....................
**திகதி** **கையொப்பம்**

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 99
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 99

**இடமிருந்து வலம்**

1. இம்மாத இறுதியில் வரும் திருநாளை இப்படியும் அழைப்பர்.
6. நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலப்பகுதி
7. உயர்ந்த பண்பு
9. நள்ளிரவு(குழம்பியுள்ளது)
11. விஷமுள்ள ஐந்து (திரும்பியுள்ளது)
12. வெட்டும் கருவி
13. ஒன்றுக்கும் மேற்பட்டது
14. நீர்த்தன்மையானது (திரும்பியுள்ளது)
16. இசையுடன் இணைந்தது (குழம்பியுள்ளது)
17. ஆண், பெண் தன்மையற்றது
20. பாடல்வகை (திரும்பியுள்ளது)
21. சூளுரை
23. கடற் பணத்துக்கு இதுவும் தேவை
24. அந்திப் பொழுது திரும்பிவிட்டது.

**மேலிருந்து கீழ்**

1. வரவுசெலவுத் திட்டம்
2, திங்கள் ஒளி(குழம்பியுள்ளது)
3. புகழ் வாய்ந்த அல்லது பிரபலம்
4. தலை அலங்காரத்துக்கு இதுவும் தேவை (குழம்பியுள்ளது)
5. இழப்பு, பிரிவு போன்றவற்றால் ஏற்படும் துயரத்தை வெளிப்படுத்தும் நிலை
8. ஆறு அல்லது பள்ளத்தாக்கு என்பனவற்றுக்கு மேலாக போக்குவரத்துக்காக இரு பகுதிகளையும் இணைக்கும் பாதை (குழம்பியுள்ளது)
10. அதிக மக்கள் தொகை கொண்ட பெரும் இடம்.
14, சிரிப்பூட்டும் வேடிக்கைப் பேச்சு
15. பன்றி
17. களைப்பினால் ஏற்படும் சோர்வு நிலை
18. உயிரிழப்பு (தலைக்கீழ்)
19. ஒரு வருடத்தில் இது பன்னிரண்டு(குழம்பியுள்ளது)
22. சிரசு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 98

## விடைகள்

**இடமிருந்துவலம்**

1. தீபம்
3. வதந்தி
6. வீதி
7. கிலி
8. பதி
9. முரல்
10. தகடு
11. சமாதி
13. தம்பட்டம்
15. தாம்பூலம்
17. பரதம்
18. வறுமை
20. கைதி
21. ஆசான்

**மேலிருந்து கீழ்**

1. தீவிரம்
2. பதில்
3. வலி
4. தந்தி
5. பதிகம்
10. திட்டு
11. சபலம்
12. மாடம்
13. தம்பதி
14. பூதம்
15. தாரகை
16. வன்னி
18. சாமை
19. ஆறு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 98

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **பி. செல்வதி** | **எம்.எப். ஷிம்ரா** | **வீ. பாலேந்திரா,** |
| நீர்வேலி வடக்கு, | 185/3 புறுலபிட்டிவத்தை, | 15/2, பீ, தயா வீதி, |
| நீர்வேலி | மல்வானை | வெள்ளவத்தை |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ்.கனகரத்தினம்,** திருகோணமலை
2. **எம்.ஐ. ஏ. லத்தீப்,** அக்கறைப்பற்று
3. **ஆரா சிபாஸ்** குளியாப்பிட்டிய
4. **எஸ் சஞ்சனா** வந்தாறுமூலை
5. **ஏ.எல்.கலீல்** இறக்காமம்
6. **என்.கே. வேணி** பலாங்கொடை
7. **பி. பேரின்பராஜா** மட்டக்களப்பு
8. **எம்.எச்.சீ.என். ஹம்தா** வெலிகம
9. **கே. புண்ணியநேசன்** காரைதீவு
10. **எம்.எம். சசாத்** மருதமுனை

# கல்விமான், பன்னூலாசிரியர் மர்ஹூம் ஏ.ஏ.எம். புவாஜி



வரலாற்று ஆசிரியரும் பன்னூலா சிரியரும், மாத்தளை சாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான ஏ.ஏ.எம்.புவாஜி தனது 82 வயதில் கடந்த 06.12.2023 அன்று காலமானார்.

அப்துல் அஸீஸ் தம்பதியினரின் புதல்வராக 20.10.1941இல் மாத்தளையில் முஹம்மது புவாஜி பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியினை மாத்தளை அரசினர் தமிழ் பாடசாலையிலும் இடைநிலை மற்றும் உயர்தரக் கல்வியினை மாத்தளை சாஹிராக் கல்லூரியிலும் ஆங்கில மொழி மூலம் பயின்றார். மாத்தளை சாஹிராக் கல்லூரியிலிருந்து தெரிவான முதலாவது முஸ்லிம் பட்டதாரியான இவர் தமிழ், வரலாறு, பொருளியல் போன்ற பாடங்களை தெரிவு செய்து பேராதனை பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தினை பெற்றுக்கொண்டார்.

அதே பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிலும் சிறப்புச் சித்தி எய்திய பின்னர், கல்வி முதுமாணிப் பட்டத்தினை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார்.

1963ஆம் ஆண்ட ஆசிரியத்துறை நியமனம் பெற்ற இவர், தான் கல்வி கற்ற பாடசாலையான மாத்தளை சாஹிராக் கல்லூரி, அக்குரணை அஸ்ஹர் தேசிய பாடசாலை, அல்மனார் தேசிய பாடசாலை ஹந்தெஸ்ஸ போன்றவற்றில் அதிபராக கடைமையாற்றி தனது ஓய்வு வயதெல்லையை அடைய முன்னரே 1990இல் ஓய்வு பெற்றார்.

அதிபராக கடமையாற்றுகின்ற காலத்திலேயே கல்வி டிப்ளோமா வெளிவாரி மாணவர்களுக்கு பரீட்சகராகவும், ஆசிரியப் பயிற்சி போதானாசிரியராகவும் சிறப்புடன் சேவையாற்றிய இவர், 1995 ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி போதானாசிரியராக கடமையாற்றிய சிறப்புக்குரியவர்.

கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட பாடவிதானக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றிய பெருமைக்குரியவர் இவர். சிறு வயதில் இருந்தே இலக்கியத்தின் மீதான ஆர்வத்தினால் தன்னார்வத்துடன் இலக்கியத்தை தன் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியோடும் இணைத்துக்கொண்டவர்.

இவர் மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும், கண்டி மாவட்ட முஸ்லிம்கள், மாத்தளை மாவட்ட தமிழர்களின் வாழ்வும் பாரம்பரியமும், கவிமணி எம்.எம் சுபைர், பேராசிரியர் அல்லாமா எம்.எம்.உவைஸ் ஆகிய நூல்களை தமிழ் மொழி மூலம் எழுதியுள்ளார்.

இவரின் சமூக இலக்கிய பணிகளுக்காக மத்திய மாகாண சாகித்திய விருது, மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்ட இலக்கியச் சுடர் விருது, கலாபூசணம் விருது, கொழும்பு உலக இஸ்லாமிய மாநாட்டிலும், அகில இலங்கை முஸ்லிம் கல்வி சம்மேளனத்தில் பெற்றுக் கொண்ட விருதுகள், அகில இலங்கை கம்பன் கழக மற்றும் அகில இலங்கை பாடசாலைமட்ட தமிழ் தின தேசியவிழாவில் கௌரவிப்பு போன்ற பல்வேறு விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார்.

இவரது மறைவு இலங்கை வாழ் மக்களுக்கு நிச்சயமாக பேரிழப்பேயாகும். இவரது வரலாறு நூலுருவாக வரவேண்டியது கட்டாயமாகும். இதற்கான வேலைகளை செய்வதில் மாத்தளை இஸ்லாமிய தமிழ் பேரவை உறுதி கொண்டுள்ளது. எல்லாம் வல்ல இறைவன் அன்னாருக்கு ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத் தினை வழங்குவானாக.

**எம்.எஸ்.எம்.சுல்பிகார்**

**(மொழிபெயர்ப்பாளர்)**

**செயலாளர் மாத்தளை இஸ்லாமிய தமிழ் இலக்கிய பேரவை**

# உதிர்ந்த இரண்டு இலக்கிய நட்சத்திரங்கள்

## மாத்தளை எழுத்தாளர்கள் அனுதாபம்





மலையகத்தின் மீது அக்கறையும் அனுதாபமும் கொண்ட வட புலத்து எழுத்தாளர்கள் நிறையவே இருந்திருக்கின்றார்கள். மலையகத்தில் ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், எழுது வினைஞர்களாகவும் திகழ்ந்தவர்கள் மலையகம் குறித்து இலக்கியங்களை படைத்து தந்திருக்கிறார்கள். அந்த அணியில் மலையகத்தில் கல்வி கற்பித்த காலத்தில் நல்லாசிரியனாகவும் மலையக மாணவர்களை உயர்த்த கல்வித் துறையில் ஊக்குவித்த செயற்பாட்டாளராகவும் மலையக இலக்கியம் மீது தனது இறுதி மூச்சு வரை பெரும் அபிமானம் கொண்டிருந்தவருமான, மலையக மண்ணை புகுந்த இடமாக கருதாமல் பிறந்த இடமாக கருதிய பண்பாளருமாகிய பேராசிரியர் செ.யோகராஜாவின் மறைவுக்கு மலையக எழுத்தாளர்கள் சார்பிலும் மலையக மக்கள் சார்பிலும் மலையகம் தனது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறது.

மாத்தளை மாவட்ட தமிழர்களின் வாழ்வும் பாரம்பரியமும், மாத்தளை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறும் பாரம்பரியமும் உட்பட பல வரலாற்று ஆய்வு நூல்களை எழுதிய அறிஞர் மர்ஹூம் ஏ.ஏ.எம்.புவாஜி, மாத்தளையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களின் ஒருமைப்பாடு குறித்து சிந்தித்த பெருமகனாவார். எளிமையும் உயர்ந்த பண்பும் வயதுக்கு மூத்தோர் அனைவரையும் மதித்து போற்றும் பாங்கும் பகைவர்களுக்கு அருளும் நல்நெஞ்சும் பேராசான் புவாஜியின் குணங்களாகும். மாத்தளையில் அவர் ஏற்றி வைத்த இலக்கியச்சுடர் அணையாது என்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கும். இந்த 2023ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு இலக்கிய நட்சத்திரங்கள் உதிர்ந்துப் போய் விட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்கு ஏற்பட்ட பெரும் துயரம் என்று மறைந்த இரண்டு தமிழ் அறிஞர்களான பேராசிரியர் செல்லையா யோகராஜா, கல்விமான், பன்னூலாசிரியர் மர்ஹூம் ஏ.ஏ.எம்.புவாஜி ஆகியோரின் மறைவு குறித்து மாத்தளை எழுத்தாளர்களான மாத்தளை சோமு, மாத்தளை வடிவேலன் மற்றும் எச்.எச். விக்கிரமசிங்க ஆகிய மூவரும் கூட்டாக இணைந்து தங்களின் அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

# தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளின் ஆன்மிக அருளுரைகள்



தமிழ் நாடு திருஞானசம்பந்தர் திருமடத்தைச் சேர்ந்த திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்த பரம்பரை சூரியனார் கோவில் ஆதீனம் ஸ்ரீ கார்யம் வாமதேவ தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகள் அம்பாறை, திருகோணமலை மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலும் அறநெறிபாடசாலைகள், ஆலயங்களில் ஆன்மிக அருளுரைகள் நிகழ்த்தவுள்ளார்.

இம்மாதம் புதன்கிழமை (13/12) பிற்பகல் 2.00 மணிக்கு திருகோணமலை, வீரமா நகர் நாகதம்பிரான் ஆலயத்திலும், வியாழக்கிழமை (14/12) காலை 9.00 மணிக்கு நீனாக்கேணி சிவனருள் கல்வி நிலையத்திலும், பிற்பகல் 2.00 மணிக்கு சேனையூர் மத்திய கல்லூரியிலும், வெள்ளிக்கிழமை (15/12) காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு, பட்டிருப்பு வலயக்கல்வி பணிமனையிலும், மாலை 5.00 மணிக்கு இராமகிருஷ்ண மிஷனிலும், சனிக்கிழமை (16/12) காலை 9.00 மணிக்கு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயத்திலும், மாலை 4.30 மணிக்கு மண்டூர் இராமகிருஷ்ண மிஷனிலும் சுவாமிகளின் ஆன்மிக அருளுரைகள் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (17/12) காலை 8.00 மணிக்கு அம்பாறை தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் சிவாக்கர தேசிக சுவாமிகளின் திருவாசக மகாநாடு நடைபெற உள்ளது.

திங்கட்கிழமை (18/12) காலை 8.00 மணிக்கு அம்பாறை, அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரியிலும், காலை 9.30 மணிக்கு நாவலர் வித்தியாலயம் கோளாவிலிலும், காலை 11.00 மணிக்கு தம்பிலுவில் மத்திய கல்லூரியிலும், மாலை 5.00 மணிக்கு காயத்திரி கிராமம் சிவனருள் கட்டடத்திலும், செவ்வாய்க்கிழமை (19/12) காலை 8.00 மணிக்கு அம்பாறை, திருக்கோவில், மெதடிஸ்த வித்தியாலயத்திலும், காலை 9.30 மணிக்கு விநாயகபுரம் மகா வித்தியாலயத்திலும், காலை 11.00 மணிக்கு கோமாரி, மெதடிஸ்த வித்தியாலயத்திலும், மதியம் 12.00 மணிக்கு சம்மாந்துறை, ஸ்ரீ கோரக்கர் சித்தர் பீடத்திலும் ஆன்மிக அருளுரைகள இடம்பெறவுள்ளது.

தமிழகத்திலிருந்து வருகை தரும் சுவாமிகளின் காலை, மாலை வேளைகளில் நடைபெறும் இப் புனித நிகழ்வுகளில் கலந்து கொண்டு இறையருள் பெறுவதோடு சுவாமிகளின் அருளாசிகளையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

**எச்.எச்.விக்கிரமசிங்க**


**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

**அதிவேக நெடுஞ்சாலை, இயக்குதல், பராமரிப்பு, நிர்வகித்தற் பிரிவு**

**பகிரங்க ஏலத்தில் பொருட்களை விற்பனை செய்தல்**

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக வீதி செயற்பாடுகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் வெளி சுற்றுவட்ட அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதிக்கு சொந்தமான கழிக்கப்பட்ட பொருட்களை 2023.12.20 மு.ப.10.00 இற்கு அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு, நிர்வகித்தற் பிரிவின் வல்கம தலைமையக வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**பகிரங்கமாக விற்பதற்கு தீர்மானித்துள்ள கழிக்கப்பட்ட பொருட்கள்**

1. அலுவலக தளபாடங்கள்
2. மின் துணைப்பாகங்கள்
3. கணனி துணைப்பாகங்கள்
4. புல் வெட்டும் இயந்திரங்கள்
5. கல்வனைஸ் செய்யப்பட்ட இரும்பு (Guardrail)
6. பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் ஏனைய கழிக்கப்பட்ட பொருட்கள்

ஏல விற்பனை வளாகத்திற்கு உட்பிரவேசிப்பதற்காக அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு மீளளிக்கப்படாத ரூ.500/- தொகையை (பெறுமதி சேர் வரி மற்றும் ஏனைய வரிகள் உள்ளடங்கலாக) அத்தினத்திற்கு அதிவேக நெடுஞ்சாலை, இயக்குதல், பராமரிப்பு, நிர்வகித்தற் பிரிவின் வல்கம தலைமையகத்தின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

ஏல விற்பனையுடன் சம்பந்தப்பட்ட கழிக்கப்பட்ட பொருட்களை 2023.12.19 மு.ப.10.00 முதல் பி.ப.3.00 வரை பண்டாரகம, வல்கமவில் அமைந்துள்ள அதிவேக நெடுஞ்சாலை இயக்குதல், பராமரிப்பு பிரிவின் தலைமையக வளாகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கொள்வனவு செய்யும் பொருட்களுக்காக காசு செலுத்தி அன்றே அகற்றப்பட வேண்டியதுடன் அவ்வாறு அகற்றப்படாத எந்தப் பொருளுக்காக பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

கேள்வி வைத்தல், விற்பனை செய்தல், முடிவுறுத்தல் ஏல விற்பனை சபையினால் மேற்கொள்ளப்படும். ஏல விற்பனை சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

**பணிப்பாளர் (க.ஓ)**

**(அதிவேக நெடுஞ்சாலை, இயக்குதல், பராமரிப்பு, நிர்வகத்திற் பிரிவு)**


# அகில இலங்கை கர்நாடக சங்கீத, பரத நாட்டியப் போட்டியில் பட்டிருப்பு கல்வி வலய மாணவர்கள் சாதனை







(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

அனுராதபுரம் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற கர்நாடக சங்கீத, பரதநாட்டியப் தேசிய மட்டப் போட்டியில், மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்தில் இருந்து கலந்து கொண்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி சாதனையை நிலைநாட்டியுள்ளனர். களுதாவளை மகாவித்தியலயம், தேசியபாடசாலை சிரேஷ்ட பிரிவில் தப்பாட்டம் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலய மாணவர்கள் பரதநாட்டிய சிரேஷ்ஸ்ட பிரிவில் சுதந்திரம் எனும் தலைப்பில் நடைபெற்ற புத்தாக்க நடனப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். பெரியபோரதீவு பாரதி மகாவித்தியாலயம் வேடுவர் நடனம் இரண்டாம் இடத்தையும், தை நீராடல் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. செட்டிபாளையம் மகாவித்தியாலம் இசைக்குழு நாட்டார் பாடலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இசைப் பிரிவு ஐந்தில் கலந்து கொண்ட களுதாவளை மகாவித்தியாலயம் தேசியபாடசாலையைச் சேர்ந்த ஜெ.டிலோஜி எனும் மாணவி மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளதோடு, வயலின் போட்டியில் கலந்து கொண்ட குருக்கள் மடம் கலைவாணி மகா வித்தியாலய மாணவர்களான நி.மோரக்ஸகா, முதலிடத்தையும், சி.அத்விகா இரண்டாமிடத்தையும், பெற்றுள்ளனர்.


**முதன்மையான வியாபார ஆதனம் விற்பனைக்கு**

**கொழும்பு-14 துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலை அணுகுவழிக்கு அருகாமையிலுள்ளது**

- 17540 ச.அடி. மண்டப வடிவம் (திடமான கட்டிடத்தின் மத்தியில் தூண்கள் இல்லாமல் கூரையில் தோட்டத்துடன்)
- இரு பிரதான வீதிகளின் முகப்பிற்கு எதிராகவுள்ளது
- 40 அடியுள்ள கொண்டெயினருக்கான நுழைவாசல் மற்றும் வாகன நிறுத்துமிடம்
- கொ.மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடங்கள் மற்றும் இணைந்தொழுகல் சான்றிதழ்.
- 35 பேர்ச் விஸ்தீரணம்

**பின்வருவனவற்றிற்கு உகந்தது**
**நிதிசார் நிறுவனம்**
**கப்பற் சரக்கு மற்றும் கடற்சேவை செயற்பாடுகள்**
**வரவேற்பு மண்டபம் அல்லது வேறேதாவது**
**கூட்டுரு அலுவலகம் செயற்பாடுகள்.**

நேர்மையான கொள்வனவுக் காரர்கள் மாத்திரம்

**தொடர்பிலக்கம்: 0776772248**


(16 ஆம் பக்க தொடர்ச்சி)

சொல்லி முடிக்க அதிர்ச்சியில் உறைந்து போன சறோஜா சற்று நிதானத்துக்கு வந்தாள். 'இவ்வளவும் நடந்திருக்கா, சிவமணி? எனக்குப் புரியுது எல்லாம்'. 'உன்னில் நான் ஒரு குத்தமும் காணல்ல. உன் தனிமையும், நிலைமையும் அப்படி. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் உனக்கு ராகவனோடு அப்படி அமைந்து போச்சு'. 'அதுதான் என் தலவிதி'. 'நீ ஒண்ணும் யோசிக்காத சிவமணி, ஏதாவது வழி இருக்குதா கலைத்து விட எனப் பார்க்கலாம்'. 'இனி இதுக்கு ஒரு வழியுமில்ல காலம் கடந்து போச்சு'. 'சிவமணி அவசரப்பட்டு எந்த முடிவும் நீ எடுக்காத. ராகவனிடம் இத பத்தி சொன்னியா'. 'சொன்னன் இது எல்லாமே இந்தக் கடனால வந்த பிரச்சின. என் கனவுகள் எல்லாம் இந்த கடனால சிதைந்து போச்சு. இது பற்றி எவரிடமும் மூச்சு விடாத. சத்தியம் பண்ணு. நான் சொன்னத மட்டும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள். சறோஜா, நான் போறன்'.

வீட்டுக்கு விரைந்த சிவமணி முடிவு எடுத்து விட்டாள். ருத்திரனுக்கு துரோகம் செய்து விட்டு அவமானத்துடன் வாழ அவள் விரும்பவில்லை. அவள் நிரந்தரமான உறக்கத்துக்கு போனாள். அவளது உயிர் பிரிந்து போனது அவளுக்கே தெரியாது. மாலை ஆறு மணி போல் பிள்ளைகளுடன் வந்த சிவமணியின் தாய், சிவமணியை எழுப்பிப் பார்த்துவிட்டு வைத்த ஒப்பாரியில் ஊரே கூடிவிட்டது. மளமளவென காரியங்கள் நடந்தேறின. கிராம அலுவலர் ஊடாக பொலிசுக்கு செய்தி பறந்தது. காலையில் "Coroner" வந்தார். பொலிஸார் வந்திருந்தனர். ஊர் கூடியிருந்தது. மரண விசாரணை நடைபெற்றது. 'என்ன நடந்தது. இறந்தவளது புருசன் எங்க. 'கம்பீரமான குரலில் கர்சித்தார் Coroner. 'ஐயா அவ புருசன் வெளி நாட்டில'. 'நீ யார் என் முன்னால வந்து சாட்சி சொல்லு' Coroner மிக கண்டிப்பானவர். அவர் கம்பீரமும் அதட்டலும் சாட்சிகளிடம் இருந்து உண்மையை வர வைத்து விடும். அவரது கரிய நிறமும் சாட்சிகளை உறுத்தும் அவர் பார்வையும் சாட்சி சொல்பவர்களுக்கு கிலியை உண்டாக்கும். அவர் போட்ட அதட்டலில் பயந்து நடுங்கிய படி சிவமணியின் தாய்.'ஐயா எண்ட மக்கள் தான், இஞ்ச செத்து கிடக்கும் சிவமணி. இந்தா பக்கத்திலதான் என் வீடு இருக்கு. என்னிடம் அவளது பிள்ளைகள தந்து போட்டு, சறோஜா வீட்டுக்கு போனாவள். போனவள இன்னமும் வரல்லயே எண்டு பாக்க வந்தன். வீட்டு விறாந்தையில் செத்துக் கிடந்தாள். சத்தம் போட்டு அழுத பிறகுதான் ஊருக்கு தெரிய வந்தது'. தாயின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. 'சரி நீ போ. யார் அது சறோஜா, உடனே அவள கொண்டு வாருங்க' பொலிசாருக்கு Coroner கட்டளை பிறப்பித்தார்'. 'ஐயா நான்தான், சறோஜா. சிவமணி சாக முதல் என் வீட்டுக்கு வந்தது உண்மைதான். தன் கடன் சுமைய சொல்லி என்னிடம் அழுதாள். நான் அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னன். 'சரி நீ சொல்வது உண்மையா'. முறைத்தபடி அதட்டினார் அவர். அதட்டலில் பயந்து போன சறோஜா நிதானம் தவறாமல் உறுதியை கைவிடாமல் சிவமணிக்கு செய்து கொடுத்த சத்தியத்தின் வழியே நின்று சாட்சியம் சொன்னாள்.

'நான் சொன்னது உண்மைதான் ஐயா. கடன் சுமையால் மிகவும் கஷ்டப்பட்டாள். அவள் புருஷன் கட்டாரில் கஷ்டப்படுவதால் அவனாலும் பணம் அனுப்ப முடியல்ல. நானும் சின்னச் சின்ன உதவிகள் செய்திருக்கிறன். ஆனாலும் கடன் சுமையால் நொந்து போய் இருந்தாள் ஐயா'. சறோஜா சொல்லி முடித்தாள்.

சறோஜாவின் சாட்சியம் வலுவாக இருந்தது. அதனை பதிவு செய்த Coroner தன் தீர்ப்பை சொன்னார். 'கடன் சுமை தாங்க முடியாது தற்கொலை செய்ததால் ஏற்பட்ட மரணம் இது. Post mortemக்கு அவசியமில்லை பிரேதத்தை அடக்கம் செய்வதற்கு அவளது பெற்றோரிடம் ஒப்படைக்கவும்'.

தீர்ப்பு வழங்கினார் Coroner. அன்று சடலத்தை பிரேத பரிசோதனை செய்திருப்பின், சிவமணியோடு சேர்ந்து கூடவே பூமியில் தன் பாதம் பதிக்காத இன்னுமொரு உயிரும் மௌனித்தது என்ற சறோஜாவுக்கு மட்டுமே தெரிந்த அந்த உண்மை ஊருக்கே தெரிந்திருக்கும். அங்கு கூட்டத்தோடு ஒருவனாய் நின்றிருந்த ராகவன் மௌனமாய் அழுதான். அன்றில் இருந்து அந்தக் கிராமத்துக்கு கடன் அறவிட வராமல் காணமலே போனான்.


**INTERNATIONAL DRIVING LICENCE**

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON Estd. 1904

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

National Lotteries Board
வியாழன் 2023.12.07
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
5321
ரூ. 23,792,224.00
T 3 6 4 0 9 6

3563 2023.12.07
ரூ. 69,807,904.80
F 23 26 51 63 F
52851

Mega POWER
1669 2023.12.07
08309
ரூ. 416,989,876.00
D 03 08 10 68 73
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

VIP
2023.12.07
0147
L 1 9 9 2 0 2
L
ரூ. 21,088,107.48

2023.12.07 630
ரூ. 4,403,678.48
04 23 45 48
39024
16

தன நிதானய
1351
2023.12.07
ரூ. 124,327,120.00
S 17 29 38 53 S
38216

**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**

LECO

**வாடகைக்கு / குத்தகைக்கு கட்டிடமொன்று தேவை - கொள்ளுப்பிட்டி**

**விலைமனு இல.: LECO/23/NCB/PR4/300**

வாடகை/குத்தகை அடிப்படையில் ஆகக் குறைந்தது 8 எண்ணிக்கையுள்ள வாகனங்களின் நிறுத்துமிடமாக பாவிப்பதற்காக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து 150 மீற்றர் அரை விட்டத்தில (Radius) சமதரையான காணியொன்று உடனடியாக தேவைப்படுகின்றது.

வாடகைக்கு அல்லது குத்தகைக்கான கால எல்லையானது 02 வருடங்களாகும்.

முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024.01.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்பதுடன் விலைமனுக்களை மூடிய பின்னர் அவைகள் விரைவாகவே திறக்கப்படும். முன்வைப்புக்களை இந்த பெறுகைக்கு உரித்தான விலைமனுக்கோரல் ஆவணத்திலுள்ள பணிப்புரைகளின் பிரகாரம் விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விலைமனுக்கள் பின்வரும் முழுமையான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறான அனைத்து விபரங்கள்.
- எதிர்பார்க்கப்படும் வாடகை / குத்தகை தொகை.
- உரித்துறுதி, கட்டிடத்தின் விபரங்கள் மற்றும் அளவை வரைபட பிரதிகளுடனான நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

இந்த பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணத்தை **www.leco.lk** (“Tender Notice” Section) என்ற இணையதளத்தை அல்லது **www.promise.lk** என்பதனை பார்வையிடுவதன் மூலம், அல்லது 011-2371637 என்பதன் வழியாக LECO பெறுகைப் பிரிவை தொடர்பு கொள்வதன் மூலம் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

முன்வைப்புக்கள் பதிவுத் தபாலில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படலாம் (விலைமனுக்களை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக லங்கா மின்சார கம்பனியில் அவைகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்) அல்லது விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னராக கம்பனியின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இடப்பரப்புக்களின் உரிமையாளர்கள் மாத்திரமே அவர்களின் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகையின் தலைப்பு மற்றும் விலைமனு இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக தெளிவுறுத்தல்களுக்கும், தயவுசெய்து மனிதவளங்கள் மற்றும் நிருவாகத்திற்கான மேலதிக பொது முகாமையாளருடன் 011-2371600 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

பெறுகை அறிவித்தல்
www.leco.lk

**பொது முகாமையாளர்**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி**
**ஈ.எச். குரே கட்டிடம்,**
**411, காலி வீதி, கொழும்பு-03**

# புடினின் மேற்காசிய விஜயம் வெளிப்படுத்தும் அரசியல்?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்



உலக அரசியல் போக்கு மேற்காசியாவில் மையங்கொள்ள ஆரம்பித்துள்ளது. பொதுவாகவே மேற்காசியாவுக்கு அத்தகைய தனித்துவம் காணப்பட்டது. தற்போது அதன் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது. ஹமாஸ், இஸ்ரேல் போர் மட்டுமன்றி அத்தகைய போர் உலகளாவிய ஆதிக்க சக்திகளுக்கிடையிலான போட்டியை தீவிரப்படுத்தியுள்ளது. ஏறக்குறைய இரு மாதங்களைக் கடந்த நிலையில் போர் நீடிப்பதென்பது இஸ்ரேலின் போரியல் உத்திகளில் காணப்படும் பலவீனத்தையே தெளிவுபடுத்துகிறது. இஸ்ரேல் உருவான காலப்பகுதியிலிருந்து நிகழ்ந்த பல போர்களின் நாட்களின் எண்ணிக்கை மிகக் குறுகியதாகவே அமைந்திருந்தது. ஆனால் தற்போதைய போர் ஹமாஸின் உத்தியாலும் அதன் நட்பு சக்திகளின் அணுகுமுறைகளாலும் இஸ்ரேல் மீளமுடியாததுடன், போரை முடிவுக்கு கொண்டுவர முடியாதுள்ளது. இதுவரை காலமும் மொஸாட் உலகளாவிய ரீதியில் வலுமிக்க புலனாய்வு அமைப்பாக இருந்த நிலை காணாமல் போயுள்ளது. அது அதிக கேள்விகளுக்கு உட்பட்டுள்ள புலனாய்வுத் துறையாக மாறியுள்ளது. அச்சுறுத்தலையும் கொலைகளையும் செய்வதன் மூலம் ஒரு தேசத்தை பாதுகாக்க முடியும் என்ற நிலை காணாமல் போயுள்ளது. இஸ்ரேலின் தோல்வியும் அதுவாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் அராபியர்களது வலுமிக்க நட்பு சக்தியாக விளங்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினது மேற்காசிய நாடுகளுக்கான விஜயத்தின் முக்கியத்துவத்தை தேடுவதாக அமையவுள்ளது.

கடந்த 06.12.2023 இரு மேற்காசிய நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி அரச முறைப்பயணத்தை மேற்கொண்டார். அதனை அடுத்து ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ரஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்தார். இரு பயணங்களுமே அரசியல், இராணுவ முக்கியத்துவம் பெற்ற விஜயங்களாகவே அமைந்தன. குறிப்பாக ரஷ்ய ஜனாதிபதி ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது இரு நாடுகளிலும் உற்சாக வரவேற்று அளிக்கப்பட்டது. குதிரைப்படை வாகன அணிவகுப்பு விமான அணிவகுப்பு என மிகக் கோலாகலமான வரவேற்பாக அமைந்திருந்ததென ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அமீரகத் தலைவர் ஷேக் முகமது பின் சஜீத்அல்நஹ்யானி உடனான புடினது உரையாடல் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்திருந்தது. அரபு உலகத்தின் முக்கிய பொருளாதார பங்காளி என ரஷ்ய ஊடகங்களுக்கு கிரெம்ளின் அறிவித்துள்ளது. எங்கள் நட்புறவு முன்னெப்போதுமில்லாத அளவை எட்டியுள்ளது என புடின் வர்ணித்தார். அதனை அடுத்து சவுதி அரேபியா பயணமான ரஷ்ய ஜனாதிபதி அந்த நாட்டின் ஆட்சியாளர் இளவரசர் முகம்மது பின் சல்மானை சந்தித்தார். அதன் போது இளவரசரை ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறும் அழைப்பு விடுத்ததுடன் இரு நாட்டுக்குமான நட்புறவை எவராலும் தடுக்க முடியாது எனவும் தெரிவித்தார் புடின். அதன்போது பிராந்திய ரீதியான நிகழ்வுகள் மற்றும் தீர்மானங்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதெனவும் முடிவானது. இரு நாட்டுக்குமான உறவு மேற்காசியாவில் நிகழும் பதற்றங்களை தணிக்க உதவியதென சல்மன் தெரிவித்தார். இந்த சந்திப்பில் செச்சென் குடியரசின் தலைவரான ரம்ஜான் கதிரோவ் பங்கெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இரு நாட்டுத் தலைவர்களும் ஹமாஸ், இஸ்ரேலியப் போரை பற்றியும் மோதலை முடிவுக்கு கொண்டுவருவது பற்றியும் உரையாடினர். குறிப்பாக ஏனைய நாடுகளின் கிளர்ச்சியாளர்களது மோதல் தொடர்பிலும் உரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது. அதேநேரம் இரு தலைவர்களும் ஓபெக் பிளஸ் தொடர்பில் உரையாடியதாகவும் உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதி தொடர்பிலும் சில முடிவுகளை எடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அதே நேரம் ஈரானிய ஜனாதிபதி ரைசின் மொஸ்கோ விஜயம் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. காரணம் இஸ்ரேல், ஹமாஸ் போரை முடிவுக்கு கொண்டுவருவது பற்றி இரு தலைவர்களும் உரையாடியுள்ளனர். அப்போது ரஷ்ய ஜனாதிபதி ஹமாஸ், இஸ்ரேலியப் போரையும் உக்ரைன், ரஷ்ய மோதலையும் முடிவுக்கு கொண்டுவருவதற்கு அனைத்துத் தலைவர்களும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். இச்சந்திப்பில் ஈரானிய ஜனாதிபதி காஸாவில் கொல்லப்பட்ட மக்களுக்கு இரங்கல் தொரிவித்தது டன் இரு தலைவர்களும் ஹமாஸ், இஸ்ரேலியப் போர் தொடர்பில் நீண்ட நேரம் உரையாடியதாக கிரெம்ளின் தகவல் வெளியிட்டுள்ளது. இத்தகைய சந்திப்புகளுக்கு பின்னாலுள்ள அரசியல் பற்றிய புரிதல் அவசியமானது. அவற்றை விரிவாக நோக்குவது பொருத்தமானதாகும்.

ஒன்று, ரஷ்யாவும் அதன் ஜனாதிபதியும் தனிமைப்படுத்தப்படுவதாக மேற்குலகத் தலைவர்களும் ஊடகங்களும் உரையாடிவருகின்றனர். ரஷ்ய ஜனாதிபதியினது மேற்காசியா நோக்கிய விஜயம் பலதடவை நிகழ்ந்துள்ளது. புவியியல் ரீதியான தொடர்பும் எண்ணெய் வளமும் ரஷ்யாவை சூழவுள்ள இஸ்லாமிய குடியரசுகளின் கட்டமைப்பும் நெருக்கமான உறவை கட்டமைத்ததோடு மேற்குலகத்தின் சுரண்டலும் ஆக்கிரமிப்பும் இஸ்லாத்துக் எதிரான கொள்கையும் ரஷ்ய, மேற்காசிய உறவை பலப்படுத்துகிறதாகவே தெரிகிறது. இஸ்லாமிய நாகரிகத்துக்கு எதிராக மேற்குலக நாகரிகத்தின் ஆக்கிரமிப்பு முழுமையாக சீனா, ரஷ்யா சார்பான உறவை வளர்ச்சியடையச் செய்துவருகிறது. மேற்குலகத்தின் போலி ஜனநாயமும், தாராளவாதமும் முழுமையாக காஸா போரில் வெளிப்பட்டுள்ளது. அதனை சரிவரப் பயன்படுத்தும் ரஷ்யாவின் அணுகுமுறை தனிமைப்படுத்தலிலிருந்து ரஷ்யாவை விடுவிக்க உதவுகிறது. மேற்குலகத்தை முழுமையாக நிராகரிக்கும் ரஷ்யாவினது தலைமை, கீழைத்தேச நாடுகளுடனான உறவை மையப்படுத்தி எழுச்சி பெற்றுவருகிறது. பொருளாதார அடிப்படைகளை மட்டுமல்லாது இராணுவ அரசியல் பரிமாணத்தையும் கீழைத்தேச நாடுகளுடனான நட்புறவினால் ரஷ்யா கட்டிவளர்த்து வருகிறது. கடந்த இரு முக்கிய மாநாடுகளை தவிர்த்த புடின், அதிக விமர்சனத்துக்கும் விவாதத்துக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார். குறிப்பாக குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணைக்கு பின் அவர் மீதான விமர்சனம் அதிகரித்திருந்தது. ஆனால் இஸ்ரேலிய, ஹமாஸ் போருக்கு பின்னர் அவை அனைத்தையும் தகர்த்ததுடன் இஸ்ரேலிய தாக்குதலுக்கும் காசா மக்கள் படுகொலைசெய்யப்படுமளவுக்கும் நிகராக ரஷ்யா உக்ரைன் மீது தாக்குதலை மேற்கொள்ளவில்லை என்ற தகவல் உலகளாவிய ரீதியில் வலுவடைந்துள்ளது. அது மட்டுமல்ல ரஷ்ய ஜனாதிபதி மீது குற்றம்சாட்டிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளுமே காசா மீதான போரை நிகழ்த்துகின்றன என்பது அதன் போலித் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. காசா மீதான போர் புடினதும் ரஷ்யாவினதும் தனிமையை தகர்த்ததுடன் உலக நீதியின் நியாயம் எதுவென்பதையும் உலகத்துக்கு தந்துள்ளது.

இரண்டு, ரஷ்யா உக்ரைன் போரில் வெற்றிகரமான முகத்தையே ரஷ்ய ஜனாதிபதி அடைந்துள்ளதாகவே தெரிகிறது. ஹமாஸ், இஸ்ரேலிய போர் உக்ரைன் மீதான மேற்குலகத்தின் கவனத்தை முழுமையாக மட்டுப்படுத்திவிட்டதாகவே தெரிகிறது. இராணுவ ரீதியில் மட்டுமல்ல பொருளாதார ஒத்துழைப்பிலும் அரசியல் பலத்திலும் மேற்கும் நேட்டோவும் உக்ரைனை கைவிட்டதாகவே தெரிகிறது. இது புடினது உத்திக்கு கிடைத்துள்ள வெற்றியாகவே தெரிகிறது. சில ஆய்வாளர்கள் ஹமாஸ், இஸ்ரேல் போரை புடினே தொடக்கியதாகவும் உரையாடியுள்ளனர். அதற்கான ஊகங்களே அன்றி அதனை நிறுவுவதற்கான தகவல்கள் மிக அரிதானதே. ஆனால் இந்தப் போர் புடினது இருப்பையும் தனிமைப்படுத்தலையும் மட்டுமல்ல ரஷ்யாவின் புவிசார் அரசியலையும் பாதுகாத்துள்ளது. உக்ரைன் போரும் ஹமாஸ், இஸ்ரேல் போரும் மேற்கு கிழக்கு விரிசலுக்கானது மட்டுமல்ல, ஐரோப்பாவும் அமெரிக்காவும் போர்களை கீழைத் தேசத்திற்குள் நிகழ்த்துவதில் இருபத்தியோராம் நூற்றாண்டை வெற்றிகரமானதாக மாற்றியுள்ளனர். ஐரோப்பா மீதான இரு உலக போர்கள் ஏற்படுத்திய நெருக்கடியை தவிர்ப்பதற்கு மேற்கு முயன்றது மட்டுமல்லாது, அதில் வெற்றிகரமான அடைவை சந்தித்துமுள்ளது. தற்போது, ஐரோப்பா தனக்கு ஏற்பட்ட அனைத்து நெருக்கடியிலிருந்தும் மீளமைத்துக் கொள்ள முயலுகிறது. மேற்கு ஐரோப்பாவுக்கு நிகழ வேண்டிய போரை, கிழக்கு ஐரோப்பாவுக்குள் ஐரோ ஆசிய நாடுகள் உக்ரைன், ரஷ்யாவுக்குள் தொடக்கியது மட்டுமல்லாது அடுத்த கட்டப் போரை ஆசியாவுக்குள் தள்ளியுள்ளது. அத்தகைய போரை நிலையானதாக்கவும் அழிவுகளை ஆசியாவுக்குள் ஏற்படுத்தவும் அதன் நேரடி விளைவுகளை, ஐரோப்ப, அமெரிக்க கண்டங்கள் எதிர் கொள்ளாமல் தவிர்க்கவும் மேற்கு போராடியதுடன் அதில் வெற்றியையும் எட்டியுள்ளதாகவே தெரிகிறது. ஆனால் ஹமாஸ், இஸ்ரேலிய போரின் நீடிப்பும் ஹமாஸின் பலத்திலுமே மேற்குலகத்திற்கான நெருக்கடி தங்கியுள்ளது. அதனை புடின் நன்கு உணர்ந்துள்ளது போலவே தெரிகிறது. ஏனெனில் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய தீவிரவாதத்தை கொண்டுள்ள ஆயுத அமைப்புகளுக்கான ஆயுத விநியோகத்தை ரஷ்யா மேற்கொள்வதாக தகவல்கள் உண்டு. அதற்கான நாடுகளுடன் ரஷ்யா நெருக்கமான உறவைக் கொண்டுள்ளது. தற்போது புடினது மேற்காசிய விஜயமும், ஈரான் ஜனாதிபதியின் மொஸ்கோ பயணமும் அதனையே உறுதிப்படுத்துகின்றன. சிரியா மீதான இஸ்ரேலியத் தாக்குதல் சார்ந்து புடினது எச்சரிக்கைகள் அதிகரித்துள்ளன. காரணம் சிரியாவில் ரஷ்யப் படைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன் ரஷ்யாவின் கடற்படை முகாமும் காணப்படுகிறது. மேற்குலகத்தின் அரபுவசந்தத்தின் முடிவு சாத்தியமான நாடும் சிரியா என்பது நினைவு கொள்ளத்தக்கது.

எனவே ரஷ்ய ஜனாதிபதியின் இரு போர்களும் மேற்குக்கு நெருக்கடியானதாக மாறியுள்ளது என்பது மட்டுமல்லாது உக்ரைன், இஸ்ரேலிய இழப்புக்களும் துயரங்களும் மேற்குக்கு இலாபமானதாகவே தெரிகிறது. அதாவது மேற்குலகத்தின் போரை உக்ரைன் எதிர் கொண்டது போல் தற்போது இஸ்ரேல் எதிர்கொண்டு வருகிறது. ஆனால் ஜெலன்ஸ்கி போன்று அரசியல் உத்தியற்றவர் அல்ல நெதன்யாகு என்பதையும் யூதர்கள் இலகுவில் போரை வெற்றியின்றி முடிவுக்கு கொண்டுவர மாட்டார்கள் என்பதையும் உணர வேண்டும். அதேநேரம் ஜெலன்ஸ்கியின் மூதாதையரும் யூதர்கள் என்ற தகவல் உண்டு என்பதையும் நினைவு கொள்வது பொருத்தமானது. இன்றைய போரியல் யுகம் தகவல் தொழில்நுட்பத்துக்குள்ளால் நிகழ்வதாகும். இதில் யூதர்கள் இஸ்லாமியர்கள் என்ற வேறுபாட்டைக் காட்டிலும் தகவல் தொழில்நுட்பத்தின் திறன் யாரிடம் உண்டென்பதே போரியலின் வெற்றியாகும். யூதர்கள் போன்று உயிராயுதத்தை இஸ்லாமியர்கள் முன்னெடுத்தாலும் தகவல் தொழில்நுட்பத்தில் யூதர்களுக்கு இணையாக இஸ்லாமியர்கள் மாறிவிட்டனர். அயன்டோமின் சிதைவுக்கு ஹமாஸின் தகவல்தொழில் நுட்பத்தின் வளர்ச்சியே காரணமாகும். இது தனித்து ஹமாஸ் போராளிகளால் மட்டும் சாத்தியமாகவில்லை. ஈரான், துருக்கி, மலேசியா போன்ற இஸ்லாமிய நாடுகளது ஒத்துழைப்பிலேயே தங்கியிருந்தது. அப்படியாயின் இஸ்லாமிய உலகம் தழுவிய போராக ஹமாஸ் – இஸ்ரேலிய போர் மாறியுள்ளது. வெளிப்படையாகப் பார்த்தால் ஹமாஸ், இஸ்ரேலியப் போராக அமைந்தாலும் அடிப்படையில் இஸ்லாமிய எதிர் மேற்குலகப் போராகவே நிகழ்கிறது.

# நீங்கள் நோயாளியா? சுகதேகியா? உடம்பின் வியாதிகளை வெளிப்படுத்தும் ஆரோக்கிய ரேகை!

ஆரோக்கிய ரேகை குறித்து இந்தியாவிலும் சரி, மேலை நாடுகளிலும் சரி, கைரேகை ஆய்வாளர்கள் அதிகமாக ஆராய்ந்ததில்லை. “கைரோ” என்ற ஆங்கில கைரேகை நிபுணர் ஆரோக்கிய ரேகை கையில் இல்லாதிருப்பதே நல்லது என அபிப்பிராயப்படுகிறார். ஆனால் பெரும்பாலான கைரேகை நிபுணர்கள் கையின் முக்கிய ஏழு ரேகைகளுள் ஆரோக்கிய ரேகையும் ஒன்றென வலியுறுத்தியுள்ளனர்.

ஆரோக்கிய ரேகை பொதுவாக ஆயுள் ரேகையின் பக்கத்தில் சந்திர மேட்டிலிருந்தோ அல்லது ஆயுள் ரேகையிலிருந்தோ உற்பத்தியாகி சந்திரமேட்டின் பரப்பினூடாகவும் செவ்வாய்ச் சமவெளியினூடாகவும் ஊடறுத்து புதன் மேட்டை நோக்கியும் சென்றிருக்கும். இந்த ரேகையை எல்லோரது கைகளிலும் காண்பதரிது. உடலை வருத்திக் கடுமையாக உழைப்பவர்கள், கடினமான மனோநிலை கொண்டவர்கள், மரப்பலகை போன்று சொரசொரப்பான கையைக் கொண்டவர்கள் ஆகியோர் கைகளில் இந்த ரேகையைக் காண்பதரிது. வெள்ளையும் சொள்ளையுமாய்ச் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்கள், உடுத்த உடுப்பில் ஊத்தை படாமல் மூளையை நம்பிக் காகிதங்களில் உழைப்பவர்கள், படாடோபமான, நாகரிகமான வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள் கைகளில் தான் இந்தரேகையை பெரும்பாலும் காணமுடியும்.

உடலிலுள்ள வியாதிகளை துல்லியமாய்த் தெரிவிக்கும் இந்த ரேகை கைகளில் இல்லாதிருப்பதே நல்லதென கைரேகைக் கலையின் பிதாமகர் என வர்ணிக்கப்படும் கூம்ட் ஜெர்மெயின் என்ற ஞானி கூட எழுதியிருக்கிறார். ஒருவரின் உடலின் ஆரோக்கியம் எந்நிலையில் உள்ளதென்பதைத் தெளிவாக எடுத்துரைக்கும் இந்த ரேகை, ஆயுள் ரேகையோடு சம்பந்தப்படாமலிருந்தால் தீர்க்காயுளைக் குறிப்பதாகும்.

ஆங்கில கைரேகை நிபுணர் கைரோ முதற் கொண்டு அவரைப் பின்பற்றி அவரது நூல்களைக் கற்றுணர்ந்து கீழ்த்திசை நாடுகளில் கைரேகை பார்ப்பதை தொழிலாகக் கொண்டுள்ளோரும் ஆரோக்கிய ரேகையானது ஆயுள்ரேகையில் எந்தக் காலகட்டத்தில் உற்பத்தியாகிறதோ, அந்தக் காலத்தில் அவ்விதம் அமைந்த நபரின் ஆயுள் முடிவை அது குறிப்பதாகத் தெரிவிக்கின்றனர். ஆனால் இது அனுபவத்துக்கு ஒத்துவரவில்லை. ஆரோக்கியரேகை ஆயுள்ரேகையில் உற்பத்தியாகும் காலகட்டம் கடந்தும் உயிர்வாழும் பலரை இன்றும் எனது அனுபவத்தில் கண்டுள்ளேன்.

சந்திரமேட்டின் அடியிலிருந்து ஆரோக்கிய ரேகை உற்பத்தியாகி குற்றங்குறைகளில்லாமல், தங்கு தடையின்றி புதன் மேட்டை நோக்கிப் போயிருந்தால் (A) அத்தகையவரின் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும். நீண்ட ஆயுளையும் அது குறிக்கும். அவ்விதமே சந்திரமேட்டின் அடியிலிருந்து உற்பத்தியான நிலையில் இரண்டு ஆரோக்கிய ரேகைகள் காணப்பட்டால் இறப்பு வரை குன்றாத நல்ல தேகாரோக்கியத்துடன் பலம் வாய்ந்த தேக அமைப்பையும் அது குறித்தும். மல்யுத்தம், பாரம் தூக்குதல் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடுகிறவர்களின் கைகளில் இத்தகைய இரு ஆரோக்கிய ரேகைகள் இருக்கும். முழுமையாய் அமைந்த ஆரோக்கிய ரேகையோடு புத்திரேகையும் செவ்வாய் மேட்டில் வளைவின்றிக் குறுக்கே நீண்டு போயிருந்தால் நல்ல ஞாபக சக்தியை அதுகுறிக்கும். மூற்றும் தளர்ந்து பாயும் படுக்கையுமான நிலையிலும் கூட, எவரையும் இனங்கண்டு பேசும் வன்மை அவரிடமிருக்கும். முக்கியமான பழைய சங்கதிகளை மலரும் நினைவுகளாக மீட்டுப் பேசிக் கொண்டிருப்பார்.



ஆரோக்கிய ரேகையானது சந்திரமேட்டின் குறுக்காக வளைந்து திரும்பியிருக்கக் காணப்பட்டால் (B) அதனைப் பிரயாண ரேகை என்பர். அவ்விதம் அமைந்தவர் கடல் கடந்து பல பயணங்கள் போவார். ஆரோக்கிய ரேகை புதன் மேட்டை நோக்கி வளைந்து வளைந்து போயிருந்தால் (C) வாந்தியும் தலைச்சுற்றலும் இயல்பாகவேயுள்ள பித்த தேகத்தைக் குறிக்கும்.

நெடுந்தூர ரயில், பஸ் பயணங்களில் இவர்கள் படும் அவஸ்தை பார்க்கச் சகிக்க முடியாமலிருக்கும். ஏற்ற வைத்தியங்கள் செய்யப்படாவிட்டால் கால கதியில் பித்த அதிகரிப்பால் மஞ்சட் காமாலை, சித்தப் பிரமை போன்ற நோய்களுக்கு ஆளாக நேரும்.

ஆரோக்கிய ரேகையானது இவ்விதம் வளைந்து வளைந்து சென்று, விதிரேகையும் பல வளைவு நெளிவுகளுடன் சென்றிருந்து, கையின் எல்லா விரல்களிலும் இரண்டாவது அங்குலாஸ்தி (கணு) மற்ற அங்குலாஸ்திகளைவிட நீளமாயிருக்கக் காணப்பட்டால், அத்தகையவரின் பற்களெல்லாம் சிறுவயதிலிருந்தே சொத்தையாகிச் சிதைந்து கருமையடைந்து விகாரமாய்க் காணப்படும். இளம் வயதிலேயே பற்கள் சிதைந்து பொக்கை வாய் அடைந்தவர்களுக்கே இந்த ரேகைக்குறி இருக்கும். ஒவ்வொரு விரலிலும் மூன்று கணுக்கள் காணப்படும். இக்கணுக்களை சோதிட பாஷையில் 'அங்குலாஸ்தி' எனக் குறிப்பிடுவர். (படத்தில் மூன்று அங்குலாஸ்திகளையும் அவதானிக்கவும்).

ஒரு கையிலுள்ள முக்கிய ரேகைகளாக ஆயுள். இருதய, புத்தி ரேகைகள் கருதப்படுகின்றன. இவை தடித்து, ஒடுங்கி, ஆழப்பதிந்து காணப்பட்டாலேயே இவற்றிற்குச் சிறப்பான பலன் சொல்லப்படும். இவைகளை விட விதிரேகை தடிப்பின்றி மெல்லிய உருவ அமைப்பில் ஆழப்பதிந்து காணப்பட்டாலேயே அதற்கும் சிறப்பான பலன் சொல்லப்படும். அப்படியின்றி மேற்படி ரேகைகளெல்லாம் பதிந்தும் பதியாமலும் குற்றங் குறைகளோடு காணப்பட்டு, ஆரோக்கியரேகையும் பட்டும் படாமலும் அழிந்த கோலத்தில் காணப்பட்டால், அப்படி அமைந்தவர் வெகு விரைவில் பாரிசவாதம் வந்து படுக்கையில் விழப் போவதை அது குறிக்கும்.

ஆரோக்கிய ரேகையில் ஆங்காங்கே சிவப்புப் புள்ளிகள் காணப்பட்டால், வேகமாக ஓடினாலோ, மாடிப்படிகள் ஏறினாலோ இருதயம் நிற்கப்போவது போல் படபட வென்று வேகமாக அடித்துக் கொள்ளும் வியாதியை குறிக்கும். அதனால் மரண பயமுண்டாகும். அதேவேளை ஆரோக்கிய ரேகை ஆயுள் ரேகையோடு தொடர்புபட்டு அதில் சிவப்பு நீல நிறப் புள்ளிகள் காணப்பட்டால் இருதய நோயுண்டாவதை அது குறிக்கும். ஆரோக்கிய ரேகையில் நட்சத்திரக் குறி காணப்படுவது (D) புத்திரபாக்கியமில்லாத மலட்டுத் தன்மையைக் குறிப்பதாகும். ஆயுள்ரேகையிலிருந்து ஆரோக்கியரேகை உற்பத்தியாகி புத்திர ரேகையை அல்லது இருதய ரேகையை அது தொட்டுக்கொண்டு நின்றிருந்தால் உடலின் நரம்புத் தொகுதி பலவீனமடைந்து வலிப்பு நோய் உண்டாவதை அது குறிக்கும். பெரும்பாலும் காக்கா வலிப்புக்காரர்களுக்கு இத்தகைய ரேகைக் குறி இருக்கும். ஆரோக்கிய ரேகையில் மஞ்சள் நிறம் காணப்படுவது உடலில் பற்பல வியாதிகள் அணுகுவதன் அறிகுறி!

ஆரோக்கியரேகை நீண்டு புத்திரேகையைத் தொடும்போது சூலக் குறியுடன் காணப்பட்டால் (E) அப்படி அமைந்தவர் மனோவசியம், மாந்திரீகம், சோதிடம், வான சாஸ்திரம் போன்ற ஏதாவதொரு கலையில் சிறந்து விளங்கி மற்றவர்களுக்கு பிரமிப்பூட்டுவார். தெய்வத் தலங்களில் அல்லது சமயாசமயங்களில் அருள் வந்து வாக்குச் சொல்வது இவர்கள்தான். காலதேச வர்த்தமானங்களை உத்தேசித்து இவர்கள் கூறும் நிமித்தங்கள் பலிக்கும்.

அதேவேளை, ஆரோக்கிய ஆயுள். புத்தி ரேகைகள் இணைந்து சிறியதொரு முக்கோணமாக காணப்படின் சோதிட ஆராய்ச்சியில் மிகுந்த ஆர்வமும் அந்த வழியில் தெய்வ அனுக்கிரகமும் உண்டாகும். இவர்கள் சூட்சுமமான ஞான சிருஷ்டி மூலம் தம்மை நாடி வருவோரின் முக்காலங்களையும் உரைப்பர். அதைவிட இம் முக்கோணக்குறிக்குள் ஒரு நட்சத்திரக் குறியும் காணப்பட்டால் கண் பார்வைக் குறைவையும் மாலைக் கண் நோயையும் குறிப்பதாகும்!

ஆயுள் ரேகை துண்டு துண்டாகவோ, சங்கிலி போன்றோ அமைந்திருந்து ஆரோக்கிய ரேகையும் ஆழப்பதிந்து காணப்பட்டால் அத்தகையவர்களின் வாழ்நாளெல்லாம் நோயும் நொடியுமாக, மருந்தும் கையுமாகவே கழியும். புத்தி இருதய ரேகைகளுக்கு மத்தியில் ஆரோக்கிய ரேகையில் தீவுக்குறி காணப்பட்டால் (F) அது குறிப்பிடும் காலகட்டத்தில் தொண்டை அல்லது நாசி சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு வெகுவாய்ப் பாதிக்குமென்று பொருள். ஆரோக்கிய ரேகையில் தீவுக்குறி புத்திரேகையின் மேலும் கீழும் அமைந்திருக்கக் காணப்பட்டால் (G) மார்பில் அல்லது ஈரலில் நோயுண்டாகி உடல் நலத்தைப் பெரிதும் பாதிக்கும். அப்படி ரேகைக்குறி அமைந்தவருக்கு விரல் நகங்களும் குழல்போல் அமைந்திருந்தால் இந்த நோய்கள் வருவதை அது உறுதிப்படுத்தும்.

**அருள் ரேகை**

ஆரோக்கிய ரேகை செவ்வாய் மேட்டுக்கு கீழே சந்திரமேட்டில் சக்கரம் போல அல்லது அரைவட்டமாக அமைந்திருந்தால் அதனை அருள் ரேகை என்பர். அதனை ஞான சிருஷ்டி ரேகை என்றும் சொல்வர். பின்னே வரப்போவதை முன்னே உரைத்தலை தெய்வத்தின் அருட்கடாட்சம் என்றும் ஞான திருஷ்டி என்றும் சொல்கிறோம்.

முற்பிறவியில் புண்ணிய கைங்கரியங்களைச் செய்தவர்கள் அதற்குச் சம்பாவனையாக இப்பிறப்பில் நல்ல ஸ்திதியில் பிறக்கிறார்கள் என்றும் வாழ்வில் உன்னத நிலையை அடைகிறார்கள் என்றும் அதன் அறிகுறியாக சங்கு சக்கரக் குறிகள் அவர்கள் கைகளில் காணப்படுமென்றும் முந்திய கட்டுரையொன்றில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த சங்கு சக்கரக் குறியோடு இந்த அருள் ரேகையையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒருவரின் கையில் சந்திர மேட்டில் அருள் ரேகை இருந்தால் தனக்கோ தன்னைச் சேர்ந்தவர்களுக்கோ பின்னால் வரப்போகும் நன்மை, தீமைகளை அப்படியே கண்ணால் கண்டது போல் முன்னால் ஒப்புவிக்கும் அபூர்வ ஆற்றலைப் பெற்றிருந்து அதனை ஆச்சரியத்துடன் அனுபவிப்பர்!

ஆனால், ஏன் எதற்காக தன்னில் இவ்விதம் நிகழ்கிறது என்ற காரணத்தை அறியவோ அதனை விருத்தி செய்யவோ முயல மாட்டார். அபிவிருத்தி செய்யும் மார்க்கத்தையும் கண்டறிய மாட்டார். ஆனால் அருள் ரேகையோடு குரு மேட்டில் குரு வளையமும் அமையப் பெற்றவர். (ர்) தனக்குள்ள ஞான திருஷ்டி ஏன்? எப்படி. எதற்கு? யாரால் வந்தது என்பதை அறிந்து பக்தி வழியில் மனதைத் திருப்பி வேதாந்தியாக மாறி விடுவார். நாட்டிற்கும் மக்களுக்கும் பயன் படக் கூடிய வகையில் தமக்குக் கிடைத்த இந்த அபூர்வ ரேகையின் சக்தியைப் பாவிப்பார். ஆன்மிக வழியில் ஞான மார்க்கத்தில் மக்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு ஞானமும் யோகமும் பயிற்றுவிப்பார். வருந்தி வாழ்க்கைச் சுமை சுமக்கும் மக்களைத் தம்மிடம் வரவழைத்து ஆறுதல் படுத்துவார். இவரைச் சுற்றி எந்நேரமும் அடியார்கள் கூட்டமிருக்கும்.

அந்த வகையில் இலங்கையில் அக்காலத்தில் வாழ்ந்த யோகர் சுவாமிகள், சித்தானைக்குட்டிச் சுவாமிகள் போன்றோர் அருள் ரேகை கையில் அமைந்து சித்துகள் விளையாடியதாகச் சொல்லப்படுகிறது. இவ்விதம் சுவாமிகள் மாத்திரமல்ல, கையில் அருள்ரேகை அமைந்துள்ள இல்லறவாசிகளும் உள்ளனர். அவர்களது நடவடிக்கைகளைக் கவனித்தால் இனம் கண்டு கொள்ளலாம். மனைவி மக்களோடு வாழ்ந்தாலும் தாமரையிலைத் தண்ணீர் போல குடும்பப்பற்றற்று

## கைரேகை ஆராய்ச்சி

சாமிக்கோலத்தில் வாழ்வர். இதன் மூலம் புலப்படுவது யாதெனில் அருள்ரேகையும் குரு வளையமும் கையில் பூரணமாக அமையப் பெற்றவர் ஐம்புலன்களுக்கும் எட்டாத எதிர்கால சம்பவங்களை சாமானியமாய் வெளிப்படுத்தி விடுவர் என்பதாகும். அருள்ரேகையின் உற்பத்தியில் தீவுக்குறி காணப்பட்டால் கனவின் மூலம் அந்நபருக்கு நாளை நடக்கப் போவது அறிவிக்கப்படும்! அருள்ரேகை எல்லோருக்கும் வந்தமைவதில்லை.

கடவுளைத் தியானிப்போருக்கெல்லாம் அருளும் தத்துவ வேதாந்தங்களில் திளைப்போருக்கெல்லாம் ஞானமும் உண்டாகுமென்று சொல்வதற்கில்லை. அருள்ரேகையுடையவர் இறைவனைத் தியானித்த மாத்திரத்தில் அருள்விளங்கும். நியமம் தவறாது நிஷ்டையில் இருந்தால் ஞானோதயம் தானே உண்டாகும்! அருள்ரேகையுடையவர் சம்சார சாகரத்திலிருந்து மீண்டு சிற்றின்ப போகத்தினை நீக்கி யோக சாதனை செய்தால் சர்வசித்திகளும் கைவரப்பெறுமென கைரேகை சாத்திர நூல்கள் கூறுகின்றன.

திருவோணம்

## பேய் மழை; பிசாசு வெள்ளம்... (08ஆம் பக்கத் தொடர்)

சென்னையின் முக்கிய இடங்கள், கோயம்பேடு சந்தை, பஸ் நிறுத்தும் நிலையம், விமான நிலையம் என்பன, ஒரு காலத்தில் ஏரிகளாக இருந்த இடங்கள். ஏரிகள், குளங்கள் இருந்த இடங்களில்தான் பல மாடிக் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே பெய்யும் மழைநீர் தாழ்வான இந்த முன்னாள் குளங்களை நோக்கித்தானே செல்லும்! வெள்ளத்தில் மூழ்கிய விமான நிலையம் 300க்கும் மேற்பட்ட விமானப் பயணங்களை இரத்துச் செய்தது. 1,500க்கும் மேற்பட்ட பயணிகள் விமான நிலையத்தில் தவித்துப் போயினர். ரயில் தண்டவாளங்கள் மூழ்கியதால் சகல ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டன. பஸ் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பித்துப் போனது. பள்ளிகள் மூடப்பட்டன. மக்கள் வீடுகளுக்குள் முடங்க, வேளச்சேரி, தாம்பரம், வடசென்னை, மடிப்பாக்கம், செங்கல்பட்டு, சதாசிவம் நகர், அடையார், முடிச்சூர், மேடவாக்கம், திருவள்ளூர், கீழ்க்கட்டளை போன்ற இடங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. முழங்கால் முதல் கழுத்துவரை தெருக்களையும் குடியிருப்புகளையும், தொழிலகங்களையும் வெள்ளம் சூழ்ந்தது. தொலைபேசி வசதி, இணைய வசதி, மின்சார மற்றும் தண்ணீர் வசதி பாதிக்கப்பட்டன. பல வீடுகளில் மெழுகுவர்த்தி கூட இருந்திருக்காது. இருளிலும், கொசுத் தொல்லையிலும் அவர்கள் இரவுகளை கழிக்க வேண்டியதாயிற்று. அனைத்து கடைகளும் மூடப்பட்டதால் உணவு விநியோகம் தடைப்பட்டது.

இது எவ்வளவு பயங்கரம் என்பது அனுபவித்தால்தான் தெரியும்.

2015ஆம் ஆண்டும் டிசம்பர் மாதம் கனமழை பெய்தபோதும் சென்னையில் பயங்கர வெள்ளம் ஏற்பட்டது. அப்போது புயல் இல்லை. மேக வெடிப்பை ஒத்த ஒரு மழை. அது தொடர்பாக முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்தாலும் அன்றைய அம்மா – சசிகலா அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அன்றைய சூழலில் அம்மாவிடமிருந்து அறிவித்தலும், கட்டளையும் வராமல் அதிகாரிகளும் சரி அமைச்சர்களும் சரி செயல்பட மாட்டார்கள். அம்மாவிடம் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியிருக்கும் என்ற பயம். இதேசமயம் அந்த மழையால் சென்னைக்கு அருகில் அமைந்துள்ள செம்பரம்பாக்கம் ஏரி அபாய கொள்ளளவை எட்டத் தொடங்கியது. நீரைப் படிப்படியாக திறந்துவிடத் தீர்மானித்த அதிகாரிகள் ஜெயலலிதாவுடன் தொடர்புகொள்ள பல தடவைகள் முயற்சித்தும் அது சாத்தியப்படவில்லை. இறுதியாக அவர்களே நீரைத் திறந்து விட்டார்கள். முன்னறிவித்தலின்றி நீர் திறந்துவிடப்பட்டதால் அது சென்னையை வெள்ளக் காடாக்கியது. அன்றைய அரசு ஐந்து நாட்களாக பாராமுகம் காட்டியதால்தான், மக்களும், கட்சிகளும், தொண்டு நிறுவனங்களும் உடனடியாகக் களத்துக்கு வரவேண்டியதாயிற்று. இப்போது மக்களுக்கு உடனடியாக போய்ச் சேர வேண்டும் என அறிக்கைகள் விடுக்கிறார் அதே சின்னம்மா சசிகலா!

எடப்பாடி பழனிச்சாமி தி.மு.க.அரசை விடியா அரசு என்றே அழைப்பது வழக்கம். அவர் அமைச்சராக இருந்த காலத்தில்தான் பெரு வெள்ளம் ஏற்பட்டு 550 பேர் உயிரிழந்தனர். வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அன்றைய அரசு அந்த வெள்ளத்தை முறையாகக் கையாளவே இல்லை. அவற்றை எல்லாம் மறந்துவிட்டு, இடுப்பு வரை வெள்ளம் நிற்கும் போது, மின்சாரம் இல்லை, உணவு, பால் இல்லை, விடியா அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டிருக்கிறார். இவை வெள்ள அரசியல் என்றுதான் அழைக்க வேண்டும். தமிழக மக்களுக்கு உதவி தேவை என எடப்பாடி குரல் எழுப்பியதாகத் தெரியவில்லை!

சென்னை மாநகரசபை பாதாள சாக்கடைகளையும், வடிகால்களையும் முறையாக பராமரிக்கவில்லை என்று குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. அதே சமயம் இதே நபர்கள்தான் கொஞ்சமும் சமூக பொறுப்பின்றி குப்பைகளை, பிளாஸ்டிக் கழிவுகளை கண்ட இடங்களில் வீசி எறிகிறார்கள் என்பதை இவர்கள் உணர்வதில்லை. தற்போது, 18 பேரை பலிகொண்ட இந்த வெள்ளம் வீதிகளில் இருந்து வடிந்து கொண்டிருக்கிறது. புயல் ஆந்திராவை நோக்கி மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தாலும் கடல் மட்டம் ஆக்ரோஷமாகவும் உயர்ந்தும் காணப்பட்டதாலும் கடல் மழை நீரை உள்வாங்காததும், நீர் விரைவில் வடியாததற்கு காரணமாக சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது குடியிருப்பு பகுதிகளில் தேங்கி நிற்கும் நீர்தான் மோட்டார் பம்ப்புகள் மூலம் வெளியேற்றப்பட வேண்டும். ஏராளமான மோட்டார் சைக்கிள்களும் கார்களும் மழை நீரில் மூழ்கி செயல் இழந்துள்ளன. 2015ஆம் ஆண்டு வெள்ளத்தோடு ஒப்பிடும்போது அரசும் அதிகாரிகளும் விரைந்து செயல்படுவதாகவே தெரிகிறது. அதே சமயம் உணவு, தண்ணீர் மற்றும் பால் என்பன சில குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் மத்திய அமைச்சர் அமித்ஷாவுடன் பேசி வெள்ள நிவாரண நிதியாக 500 கோடி கேட்டுள்ளார். அதே சமயம் மத்திய அமைச்சர் ராஜ்நாத்சிங், சென்னை வந்து பாதிப்புகளை நேரடியாக ஆய்வு செய்யவுள்ளதாகவும் தெரிகிறது. இவை வழமையானவை. எவ்வளவுதான் நீர்வடிகால்களை திறம்பட செயற்பாட்டில் வைத்திருந்தாலும் ஒரு புயல் ஏற்படுத்தக் கூடிய மழை வெள்ளம் நகரை வெள்ளக் காடாகத்தான் செய்யும். 2015 வெள்ளம் மனிதர்களின் கவனக்குறைவால் ஏற்படுத்தப்பட்ட வெள்ளம். இந்த வெள்ளமோ தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, சென்னைவாசிகள் பாடங்களும் கற்றுக் கொள்ள வைத்திருக்கும் வெள்ளமாகும்.

பல்கலைக்கழக வைத்தியசாலை
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக

**பதவி வெற்றிடம்**

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

முழு நேரம் - நிரந்தர அடிப்படை
- மருத்துவ அதிகாரி பதவி
- கதிர்ப்படப் பதிவாளர் பதவி (நோயறிதல்)
- ஒலிசார் தொழில்நுட்பவியலாளர்
- தொழில்நுட்பவியலாளர் (அறுவை சிகிச்சை அரங்கம்)
- வாகன ஓட்டுனர்

முழு நேரம் - ஒப்பந்த அடிப்படை
- ஆலோசகர் - இதயவியல்

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர" என்ற முகவரிக்கு 2023.12.27க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.(www.kdu.ac.lk) / தொ.பேசி இல. 011-2044555.

www.kdu.ac.lk

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

கமத்தொழில் அமைச்சு

SAPP

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

**பெறுகை அறிவித்தல்**

**கிராமிய நிதி ஆலோசகர் மற்றும் பிராந்திய திட்ட ஒருங்கிணைப்பாளர்களின் தெரிவு**

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டமானது (SAPP) கமத்தொழில் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுவதோடு அதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) கூட்டிணைந்து நிதி அளிக்கின்றன. இலங்கையின் சிறு அளவிலான உரிமையாளர்களின் வறுமையை குறைப்பது மற்றும் போட்டித்தன்மைக்கு பங்களிப்புச் செய்வதற்கு SAPP வடிவமைக்கப்பட்டுள்ளது. வர்த்தகம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முறைமைகளில் 57,500 சிறு அளவிலான வீட்டுரிமையாளர்களின் வருமானம் மற்றும் உணவுத் தரத்தை நிலையான முறையில் அதிகரிக்கும் நோக்குடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கப்பட்டது. அரச, தனியார் மற்றும் உற்பத்தியாளர் பங்குடைமைகள் (4Ps) மூலம் கிராமிய அபிவிருத்தி எனும் தேசிய கொள்கை கட்டமைப்பின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் (GOSL) முன்னுரிமைகளை அடைவதற்கு SAPP நிகழ்ச்சித் திட்டம் கருவியாக உள்ளது.

பின்வரும் பதவிகளுக்கான பொருத்தமான அபேட்சகர்கள் அதிக ஊக்கமுடைய, நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் பேச்சுவார்த்தை திறன்கள் மற்றும் சிறந்த குழு முகாமைத்துவ திறன்கள் மற்றும் சிறந்த ஆளிடை திறன்களுடன் அடைவுகளைப் பெறக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**1. கிராமிய நிதி ஆலோசகர் (முழு நேர அடிப்படை – 01 பதவி)**

இளம் தொழில்முயற்சியாளர்கள் உட்பட 4P ஏற்பாடுகளுக்கு தொடர்புடைய நிதி நிறுவனத்திற்கான நிறுவன ரீதியான வலுப்படுத்தல் மற்றும் விவசாயிகளின் திறனை வளர்ப்பது மற்றும் கடன் வழங்கலை செயற்படுத்த உதவுதல் மற்றும் வழிகாட்டல், தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு கிராமிய நிதி ஆலோசகரை ஒப்பந்தம் செய்தல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

I. சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் தொழில்முறை அனுபவத்துடன் விவசாயம், விவசாய வர்த்தகம், பொருளியல், வர்த்தக முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து அடிப்படை பட்டம் அல்லது

சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 5 ஆண்டுகள் தொழில்முறை அனுபவத்துடன் விவசாயம், விவசாய வர்த்தகம், பொருளியல், வர்த்தக முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டப் பின்படிப்பு பட்டம்

II. விநியோகச் சங்கிலி நிதி, நிதி நிறுவனம் மூலம் SME கடன் மற்றும் நிதி கல்வியறிவில் TOT பயிற்சி வழங்கல் ஆகிய பரப்பில் ஐந்து ஆண்டுகள் கள அனுபவம்.

III. குறிப்பாக, விநியோகச் சங்கிலி மேம்பாட்டு 4P பங்குடைமை திட்டங்களை செயற்படுத்தும் அறிவு

IV. அதிக ஊக்கமுடைய, அர்ப்பணிப்புக் கொண்ட மற்றும் விரிவான பயணத்திற்கு தயாராக இருத்தல்.

V. நன்கொடை நிதித் திட்டங்களில் இதனையொத்த ஒப்படைகளில் அனுபவம் அனுகூலமாக அமையும்.

**2. பிராந்திய திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் - (முழு நேர அடிப்படை – 02 பதவிகள்)**

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

I. விவசாயம், விவசாய பொருளியல், விவசாய வர்த்தகம், அல்லது ஏனைய தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம் அல்லது உயர் தகைமை;

II. சமூக அபிவிருத்தி உட்பட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல் அல்லது வர்த்தக அபிவிருத்தியில் அவதானம் செலுத்தும் திட்டங்களுக்கு தொடர்புடைய குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம் விரும்பத்தக்கது;

III. போட்டித் தன்மை மற்றும் விவசாய மதிப்பு சங்கிலிகளின் உள்ளடக்கலை அதிகரிப்பது தொடர்பில் குறிப்பாக அவதானம் செலுத்துவதுடன் கிராமிய வறுமையை குறைப்பதை இலக்காகக் கொண்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்திய செய்துகாட்டப்பட்ட அண்மைய அனுபவம்.

IV. அரச, நன்கொடையாளர்கள், தனியார் துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் ஆகிய அமைப்புகளின் ஒரு பரந்த அளவான மற்றும் நிலைகளுடன் தொடர்புகொள்ளும் திறனில் செய்துகாட்டப்பட்ட அனுபவம்.

V. செய்துகாட்டப்பட்ட ஆக்கத்திறன், புத்தாக்கத்திற்கான விருப்பு, திட்ட செயற்பாடுகளுக்கு முறையாக சிந்தித்து வினையூக்க அணுகுமுறைகளை வடிவமைத்தல்;

VI. கண்டிப்பான காலக்கெடுவை கையாள்வதற்கு அதிக சுதந்திரம், நெகிழ்வுத்தன்மை மற்றும் திறன்

VII. ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழிகளின் வலுவான தொடர்பாடல் திறன்கள் (வாய்மூலம், எழுத்து, முன்னளிக்கை).

VIII. மைக்ரோசொப்ட் தொகுப்புகளில் (Microsoft packages) வேலை புரியும் அனுபவம்.

**பின்வருவனவற்றை கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்**

a) விவசாய வர்த்தக மதிப்புச் சங்கிலி அபிவிருத்தி தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் மூலோபாயத் திட்டமிடல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மற்றும் சமூக அணிதிரட்டல் தொடர்பான திறன் மேம்பாட்டில் நிரூபிக்கப்பட்ட கள அனுபவம்.

b) இதனை ஒத்த திறன் ஒன்றில் நன்கொடை நிதியளிக்கப்பட்ட திட்டம் ஒன்றில் பணியாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.

c) நன்கொடை நிதி அளிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும்/ அல்லது அரச துறையின் விவசாய அல்லது விவசாய வர்த்தகம் தொடர்பான அபிவிருத்தி வேலைகளில் போதுமான பின்னணி.

**இடங்கள்:** ஊவா பிராந்தியம் மற்றும் ஹம்பாந்தோட்டை

ஆர்வமுடையவர்கள் www.sapp.lk என்ற எமது இணையதளத்தின் மூலம் TOR இனை தரவிறக்கம் செய்ய முடியும். (தொடர்புடைய TOR யினை தரவிறக்கம் செய்வதற்கு "DOWNLOAD" தலைப்பு மற்றும் "PROCUREMENT" உப தலைப்பை பார்க்கவும்). உங்களது முன்மொழிவை (TOR யின்படி தொடர்புடைய விபரங்களுடன் முழுமையான சுயவிபரம்) பின்வரும் முகவரிக்கு கிடைப்பதற்கு 2023.12.27 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் தபால் மூலம் அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் அல்லது நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை மின்னஞ்சலின் விடயத் தலைப்பில் குறிப்பிட்டு procurement@sapp.lk என்ற முகவரிக்கு உங்களது சுயவிபரக்கோவையை மின்னஞ்சல் செய்யமுடியும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடவும். தலைவர், ஆலோசகர்கள் பெறுகைக் குழு – திட்டங்கள் (CPCP), சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம், இல. 214/A, நாவல வீதி, ராஜகிரிய.

மேலதிக விபரங்களுக்கு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் 011-2448031 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது gamini@sapp.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் பெறுகை நிபுணரை தொடர்புகொள்ளவும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)**
**இல. 212/A, நாவல வீதி, ராஜகிரிய.**

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**துணைவேந்தர் பதவி**

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம் மற்றும் செயற்படுகின்ற திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவை, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முகாமைத்துவம் செய்யவும், வழிநடத்துவதற்கும் பொருத்தமான தகைமை மற்றும் அனுபவம் மிக்கவர்களிடம் இருந்து விண்ணப்படிவங்கள் கோருகின்றது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சட்டத்திற்கு அமைவாக, துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தரும், பிரதம நிறைவேற்று அதிகாரியும், கணக்கீட்டு அதிகாரியும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் தலைவரும் ஆவார். அவர் பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

துணைவேந்தர் குறித்த பதவி காலத்திற்கு முன்னதாக பதவியிலிருந்து வெளியேறாவிட்டால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் அமைவாக, மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள், இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அது வரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர் கல்விசார் தலைமைத்துவத்தினை வழங்குதல், சீரான முகாமைத்துவ கொள்கை ஒன்றினை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றிற்கு பொறுப்பானவராக இருப்பார். விண்ணப்பதாரி பல்கலைக்கழக விவகாரங்களின் முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல் என்பவற்றினை பேண வேண்டும். விண்ணப்பதாரி பேரவை தீர்மானங்களை அமுல்படுத்துதல், பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்க விழுமியங்களை பேணல் மற்றும் அதன் பொதுநிர்வாகம் ஆகியவற்றிற்கும் பொறுப்பானவராக இருப்பர்.

துணைவேந்தர் கல்விசார் சிறப்பு தகைமையினை பேணுவதில் அர்ப்பணிப்புள்ளவராகவும் மாணவர் மற்றும் பணியாளர்களின் தேவைகள் பற்றிய புரிந்துணர்வு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி மிகச் சிறந்த சாதனைப் பதிவுகளுடன் உயரிய பண்புடையவராகவும், சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவராகவும் மாணவர் மற்றும் அலுவலர்களின் பல்வகைப்பட்ட ஆர்வங்களை இனங்காணக்கூடிய ஆற்றல் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளூர் சமூகத்திற்கான கடப்பாடுகள் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்தின் செயல்நோக்கு கூற்றுப் பற்றிய புரிதலினைக் வெளிக்கொணரக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைத்தளமான *http://www.ou.ac.lk* இல் பெற்றுக்கொள்ள முடியும்.)

துணைவேந்தர் அதிஉயர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர் என்பதோடு, அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாக பெற்றுக்கொள்வதற்கும், பதவிக்குரிய பிற கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 10.04.2023 அன்று வெளியிடப்பட்ட 03/2023 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு துணைவேந்தரை நியமிப்பதற்கான தெரிவு முறைமை அமையும். நடைமுறை மற்றும் நியமனத்திற்கான அச்சுற்றுநிருபத்தினை எனும் இணையத் தளம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்ப முடிவுத் திகதியன்று அறுபத்து மூன்று (63) வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. பிறந்த திகதி உள்ளடக்கலாக விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக்கோவை ஒன்று

ii. விண்ணப்பதாரர் அவர் துணைவேந்தராக நியமிக்கப்படும் பட்சத்தில் அவரால் முன்மொழியப்படும் திறந்த பல்கலைக்கழக அபிவிருத்திக்கான தூரநோக்குப் பற்றிய தனிப்பட்ட அறிக்கை மற்றும் அவர் எய்த எண்ணியிருக்கும் அடைவுகள் பற்றிய சுருக்கமான அறிக்கை

iii. விண்ணப்பதாரர் தற்போதைய துணைவேந்தர் எனின், மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் தன்னுடைய (முதலாவது) பதவி காலத்தில் சாதித்த சாதனைகள் பற்றியும் அடைவுகளை விசேடமாகக் குறிப்பிட்டு அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரர் அரச பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள் நியதிச்சபைகள், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவைற்றில் ஏதாவதொன்றில் சேவை புரிபவராயின், அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியுமா என்பதனை தெரியப்படுத்தும் தொழில்தருனரின் கடிதம்.

விண்ணப்பதாரிகள் மதிப்பீட்டுக் குழுவினால் நேர்முகத்தேர்விற்கு தோற்ற அழைக்கப்படுவர். தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக, விண்ணப்பதாரி எவரேனும் ஒருவருக்கு மதிப்பீட்டுக் குழுவின் முன் நேரடியாக தோற்ற முடியாது போயின், செயலாளருக்கான முன்னறிவித்தல் ஒன்றின் மூலம் அவர் **மெய்நிகர் வழியாக** நேர்முகத் தேர்விற்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்தது பத்து நிமிடங்கள் (10) எனினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாமல் சுருக்கிய முன்னிலைப்படுத்துகை ஒன்றிற்காக விசேட பேரவைக் கூட்டம் ஒன்றிற்கு அழைக்கப்படுவார்.

உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் **திருமதி.டபிள்யூ.எல்.விந்த்ய ஜயசேன, பேரவை செயளாலர், பதிவாளர் அலுவலகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட** என முகவரியிடப்பட்டு **10.01.2024 அன்று பி.ப.03.00 மணி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு அந்தரங்க உறையில் இடப்பட்டு பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது நேரடியாக கையளிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மென்பிரதியுடன் வேறு ஏதேனும் துணை ஆவணங்கள் இருப்பின் அவற்றினையும் இணைத்து PDF வடிவில் registrar@ou.ac.lk எனும் இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் எந்த ஒரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துணைவேந்தர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**டபிள்யூ.எல்.விந்த்ய ஜயசேன,**
**பதிவாளர் மற்றும் பேரவை செயளாலர்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**நாவல,**
**நுகேகொட**

10th டிசம்பர் 2023

University Web Page : www.ou.ac.lk

# காதி நீதிபதிகளை நியமித்தல் - 2023

## நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் பின்வரும் அட்டவணையில் உள்ள பிரதேசங்களுக்கான "காதி" பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. அக்குரணை | 2. போறா சமூகம் | 3. கொழும்பு வடக்கு | 4. கொழும்பு தெற்கு |
| 5. ஹொரணை | 6. யாழ்ப்பாணம் | 7. கிண்ணியா | 8. மாஹோ |

**அடிப்படைத் தகைமைகள்**

- ✷ இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல். அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல், அல்லது,
- ✷ முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல், அல்லது,
- ✷ கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல், அல்லது,
- ✷ சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல், அல்லது,
- ✷ ஓய்வுபெற்ற பதவி நிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

**தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.**

**ஏனைய தகைமைகள்**

இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்க வேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் தான் நியமனம் பெறும் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசித்தலானது சட்டரீதியான தேவைப்பாடாக கருதப்படும்.

**கொடுப்பனவுகள்**

மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 7,500/= மற்றும் உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250/= கொடுப்பனவொன்றுமாகச் சேர்த்து மொத்தமாக ரூபா 13,750/= வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**

2023-12-01 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ.இ -573, கொழும்பு**
**0112433119 / 0112451159**




இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான **பிரதேச அபிவிருத்தி வங்கியானது** நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமையான ஊழியர்களைக் கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்குத் தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட, முன்னனுபவம் வாய்ந்த தொழில் வல்லுநர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சிரேஷ்ட முகாமையாளர் - வன்பொருள் உதவி (Senior Manager - Hardware Support)**

இப்பதவிக்கு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றுக்கொண்டுள்ள கணனி அறிவியலில் அல்லது தகவல் தொழில்நுட்பம் (ICT) பட்டப்படிப்பு

  அல்லது

  இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற குறித்த துறைசார் பட்டப்படிப்பு மற்றும் துறைசார் தொழில் திறமை.

  அத்துடன்

- 08 வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அதில் ஆகக் குறைந்தது 05 வருடகால நிறைவேற்றுத் தர அனுபவத்தினை வன்பொருள் கையாளுகை மற்றும் உதவிச் சேவைகள் தொடர்பில் (கணினிகள், தடையறா மின்வழங்கிகள், அச்சுப்பொறிகள் மற்றும் ஏனையவை) கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- 50 வயதிற்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

**சம்பளம்/ கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற் துறையில் நிலவும் தர நிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது முழுமையான சுயவிபரக் கோவையை, உறவினரல்லாத சிபாரிசு செய்யும் இருவரின் தொடர்பு விபரங்களுடன் 2023 டிசம்பர் 20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறையின் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். சிறுபட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு முழுமையான அதிகாரம் உண்டு.

பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி.
இல.933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 03 54 54 | www.rdb.lk

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கைப் பாராளுமன்றம்

## பதவி வெற்றிடம்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் உள்ள உதவிப் படைக்கலச்சேவிதர் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள், கல்வித் தகைமை / உயர் கல்வித் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணைய தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்).

**1. சம்பள அளவுத்திட்டம் :-**
2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை 1 இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ.58,295- 3×1,335/8x1,630/2x 2,170 - 79,680/- (சகல மேலதிகக் கொடுப்பனவுகளும் உட்பட இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் 128,000/-) ஆகும்.

**2. வயதெல்லை :-**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3. கல்வித் தகைமைகள் :-**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வேறொரு நிறுவனத்திலிருந்து பட்டத்தை பெற்றிருத்தல்.

**4. அனுபவம்:-**
ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் ஆயுதப் படையில் (நிரந்தர) அல்லது இலங்கை பொலிஸ் சேவையில் 8 வருடங்களுக்கு குறையாத மதிக்கத்தக்க ஒரு சேவை காலத்தை உடைய இலங்கையின் இராணுவத்தில் கெப்டன் / இலங்கை கடற்படையில் லெப்டினன்ட் / இலங்கை விமானப்படையில் விமான லெப்டினன்ட் பதவியை அல்லது இலங்கை பொலிஸில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு சமமான அல்லது அதற்கு குறையாத பதவியை வகித்தவராக இருத்தல் வேண்டும்.

**5. ஆட்சேர்ப்பு நடைமுறை :-**
எழுத்துப் பரீட்சையின் மற்றும்/அல்லது நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

**6. சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :-**
(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கம் எதிர்காலத்தில் எடுக்கும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் உடன்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார். அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.
(ii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.
(iii) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.
(iv) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்.
(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-
   (அ) பிறப்பு சான்றிதழ்
   (ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்
   (இ) அனுபவ சான்றிதழ்கள்
8. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்த முப்படைகளின் / பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
9. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.
10. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்படுமிடத்து,அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும் நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.
11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாமல் அனுப்பப்படும் அல்லது அந்தந்த முப்படைகளின் / பொலிஸ் சேவையின் தலைவர்களின் ஊடாக அனுப்பப்படாத அல்லது விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் அல்லது மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.**
**2023 திசம்பர் மாதம் 05 ஆம் திகதி**

# இலங்கைப் பாராளுமன்றம்

## மாதிரிப்படிவம்

## உதவிப் படைக்கலச்சேவிதர் பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: (தமிழில்)
......................................................................
......................................................................
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்):
......................................................................
......................................................................
(இ) முழுப்பெயர்:(ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்)
......................................................................
......................................................................
02. தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
03. (அ) தனிப்பட்ட முகவரி :-
......................................................................
......................................................................
தொலைபேசி இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
(ஆ) அலுவலக முகவரி
......................................................................
......................................................................
தொலைபேசி இலக்கம் :- [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]
(இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி)
தனிப்பட்ட [ ] அலுவலக [ ]
04. (அ) பிறந்த திகதி :- ......................................................
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)
(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: வருடம்:...................... மாதம்:...................... நாள்:......................
05. விவாகமானவரா / விவாகமாகாதவரா என்ற விபரம்: விவாகமானவர் / விவாகமாகாதவர்)
06. பால்: (பெண் / ஆண்)
07. இலங்கைப் பிரஜையா எனும் விபரம்:- (ஆம் / இல்லை)
08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
க.பொ.த.(சா/த) ஆண்டு:- ...................................

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

க.பொ.த.(உ/த) ஆண்டு:- ...................................

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

09. உயர் கல்வித் தகைமைகள் :- (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
பல்கலைக்கழகம் :- ..........................................................
பட்டம் :- ..........................................................
ஆண்டு :- ..........................................................
10.அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவை காலம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :-
(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :..........................................
(ஆ) முதல் நியமனத் திகதி:..........................................
(இ) தற்போது வகிக்கும் பதவி:..........................................
(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம்:..........................................
(உ) கொடுப்பனவுகள்:..........................................
(ஊ) முழுமொத்த சம்பளம்:..........................................
12. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை)
அவ்வாறாயின் அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :-
13. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா எனின் அதுபற்றிய விபரங்களைக் குறிப்பிடுக :- (ஆம்/இல்லை)
என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிற்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

திகதி :.......................................... ..........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

### திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்று

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,
இந்நிறுவனத்தில் .......................................................... பதவியை வகிக்கும்
திரு/திருமதி/செல்வி .......................................................... அவர்களின்
விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப் படவில்லை எனவும், இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் நான் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிற்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் (தயவுசெய்து பொருத்தமற்ற சொற்களை கீறிவிடவும்).

திகதி :.......................................... ..........................................
**திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்**
**(பதவி முத்திரை)**

Daily News Classifieds, the Housewives' companion




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

செயல் திறனோடு செயல்படுவீர்கள். எதிலும் பொறுமை, நிதானம், விழிப்புணர்வு தேவை. சில நேரங்களில் உங்கள் திறமைக்கு சவால்கள் வரலாம். விழிப்புடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதால் தேவையற்ற பிரச்சினையை தவிர்க்கலாம். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு. உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. குழந்தைகளின் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் , 3ஆம், 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதம் )**

அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை உங்கள் தேவைக்கு ஏற்ப உயரும். புதிய நண்பர்கள் அறிமுகம் ஆவார்கள். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணம் வந்து சேரும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)**

எதிலும் பொறுமையுடன் செயல்பட வேண்டியது அவசியம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். வரவேண்டிய பணம் வந்து சேரும். முதியவர்கள் நண்பர்கள் ஆவார்கள். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாய் உடல் நலனில் கவனம் தேவை. வீடு, வாகனம், சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகள் உடல்நிலையில் கவனம் தேவை. எதிரிகளால் வீண் பிரச்சினைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும். வாழ்வில் சிறு சிறு தடைகள், பிரச்சினைகள் வந்து நீங்கும். பிதுர் வழி சொத்து பிரச்சினைகள் உருவாகும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. உடன்பிறப்புகளால் மனக்கசப்புகள் இருந்தாலும் ஆதாயம் உண்டு. வீடு, வாகனத்தை சீர்படுத்த கூடுதல் செலவினங்கள் ஏற்படும். குழந்தைகள் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக இருக்கும். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபாரத்தில் கூட்டாளியிடம் கவனம் தேவை. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்களை தவிர்ப்பது நல்லது. யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். எடுக்கும் முயற்சிகளில் தடை, தாமதம் ஏற்படும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் அதிக கவனம் தேவை. சில நேரங்களில் உங்கள் தகுதிக்கு குறைவான பணிகள் செய்ய நிர்ப்பந்திக்கப்படலாம்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

வாழ்வில் நல்ல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்வது நல்லது. பேச்சில் கவனம் தேவை. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் வந்து நீங்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. உடன்பிறப்புகளால் மனக்கசப்புகள் வந்து நீங்கும். விடாமுயற்சி வெற்றி தரும். உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. எதிரிகளால் வீண் பிரச்னைகள் உருவாகும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்களை தவிர்ப்பது நல்லது.

## கன்னி

**(உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

மனதில் தைரியம், தன்னம்பிக்கை, உற்சாகம், அதிகரிக்கும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். யாரையும் முழுமையாக நம்ப வேண்டாம். எதிர்மறை சிந்தனைகளை விடுத்து நேர்மறை சிந்தனையை வளர்த்து கொள்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாயால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, வாகனம் வாங்குவதற்கான முயற்சிகள் கைக்கூடும். குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. பூர்வீக சொத்து விஷயங்களில் பிரச்சினைகள் வந்து நீங்கும். குலதெய்வ வழிபாடு நன்மை தரும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

வீண்விரயங்கள், மருத்துவச் செலவுகள் ஏற்படும். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவது போன்ற விஷயங்களில் உங்களுடைய பணத்தை செலவு செய்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். மனதில் தைரியம், தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். உடன்பிறப்புகளால் ஆதாயம் உண்டு. தாயின் உடல் நிலை சீராகும். உறவுகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, வாகனம், சொத்து தொடர்பான விஷயங்கள் சாதகமாக அமையும். குழந்தைகளின் உடல் நலனில் கவனம் தேவை. பூர்வீக சொத்து விஷயங்களை கவனமாக கையாளுங்கள். சிந்தனையை தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்றத்தாழ்வுகள் வந்து நீங்கும். பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. ஆடை ஆபரண சேர்க்கை உண்டாகும். வீடு வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் வந்து நீங்கும். குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தைகளின் நட்பு வட்டத்தை கண்காணிப்பில் வைத்து வழி நடத்திச் செல்வது நல்லது. குடும்ப தேவைக்காக கடன் வாங்கும் சூழல் ஏற்படலாம். வெளிநாட்டு தொடர்பால் ஆதாயம் உண்டு. தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள், சக ஊழியர்களின் ஆதரவு முழுமையாக கிடைக்கும். உங்கள் திறமைக்கு சவால்கள் இருந்தாலும் அதை வென்று முடிப்பீர்கள்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

வாழ்வில் நல்ல மாற்றமும் முன்னேற்றமும் ஏற்படும். எல்லா வகையிலும் அனுகூலங்களும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும். மனதில் தைரியம், தன்னம்பிக்கை, உற்சாகம் அதிகரிக்கும். எதையும் வெல்லும் ஆற்றல் உருவாகும். பயணங்களால் மகிழ்ச்சி உண்டு. கடன் பிரச்சினைகள் தீரும். தடைப்பட்ட காரியங்கள் நடக்கும். சிந்தனைத் திறன் அதிகரிக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தெய்வ அனுகூலம் உண்டாகும். எதிரிகள் விலகிச் செல்வார்கள். கணவன் மனைவிக்குள் அன்பும் ஆதரவு அதிகரிக்கும். வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும். கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்ல முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் வெளிநாடு செல்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதம்)**

எத்தனை தடைகள் பிரச்சினைகள் வந்தாலும் எதிர்கொண்டு வெற்றி பெறுவீர்கள். தெய்வ சக்தி எப்போதும் உங்களை காத்து நிற்கும். நேரத்தில் தேவையான உதவிகள் கிடைக்கும். பேச்சில் அதிக கவனம் தேவை. கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. வீடு, மனை வாகனம் சொத்து தொடர்பான செலவினங்கள் உண்டு. குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. நீண்ட நாள் பிரார்த்தனை நிறைவேறும். எதிரிகளால் வீண் பிரச்சினைகள் வந்து நீங்கும். கணவன் மனைவிக்குள் சின்ன சின்ன கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. வியாபாரத்தில் கூட்டாளிகளிடம் கவனம் தேவை.

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)**

உங்கள் கடின உழைப்பால் எதையும் வெல்லக்கூடிய ஆற்றல் ஏற்படும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களுடன் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டியது அவசியம். மனதில் தைரியத்தையும் தன்னம்பிக்கை வளர்த்துக் கொள்வது நல்லது. விடாமுயற்சி வெற்றி தரும். உடன்பிறப்புகளால் மனக்கசப்புகள் இருந்தாலும் ஆதாயம் உண்டு. உறவினர்களுடன் மனக்கசப்புகள் உருவாகும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் விலகிச் செல்வார்கள். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தந்தை உங்கள் உயர்வுக்கு உறுதுணையாக இருப்பார்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உருவாகும் பொருளாதார நிலை தேவைக்கு ஏற்ப உயரும் உங்கள் பேச்சுக்கு மதிப்பு மரியாதை அதிகரிக்கும். வெளி வட்டாரத்தில் பிரபலம் ஆவீர்கள். உடன்பிறப்புகளால் மனக்கசப்புகள் வந்து நீங்கும். எடுக்கும் முயற்சிகளில் தடை இருந்தாலும் விடாமுயற்சி வெற்றி தரும். குழந்தைகள் செயல்பாடுகள் பெருமைப்படக்கூடியதாக அமையும். பூர்வீக சொத்தால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூட்டாளிகளால் ஆதாயம் உண்டு. வியாபார ரீதியான புதிய ஒப்பந்தங்கள் நன்மை தரும். தந்தையால் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தொழில் மற்றும் உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். உயரதிகாரி உங்களுக்கு முக்கிய ஆலோசனை தருவார். உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மற்றவர்களால் பாராட்டப்பட கூடிய சூழல் உருவாகும்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 16



# தென்னாசியாவின் மிக நீண்ட கெந்திங் மலை தொங்கூர்தி சேவை

மலேசியாவின் மிகப்பெரிய உல்லாச மையத்தை நோக்கியதாக எமது அடுத்த நகர்வு அமைந்திருந்தது. அதன் பயண ஊடகம் வித்தியாசமானதாகவும் புதுமையானதாகவும் அமைந்திருந்தது. கடல் மட்டத்தில் இருந்து 1760 மீற்றர் உயரம் நோக்கி நகரப் போகிறோம். கோலாலம்பூர் நகரில் இருந்து 56 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள “கெந்திங் மலை” உலகின் மிக முக்கிய சுற்றுலாத் தலமாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது. பதினையாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விசாலமாக வடிவமைக்கப்பட்டுள்ள இத் தலம் சகல வயதினரின் ஈடுபாட்டையும் கருத்திற் கொண்ட பொழுதுபோக்கு இடமாகவும் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பகாங் சிலாங்கூர் மாநில எல்லைப் பகுதிகளில் தித்திவாங்கா மலைத்தொடரில் பத்தாங்காலியில் இருந்து சாராக் செல்லும் வழியில் அமையப்பெற்றுள்ளது. “ரிசோர்ட் வோல்ட் கெந்திங்” என பெயரிடப்பட்டுள்ள இவ் வளாகம் கெந்திங் குழுமத்துக்குச் சொந்தமானதாகும். தொங்கூர்தி சேவையின் ஊடாக மலையின் அடிவாரத்தில் இருந்து மலையின் உச்சிப் பகுதிக்கு ஏறத்தாழ நான்கு கிலோமீற்றர் தொலைவில் இத் தொங்கூர்தி ஊடாகவே பயணிக்க வேண்டும்.

எங்கள் பிரயாண வழிகாட்டி பயண முறைகள் தொடர்பிலான அறிவுறுத்தல்களை அவ்வப்போது எடுத்துரைப்பதிலும் வழிப்படுத்துவதிலும் மிகச் சிறந்த அணுகுமுறையுடன் தொழிற்பட்டார். தொங்கூர்தி பயணம் என்பது மிக விசித்திரமானது. தென்னாசியாவின் மிக நீளமான தொங்கூர்தி பயண சேவையாக கெந்திங் மலை தொங்கூர்தி சேவை அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேகங்கள் சூழ்ந்து முகத்தில் படரும் நிலையில் குளிர் நிலைமை உடலை நடுக்க வைக்கும் தருணமது. தொங்கூர்திகள் மேலும் கீழும் பயணித்துக்கொண்டிருக்கும் காட்சி மனதில் பயம் கலந்த படபடப்பை ஏற்படுத்தியது. பிரயாணிகளை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் ஊழியர்கள் மிக நிதானத்துடனும் அவதானத்துடனும் தொழிற்படுவதை பார்க்க முடிகிறது. மலேசியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு வருவாயை உறுதிப்படுத்தும் தளங்கள் பலதை காணக்கூடியதாக உள்ள நிலையில் முக்கிய தளமாக கெந்திங் மலை வளாகமும் அமையப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எந்நேரமும் ஆயிரக் கணக்கான உல்லாசப் பயணிகளை உள்வாங்கிக் கொண்டிருக்கும் திட்டமிடல் அபாரம்.

உல்லாசத் துறைகளில் தன்னிறைவு பெற்ற நாடுகள் தொங்கூர்தி சேவையை அமைத்துக் கொளவதில் முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டு வந்துள்ளன. இலங்கையிலும் பல வருடங்களுக்கு முன்னர் நுவரெலியாவில் தொங்கூர்தி சேவை அமைக்கும் முயற்சியில் கவனம் செலுத்தப்பட்ட போதும் இதுவரையில் அது சாத்தியப்படாதது கவனிக்கத்தக்கது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் கம்பளை அம்புலுவாவ மலைத்தொடரில் தொங்கூர்தி சேவையை ஆரப்பிப்பதற்கான ஆயத்த பணிகள் குறித்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் முதலாவதாக அமையவுள்ள கேபிள் கார் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது. மேலும் சீனாவின் சர்வதேச கட்டட இயந்திர கூட்டுத் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவத்தினைப் பயன்படுத்தி அதனை நிர்மானிக்கவுள்ளதாகவும், இலங்கை முதலீட்டு சபை உறுதிப்படுத்தியுள்ளது.

முன்னால் பிரதமர் தி.மு.ஜயரத்னவின் எண்ணத்தில் உருவான தளமாகவே அம்புலுவாவ உருப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்புலுவாவவின் உருவாக்கத்தில் அதீத அக்கறையுடன் செயற்பட்டவர் முன்னாள் பிரதமரே ஆவார். இவரை எந்த நேரத்திலும் கம்பளை அம்புலுவாவயிலேயே பார்க்கலாம் என அரசியல் தளங்களில் கேலி செய்யும் போக்கு காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான இடங்கள் மூலம் வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும் அதன் ஊடாக நாட்டின் வருவாயை அதிகரிப்பதற்கும் வாய்ப்பு அதிகரிக்கும். நமது நாட்டிலுள்ள இவ்வாறான இடங்களை அடையாளங்கண்டு இம் முயற்சிகளில் ஈடுபடுதலும் நாட்டின் வருவாய்த்துறையை அதிகரிப்பதற்கும், வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும் வாய்ப்பாகும் எனலாம். நாட்டினுடைய உற்பத்தி பொறிமுறைகள் வீழ்ச்சியடைந்து வருகின்ற நிலையில், இவ்வாறான மாற்று முயற்சிகள் நாட்டின் பொருளாதார ரீதியிலான ஸ்திரத்தன்மைக்கு ஏதுவாக அமையப்பெறும். குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகள் இவ்வாறான அணுகுமுறைகளில் வெற்றிக்கண்டுள்ளதை முன் மாதிரியாகக் கொள்ளலாம்.



கெந்திங் ஹைலண்ட் 1964இல் ஸ்ரீ விம்கோ தேவ் என்பவரின் சிந்தனையில் தொடக்கம் பெற்ற எண்ணக்கருவாகவும் பின்னாளில் ஓமர் ஹலீமின் இணைவுடன் தொடங்கப் பெறுகிறது எனலாம். இன்றைய நிலையில் “உல்லாச சொர்க்காபுரி” என்ற விடயத்தில் உச்சத்தை தொடுவதால் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. 1969இல் முதலாவது விடுதியை அப்போதைய மலேசிய நாட்டின் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் திறந்து வைத்துள்ளார். பின்னாளில் உலகில் மிகக் கூடுதலான அறைகளைக் கொண்ட உல்லாச விடுதி இத் தளத்திலேயே அமையப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. 2008ஆம் ஆண்டு வரையில் இச் சாதனை உச்சத்தில் தடம் பதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. 6118 அறைகளுடன் பிரமாண்ட விடுதியாக “கின்னஸ்”, மற்றும் “ரிப்லிவ் பிலீவ் இட் ஆர் நாட்” ஆகிய சாதனைகளை தனதாக்கிக் கொண்டதாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போதைய நிலையில் உலகின் அதிக அறைகளை கொண்ட ஓட்டல்களில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ் விடுதியுடன் மேலும் ஐந்து ஓட்டல்கள் இவ் வளாகத்தில் அமைந்துள்ளது. இவ் வளாகத்தில் பிரசித்தமானதும் வருகைதரும் உல்லாச பிரயாணிகளை கவரும் வகையிலும் மூன்று பூந்தோட்டங்கள் அமையப்பெற்றுள்ளமையும் சிறப்பம்சமாகும். நீர்த் தாடகம், குகைக் கோயில் என்பன மேலும் இத் தளத்தை வலுவூட்டுவதாக அமைகின்றன.

2008ஆம் ஆண்டு வரையில் உலகின் மிகப் பெரிய ஹோட்டலாக இடம் பிடித்தாலும் தற்போதைய நிலையிலும் இச் சாதனையை வேறு நாடுகளுக்கு விட்டுக்கொடுக்காத வகையில் தொடர்ந்து வேறு ஹோட்டல் ஒன்றை நிர்மானித்து தொடர்ந்து மலேசியாவே முதன்மை இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 7351 அறைகளுடன் மூன்று நட்சத்திர அந்தஸ்த்துடன் மலேசியா பகாங்கிலேயே அமைந்துள்ள ”பஸ்ட் வேல்ட் ஹோட்டல்” உலகின் அதிக அறைகளை கொண்ட மிகப் பெரிய ஹோட்டலாக சாதனையை நிலை நாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகின் மிக முக்கிய சூதாட்ட மையமாகவும் பிரசித்தி பெற்றுள்ளமையும் கவனிக்கத்தக்கது. உலகில் எல்லா நாடுகளிலும் உள்ள சூதாட்ட பிரியர்களை மகிழ்விக்கின்ற அவர்களுக்கு சூதாட்ட களத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற பணி பிரதானமாக இத் தளத்தில் ஆற்றப்படுகிறது. கெசினோ உட்பட்ட விதவிதமான சூதாட்டங்கள் இடம்பெறுவது தொடர்பாக காட்சிப் பதாகைகள் ஆங்காங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இத் தளத்தில் விளம்பரங்கள் மிகப் பிரமாண்டமாகவும் கவர்ச்சிகரமாகவும் அமைக்கப் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இன்றைய வர்த்தக உலகில் விளம்பரம் மிக முக்கியத்துவம் பெற்ற துறையாக விளங்குகிறது. மலேசியாவின் வருவாயில் இந்த விளம்பரத்துறையும் வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதாகவும் அது வளர்ச்சியடைந்து வரும் துறையாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. இத் துறை ஊடாகவும் தொழிற்துறை வளர்ச்சியடைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. நுகர்வுப் பொருளாதாரத்தின் அடையாளத்தை காண்பித்த நிலையில் பிரமாண்டத்தை வெளிப்படுத்திய வண்ணம் முதலாளித்துவ பொருளாதாரத்தின் ஏக அடையாளம் வெளிக்காட்டப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். இதன் பிரமிப்பில் சிக்கித்தவிக்கும் உழைக்கும் வர்க்கத்தினரின் வேதனைகளையும் உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

பார்த்த காட்சிகள் அபூர்வமிக்கதாக அமைந்தது. பிரமாண்டத்தின் உச்சம் வளாகம் முழுதும் ஆட்கொண்டிருந்தது. தேனீர் வேளை, பகல் போசனம் விதவிதமான, வகை வகையான அம்சங்களோடு. உண்டு களித்தார்கள். பல பொழுதுபோக்கு விளையாட்டுக் களங்கள் பார்வை ஒன்றே போதும் என்ற நிலையிலேயே எம்மை மட்டுப்படுத்தியது. உழைக்கும் பணத்தை பறித்துக்கொள்ளும் லாவகத்தோடு அத்தனை அம்சங்களையும் வடிவமைத்திருக்கும் நுட்பம் மிகுந்த அபாரமே!

தொங்கூர்தியில் உயரப் போகும் போது பள்ளத்தை பார்க்கின்ற போதுதான் சற்றுப் பயமாக இருந்தது. கீழே பயணிக்கும் போது முழுமையான பார்வையும் பள்ளத்தை நோக்கி இருந்த நிலையில் அதீத பயமும் படபடப்பும் எம்மை ஆட்கொண்டிருந்தது. சில நேரங்களில் பயணிகள் தங்களை அறியாமலே போட்ட கூச்சல் ஆங்காங்கே ஒலித்தன. இரண்டொரு ஓய்விடங்களில் தரித்து அமர்ந்தவாறு பேராளர்கள் தேசங்களை மறந்து தமிழன்னையின் பிள்ளைகளாக ஒன்றித்துக்கொண்டதை அவதானிக்க முடிந்தது. தென்னிந்திய உறவுகளுடனான தொடர்பில் மிகுந்த ஆர்வத்தோடும் பல உரையாடல் களங்கள் வலுப்பெற்றன. இலங்கையின் யுத்தம், கொரோனா, பொருளாதார நெருக்கடி போன்ற விடயங்களில் அதீத அக்கறை செலுத்தி வினாக்கள் தொடுத்த வண்ணம் இருந்தனர்.

கண்டி, இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற அடையாளத்தை உணரச் செய்வதில் சற்றுக் கடினமான பிரயத்தனத்தையே மேற்கொள்ள வேண்டியிருந்தது. இருநூறு வருட வரலாற்றை எடுத்துக்கூறியே பலருக்கு “மலையகம்” என்ற எண்ணக்கருவை பதியவைக்க வேண்டியதாயிற்று. கடந்த காலங்களை விட இந் நிலமையிலிருந்து பார்க்கின்ற போது இலங்கையில் இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற புரிதல் ஓரளவு வலுப்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கான சூழலை அமெரிக்கன் கல்லூரி, திண்டுக்கல் காந்தி கிராம கிராமிய பலகலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் ஆகிய கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



உயர்ந்த இடம், குளிர்ந்த இடம், நம் நாட்டின் நுவரெலியாவின் சூழலை அவ்வப்போது ஞாபகப்படுத்தியது. சுற்றுலாத்துறையில் இலங்கை விருத்தியடைவதற்கு கவனிக்க வேண்டிய விடயங்களைப்பற்றி மனது அவ்வப்போது எடுத்துரைத்துக்கொண்டது. பலருடனான உரையாடல்களில் புதிய அனுபவங்களை மனது உள்வாங்கிக் கொள்கிறது. புதிய நட்புகளோடு அறிமுகத்துக்கான சிறந்த களமாக கெந்திங் மலை அமைந்திருந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவருடனான அறிமுகம், உரையாடல் மிக அர்த்தபூர்வமானதாக அமைந்திருந்தது. எழுத்துலகில் குறிப்பாக நாவல், சிறுவர் இலக்கியத்துறையின் விற்பன்னராக விளங்கிய அமரர் சின்னப்பபாரதியின் பாசறையில் சமகாலத்தவர். அவருடன் சின்னப்பபாரதிக்கும் எனக்கும் உள்ள தொடர்பு பற்றி உரையாடினோம். அவர் இலங்கைக்கு வந்த போது எங்கள் வீட்டிற்கும் வருகைத்தந்த அந்த அனுபவங்கள் தொடர்பிலும் உரையாடல் தொடர்ந்தது. அவரது நாவல் தொடர்பிலும் தொடர்ந்த உரையாடல் கெந்திங் மலை வளாகத்தை மேலும் ஞாபகப்படுத்தியது.

**பயணம் தொடரும்.....**

# படித்ததும் பகர்வதும் 170



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

**க. பொ. த. (சா. த) பெறுபேறுகள்!**




2022 (2023) வருடத்துக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியாகி எல்லோரும் அதைப்பற்றியே பேசுகின்ற காலகட்டமாக இது இருக்கின்றது. இப்பரீட்சையில் 4 இலட்சத்து 72 ஆயிரத்து 583 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களில் 13,558 பேர் தாம் தோற்றிய எல்லா பாடங்களிலும் A சித்திகளைப் பெற்று 9A சித்திகளைப் பெற்றுள்ளனர். மற்றும் பலர் 8A, 7A, 6A என சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

இது தவிர 72.07% மாணவர்கள் உயர் தரத்தில் கல்வி கற்பதற்குரிய தகுதியைப் பெற்றுள்ளனர். கண்டி மஹமாயா கல்லூரி, யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை, கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர்கள் இப்பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று முறையே 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இவற்றை நோக்கும் போது பரீட்சைகளில் சிறந்த சித்திகளைப் பெற வேண்டும் என்ற மாணவர்களின் ஆர்வம் அதிகரித்திருப்பதும், தமது முயற்சிகளில் அவர்கள் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது. உண்மையில் 72% க்கும் மேற்பட்டோர் உயர் தரத்தில் கல்வி கற்பதற்கான தகுதியை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க, சிறந்த முன்னேற்றமாக உள்ளது. மாணவர்களின் இத்தகைய வெற்றிக்கு அவர்களது பெற்றோர்களும், ஆசிரியர்களும், அதிபர்களும், நலன் விரும்பிகளும் துணையாக இருந்திருப்பார்கள் என உறுதியாக நம்பலாம்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இவ்வாறு சிறந்த சித்திகளைப் பெறும் மாணவர்களில் பெரும்பாலானோர் அவ்வாறான சிறந்த சித்திகளைப் கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளத்தவறி விடுகின்றனர். இது பற்றி ஒவ்வொருவரும் சிந்தித்து, அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளைப் பெற முயற்சிக்க வேண்டியது அவசியம்.

வசதி வாய்ப்புகள், பொருளாதார பிரச்சினைகள் போன்றன இவற்றுக்கு காரணங்களாக இருக்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. எவ்வாறாயினும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்ற மாணவர்களின் பெற்றோர்களும், சில சந்தர்ப்பங்களில் உறவினர்களும், மற்றும் சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களும், சித்தி பெற்ற மாணவர்களின் விருப்பம், எதிர்பார்ப்பு, வசதி வாய்ப்புகள், சூழல், ஆற்றல்கள் என்பவற்றை சரியாகப் புரிந்து கொள்ளாமல் தாம் விரும்பிய துறைகளிலேயே அம்மாணவர்கள் கல்வியைத் தொடர வேண்டும் என கட்டாயப் படுத்துவதும் அவர்களது தோல்விக்கு காரணமாக அமையக் கூடும்.

மேலும், வசதி குறைந்த பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு போதிய பொருத்தமான புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுப்பது அவர்கள் அழுத்தங்கள் இன்றி உயர்தர வகுப்புகளில் கல்வியை தொடர வழி வகுக்கும். இந்த வகையில் இம்முறை இப்பரீட்சையில் சித்தியடைந்த 5000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா வீதம் ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப் பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இதன்கீழ் நாட்டிலுள்ள 100 கல்வி வலயங்களும் உள்ளடங்கும் வகையில் ஒரு கல்வி வலயத்தில் இருந்து 50 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, 5000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா வீதம் புலைமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

2022 (2023) ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு முதன்முறையாக தோற்றி, சித்தியடைந்து உயர்தரம் பயில்வதற்கு தகுதிபெற்றிருப்பது, அரச அல்லது கட்டணம் அறவிடப்படாத தனியார் பாடசாலையில் கல்வி கற்பது, குடும்ப மாத வருமானம் 100,000 ரூபாவிற்கு குறைவாக இருப்பது இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க அடிப்படை தகுதியாகக் கொள்ளப்படுவது கவனிக்கத்தக்கது..

இந்த புலைமைப்பரிசிலுக்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி செலயகம் presidentsoffice.gov.lk, ஜனாதிபதி நிதியம் presidentsfund.gov.lk ஜனாதிபதி ஊடகப் பிரிவு pmd.gov.lk ஆகிய இணையதளங்களில் இருந்து தரவிறக்கம் செய்யலாம். அந்த விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து தாம் சாதாரண தரம் கற்ற பாடசாலை அதிபர்களிடத்தில் கையளித்து இதனை பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம்.

இவ்வாறான பெருளாதார உதவிகள் சமூக சேவை இயக்கங்கள் மூலமும் வழங்கப்பட வேண்டும். இவை மட்டுமன்றி மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்கள், உளவள ஆலோசனைகள், உடனடித் தேவைகளுக்கான உதவிகள் என்பவற்றை சரியாக அறிந்து, தெரிந்து, புரிந்து அவற்றை வழங்கிட செயல்படுவதன் மூலம் இவ்வாறு தகுதி பெற்ற மாணவர்களின் எதிர்காலம் வளமானதாக, ஒளிமயமானதாக அமையவும், அவர்கள் வெற்றியாளர்களாக மாறவும் வழியேற்படும் என எதிர்பார்க்கலாம்.

## வாசித்ததில் வசீகரித்தது

**உணர்வுகளும் உண்மைகளும்**

மறைந்த எழுத்தாளர் அனிஸ்டஸ் ஜெயராஜா எழுதி, எம். ஐ. தௌபீக் பதிப்பாசிரியராக இருந்து, 'ப்ரியநிலா கலை கலாசாரப் பேரவை' வெளியிட்ட, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தேசிய தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பின் வாழ்க்கை வரலாற்று நூல் "கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்".



எம். எச். எம். அஷ்ரப் துறைமுக அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சராக இருந்தபோது, 1998ம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்டவேளை, தலைவர் கையொப்பமிட்டு அன்பளிப்பு செய்த இந்நூலின் பிரதி இன்றும் என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறது.

நூலாசிரியர் அனிஸ்டஸ் ஜெயராஜா, இந்நூலில் 'உணர்வுகளும் உண்மைகளும்' எனும் தலைப்பில் எழுதியுள்ள தன்னுரையின் ஆரம்பத்தில் கூறியுள்ள விடயம் இன்றைய காலத்துக்கும் பொருத்தமாக இருக்கிறது. என்னை வசீகரித்த அந்த வரிகள் இதோ:

இலங்கை எனும் தேசத்தின் பாசக் கரங்களுக்கு விலங்கு போடப்பட்டிருக்கிறது. ஒருவரை ஒருவர் கட்டித்தழுவவும், முத்தமிட்டுக் கொள்ளவும் விடாதபடிக்கு அந்த 'இனவாத' விலங்குகள் இறுக்கமாகவும் உறுத்தலாகவும் இருக்கின்றன.

சமாதானம் எல்லா மனிதாபிமான இதயங்களிலும் பிரார்த்தனையாகிக் கிடக்கிறது. ஆனால் மனிதாபிமானத்தை வென்றெடுப்பதுதான் இன்று நம் முன் உள்ள பெரும்பணி.

இந்த நாட்டில் மனிதாபிமானத்தை வென்றெடுக்க முடியுமா எனும் கேள்வி காலத்துக்குக் காலம் தோன்றி காணாமல் போய்க் கொண்டே இருக்கிறது. இது மனிதாபிமானத்தை வென்றெடுக்கத் துடிப்பவர்களுக்கும் அதை வேரறுக்க காத்திருப்பவர்களுக்குமான போராட்டம்.

இங்கே தலைவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றாமலும் இல்லை தலைமைத்துவங்கள் வீழ்ச்சியுறாமலும் இல்லை. இதனடிப்படையில் நம்மிடமுள்ள ஒரே நம்பிக்கை, எதிர்பார்ப்பு, மக்களுக்கான இணக்கமான மனிதாபிமான நிலைப்பாடு கொண்ட தலைமைத்துவங்கள் தோன்றாதா என்பதுதான்.



நமது நாட்டின் துரதிர்ஷ்டம் என்னவென்றால் தலைவர்கள் தமக்கு என்ன செய்ய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்களோ இதையே மறுபுறம் திருப்பி, தலைவர்களுக்காக தாம் என்ன செய்ய வேண்டும் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. உண்மையிலேயே தமது நிகழ்வு என்னவென்றால் அநேகமான தலைவர்கள் தமது நலன்கள் குறித்தே கவனமாக இருந்துவிட்டு மெதுவாக ஆட்சிப் பொறுப்பிலிருந்து நழுவுவதுதான். அப்படியானால் நமக்கான சத்தியமயப்பட்ட தலைவர்களை எங்கே தேடுவது? இந்த தேடல் பொய்யா? அல்ல மெய்யா? மெய்யென்றால் எப்படி அந்த வெளிப்பாட்டை நாம் பெறுவது? கொஞ்சம் பொறுமை வேண்டும்.

இந்த நாட்டில் தலைமைத்துவம் ஒன்றை மக்கள் எப்படி புரிந்து கொள்கிறார்கள் என்பதற்கான ஆராய்ச்சி இன்னும் நடாத்தப்படவில்லை. அங்ஙனமே அது நடாத்தப்படுமேயானால் அது இந்த நாட்டுக்கும் இதன் மக்களுக்கும் நிச்சயம் பயனுள்ளதாகவே இருக்கும்.

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

**உதவாக்கரை மார்க் டுவெய்ன் !**

மார்க் டுவெய்ன் (Mark Twain) எனும் புனைப்பெயரால் நன்கு அறியப்பட்டவர் சாமுவேல் லேங்ஹோர்ன் கிளமென்ஸ். இவர் அமெரிக்க நகைச்சுவையாளரும், விரிவுரையாளரும், எழுத்தாளரும் ஆவார்.

இவர் எழுதிய டாம் சாயரின் சாகசங்கள் (The Adventures of Tom Sawyer), ஹக்கிள்பெரி ஃபின்னின் சாகசங்கள் (Adventures of Huckleberry Finn) ஆகியன மிகப் பிரபலமானவை.

மார்க் டுவெய்ன் ஆரம்ப காலத்தில் பத்திரிகை ஒன்றில் சுமார் ஆறு மாத காலம் பணியாற்றினார். ஒருநாள், பத்திரிகை ஆசிரியர் அவரை அழைத்து, "நீ ஒரு உதவாக்கரை, சோம்பேறி, இனி நீ இங்கே வேலைக்கு வரவேண்டாம்" என்று சொன்னார்,



அதனைக் கேட்டு எந்த வித அதிர்ச்சியும் அடையாத மார்க் டுவெய்ன் அவரை நோக்கி , "நீங்களோ ஒரு மகா மடையர்" என்றார்.

இதைக் கேட்டு அந்த பத்திரிகையாசிரியர் அதிர்ச்சியடைந்தார்.

உடனே மார்க் டுவெய்ன் , "நான் ஒரு உதவாக்கரை என்பதைத் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆறு மாத காலமாகியிருக்கிறது. இது, எனக்கு எப்போதோ தெரியுமே" என்றார் வெகு சாவதானமாக..

தம்மை நோக்கி வருகின்ற பாரதூரமான தாக்குதல்களைக் கூட வெகு சாதாரணமாக எடுத்துக் கொள்வது பெரியோர்களின் திறமைபோலும்.

## நலமே வாழ்வோம்

**நுண்ணுயிர் எதிர்ப்பிகள்!**

"மருத்துவர்களின் பரிந்துரையின்றி நுண்ணுயிர் எதிர்ப்பு (Antibiotics) மருந்துகளை உட்கொள்ள வேண்டாம். மருத்துவ அனுமதியின்றி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை அதிகமாகப் பயன்படுத்துவதால், பாக்டீரியா தொற்றுகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் திறன் வேகமாகக் குறைந்து வருகிறது" என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்விடயம் குறித்த விழிப்புணர்வினை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் வேலைத் திட்டங்களை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேற்கொண்டு வருகின்றது.

தவறான பயன்பாடு காரணமாக, நோய்க்கிருமி பாக்டீரியாக்கள் தற்போது நம்மிடம் உள்ள மிகவும் சக்திவாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகளுக்கு கூட செயல்படாத வகையில் வேகமாக உருவாகி வருகின்றன. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மில்லியன் கணக்கான மனித உயிர்கள் பலியாகின்றன.

இதிலிருந்து பாதுகாப்புப் பெற கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற முன் வாருங்கள்.

தகுதிவாய்ந்த மருத்துவரின் பரிந்துரையின்றி, தாம் விரும்பியபடி நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (Antibiotics) ஒரு போதும் எடுத்துக்கொள்ளாதீர்கள்.

பரிந்துரைக்கப்பட்ட காலம், நேரம், அளவு என்பவற்றை சரியாகப் பின்பற்றுங்கள்.

மருத்துவரின் அனுமதி இல்லாமல் உங்களுக்கு கொடுக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பு(Antibiotics) மருந்துகளை வேறொருவருக்கு கொடுக்காதீர்கள்.

பாவித்த பின் எஞ்சியிருக்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (Antibiotics) மீண்டும் பயன்படுத்தாதீர்கள்.

## பொன் மொழி அது பொய்யா மொழி

**தந்தை உந்தன் நண்பன்**

தந்தைக்கு முன்பு உங்கள் குரலை உயர்த்தாதீர்கள். அவ்வாறு செய்தால் இறைவன் உங்களை தாழ்த்தி விடுவான்.

தந்தையின் கண்டிப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். அதனால் உங்களுக்கு மரியாதை கிடைக்கும்.

தந்தைக்கு மரியாதை செய்யுங்கள். அதனால் உங்கள் பிள்ளைகள் உங்களுக்கு மரியாதை செய்வார்கள்.

தந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் நமக்கு தெளிவான ஒரு புத்தகம் ஆகும்.

அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பாடமாக எண்ணி பயன் அடைந்து கொள்ளுங்கள்.



தந்தை மற்ற எல்லோரையும் விட, நமக்கு மிகச் சிறந்த முறையில், நன்மை செய்பவர்.

முகம் தெரியாத யாருக்கோ மரியாதை செய்யும் நாம், எம்மை கொஞ்சி விளையாடி வளர்த்த எம் தந்தைக்கு மரியாதை செய்யத் தவறுவது முறையா?

தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளில், எவரும் குறை வைத்து விட வேண்டாம். தாய் தன் பிள்ளையை பத்திரமாக இருக்க வேண்டும் என்று தன மார்பில் அணைத்துக் கொள்வாள். ஆனால் தந்தை, தான் பார்க்காத உலகத்தையும் தன் பிள்ளை பார்க்க வேண்டும் என்று தன் தோளின் மேல் தூக்கி காட்டுவார்.

தந்தை உன்னருகில் இருக்கும் போது பயன் படுத்திக் கொள், அன்பாகப் பார்த்துக் கொள். முறையாகப் பராமரித்துக்கொள். தந்தையை போல் உண்மையான நண்பன் இந்த உலகத்தில் வேறு யாரும் இருக்க முடியாது..

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---




# மர்மம் நிறைந்ததா செல்வராகவனின் வாழ்க்கை அடுத்து என்னவாக இருக்கும் சிரஞ்சீவியின் நடவடிக்கை!

**ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்**

சிரஞ்சீவி சொன்னதைக் கேட்டதும்,
சற்று ஆடிப்போன சிந்துஜன்,
"என்னது மரண பயமா! யாரைக் கண்டு பயப்படுகிறார்? அவரைக் கண்டுதானே மற்றவர்கள் பயப்படுகிறார்கள்?" படபடப்புடன் கேட்டான்!
"அதைத் தெரிந்து கொள்ளத்தான் நானும் விரும்புகிறேன்" என்று சொல்லியபடியே,
கைகள் இரண்டையும் பின்னால் கட்டியபடியே,
மெல்ல முன்னால் ஊர்ந்து வந்தார் சிரஞ்சீவி
"வாசலில் பொருத்தப்பட்டிருக்கும் சைகை காட்டும் கம்பியை நீ கவனித்தாயா? அவருடைய ஆபிஸ் அறையில் பொருத்தப்பட்டிருந்த மின்சார கம்பிகளை நீ கவனிக்கவில்லையென்று நினைக்கிறேன். உன்னுடைய துப்பறியும் அறிவு இன்னும் அந்த அளவுக்கு வளரவில்லையென்று நினைக்கிறேன். செல்வராகவனுடைய ஆபிஸ் அறையிலும் படுக்கை அறையிலும் இரண்டு கைத்துப்பாக்கிகள் இருப்பதை நான் அவதானித்தேன்! அவருடைய மேசைக்கு எதிரில் மூன்று முகம் கொண்ட கண்ணாடி ஒன்று பதிக்கப்பட்டிருக்கிறது. நாற்காலியில் அமர்ந்தபடியே சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அவரால் அவதானிக்க முடியும். அறையைச் சுற்றிலும் ஏன் இத்தனை பாதுகாப்பு. எவராலோ அவருக்கு மரண பயம் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் அதற்கு அர்த்தம்!"
வியப்பினுள் விழுந்த சிந்துஜன்,
அவருடைய துப்பறியும் திறனைக் கண்டு,
உண்மையிலேயே ஆச்சரியப்பட்டுத்தான் போனான்!
அவன் ஏதோ சொல்ல வாய் திறந்தபோது,
யாரோ அறைக்குள் நுழைவது தெரிந்தது!
"ஓ! இதோ வந்து விட்டாரே எங்கள் சொலமன், ம், வாங்க சொலமன்! என்று சொல்லியபடியே,
நண்பர் சொலமனை வரவேற்றார்.
"ஹலோ..சிரஞ்சீவி..உங்கள் வரவு நல்வரவாகட்டும்!"
கைகுலுக்கினார் சொலமன்
அந்த அறை முழுவதும் அவரது குரலினால்,
அதிர்ந்து போனது!
அல்டேஷன் நாய் ஒன்று குரைப்பது போன்று,
கொடூரமான குரல்!
"எப்படி இருக்கிறீங்க சிரஞ்சீவி,
நீங்க கொஞ்சம் மெலிந்து போன மாதிரி தெரியுதே..?"
"ம்.. தெரியாதா..காலத்துக்கு காலம் அப்படித்தான்.. நீங்க பேசுவதை விட ரொம்பவும் கத்துறீங்க சொலமன்!" சொல்லிவிட்டு,
குலுங்கிச் சிரித்தார் சிரஞ்சீவி,
"ஆமாம் அப்படித்தான், எல்லோரும் சொல்லுகிறார்கள்.. போன ஜென்மத்தில் கோயிலுக்கு ஆலய மணியை தானமாகக் கொடுத்திருப்பேன் போலிருக்கிறது!"
அவர், இப்படிச் சொன்னதும்,
இப்போது,
எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்!
அடுத்து,
சிரஞ்சீவி,
தனது மருமகனை சொலமனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.
"ஓ.. அப்படியானால் உங்கள் மருமகனையும் போலிசில் சேர்த்து விடலாமே.."
"இல்லை சொலமன் அவரை ஒரு தனிப்பட்ட துப்பறியும் நிபுணராக மாற்றுவது தான் எனது யோசனையாக இருக்கிறது"
"உண்மைதான்.. அதற்கான அறிகுறிகளும் அவரிடம் நிறையவே இருக்கிறது. அழகான தோற்றம்.. அதற்கேற்ற உடற்கட்டு எல்லாமே இருக்கிறது.. என்ன அப்படித்தானே துர்கா மிஸ்?" என்று,
அறைக்குள் வந்த துர்காவைப் பார்த்துக் கேட்டார்!
எதிர்பாராத விதத்தில்,
ஓர் ஆடவனைப் பற்றி,
திடீரென்று இப்படி ஒரு கேள்வியை சிறிதும் எதிர்பார்த்திருக்காத துர்கா,
நாணத்தினால்,
நனைந்து போனாள்!
கடைக் கண்ணால்,
சிந்துஜனைப் பார்த்தபடியே,
மெல்ல அங்கிருந்து நழுவிச் சென்றாள்!
"ம்.. உங்கள் வாழ்க்கை எப்படி போகிறது சொலமன்..?" அவள் மறைந்ததும்,
மீண்டும் தனது பேச்சைத் தொடர்ந்தார் சிரஞ்சீவி,
"ம்.. மதத்தின் அடிப்படையில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட ஒருவனின் வாழ்வில் சாந்தியும் சமாதானமும் என்றும் நிலைத்திருக்கும்.. இப்போது நான் ஒரு சக்தியுள்ள பெந்தகோஸ்காரன்!" என்று பெருமையுடன் சொன்னார் சொலமன்.
"ஓ... உண்மையாகவா..? கர்த்தர் ஆசிர்வதிக்கட்டும்!" என்றார் சிரஞ்சீவி.
"உண்மைதான்.. சிரஞ்சீ.. இதோ பாருங்கள்.. ஞாயிற்றுக்கிழமை இங்கே உள்ள பெரிய கோயிலில் விழாவொன்று நடைபெறுகிறது. நிறையப் பேர் அங்கே ஞானஸ்தானம் பெறுகிறார்கள். நானும் பாவமன்னிப்பு பெறப் போகிறேன்!" என்று சொல்லியபடியே,
கால்சட்டைப்பையில் இருந்து ஒரு நோட்டீசை எடுத்துக் கொடுத்தார்.
"பாவமன்னிப்பா?" இப்படிக் கேட்டபடியே,
சக்கர நாற்காலியை உருட்டிக் கொண்டு,
உள்ளே வந்தார் செல்வராகவன்
"ஆமாம் ராகவன்.. என்றைக்காவது நாங்களும் சாகப் போகிறவர்கள் தானே.. நாம் செய்த பாவங்களுக்காக என்றைக்காவது நாம் நஷ்ட ஈடு செலுத்தித்தானே ஆகவேண்டும். வருந்தித்தானே ஆக



வேண்டும்..! அப்போதுதானே கர்த்தரின் மன்னிப்பும் ஆசிர்வாதமும் நமக்குக் கிடைக்கும்!"
இப்படி மூன்று பொலிஸ்காரர்களும் இத்துப்போன கதைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது,
சிந்துஜன் மெல்ல அங்கிருந்து நழுவி,
துர்காவைத் தேடி நகர்ந்தான்.
நடுஹாலில் கிடந்த சோபாவில் அமர்ந்திருந்தாள்!
"அந்த சங்கத்தில் கலந்து கொள்வதற்கு எங்களுக்கு வயது போதாது இல்லையா மிஸ் செல்வராகவன்?" என்று கேட்டபடியே,
துர்காவின் எதிரில் அமர்ந்து கொண்டான் சிந்துஜன்!
அவன் முகத்தில்
புன்னகை அரும்பியிருந்தது!
அவனைப் பார்த்து மெல்லச் சிரித்துக் கொண்டே,
"உங்கள் புரிந்துணர்வில் ஒரு தவறு இருக்கிறதென்று நினைக்கிறேன். நான் மிஸ் செல்வராகவன் அல்ல மிஸ் சேகர்!" என்றாள்.
"ஓ.. அப்படியானால் நீங்கள் செல்வராகவனின் மகள் இல்லையா?"
"இல்லை.. அவர் எனது தூரத்து சொந்தம்.. சித்தப்பா முறையானவர்"
"ஆனால்... நீங்கள் செல்வராகவனின் மகள் என்றுதான் மாமா கூட சொன்னார்.. அப்போது அவருக்குக் கூட விஷயம் தெரியாது போலிருக்கிறது!"
"ஆமாம்.. நான் செல்வராகவனின் மகள் என்றுதான் நிறைய பேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்!"
"ம்.. சித்தப்பா எப்படி உங்கள் மீது பாசமாக இருக்கிறாரா?"
"அவர் தடித்த குணங்களைக் கொண்டவராக இருக்கிறார்!"
"உண்மைதான்.. இதுபற்றி மாமாவும் என்னிடம் சொல்லியிருக்கிறார்.. இவர் மட்டும் இல்லை பொலிஸில் வேலை பார்க்கும் எல்லோருமே இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்! இல்லையென்றால் அவர்களுக்கு போலிசில் உயர் பதவிகள் எதுவும் கிடைக்காதாம்!"
அன்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு,
சொலமன் விடைபெற்றுச் சென்றார்.
அவர் போன பிறகு,
"ஏன் செல்வா, இந்த சொலமனின் மதமாற்றத்தைப் பற்றி, என்ன நினைக்கிறீர்கள்?" என்று மெதுவாகக் கேட்டார்.
அவருடைய இந்த மத மாற்றம் ஒரு மாயை. உண்மையான பத்தி என்பது அதில் இல்லை. அவர் இல்லாத இடத்தில் அவரைப்பற்றி இப்படி எல்லாம் சொல்லுகிறேனே என்று தப்பாக நினைத்து விடாதீர்கள். அவருக்கு இப்போது தேவை பப்ளிசிட்டி. அதனால் இப்படி கட்டுகிறார் முகமூடி! வருகின்ற பொதுத் தேர்தலுக்காக இப்போதிலிருந்தே கட்டுகிறார் சலங்கை!" என்றார் விஜயராகவன்
"இதை அவரே உங்களிடம் சொன்னாரா..?"
"ஒருவர் அப்படி நேரடியாகவே சொல்ல வேண்டிய அவசியம் எதுவும் இல்லையே..!"
அவர் திருமணம் செய்திருக்கிறாரா?" சுருட்டை எடுத்து பற்ற வைத்த படியே கேட்டார்.
"இல்லை..இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை.. ஆனால்..!" என்று சொல்லி நிறுத்திய செல்வராகவன்,
சுற்றும் முற்றும் ஒரு முறை பார்த்துவிட்டு,
"பக்கத்தில் இருந்து வீட்டொன்றில் இருந்த ஒரு பெண்ணுடன் அவர் கொஞ்ச நாட்கள் தொடர்பில் இருந்தார். அவருக்கு சுமார் 45 வயதிருக்கும். ஒரு பணக்கார விதவை அவள்! அவளுடைய பங்களாவும் இருக்கிறது! எவருக்கும் தெரியாமல் ரகசியமாகத்தான் அந்த வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணுடைய மகன் இந்தியாவில் இசைப் பயிற்சி பெறுவதற்காக போய்விட்டு திரும்பிவந்து இந்த விசயத்தைக் கேள்விப்பட்டு, அம்மாவை எச்சரித்திருக்கிறான்! அதன் பிறகும் மிகவும் ரகசியமாகவே அந்தத் தொடர்பை அவர்கள் நடத்தி வந்திருக்கிறார்கள்!
"அதனிலும் பார்க்க அவளைத் திருமணமே செய்து கொண்டிருக்கலாமே..!" என்றார் சிரஞ்சீவி,
"இல்லை..அப்படி ஒரு எதிர்பார்ப்பு அவரிடம் இல்லை! அதே நேரம் இன்னுமொரு விஷயமும் இருக்கிறது"
"அது என்ன விஷயம்?"
"எங்கள் துர்காவைப் பற்றிய ஒரு அபிப்பிராயத்தையும் அவர் வெளியிட்டார்!"
இந்த விஷயம்,
சற்றுத் தொலைவில்,
துர்காவுடன் பேசிக் கொண்டிருந்த சிந்துஜனின் காதுகளிலும் விழுந்தது!
"அவர் சொல்வது உண்மையா?" துர்காவிடம் மெதுவாகக் கேட்டான் சிந்துஜன்.
"ஆமாம்.. அப்படி ஒரு யோசனையும் வந்தது. அதற்கு நீங்கள் சம்மதித்தீர்களா?" கேட்டுவிட்டு,
ஆவலுடன் அவள் பதிலை எதிர்பார்த்தான்!

தொடரும்....

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 92

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 08 | 08 | 09 | 10 |
| | 11 | 12 | | 13 | |
| 14 | 15 | | 16 | 17 | 18 |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) சுவையும், ஆரோக்கியமும் கொண்ட புத்துணர்வு தருகின்ற பானம். எமது நாட்டின் மலையகப் பிரதேசங்களில் விளைகின்ற தாவர இலைகளிலிருந்து தயாராகின்ற பானம்.
(4) மிருகங்கள் பலவற்றின் விசேடமானதும், நீளமானதுமான உடலங்கம் இது. (தலைகீழான சொல்)
(7) இராமாயணத்தைப் படைத்த கவிச்சக்கரவர்த்தி.
(11) நீண்ட அலகு, நீண்ட கழுத்து, நீண்ட கால்கள் கொண்ட பறவையினம். நீர்நிலைகளில் மீன்களைப் பிடித்துண்ணும் பறவை. (தலைகீழான சொல்)
(14) முக்கனியில் ஒன்று.
(16) விரலின் முடிவில் உள்ளது. வளர்ந்து கொண்டேயிருக்கும். அவ்வப்போது கத்தரிப்பது அவசியம்.
(22) எலியின் வசிப்பிடம். (தலைகீழான சொல்)
(24) இது ஒரு உறவுமுறைச் சொல். தந்தையின் சகோதரி அல்லது தாயாரின் சகோதரனின் மனைவி. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) பூக்களில் சுரந்திருக்கும் அமுதம்.
(3) இலங்கையின் வரலாற்றின்படி விஜயனின் வருகைக்கு முன்னர் இங்கு வாழ்ந்த சுதேச இனத்தவர்களில் ஒருவர் இவர்கள். (தலைகீழான சொல்)
(4) கடல் போக்குவரத்துச் சாதனம். உலக நாடுகளிடையே பொருட்கள் அனுப்பப்படுவதில் பிரதான போக்குவரத்துச் சாதனம் இதுதான். (தலைகீழான சொல்)
(5) ஆகாயம், விண், விசும்பு என்பதெல்லாம் இச்சொல்லின் ஒத்தபொருள் சொற்கள்.
(11) பச்சையாக சம்பல் தயாரித்து உண்ணக் கூடிய கீரை. (தலைகீழான சொல்)
(16) மிகவும் மெதுவாக நகருகின்ற உயிரினம். ஆபத்தை எதிர்கொள்ளும் போது தனது உடலை ஓட்டுக்குள் சுருக்கிக் கொள்ளும்.
(18) இல்லம், உள்ளம், உட்புறம் ஆகிய அர்த்தங்கள் தருகின்ற சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 91

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. விண்கலம் 08. நாளை 10. அடுப்பு
14. சாரை 18. பந்து 21. சிற்பம்

**மேலிருந்து கீழ்**

01. புரவி 03. கட்டுரை 05. நாம்
11. பஞ்சம் 16. பதுளை 18. பசி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 90

### பாராட்டு பெறுவோர்

1. **எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

2. **எம்.ஆர்.எம். அக்மல்**
தரம் 4A, அல் மினா. ஆண்கள் பாடசாலை,
இல. 1/C, மானாம்பொட, உக்குவளை.

3. **எம்.எம்.எம். அஜ்மல்**
தரம் 07, மா/ சாஹிரா தேசிய கல்லூரி,
இல 37, கண்டிவீதி மாத்தளை, வறக்காமுறை, உக்குவளை.

4. **சாரான் அப்துல் றகீம்**
தரம் 06, அல் அமான் மு.ம. கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொட.

5. **ஆர்.ஏ. அமல்**
தரம் 03B, கைரியா பெண்கள் கல்லூரி,
இல. 126/4A, மாளிகாகந்த வீதி, கொழும்பு 10.

6. **லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 05, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹ°ரிமலுவ, ரம்புக்கண.

7. **எம்.ஆர்.எம். அப்ஸான்**
தரம் 07B, அஜ்மீர் தேசிய கல்லூரி,
இல. 1/C, மானாம்பொட, உக்குவளை.

8. **பஹ்மா**
தரம் 9A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22, இளவதுறை, கம்பளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 92
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அறன் வலியுறுத்தல் : அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்.**

***தெளிவுரை :***
பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடித்து ஒழுகுவதே அறமாகும்.



# உன்னை நீயே கவனி!

ஒரு மன்னரின் இரதம் இமயமலை நோக்கி சென்று கொண்டிருந்தது. வாழ்வை வெறுத்த அவருக்கு தற்கொலை எண்ணம் அதிகரித்தது. வழியில் ஒரு மனிதர் மரத்தடியில் தியானத்தில் இருப்பதை கண்டார். எளிமையான அவரது முகம் தாமரை போல மலர்ந்திருந்தது. அவரை கண்டதும் மன்னர் இரதத்தை நிறுத்தினார். கண்களைத் திறந்த அந்த மனிதர், 'என்ன வேண்டும்?' எனக் கேட்டார். "காசியின் மன்னர் நான்!
செல்வம் எல்லாம் இருந்தும், ஏதுமில்லாதது போல மனம் வாடுகிறேன். எளிமையாக இருந்தாலும் உங்களின் பிரகாசமான முகம் என்னை ஈர்க்கிறது. சாக முடிவெடுத்த நிலையிலும், உங்களிடம் சற்று நேரம் பேசத் தோன்றுகிறது. அதனால் நின்று விட்டேன்" என்றார் மன்னர். மன்னரின் பேச்சைக் கேட்டாலும், அந்த மனிதரின் பார்வை முழுவதும் மன்னரின் கால்களை நோக்கியிருந்தது. மன்னருக்குச் சிறுவயது முதல் கால்களை ஆட்டும் பழக்கம் உண்டு. அந்த மனிதர் தனது கால்களையே பார்க்கிறார் என்பதை அறிந்ததும் சட்டென அசைப்பதை நிறுத்தினார் மன்னர்.
"மன்னா! எவ்வளவு காலமாக இந்த பழக்கம் உள்ளது?" எனக் கேட்டார் அவர். 'நினைவு தெரிந்த நாள் முதல்..." என்றார். "இப்போது ஏன் நிறுத்தி விட்டாய்?" என்று கேட்டார் அவர். "நீங்கள் என் கால்களையே உற்று கவனித்தீர்கள்" என்றார். "பார்த்தாயா! மற்றவர் உன்னைக் கவனிக்க வேண்டுமென கருதுகிறாய். பிறரைச் சார்ந்தே வாழ ஆசைப்படுகிறாய்.
உலகத்தைப் பற்றி கவலைப்படாதே. உன் கால்களை நான் கவனித்ததால், நீண்டநாள் பழக்கத்தைக் கூட நிறுத்தி விட்டேன் என்கிறாய். இனி உன்னை நீயே கவனிக்க தொடங்கு. எதையெல்லாம் நிறுத்த வேண்டும் என்பது தெரியவரும்" என்றார். மன்னரின் மனதில் ஒளிக்கீற்று படர்ந்தது. பணிவோடு, தாங்கள் யார்?" என்று கேட்டார். "புத்தர்" என்றார் அந்த மனிதர் காலில் விழுந்து வணங்கினார்.
தன்னைத் தானே கவனிப்பதே வாழும் கலை என்பதை அறிந்ததும், மன்னரின் இரதம் அரண்மனை நோக்கி திரும்பியது.

# இவ்வார மழலை



**இனிலன்**

**கமலசந்திரன் – இந்துஷா**

# லேக் ஹில்லியர்

மேற்கு அவுஸ்திரேலியாவின் மத்திய தீவில் பிங்க் லேக் ஹில்லியர் (lake hillier) அமைந்துள்ளது. இதன் நீளம் 600 மீற்றர், அகலம் 250 மீற்றராகும். நீர்த்தேக்கத்தைச் சுற்றியுள்ள அனைத்து பக்கங்களிலும், ஏராளமான பசுமையான யூக்கலிப்டஸ் மரங்கள் சூழ்ந்துள்ளது.
ஏரியானது கடலுடன் சேராவண்ணம் மணல் திட்டுக்கள் ஏரியையும், கடலையும் பிரிக்குமாறு அமைந்துள்ளது.
மேற்பரப்பில் இருந்து பார்க்கும்போது லேக் ஹில்லியரின் இளஞ்சிவப்பு நிறம் மிகவும் பிரகாசமாக இருக்கும். இந்த ஏரி அவுஸ்திரேலியாவில் உள்ள தெற்கு பெருங்கடலுக்கு மிக அருகில் அமைந்துள்ளது.
இந்த ஏரிக்கும், கடலுக்கும் 10 மீற்றர் மட்டுமே இடைவெளி இருக்கும். மேலும், இந்த நீரை கையில் எடுத்து பார்த்தாலும் இளஞ்சிவப்பு நிறமாகவே காணப்படும்.





பின்லாந்தின் கோட்டிசாரி தீவின் நான்கு பருவங்களின் புகைப்படம்.

# மனிதன்

அடக்கமாக வாழ்பவனே மனிதன்
அன்போடு பழகுபவனே மனிதன்
பகையின்றி இருப்பவனே மனிதன்
பாசத்தைப் பொழிபவனே மனிதன்
துன்பத்தைத் தீர்ப்பவனே மனிதன்
தோல்வியை நீக்குபவனே மனிதன்
பொறுமை காப்பவனே மனிதன்
பொறுப்புடன் வாழ்பவனே மனிதன்
நெறிவழி நடப்பவனே மனிதன்
நேர்மையை மதிப்பவனே மனிதன்

**ஸாதிக் பாரிஸ்** மள்வானை

# சிறுவர் சித்திரங்கள்



**சத்யஜோதி**
தரம் 12, ஸாஹிரா கல்லூரி, கிந்தோட்டை, காலி.



**மொஹமட் ரிழ்வான்**
தரம் 07, மழ்ஹருள் ஸுல்ஹியா தேசிய பாடசாலை, காலி.

# அறிந்து கொள்வோம்

- உலகில் மிகப்பெரிய விலங்கு? **திமிங்கிலம்**
- உலகில் உயரமான விலங்கு? **ஒட்டகச்சிவிங்கி**
- உலகில் மிக உயரமான மலை? **இமயமலை**
- உலகிலேயே மிக நீளமான நதி? **அமேசன்**
- உலகியே மிக ஆழமான ஆழி? **மரியானாஆழி**
- உலகிலேயே மிகப்பெரிய நகரம்? **லண்டன்**
- உலகிலேயே பெரிய பாலைவனம்? **சஹாராப்பாலைவனம்**
- உலகிலேயே மிகச் சிறிய அரசு? **வத்திக்கான்**
- உலகிலேயே பெரிய சமுத்திரம்? **பசுபிக் சமுத்திரம்**
- உலகிலேயே பெரிய தீவு? **கிறீன்லாந்து**
- உலகிலேயே பெரிய கண்டம்? **ஆசியாக்கண்டம்**



பிரித்தானியா சைவ முன்னேற்றச் சங்கத்தின் அறிவொளி வளையத்தின் நிதி அனுசரணையில் 'நியூ சன் ஸ்டார்' இளைஞர் கழகத்தினால் சம்மாந்துறை இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 78 மாணவர்களுக்கான ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு, நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வு பாடசாலை அதிபர் தயாகரன், பிரதி அதிபர் சசிகரன் ஆகியோரின் வழிகாட்டல்களின் கீழ் நடைபெற்றது.



# ஐசாக் அசிமோவ்

ஐசாக் அசிமோவ் (Isaak Asimov) ஒரு அமெரிக்க அறிபுனை எழுத்தாளரும், பாஸ்டன் பலகலைக்கழகத்தின் உயிர் வேதியியல் பேராசிரியராகவும் பணியாற்றியவர். அறிபுனைப் புத்தகங்களைத் தவிர வெகுஜன அறிவியல் புத்தகங்களையும் எழுதியுள்ளார்.
அசிமோவ், அறிபுனை எழுத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் எழுதிய ஃபவுண்டேஷன் (Foundation series) வரிசைப் புதினங்களும், ரோபோ (Robot series) வரிசைப் புதினங்களும் அறிபுனை இலக்கியத்தின் செம்மையான படைப்புகளாகக் கருதப்படுகின்றன. தனது வாழ்நாளில் 500க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் 90,000 கடிதங்களை எழுதிய அசிமோவ் தூவி தசம முறையிலுள்ள (நூலகப் பகுப்பு முறை) பத்து துறை பகுப்புகளில் ஒன்பது துறைகளில் புத்தகங்களை எழுதியுள்ளார். அவர் எழுதாத ஒரே துறை மெய்யியல் மற்றும் உளவியல். அசிமோவ் வாழ்ந்த காலத்தில் அறிபுனை இலக்கியத்தின் முப்பெரும் எழுத்தாளர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். (மற்ற இருவர் ஆர்தர் சி. கிளார்க்கும் ரொபர்ட் ஹெய்ன்லீனும்). புதினங்கள் தவிர குறுநாவல்கள், சிறுகதைகள், அறிபுனைவு கட்டுரைகள் போன்ற வடிவங்களிலும் அசிமோவ் எழுதியுள்ளார்.
அசிமோவ் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி 1919 மற்றும் ஜனவரி 2, 1920க்கு இடைப்பட்ட காலத்தில் தற்போதைய பெலாரஸின் எல்லையிலுள்ள சோவியத் ரஷிய ஃபெடரேட்டிவ் சோசலிச குடியரசில் பிறந்தவர். அசிமோவின் உண்மையான பிறந்த தினம் தெரியவில்லை; எனினும் அசிமோவே தன் பிறந்தநாளை ஜனவரி 2 ஆம் திகதி கொண்டாடினார்.
அசிமோவுக்கு மூன்று வயதாக இருக்கும்போது அவர்கள் குடும்பம் அமெரிக்காவுக்குக் குடிப்பெயர்ந்தது.அவர் பிரிட்டிஷ் மொழியும், ஆங்கில மொழியும் பேசுவார்.
அசிமோவ் சிறு வயதிலேயே அறிவியல் புனை கதைகளைப் படிக்கத் தொடங்கினார். ஆனால் அவரது தந்தையோ அவற்றைப் படிப்பது வீண் வேலை என்பார். அதற்கு அசிமோவ் அது அறிவியல் எனும் தலைப்பைக் கொண்டுள்ளது எனவே, அது கல்வி சார்ந்தது என கூறுவார். அசிமோவ், தன் 11ஆவது வயதில் சொந்தமாகக் கதை எழுதினார். 19வயதில் அவரது அறிவியல் புனைகதைகள் நாளிதழ்களில் வெளிவந்தன.
1938இல் சேத் லோ ஜூனியர் கல்லூரி மூடப்பட்ட பின் தற்போதைய கொலம்பிய பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1939இல் வேதியலில் இளநிலை பட்டம் பெற்றார். பின்னர் அவர் அதே பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 1938இல் வேதியலில் முதுநிலைப் பட்டம் பெற்று, 1948இல் உயிர்வேதியலில் டாக்டர் பட்டம் பெற்றார். இடையில் 3 வருடம் பிலடெல்பியா கடற்படை விமான நிலையத்தில் வேலை செய்து வந்தார். டாக்டர் பட்டம் பெற்ற பின் பாஸ்டன் மருத்துவியல் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். 1958இல் இருந்து முழு நேர எழுத்தாளரானார். அசிமோவின் 1956இலிருந்தான தனிப்பட்ட ஆவணங்கள் பல்கலைக்கழகத்தின் முகர் நினைவு நூலகத்தில் ஆவணப்படுத்தப்பட்டு வந்தது.
இந்த ஆவணங்கள் 464 பெட்டிகள் அல்லது 71 மீற்றர் அலுமாரி இடத்தை நிரப்பக் கூடியதாக உள்ளது.
அசிமோவுக்கு 1977இல் மாரடைப்பு ஏற்பட்டு, டிசம்பர் 1983இல் மூன்று மாற்று வழி இணைப்பறுவை (பைபாஸ் சர்ஜரி) செய்யப்பட்டது. 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் திகதி அசிமோவ் காலமானார்.

# மஞ்சரி விளையாட்டு

## முஷ்பிக்கும் மத்தியூஸும்



முஷ்பிகுர் ரஹீம் பந்தை கையால் பிடித்து அட்டமிழந்த போது, “அஞ்சலோ மத்தியூஸ் மூலையில் இருந்து சிரித்துக் கொண்டிருப்பார்” என்று சமூகதளத்தில் யாரோ நகைச்சுவையாக எழுதி இருந்தார்.

உலகக் கிண்ணத்தில் மத்தியூஸுக்கு கால தாமதத்திற்காக ‘டைம் அவுட்’ முறையில் பங்களாதேஷ் ஆட்டமிழப்புக் கேட்டபோது யாரும் பெரிதாக நம்பவில்லை. அது நாகரிகம் இல்லை என்று பலரும் கூறினார்கள். ஆனால் பங்களாதேஷ் சட்டப் புத்தகத்தை வைத்துக் கொண்டு வாதிட்டது.

கடைசியில் மத்தியூஸ் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறை டைம் அவுட் ஆகி வெளியேற வேண்டியதாயிற்று.

மிர்பூரில் நியூசிலாந்துக்கு எதிராக முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆடிய பங்களாதேஷ் அணியின் முஷ்பிகுர் ரஹீமுக்கு இதே போன்ற ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்துவிட்டது. கடந்த டிசம்பர் 6 ஆம் திகதி முதல் நாள் ஆட்டத்தில் 5ஆவது வரிசையில் வந்த முஷ்பிகுர், 41 ஆவது ஓவரை எதிர்கொண்டபோது அது நடந்தது.

கைல் ஜெமிசன் வீசிய பந்துக்கு தடுத்தாடிய முஷ்பிகுர் துடுப்பில் பட்டு துள்ளிச் சென்ற பந்து விக்கெட்டுக்கு செல்லாமல் இருக்க இடது கையால் தட்டிவிட்டார். இதனை அடுத்து நியூசிலாந்து அணி களத்தடுப்பை தடுத்ததற்காக ஆட்டமிழப்புக் கோரியது. தொடர்ந்து இதனை ஆராய்ந்த மூன்றாவது நடுவர் முஷ்பிகுர் ரஹீமுக்கு ஆட்டமிழப்பு வழங்கினார்.

இதுவும் சட்டப் புத்தகத்தில் இருக்கும் ஆட்டமிழப்புத்தான். முன்னர் “கையால் பந்தை பிடிப்பது” என்ற வகையராவுக்குள் இருந்த இந்த ஆட்டமிழப்பு முறை 2017 இல் மாற்றம் செய்யப்பட்டு “களத்தடுப்பை தடுக்கும்” வகையாராவுக்குள் சேர்க்கப்பட்டது.

எப்படி இருந்தபோதும் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டில் பந்தை கையால் பிடித்து ஆட்டமிழக்கும் முதல் வீரர் முஷ்பிகுர் தான். இதற்கு முன் 1951 ஆம் ஆண்டு ஓவலில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து வீரர் லென் ஹட்டன் இப்படி பந்தை கையால் பிடித்து ஆட்டமிழந்திருக்கிறார்.

2017 ஆம் ஆண்டு விதி மாற்றப்படுவதற்கு முன்னர் பந்தை கையால் பிடித்தற்காக ஏழு வீரர்கள் டெஸ்ட் வரலாற்றில் ஆட்டமிழந்திருக்கிறார்கள்.

டைம் அவுட் விதியை கையாண்டு வீரர் ஒருவரை ஆட்டமிழக்கச் செய்யும் வித்துவம் தெரிந்த பங்களாதேஷ் வீரர்களுக்கு துடுப்பெடுத்தாடும்போது பந்தை கையால் பிடிக்க முடியாது என்ற சாதாரண விதி தெரியாமல்போனதுதான் பெரும் கவலை. என்றாலும், முஷ்பிகுர் ரஹீம் ஆட்டமிழந்த பின்னர்தான் பங்களாதேஷ் வீரர்களுக்கு அஞ்சலோ மதியூஸும் ஞாபகத்திற்கு வருகிறார்.

முஷ்பிகுர் ஆட்டமிழந்த தினம் போட்டி முடிவில் நடந்த ஊடக சந்திப்பில் பேசிய பங்களாதேஷ் சுழற்பந்து வீச்சாளர் மஹதி ஹசன் கூறியதாவது,

“இது வேண்டும் என்று நடந்ததல்ல போகின்ற போக்கில் நடந்தது. தெரிந்தே அட்டமிழக்க யாரும் விரும்புவதில்லை. போட்டி ஒன்றில் பல்வேறு பட்ட சூழல்களில் மனதில் பல விடயங்களும் வந்து போய்க் கொண்டிருக்கும். உலகக் கிண்ணத்தில் எமக்கு சாதகமாக இலங்கை துடுப்பாட்ட வீரர் ஒருவருக்கு எதிராக டைம் அவுட் ஆட்டமிழப்பை பெற்றோம், ஆனால் இன்று அது முஷ்பிகுர் ரஹீமுக்கு நடந்துவிட்டது. அது போகின்ற போக்கில் நிகழ்கின்ற ஒன்று” என்றார்.

அரிதான முறையில் நிகமும் ஆட்டமிழப்புகள் என்பது எப்போதுமே சர்ச்சைக்குரியதாகவே இருக்கும். ஆனால் மத்தியூஸின் ஆட்டமிழப்புக்கும் முஷ்பிக்கின் ஆட்டமிழப்புக்கும் இடையே சர்ச்சைகளைத் தாண்டி ஒரு தார்மீக முரண்பாடு இருப்பது கிரிக்கெட் உலகில் எல்லோருக்கும் தெரியும்.





## தலையெழுத்தை தீர்மானிக்கும் தேர்வுக் குழுவின் தேர்வு





உலகக் கிண்ணத்தில் படு தோல்வியை சந்தித்த பின்னர் முதல் விக்கெட்டாக இலங்கை தேர்வுக் குழு வீழ்த்தப்பட்டிருக்கிறது. பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழுவுக்கு பதில் உபுல் தரங்க தலைமையில் புதிய தேர்வுக் குழுவை நியமிக்கப்போவதாக புதிதாக நியமிக்கப்பட்ட விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் கூறியிருந்தார்.

இலங்கை கிரிக்கெட்டில் அண்மையில் நிகழ்ந்துவரும் குழப்பங்களின் தொடர்ச்சியாகவே இந்த மாற்றம் இடம்பெறுகிறது. உலகக் கிண்ணத்தின் சகிக்க முடியாத தோல்வி, இலங்கை கிரிக்கெட் மீதான ஐ.சி.சி தடை, தொடர்ந்து புதிய அமைச்சர் நியமனம் ஆகிய போக்கை பார்க்கும்போது முதலில் தேர்வுக் குழு மீது கை வைப்பார்கள் என்பது ஊகிக் முடிந்ததே.

பாராளுமன்றத்தில் அமைச்சர் கூறியதற்கு அப்பால் இந்த மாற்றம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகி இருக்கவில்லை. ஹரீன் பெர்னாண்டோ போற போக்கிலேயே உபுல் தரங்கவை புதிய தேர்வுக் குழு தலைவராக நியமித்திருப்பதாக கூறி இருந்தார். என்றாலும் அதிரடி மாற்றங்கள் நிகழப் போகிறது என்பது உறுதி.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு அல்லது அதன் கீழ் இயங்கும் அர்ஜுன ரணதுங்க தலைமையிலான தேசிய விளையாட்டுச் சபைக்கு இடையில் நீடித்த இழுபறியில் நேரடியாக பாதிக்கப்பட்ட தரப்பாக கிரிக்கெட் தேர்வுக் குழுவை குறிப்பிடலாம்.

பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழு தேர்வு செய்து அனுப்பும் அணிக்கு விளையாட்டுத் துறை அமைச்சர், தாமதித்து ஒப்புதல் அளிப்பது இல்லையென்றால், அந்தத் தேர்வு குறித்து விசாரணைக்கு உட்படுத்துவது என்றே கதை நீண்டது. இந்த இழுபறி மைதானத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது வெளிப்படையானது.

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினாலேயே பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழு நியமிக்கப்பட்டது. அதில் முன்னாள் விக்கெட் காப்பாளர் ருமேஷ் களுவிதாரண, ஹேமந்த விக்ரமரத்ன, வருண வராகொட, எஸ்.எச்.யு. கர்னைன் மற்றும் பி.ஏ. திலகா நில்மினி குணரத்ன ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

நியமனம் பெற்ற ஆரம்பத்திலேயே அதிரடி முடிவுகளை எடுக்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக முன்னாள் அணித் தலைவர்களான அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் மற்றும் திமுத் கருணாரத்னவை மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் இருந்து ஓரங்கட்டினார்கள். 2023 உலகக் கிண்ணத்திற்கு அணியை தயார்படுத்துவதாகக் கூறியே இதனைச் செய்தார்கள்.

ஆனால் அது தொடக்கம் இலங்கை அணியின் பெறுபேறுகள் நிலையானதாக இல்லை. கடந்த ஏழு ஆண்டுகளில் பிரதான கிரிக்கெட் தொடர் ஒன்றாக டி20 ஆசிய கிண்ணத்தில் இலங்கை கிண்ணத்தை வென்றது. ஆனால் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் நேரடித் தகுதி பெற தவறிய இலங்கை அணி அதில் தகுதி பெறுவதற்கு சிம்பாப்வே வரை சென்று தகுதிகாண் போட்டியில் ஆட வேண்டி ஏற்பட்டது.

பின்னர் இலங்கையில் நடந்த ஒருநாள் ஆசிய கிண்ணப் போட்டியில் இறுதிப் போட்டிவரை முன்னேறினாலும் இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் 50 ஓட்டங்களுக்கு சுருண்டாது அனைத்தையும் கேள்விக் குறியாக்கியது. என்றாலும் அடுத்து வந்த உலகக் கிண்ணத்திற்கு பெரிய மாற்றங்கள் இன்றி அதே அணியை அனுப்ப போட்டிகளில் சோபிக்கத் தவறியது மாத்திரம் அன்றி வீரர்கள் அடுத்தடுத்து காயமடைந்தது, மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட்டில் இருந்து ஒதுக்கிய திமுத் கருணாரத்ன மற்றும் இடைநடுவே அஞ்சலோ மத்தியூஸை அழைத்தது போன்ற குழப்பங்கள் தேர்வுக் குழு மீது பெரிதாக விமர்சனங்களை ஏற்படுத்தியது.

அதாவது பிரமோத்ய விக்ரமசிங்க தலைமையிலான தேர்வுக் குழுவின் காலத்தில் இலங்கை அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20 என மொத்தமாக 121 போட்டிகளில் ஆடி 53இல் வென்று 62 போட்டிகளில் தோற்றிருக்கிறது. இதன் வெற்றி தோல்வி விகிதம் 0.854.

சோபிக்கத் தவறிவரும் வீரர்களை தொடர்ந்து தேர்வு செய்தது, அதிலும் கிறிஸ்தவ அமைப்பு ஒன்று அணித் தேர்வில் செல்வாக்கு செலுத்தியது போன்ற அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் இந்தத் தேர்வுக் குழுவுக்கு இருந்தது. இதன் அரசியல் பின்னணிகள் பற்றி பேசப்போனால் சொல்ல வந்த கதையே மறந்துவிடும்.

என்றாலும் உலகக் கிண்ணத்தில் தோற்ற பின் பிரமோத்ய அரசியல் தான் பேசினார். இலங்கை கிரிக்கெட்டை வீழ்த்த கடந்த இரண்டரை ஆண்டுகளாக சதி நடப்பதாகக் கூற, விளையாட்டு பொலிஸுக்கு அலைக் கழிய வேண்டி ஏற்பட்டது. ஆனால் உலகக் கிண்ணத்தில் ஏற்பட்ட தோல்விக்கு தன் பக்க தவறுகள் பற்றி அவர் ஒருபோதும் பேசவில்லை.

இப்படியான ஒரு தோல்விக்கு பின்னர் அதற்கு யாராவது பொறுப் பேற்பது அவசியம். தோல்விக்காக ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி



இலங்கை அணி மன்னிப்புக் கேட்டதோடு சரி. அதுபற்றி முறையான மீளாய்வு ஒன்று நடந்ததாகத் தெரியவில்லை.

என்றாலும் தற்போதைய சூழலில் ஓர் அணியின் நிர்வாகம், தேர்வுக் குழு, பயிற்சிக் குழாம் ஏன் அணியிலும் அதிரடி மாற்றங்கள் நடப்பது வழக்கமான ஒன்று. உலகக் கிண்ணத்தில் தோற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை பார்த்தால் எல்லோருமே கூண்டோடு துரத்தப்பட்டு வருகிறார்.

அத்தனை தீவிரத்தை பார்க்க முடியாதபோதும் பிரமோத்ய வெளியேற்றப்பட்டு உபுல் தரங்க அழைக்கப்பட்டது ஓர் அதிரடி முடிவுதான். 38 வயதான உபுல் தரங்க அண்மையில் தான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். இன்னும் முதல்தர கிரிக்கெட்டியில் ஆடி வருகிறார். ஒரு சில நாட்களுக்கு முன்னர் கூட பிரதான கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் கிரிக்கெட் போட்டியில் என்.சி.சி கழகத்திற்காக ஆடி இருந்தார். சந்தர்ப்பம் கிடைக்கும் போது சர்வதேச மட்டத்தில் நடைபெறும் லீக் போட்டிகளிலும் ஆடுகிறார்.

இப்படி இருக்க அவர் தேர்வுக் குழு தலைவராக நியமிக்கப்படுவது சொந்த விருப்புகள் தாக்கம் செலுத்தக் கூடிய ஆதாய முரண் (Conflict of interest) சூழலை ஏற்படுத்தும். என்றாலும், அவர் முதல்தர போட்டிகளில் ஆடியபடி தேர்வுக் குழு தலைவராக செயற்படப்போகிறாரா என்பது பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. தேர்வுக் குழுவில் இயங்குவது என்பது சாதாரணமானது அல்ல. தேசிய அணிக்கான திறமைகளை தேட வேண்டும். கழக மட்ட, மாகாண மட்ட, பாடசாலை மட்ட ஏன் தெருவோரக் கிரிக்கெட்டைக் கூட உண்ணிப்பாக அவதானிப்பது அவசியம்.

லசித் மாலிங்க, டில்ஷான் மதுஷங்க, அஜந்த மெண்டிஸ் போன்ற வீரர்களின் தேர்வு என்பது கழக மட்டத்தில் நன்றாக விளையாடியதைப் பார்த்து நடந்ததல்ல. அவர்கள் விசேட திறமைகளை கண்டறிந்து அணியில் சேர்க்கப்பட்டார்கள். அவ்வாறான விசேட திறமைகளைத் தேடுவது தேர்வுக் குழுவின் பொறுப்பு.

பிரமோத்ய விக்ரமசிங்கவை எடுத்துக் கொண்டாலும் அவர் திடுதிடுப்பென்று தேர்வுக் குழுத் தலைவராக வரவில்லை. 2004 ஆம் ஆண்டு ஹசந்த டி மேல் தலைமையிலான தேர்வுக் குழுவில் இடம்பெற்ற அவர் பின்னர் 2013 இல் சனத் ஜயசூரிய தலைமையில் தேர்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டபோதும், பின்னர் 2020இல் மீண்டும் ஹசந்த டி மேல் தலைமையில் தேர்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டபோதும் அதில் அங்கத்தவராக செயற்பட்டு அனுபவம் பெற்ற பின்னரே தலைவராக நியமிக்கப்பட்டார்.

உபுல் தரங்க இலங்கை அணிக்காக 300ஐ நெருங்கும் அளவு சர்வதேச போட்டிகளில் ஆடிய சிறந்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர். ஒருநாள் அணிக்கு தலைவராகவும் செயற்பட்டிருக்கிறார். சனத் ஜனசூரியவுக்கு அடுத்து ஒருநாள் இன்னிங்ஸ் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்கள் (ஆட்டமிழக்காது 174) பெற்ற வீரர், ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணிக்காக அதிக சதம் (15) பெற்ற வீரர்களில் ஐந்தாவது இடம், ஒருநாள் போட்டிகளில் இலங்கைக்காக வேகமாக 4000 ஓட்டங்களை பெற்றவர் என்று அவரது சாதனைப் பட்டியல் நீண்டது.

என்றாலும் கிரிக்கெட் நிர்வாகம் மற்றும் தேர்வு செயற்பாடுகளில் அவரது அனுபவம் பூஜ்ஜியம் தான்.

தேர்வுக் குழுவுக்கு நியமிப்பதற்காக 10 பேர் கொண்ட பட்டியலை இலங்கை கிரிக்கெட் சபை தந்திருப்பதாகவும், அது பற்றி அவதானம் செலுத்தி புதிய தேர்வுக் குழுவை நியமிக்கப்போவதாகவும் ஹரீன் பெர்னாண்டோ கூறி இருந்தார்.

பரிந்துரைக்கப்பட்டிருக்கும் இந்தப் பெயர்களில் பிரமோத்ய விக்ரமசிங்க உட்பட தற்போதைய தேர்வுக் குழுவில் இருப்பவர்களின் பெயர் முன்னிலையில் இருப்பதாக தெரியவருகிறது. என்றாலும் அமைச்சர் இளம் தேர்வுக் குழு ஒன்றை நியமிப்பதில் ஆர்வம் காட்டுவதாகவும் தெரிகிறது. அதாவது அண்மையில் ஓய்வு பெற்றவர்கள் இந்தத் தேர்வுக் குழுவுக்கு இணைக்க வாய்ப்பு உள்ளது. இதுவே சர்வதேச அளவில் புதிய போக்காக இருக்கிறது.

பாகிஸ்தான் புதிய தேர்வுக் குழு தலைவராக 38 வயது வஹாப் ரியாஸை நியமித்ததோடு, இங்கிலாந்து கிரிக்கெட் தேர்வாளராக 37 வயது லுக் ரைட் நியமிக்கப்பட்டார். இந்த இருவருமே அண்மைக் காலம் வரை முதல்தர போட்டிகளில் ஆடி வந்தார்கள்.

உபுல் தரங்க தவிர, புதிய தேர்வுக் குழுவில் டில்ருவன் பெரேரா (41), அஜந்த மெண்டிஸ் (38) மற்றும் தரங்க பரணவிதான (41) ஆகியோரும் நியமிக்கப்படவிருப்பதாக செய்திகள் கசிகின்றன.

உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் அடுத்து இலங்கை அணி சிம்பாப்வேயுக்கு எதிராக ஜனவரி மாதம் ஒருநாள், டி20 சர்வதேச போட்டிகளில் ஆடவுள்ளது. இலங்கை வரும் சிம்பாப்வே அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 சர்வதேச போட்டிகளில் ஆடும்.

இதற்கான இலங்கை அணியை நியமிக்கப்படும் புதிய தேர்வுக் குழுவே தேர்வு செய்ய வேண்டி இருக்கும். அடுத்த ஆண்டில் முக்கியமாக அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் டி20 உலகக் கிண்ணப் போட்டிகளும் நடைபெறப் போகிறது. உலகக் கிண்ணத்தின் பின்னர் இலங்கை அணியில் சில மாற்றங்கள் செய்ய வேண்டிய தருணமாகவும் இது இருக்கிறது.

எனவே புதிய தேர்வுக் குழுவுக்கான பொறுப்புகள் சாதாரணமானதல்ல. இலங்கை அணியின் எதிர்காலத்தையே தீர்மானிக்கப்போகிறது.

**எஸ்.பிர்தௌஸ்...**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2023 டிசம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை



Sherin

# அலெக்சாண்டர் கல்லறை எங்கே?

மகா அலெக்வாண்டர் ஆசியா எங்கும் படையெடுத்து, பால்கன்ஸ் முதல் பாகிஸ்தான் வரை பண்டைய உலகின் மிகப்பெரிய சாம்ராச்சியத்தை ஆட்சி புரியும்போது அவரது வயது 32 மாத்திரமே. பின்னர் கி.மு. 323 இல் அவர் உயிரிழந்தார். அவரது இராச்சியம் மணல் வீடு போல சரிந்தது.

தற்போதைய ஈராக் இருக்கும் பபிலோனில் சுகவீனமுற்று உயிரிழந்தார். அவரது திடீர் மரணத்திற்கு என்ன காரணம் என்பது கூட அவிழ்க்கப்படாத முடிச்சாக இருக்கிறது.

சில வரலாற்றாசிரியர்கள் அவரது மரணத்திற்குக் காரணம் அவரது காயங்களில் ஏற்பட்ட தொற்று என்று கூறும் அதே நேரம் மலேரியா காரணமாக அவர் இறந்ததாக வேறு சிலர் நம்புகின்றனர்.

வரலாற்று ஆவணங்களின்படி அவரது ஜெனரல்களில் ஒருவர் அவரது உடலை இரண்டு ஆண்டுகள் கழித்து பண்டைய எகிப்துக்கு எடுத்து வந்தாராம். அவரது உடல் ஆரம்பத்தில் மம்பீஸ் நகரில் வைக்கப்பட்ட நிலையிலேயே பின்னர் அவரது கல்லறை அலக்சாண்ட்ரியா நகரில் கட்டப்பட்டது. அவரது கல்லறையை ஜூலியஸ் சீசர், கிலியோபட்ரா மற்றும் அகஸ்டஸ் போன்றவர்கள் தரிசித்ததாக வரலாறு சொல்கிறது.

என்றாலும் அந்தக் கல்லறை சரியாக எங்கே இருக்கிறது என்பது இப்போது யாருக்கும் தெரியவில்லை. அந்த கல்லறை கட்டப்பட்டது "அரண்மனைகள் மாவட்டத்தில." அது தற்போது கடலில் மூழ்கிவிட்டது எனவே கடலுக்கு கீழ் இருக்க வேண்டும் என்பது சிலரது கூற்று. அப்படியாக இருந்தால் அந்தக் கல்லறை இப்போது அழிந்திருக்க வேண்டும்.

அந்தக் கல்லறை இப்போது கண்டுபிடிக்கப்பட்டாலும் அதனை நிரூபிப்பதற்கான அடையாளங்கள் குறைவாகவே இருக்கக் கூடும் என்பது அவர்களின் கருத்து





பூகோள சஞ்சாரம்
பிர்தௌஸ்

# கொலை செய்து செய்தி எழுதிய பத்திரிகையாளர்

மெசிடோனியாவின் "உட்ரன்ஸ்கி வெனட்சிக்" என்ற பத்திரிகையை மக்கள் ஆர்வமாக வாசிக்க ஆரம்பித்தார்கள். அந்த பத்திரிகைக்கு எழுதிய வ்ளாடோ டனஸ்கி என்ற குற்றவியல் செய்தியாளரின் எழுத்துகள் வாசகர்களை சுண்டி இழுத்தது. அண்மையில் இடம்பெற்ற கொலைகள் பற்றி அவர் எழுதிய செய்திகள் மற்றும் கட்டுரைகள் சம்பவத்தை அருகில் இருந்து பார்த்தது போல் தெளிவாக இருந்தது.

இது வாசகர்களுக்கு மாத்திரமல்ல பொலிஸாருக்கும் ஆர்வத்தைத் துண்டியது. கிசேவோ நகரில் மூன்று பெண்கள் கொல்லப்பட்டிருந்தார்கள், மற்றொரு பெண் காணாமல்போயிருந்தார். அதுபற்றி பொலிஸ் விசாரணைகளை முன்னெடுப்பதில் முன்னேற்றம் இல்லாமல் இருந்தது.

ஆனால், டனஸ்கியின் கட்டுரைகள் அந்தக் கொலைகள் பற்றி விலாவரியாக இருந்தது. ஒன்று அவர் கற்பனையில் எழுத வேண்டும், இல்லையென்றால் அந்தக் கொலைகளுக்கும் அவருக்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று பொலிஸார் ஊகிக்க ஆரம்பித்தார்கள்.

எதிர்பார்த்தது போலவே கொல்லப்பட்டவர்களின் உடல்களில் இருந்து எடுக்கப்பட்ட மரபணு அந்த செய்தியாளரின் மரபணுவுடன் பொருந்தியது. இதனை அடுத்து 56 வயதான அந்த செய்தியாளர் 2008 ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார்.

இரு கொடூர கொலைகள் தொடர்பில் அவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. மூன்றாவது கொலை பற்றியும், காணாமல்போன பெண் பற்றியும் தனது கட்டுரையில் அவர் விலாவரியாக எழுதி இருப்பதால் அந்தக் கொலைகள் பற்றி தகவல்களை திரட்ட அவரிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஆனால் டனஸ்கி விசாரணையாளர்களுக்கு உதவவில்லை, வழக்கைக் கூட எதிர்கொள்ளவில்லை. கைது செய்யப்பட்டு அடுத்த நாளே தனது சிறைக்கூண்டில் தற்கொலை செய்து கொண்டார்.

அவரது தற்கொலை கூட பயங்கரமாக இருந்தது. தண்ணீர் நிரப்பிய பாத்திரத்தில் மூச்சு நிற்கும் வரை தனது தலையை அமிழ்த்தி வைத்து தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

டனஸ்கியினால் கொல்லப்பட்ட அனைத்து பெண்களும் தனது சொந்த ஊரில் துப்புரவு வேலை செய்யும் வயதான பெண்கள். அந்தப் பெண்களின் நிர்வான உடல்கள் பிலாஸ்டிக் பைகளில் போடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. தொலைபேசி வயரால் கழுத்தை நெரித்து கொல்லப்படுவதற்கு முன்னர் அவர்கள் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் உடலில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். கடைசியாகக் கொல்லப்பட்ட 65 வயதுப் பெண்ணின் தலையில் 13 ஆழமான காயங்கள் இருந்ததாக பொலிஸார் கூறுகிறார்கள்.

இந்த விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட மற்றொரு பொதுவான அம்சம் கொல்லப்பட்ட அனைத்து பெண்களும் டனஸ்கியின் தாயின் சாயலைக் கொண்டவர்கள். தாயுடன் அவருக்கு நல்ல உறவு இருந்ததில்லை.

குற்றவாளியை கண்டுபிடித்தது பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதலை தந்தாலும், கைது செய்யப்பட்ட நபர் ஒரு செய்தியாளராக கொலைகள் தொடர்பில் தம்மை பேட்டி கண்டதுதான் அவர்களால் சகிக்க முடியவில்லை.

# செவ்வாயின் விசித்திர நிலவு

செவ்வாய் கிரகத்தின் இரு நிலவுகளில் மிகப்பெரியதான போபோஸ் விசித்தரமானது. ஒழுங்கற்ற வடிவில் 11 கி.மீ அளவிலான சராசரி அரைவிட்டம் கொண்ட போபோஸ், 1877 ஆம் ஆண்டு அமெரிக்க வானவியலாளர் அசாப் ஹோல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு இன்று வரையிலாக தொடர்ச்சியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இந்த நிலவு செவ்வாயின் மேற்பரப்பில் இருந்து வெறுமனே 6,000 கிலோமீற்றர் இடைவெளியில் இருக்கிறது. அதாவது இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட எந்த ஒரு கிரகத்திலும் இத்தனை நெருக்கமாக நிலவொன்று கண்டுபிடிக்கப்பட்டதில்லை.



இதனை விடவும், இந்தக் கிரகம் செவ்வாயின் சுழற்சியை விடவும் செவ்வாயை வேகமாக சுழன்றுவருகிறது. அதாவது இந்த நிலவு செவ்வாயை வலம்வருவதற்கு எடுக்கும் நேரம் 7 மணி மற்றும் 39 நிமிடங்கள். இதனால் செவ்வாயின் மேற்கால் உதிக்கும் போபோஸ் 4 மணி மற்றும் 15 நிமிடங்கள் அல்லது அதற்கு குறைவான காலத்தில் நகர்ந்து கிழக்காக மறைந்து விடும். இப்படி செவ்வாயில் ஒரு நாளைக்கு இரண்டு முறை இந்த நிலவு உதித்து மறைந்து விடும்.



இந்த விசித்திரமான பண்புகளால் இது செயற்கையான ஒரு நிலவு என்று சிலர் வாதிட ஆரம்பித்தனர். போபோஸ் நிலவில் காணப்படும் விவரிக்க இயலாத வரி தடங்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே அதன் மீதான சந்தேகங்களையும் அதன் தொடர்ச்சியான ஆர்வத்தையும் அதிகரித்துக்கொண்டே போகிறது.

சில கோட்பாடுகள் போபோஸ் ஆனது கைவிடப்பட்ட வேற்றுக்கிரக வாசியின் வாகனத்தில் இருந்து தவறிய பாகம் என்றும் ஈர்ப்பு விசையால் அது செவ்வாயின் சுற்றுவட்டத்தில் சிக்கி இருப்பதாகவும் கூறப்படுகிறது.



நண்பர் 1 : தீபாவளிக்கு ரிலீசாகற படங்கறதால இந்த மாதிரி சீன் வைக்கிறது கொஞ்சம் ஓவர்.
நண்பர் 2 : என்ன சீன்?
நண்பர் 1 : ஹீரோயின் தொப்புள்ல சங்குச் சக்கரம் விடறமாதிரி!

ராணி : தலையிலேர்ந்து அடிக்கடி முடி கொட்டறதுக்கு முக்கிய காரணம் என்னன்னு தெரியுமா ... ?
வேனி : தெரியலையே.... என்னது ?
ராணி : தலையிலே முடி இருக்கறது தான்..





வேலு : "விசிடி கடையெல்லாம் மூடினதால நம்ம டைரக்டர் கை ஒடிஞ்ச மாதிரி ஆயிட்டார்"
ரமனன் : "ஏன் இவங்கதானே திருட்டு வி.சி.டி.ய ஒழிக்கனும்னு குதிச்சாங்க?"
வேலு : "தமிழ் சிடிக்கள மட்டும் தான் சொன்னாங்க இங்கிலீஷையும் ஒழிச்சுட்டா எதப்பாத்து இவர் படம் எடுக்க முடியும்"



கோபு : தரையில தண்ணியாயிருக்கு பார்த்து நடந்து போங்க!.. ஒருக்கால் வழுக்கினாலும் வழுக்கும்
பாபு : ஒருக்கால் தான் வழுக்குமா! ரெண்டு காலும் வழுக்காதா ...?

ஒருவர் : சார், பேங்க் கொள்ளை பற்றி ஒரு துப்பு கிடைச்சிருக்கு, கொள்ளை அடிச்சவன் கம்ப்யூட்டர் நாலெட்ஜ் உள்ளவன். நீதி, நேர்மைக்கு கட்டுப்பட்டு நடக்கிறவன்.
மற்றொருவர் : எப்படிச் சொல்றீங்க ?
ஒருவர் : ஒவ்வொரு அக்கவுண்ட்ல இருந்தும் ஆயிரம் ரூபா கரெக்டா எடுத்து அதை அக்கவுண்ட்ல கழிச்சு சரியா கணக்கு டாலி பண்ணிட்டு போயிருக்கான்.



"டாக்டர், நீங்க எழுதிக்கொடுத்த மருந்தில உடம்பு கொஞ்சங்கூட வத்தல. குண்டாவே தான் இருக்கு"
""அப்படியா? உங்களுக்கு எந்த ஊருன்னு சொன்னீங்க?''
""வத்தல''



""ராதாவுக்கு பத்து ரூபாய் கடன் கொடுத்தேன். அதில் ஒரு ரூபாய் திருப்பித் தந்துவிட்டாள்...ஒன்பது ரூபாய் தரவில்லை. அவளை என்ன சொல்லுவ''
""நயன்'தாரா''





""தலைவருக்கு பொதுஅறிவு கம்மின்னு எப்படிச் சொல்ற?''
""ஃபேஸ்புக் எந்தக் கடையில கிடைக்குமுன்னு கேட்கிறாரு''

ஒருவர் : எங்கே, இந்தக் கைதியை விசாரணை பண்ணுங்க பார்க்கலாம்.
மற்றொருவர் : டேய்! பாக்கெட்ல எவ்வளவு பணம் வெச்சிருக்கே ?





""ஆபரேசனுக்கு பின்னாடி கண் நல்லாத் தெரியும்னு டாக்டர் சொன்னார்''
""நல்லாத் தெரியுதுங்களா?''
""பின்னாடி எங்க தெரியுது. இப்பவும் முன்னாடிதான் தெரியுது''

""உங்க மனைவிக்குப் பட்டுப்புடவை வாங்கித் தந்தீங்களாமே, காஞ்சிப்பட்டா?ஆரணிப்பட்டா?''
""கடன் பட்டு "



"உங்க பேங்க்ல கால்நடைக்கு லோன் கொடுப்பீங்களா?''
"கண்டிப்பா!''
"அப்படின்னா நான் பக்கத்து ஊர்ல இருந்து கால்நடையா 18 கிலோமீட்டர் நடந்த வந்திருக்கேன்; எனக்கு உடனே லோன் கொடுங்க'!





"டாக்டர் என் கணவன் எப்போ கண் திறந்து பேசுவார்?''
"பேசுவார்... ஆனா கண் திறந்து பேசமாட்டார். வாயைத் திறந்து தான் பேசுவாரு''

"பொங்கலுக்கும் இட்லிக்கும் என்ன வித்தியாசம்?''
"பொங்கலுக்கு லீவு விடுவாங்க; இட்லிக்கு லீவு விடமாட்டாங்க!''



# தசாப்தத்தை கடந்து பயணிக்கும் தினகரன் வாரமஞ்சரியின் வாசகர் வட்டம்














தினகரன் வாரமஞ்சரி வாசகர் வட்டத்தின் ஏற்பாட்டில் 2022/2023ஆண்டுக்கான உயர் தரப்பரீட்சையில் சித்தி பெற்றவர்களையும், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாண வர்களையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அட்டன், கார்பெக்ஸ் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

வாசிப்புத்துறையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் 2012இல் ஆரம்பிக்கப்பட்ட தினகரன் வாரமஞ்சரி வாசகர் வட்டம் இன்று, ஒரு தசாப்தத்தையும் கடந்து பயணிப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தலைவர் ராம்





# தினகரன் வாரமஞ்சரி அனுசரணையில் கட்டாரில் நடந்தேறிய 'ஸ்கை தமிழ்' விருது விழா

















கட்டார் வாழ் இலங்கை மற்றும் இந்திய ஆளுமைகளை கௌரவிக்கும் ஸ்கை தமிழ் விருது 2023 விழா ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித்தின் தலைமையில் இந்திய கலாசார மையத்தில் உள்ள அசோகா ஹோலில் அண்மையில் நடைபெற்றது. தினகரன், தினகரன் வாரமஞ்சரி, துணிந்தெழு சஞ்சிகை ஆகியவற்றின் ஊடக அனுசரணையில் இடம்பெற்ற இவ்விழாவில், பிரதம அதிதியாக கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீனும் கௌரவ அதிதியாக இந்திய கலாசார மையத்தின் பொதுச் செயலாளர் மோகன் குமாரும் சிறப்பு விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமரும், இலங்கை தேசிய பத்திரிகைகளான தினகரன், தினகரன் வாரமஞ்சரின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் கலந்து கொண்டனர்.இவ்விழாவில், கல்வி, கலை, விளையாட்டு, வணிகம், சமூக செயற்பாடு, ஊடகம், எழுத்து மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சாதித்தோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.





# சங்கவி பிலிம்ஸ் அனுசரணையில் யாழ். நகரில் கலாவிபூஷண விருது விழா















யாழ். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் தலைவர் எ.பெலிக்ஸ் ஜோய் தலைமையில் நடைபெற்ற மாற்றுதிறனாளிகளை கௌரவிக்கும் விழாவில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், சிறப்பு அதிதிகளாக தினகரன் நாளிதழ் மற்றும் தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் அகல்யா செகராசா, சங்கவி பிலிம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர் பணிப்பாளர் கலாநிதி துரைராசா சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டு இவர்களை கௌரவித்தனர்.











புரவலர் ஹாசிம் உமர் தலைமையில்;

# கட்டாரில் இனிய நந்தவனம் அறிமுக விழா













"இனிய நந்தவனம்" என்ற இதழியல் அதன் பயணத்தில் பல சிறப்பிதழ்களை வெளியிட்டு வெற்றி நடை கண்டு வருகிறது. அந்த வரிசையில் கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைச் சிறப்பிதழை 100 பக்கங்களில் வெளியிட்டு இலங்கையில் ஆறு இடங்களில் வெளியிட்டு வைத்தது. இந்த இலங்கைச் சிறப்பிதழ், உலகத் தமிழர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிலையில், அதன் தொடர்ச்சியாக அண்மையில் கட்டார் நாட்டில் டோகாவில் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் அதன் அறிமுக விழா நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கட்டார் வாழ் எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இந்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு நல்கிய தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவருக்கும் இவ்விழாவில் நன்றி தெரிவிக்கப்பட்டது. இனிய நந்தவனம் சர்வதேச தமிழர்களுக்கான இதழாக வளர்ந்து வருவதை எண்ணி பெருமையடைவதாக கூறிய இலக்கிய புரவலர், அடுத்து, கட்டார் சிறப்பிதழை வெளியிட முயற்சி எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# சர்வதேச தமிழ் வானொலியின் ஆண்டு விழா

















பூமணி அம்மா அறக்கட்டளை மற்றும் தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையுடன் சர்வதேச தமிழ் வானொலியின் 27 ஆவது ஆண்டு விழா யாழ் பாதுகாவலர் மண்டபத்தில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் நடைபெற்றது. நிகழ்விற்கு உலக தமிழ் பண்பாட்டு இயக்கத் தலைவர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் பல்துறை ஆளுமைகளுக்கு விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. அத்தோடு இவ்வருடம் சித்தியடைந்த தரம் ஐந்து மாணவர்களும் ஆசிரியர்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

2023 டிசம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை 9



## டப்பிங்கை நிறைவு செய்த மாளவிகா



விக்ரம், பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி உட்பட பலர் நடித்துள்ள படம் 'தங்கலான்'.

பா.ரஞ்சித் இயக்கியுள்ள இந்தப் படத்தை ஸ்டூடியோ கிரீன் நிறுவனத்துடன் இணைந்து நீலம் புரொடக்ஷன்ஸ் தயாரிக்கிறது. ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார். ஜன.26ம் திகதி வெளியாகும் இந்தப் படம் கோலார் தங்க வயல் பின்னணியில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில் இதன் டப்பிங் பணிகளை மாளவிகா மோகனன் நிறைவு செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

## கருப்பழகியின் சொத்து மதிப்பு

ரோஜாவின் முதல் படமான செம்பருத்தி படத்தில் நடித்த போதே அந்த படத்தின் இயக்குனர் ஆர்.கே. செல்வமணிக்கும் அவருக்கும் காதல் பத்திக்கிச்சு. இதை அடுத்து ரோஜாவை வைத்து ஆர்கே செல்வமணி ஒரு சில படங்களை இயக்கி, அதன்பின் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். இந்த தம்பதியருக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். கடந்த 1999ல் தெலுங்கு தேச கட்சியில் இணைந்தார்.

10 வருடத்திற்கு பிறகு அந்த கட்சியை விட்டு விலகி, ஓய் எஸ் ஆர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். தற்போது எம்எல்ஏவாக தேர்வு செய்யப்பட்டு இருக்கும் ரோஜா, ஆந்திராவில் இளைஞர் நலத்துறை அமைச்சராக இருக்கிறார்.

இவருக்கு மொத்தமாக 80 கோடி சொத்துக்கள் உள்ளது. அதிலும் ஹைதராபாத் மற்றும் சென்னையில் அரண்மனை போல் வீடு உள்ளது. ரோஜா தனது 50 வது பிறந்தநாள் அன்று ஹோம் டூர் வீடியோவை போட்டு பலரையும் வாயடைக்க வைத்தார். அது மட்டுமல்ல இவரிடம் ஆடம்பரமான சொகுசு கார்களும் உள்ளன.

## திருமண உறவில் முறிவு ஷீலா அதிரடி முடிவு

திருமண உறவிலிருந்து வெளியேறுவதாக 'மண்டேலா', 'திரவுபதி' உள்ளிட்ட படங்களில் நடித்த ஷீலா ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு வெளியான 'ஆறாது சினம்' திரைப்படத்தின் மூலம் அறிமுகமானவர் நடிகை ஷீலா. பரதநாட்டியக் கலைஞரான இவர், 'கூத்துப்பட்டறை' மூலம் பல்வேறு மேடை நாடகங்களிலும் நடித்துள்ளார்.

2017ஆம் ஆண்டு வெளியான 'டூலெட்' திரைப்படத்தில் இவரது நடிப்பு பாராட்டப்பட்டது. தொடர்ந்து சிவகார்த்திகேயன் நடித்த 'நம்ம வீட்டு பிள்ளை' படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மலையாளத்தில் நல்ல வரவேற்பை பெற்ற 'கும்பலாங்கி நைட்ஸ்' படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தார்.

மோகன் ஜி இயக்கத்தில் வெளியான 'திரவுபதி' படத்தில் நாயகியாக நடித்திருந்தார். மடோன் அஸ்வின் இயக்கத்தில் யோகிபாபு நடித்த 'மண்டேலா' திரைப்படத்திலும் பிரதான கதாபாத்திரங்களில் ஒருவராக நடித்திருந்தார். சமீபத்தில் வெளியான 'ஜிகிர்தண்டா டபுள் எக்ஸ்' படத்திலும் லூர்து என்ற கதாபாத்திரத்தில் தோன்றியிருந்தார். இந்த நிலையில், தனது திருமண வாழ்க்கையில் இருந்து வெளியேறுவதாக நடிகை ஷீலா தனது சமூக வலைதள பக்கங்களில் தெரிவித்துள்ளார்.

தனது கணவரை டேக் செய்து தனது இந்த முடிவை அவர் அறிவித்துள்ளார். மேலும் தனது கணவர் உடனான புகைப்படங்களையும் சமூக வலைதள பக்கத்தில் இருந்து ஷீலா நீக்கியுள்ளார்.





## திரைப்படமாகும் 'பூக்குழி'

எழுத்தாளர் பெருமாள் முருகனின் 'பூக்குழி' நாவல் திரைப்படமாக உருவாகிறது. 'சேத்துமான்' படத்தை இயக்கிய தமிழ், இதை இயக்குகிறார். தர்ஷன் கதாநாயகனாக நடிக்கிறார். தர்ஷனா ராஜேந்திரன் நாயகியாக நடிக்கிறார். எஸ்.வினோத் குமார் தயாரிக்கும் இந்தப் படத்துக்கு தீபக் ஒளிப்பதிவு செய்கிறார். பிந்து மாலினி, வேதாந்த் பரத்வாஜ் இசை அமைக்கின்றனர். பிரபல நாவலாசிரியர் பெருமாள் முருகன் வசனம் எழுதுகிறார். இதன் படப்பிடிப்பு பெங்களூரில் தொடங்கியது.

படம் பற்றி இயக்குநர் தமிழ் கூறும்போது, " பெருமாள் முருகனின் இந்த நாவல் என்னைப் பாதித்ததால் படமாக்க முடிவு செய்தேன். நாவலில் இருந்து சினிமாவுக்காக சில விஷயங்களை, எழுத்தாளர் பெருமாள் முருகனின் சம்மதத்தோடு மாற்றியிருக்கிறேன். இதில் சாதிய அரசியலும் இருக்கும். தர்மபுரி பின்னணியில் நடக்கும் கதை இது. கதாநாயகிக்கு முக்கியத்துவம் இருப்பதால், நன்றாக நடிக்கத் தெரிந்த நாயகி தேவைப்பட்டார். அதனால் தர்ஷனா ராஜேந்திரனை ஒப்பந்தம் செய்தோம். கதை, அவர் பார்வையில் இருந்துதான் நகரும். கதாநாயகன் பக்கத்து வீட்டு பையனை போன்ற தோற்றம் கொண்டவராக வேண்டும் என்பதால் தர்ஷனை நடிக்க வைத்திருக்கிறோம். சமகாலத்தில் நடக்கும் கதையாக படம் உருவாகி வருகிறது" என்றார்.



## பிருத்விராஜின் 'ஆடு ஜீவிதம்'



பிருத்விராஜ் நடித்துள்ள திரைப்படம், 'ஆடு ஜீவிதம்'. விஷுவல் ரொமான்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தை பிளெஸ்ஸி இயக்கியுள்ளார். ஹாலிவுட் நடிகர் ஜிம்மி ஜீன் லூயிஸ், அமலா பால், கே.ஆர்.கோகுல், அரபு நடிகர்களான தலிப் அல் பலுஷி, ரிக்காபி உட்பட பலர் நடித்துள்ளனர். கே.எஸ். சுனில் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைத்துள்ளார்.

பென்யாமின் எழுதி மலையாளத்தில் புகழ்பெற்ற ஆடு ஜீவிதம் நாவலை மையமாக கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்துக்காக பிருத்விராஜ் உடல் எடையை குறைத்து நடித்துள்ளார். கேரளாவில் இருந்து அரபு நாட்டுக்கு வேலைக்குச் செல்லும் நஜீப் என்பவருக்கு ஆடு மேய்க்கும் வேலை கிடைக்கிறது. அங்கு அவர் சந்திக்கும் கொடுமைகள்தான் இந்தப் படத்தின் கதை. கடந்த சில வருடங்களாகத் தயாரிப்பில் இருக்கும் இதன் வெளியீட்டு தேதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி, அடுத்த வருடம் ஏப்.10ம் திகதி, இந்தி, மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இந்தப் படம் வெளியாக உள்ளது.

## 2023ல் முதல் நாளில் அதிகம் வசூல் செய்த 5 படங்கள்

முதல் நாள் முதல் ஷோ என்பது இந்திய சினிமாவில் தற்போது மிகப்பெரிய அளவில் ட்ரெண்டாகி விட்டது. எந்த நடிகருக்கு எப்டி எப் எஸ் ஷோவில் அதிக வசூல் ஆகிறது என்பதை இப்போதெல்லாம் போட்டியாகவே மாறிவிட்டது. அப்படி இந்த வருடத்தில் முதல் நாள் முதல் ஷோவில் அதிக லாபத்தை அடைந்த ஐந்து படங்களை பற்றி பார்க்கலாம்.

2023ல் முதல் நாளில் அதிகம் வசூல் செய்த 5 படங்கள்லியோ: லியோ முதல் நாள் முதல் ஷோ வசூல் இந்திய சினிமாவையே அதிர்வடைய செய்து விட்டது. பெரும் பரபரப்புகளுக்கு இடையே ரிலீஸ் ஆன இந்த படத்தின் முதல் ஷோ வசூல் 148.50 கோடியாகும். கடந்த அக்டோபரில் ரிலீஸ் ஆன இந்த படத்திற்கு பிறகு வெளியான எந்த படமும் இந்த கணிசமான மதிப்பை தாண்டவில்லை. பிரபாஸ் நடிப்பில் வெளியாக இருக்கும் சலார் படம் இந்த வசூலை முறியடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதிபுருஷ்: இந்த வருடத்தில் ரிலீசான படங்களில் அதிக நெகட்டிவ் விமர்சனத்தை பெற்ற படம் என்றால் அது பிரபாஸ் நடிப்பில் வெளியான ஆதிபுருஷ் தான். ராமாயண கதையை மையமாகக் கொண்டு வெளியான இந்த படம் கலவையான விமர்சனங்களை பெற்றிருந்தாலும் முதல் நாள் வசூலில் சாதனை படைத்திருக்கிறது. லியோ படத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தில் 140 கோடி வசூலோடு இந்த படம் இருக்கிறது.

ஜவான்: பிரபல இயக்குனர் அட்லி இந்தியில் அறிமுகமான படம் ஜவான். முதல் படத்திலிருந்து இந்தி சினிமாவில் வெற்றி பெற்றதோடு பாலிவுட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கானுக்கு மிகப்பெரிய ஹிட்டை பெற்று தந்திருக்கிறார். இந்த படம் நயன்தாராவுக்கும் இந்தி திரை உலகில் மிகப்பெரிய அறிமுகத்தை கொடுத்திருக்கிறது. இந்த வருடம் ரிலீசான படங்களில் முதல் நாள் வசூலில் 129.60 கோடி பெற்று இது மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

அனிமல்: ரன்பீர் கபூர் நடிப்பில் ரிலீஸ் ஆகி இருக்கும் அனிமல் படம் மிகப்பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டது. ரசிகர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இந்த படம் அமையவில்லை என்றாலும் முதல் நாள் வசூலை கெட்டியாக பிடித்து விட்டது. இந்தப் படத்தின் முதல் நாள் வசூல் 116 கோடி ஆகும்.

பதான்: பாலிவுட் திரையுலகில் அடுத்தடுத்து முன்னணி ஹீரோக்களின் படங்கள் எல்லாம் மண்ணை கவ்விக் கொண்டிருந்தன. அந்த சமயத்தில் ஷாருக்கான் மற்றும் தீபிகா படுகோன் இணைந்து நடித்த பதான் படம் மிகப்பெரிய அளவில் எதிர்பார்க்கப்பட்டது. ஷாருக்கான் தன்னுடைய ரசிகர்களின் எதிர்பார்ப்பை நிறைவாக பூர்த்தி செய்திருந்தார். இந்த படம் ரிலீசான முதல் நாளில் 106 கோடி வசூலித்திருக்கிறது.



## Herionக்கு அக்காவாக Lady Super Star

கோலிவுட்டில் லேடி சூப்பர் ஸ்டார் ஆக ரவுண்டு கட்டிக் கொண்டிருக்கும் நயன்தாரா கடந்த நவம்பர் 18ஆம் திகதி பிறந்தநாள் கொண்டாடினார். அவருக்கு விக்னேஷ் சிவன் 4 கோடி விலை உயர்ந்த காரை பரிசளித்து ஆச்சரியப்படுத்தினார். இப்படி எல்லாம் செய்யும் விக்னேஷ் சிவன் எதற்கு நயன்தாராவின் சினிமா கேரியரை கண்டம் ஆக்குகிறார் என ரசிகர்கள் இப்போது கொந்தளிக்கின்றனர்.

ஏனென்றால் விக்னேஷ் சிவனின் புதிய படத்தை ராஜ்கமல் இன்டர்நேஷனல் பிலிம்ஸ் தயாரிப்பதாக இருந்தது. ஆனால் பட்ஜெட் அதிகம் என்பதால் இப்போது அந்த படத்தை 7 ஸ்க்ரீன் ஸ்டூடியோஸ் நிறுவனத்திற்கு சென்றுள்ளது. இந்த படத்தில் விக்னேஷ் சிவன் 'லவ் டுடே' படத்தின் இயக்குநரும் நடிகருமான பிரதீப் ரங்கநாதனை கதாநாயகனாக நடிக்க வைக்கிறார்.இந்த படத்தில் கதாநாயகியாக பாலிவுட் நடிகை ஒருவர் நடிக்கிறார். இவர்களுடன் எஸ்ஜே சூர்யா, மிஸ்கின், யோகி பாபு போன்றவர்களும் இணைந்து நடிக்கின்றனர். ஆனால் இப்போது ஆச்சரியம் என்னவென்றால் இந்த படத்தில் ஹீரோயினுக்கு அக்காவாக நயன்தாரா நடிப்பதாக தகவல் வெளியாகி பலரையும் ஆச்சரியப்படுத்தி உள்ளது.

# காதலில் நீங்கள் எந்த நிலைமை?



மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்பார்கள். பழமொழியாக இருந்தாலும் இக்காலத்திற்கு அது மிகவும் பொறுத்தமானதாக உள்ளது.

துவக்கத்தில் துள்ளலாக இருக்கும் காதல், காலப்போக்கில் காற்று இறங்கிய பலூன் போல தளர்ந்து விடுகிறது.

வாழ்க்கை துணை என்ற ஸ்தானத்தில் இருப்பவரால் வாழ்வின் மிகப்பெரும் பாரம் ஆகவும் முடியும்.

காதல் வாழ்க்கை கசந்து போகும் வேளையில் அதனை சீர்செய்வது அவசியமாகிறது. அதற்கு, முதலில் உங்கள் காதல் எந்த கட்டத்தில் இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.

காதலில் சிறிய பிரச்சனைகள் வருவது சகஜம் தான். மோதல் கூட பல நேரங்களில் காதலில் முடிவதுண்டு.

அதே சமயம், சிறிய பிரச்சனைகள் கூட கண் இமைக்கும் நேரத்தில் பெரிதாக வளர்ந்து உங்கள் அன்பை மறக்கடிக்கும் அளவிற்கு அபாய கட்டத்தை தாண்டிவிடும்.

இனி இவருடன் வாழவே முடியாது என்ற நிலை வந்துவிடும்.

எனவே, முன்னெச்சரிக்கையாக உங்கள் காதல் தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிந்துகொண்டு அதனை சீர் செய்தால் மட்டுமே உங்கள் உறவு பிழைக்கும். மேற்கண்டது போல உங்கள் வாழ்க்கை துணை, வாழ்க்கை பாரமாக மாறிவருகிறாரா என்பதை தெரிந்துகொள்ள சில அறிகுறிகள் இருக்கின்றன. அவை கீழ்வருமாறு:

**பதட்டம், சோர்வு அல்லது மன உளைச்சல்**

காதலில் வென்றவர்கள் மேற்கண்டதற்கு முரணான உணர்வுகளை அனுபவிப்பர். ஆனால், காதலில் சொதப்பியவர்கள் எந்நேரமும் பதட்டமாக சுற்றித் திரிவர். காதலருடன் இருப்பதை இனிமையாக உணராமல் அதை ஒரு சுமையாகக் கருதுவர்.

**காதலரிடம் உள்ள பிரச்சனைகளில் அதிக கவனம்**

காதலரின் நலனில் அக்கறை கொள்வதை மறந்து காதலரிடம் உள்ள பிரச்சனைகளை பற்றியே எந்நேரமும் சிந்தித்துக் கொண்டிருப்பர். பிரச்சனைகளில் இருந்து விடுபட வேண்டுமென்று உங்கள் காதலர் விரும்பினாலும் நீங்கள் அவரை நினைவுபடுத்திக் கொண்டே இருப்பீர்கள். அவருக்கு எல்லாமுமாய் நீங்கள் இருப்பதாகவும், அவர் உங்களை ஆதரிக்காதது போலவும் உணர்வீர்கள்.

**காதலரிடம் அன்பு செலுத்த இயலாது**

காதலர் உங்களை மதிக்காதது போலவும், உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது போலவும் உணர்வீர்கள். மேலும், உங்கள் உணர்வுகளை மதிக்காது அவர்கள் விருப்பத்தின் படியே செயல்படுவது போல தோன்றும்.

**நீங்கள் நீங்களாக அவருடன் இருக்க இயலாது**

உங்கள் உணர்வுகளை அவர்களிடம் உள்ளபடியே வெளிப்படுத்த தயங்குவீர்கள். சண்டை, சச்சரவை தவிர்க்க அவருடன் அதிகம் பேச்சு கொடுக்காமல் இருப்பீர்கள். நீங்கள் நினைப்பது எதையும் உங்கள் காதலர் ஏற்க மாட்டார் என்றே தோன்றும்.

**தனிமைக்காக ஏங்குவீர்கள்**

காதலருடன் இல்லாத நேரமே அமைதியை உணர்வீர்கள். இதனால் தனிமையை அதிகம் நாடுவீர்கள். காதலருடன் இருக்கும் நேரம் கடும் மன உளைச்சல் கொடுப்பதாகத் தோன்றும்.



# மிருதுவான கன்னங்கள்

சமப்படுத்தப்பட்ட கன்னங்கள் தெளிவான தோற்றத்தைத் தரும் என கூறப்படுகிறது.

1. முகம் முழுவதும் நன்றாக பிளெண்ட் செய்யப்பட்ட லைட் வெயிட் ஃபவுண்டேஷனை இடவும்.

2. கன்னங்களில் நியூட்ரல் பிங்க் காம்பேக்ட்டை கன்னத்தின் எலும்புகளில் இருந்து கண்ணின் வெளிப்புறம் வரை ஆங்கில சி வடிவில் இடவும். இந்த மேக்கப்புக்கு ஆழமும் நேர்த்தியும் கூட்ட கன்ன எலும்புகளுக்குக் கீழே இன்னும் அடர்த்தியான நிறத்தை பூசவும்.

3. ஐபுரோ பிரஷ் மூலம் புருவங்களைத் திருத்தி நேராக்கவும்.

4. உங்கள் கண்ணின் மேல் இமைகள் முழுவதும் உங்களுக்குப் பிடித்த ஒரு கலரை சமமாகப் பூசவும். மஸ்காராவைச் சேர்க்கவும்.

5. உதட்டில் ஐஸ் பிங்க் நிற லிப்ஸ்டிக் இடவும். ஒற்றி எடுத்துவிட்டு மீண்டும் இட்டு, சமப்படுத்தவும்.

6. உங்கள் கூந்தலை ஸ்டைலாக பின்னிக் கொள்ளலாம் அல்லது லூஸாகவும் விடலாம்.

ஹெர்ரிங்போன் பின்னல் இட்டுக் கொள்ள விரும்பினால், கூந்தலை இரண்டு பாதியாகப் பிரித்துக் கொள்ளவும். இரண்டிலிருந்தும் நுனிகளை பின்னிக் கொண்டே வந்து, இடையில் கிராஸ் செய்வது போல பின்னவும்.

# தீதும் நன்றும் பிறர் தர வரா

தீதும் நன்றும் பிறர் தர வரா யாருக்கும் தீங்கு நினைக்காத புனிதனாக இல்லாவிட்டாலும் நல்ல மனிதனாக நமக்கு நாமே வாழ்வது சிறந்த அறமே. உறவுகளுக்கும் சமூகத்திற்கும் அமையும் தீது எனும் ஒரு சிறு குற்றத்தை, தீங்கை ஏற்படுத்தாத ஒருவரின் நல்ல எண்ணம், சொல், செயலே அறமாகும். அத்தகைய வலிமை வாய்ந்த அறத்தின் வழியில் ஒருவர் இயங்கும்போது ஏற்படும் நன்மைக்கும் அவரே காரணமாகிறார். அறமற்ற வழியில் வினையாற்றும் போது ஏற்படும் தீமைக்கும் அவரே காரணமாகிறார். தினையொன்று போட்டு சுரை யொன்று முளைக்குமா! என்பது பழமொழி .காரணம் நாம் எவ் விதமா செயல்களுக்கு வித்திடுகிறோமோ அவ்விதமான விளைவுகளே நமக்கும் நடக்கும். அதனால்தான் எண்ணம் போலவே வாழ்க்கை என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். எம் மனமும் சிந்தனையும் தூய்மையாக இருப்பின் எம்மைச் சுற்றி நடக்கும் அதிர்வுகள் அனைத்தும் அழகாய் நன்மையாய் நடக்கும். நாம் செய்யும் செயலுக்கும் நினைக்கும் மனதிற்கும்சங்கிலி தொடராய் பிணைப்பு இருக்கிறது. வாழ்வில் நடக்கும் நன்மைக்கும் தீமைக்கும் பெரும்பாலும் இந்த எண்ணமே காரணமாக அமைகிறது. எம் நிம்மதி, மன அமைதி, பல சிக்கல்களுக்கும் இந்த எண்ண நீரோட்டமும் தேரோட்டமாய் கை பிடித்து வலம் வருகிறது. தூய்மையற்ற சிந்தனைகளும், செயல்களும் நிம்மதியில்லா பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும். நாளும் பொழுதும் நாம் நிம்மதி குறையும் போது நம் முடிவுகளும், திட்டங்களும் தெளிவில்லா கலங்கிய நீராய் அர்த்தமற்ற விரக்தி வாழ்க்கையாக முடியும். மீள முடியா சிக்கலே எம் எண்ணங்களினால் உருவாகிறது என்பது புரிந்து விட்டாலே பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்து விடும். நமக்கு கிடைத்த வாழ்க்கையில் இருப்பதில் கொஞ்சம் மற்றவர்களுக்கு பகிர்ந்து எம் எண்ணங்களில் தூய்மையை வளர்த்துக் கொள்வோம். புறம் பேசாமை, பொறாமை தவிர்த்து அடுத்தவரை ஏமாற்றி பிழைக்காமல் இருந்தாலே நாம் வாழும் வாழ்க்கை நிம்மதியானதாக மாறும்.

அடுத்தவர்கள் செய்யும் நன்மையும் தீமையும் எம் வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவதில்லை. எம் வாழ்வு நன்மையில் முடிவதும் தீமையில் முடிவதும் நம் செயல்களிலே என்பதை புரிந்து வாழ கற்றுக்கொள்வோம். வாழ்வு சிறப்புறும்



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...





Lukman, Hajara, Amaan




Anjali Kowshaly, Abilashini, Lavanya



# எழுத்தாளர் எம்.ஏ.ரஹீமாவின் "சூல்சோறு" சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா இன்று

நாச்சியாதீவு பர்வீன்




எழுத்தாளர் எம்.ஏ. ரஹீமா கொழும்பு பீர் சாஹிப் தெருவை பிறப்பிடமாகக் கொண்டவர். அவரை சுற்றியிருந்தவர்களின் வாசிப்பு காரணமாக வாசிப்பின் பக்கம் ஈர்க்கப்பட்டு தொடர்ந்தும் வாசித்தார், இவரது தொடரான வாசிப்பும், எழுத்தார்வமும் இலங்கையின் தமிழ் இலக்கியப் பரப்பில் தற்போது சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவராக இவரை அடையாளப்படுத்தியுள்ளது.

1978 ஆம் ஆண்டு தினகரனில் எழுத ஆரம்பித்தவர் சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துறையில் இருந்தாலும் இடைப்பட்ட காலத்தில் சுமார் 25 வருடங்களுக்கு மேலாக எழுத்துத்துறையை விட்டு விலகி தூரமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கால இடைவெளியில் எழுதாவிட்டாலும் நிறையவே வாசித்து அடுத்த தலைமுறை எழுத்தாளர்களைப் பற்றிய அறிமுகத்தையும் அதிகம் சேமித்துள்ளார்.



ஒரு ஆசிரியையாக தனது பயணத்தை ஆரம்பித்த எழுத்தாளர் எம்.ஏ.ரஹீமாவின் தேடலும், வாசிப்பும் இன்னும் தொடர்கிறது. கொஞ்சமாக எழுதியிருந்தாலும் மிகக்காத்திரமாக எழுதியுள்ளார் என்பதை அவரது சிறுகதைகளை வாசிக்கின்ற போது வாசகனால் உணரமுடியும்.

ஆசிரியையாக தான் பணிபுரிந்த பிரதேசங்களில் அந்த பிரதேசத்து மக்களின் உணர்வுகளை உள்வாங்கி, அவர்களின் வாழ்வியல் கோலங்களையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டினையும் ஆழமாக பதிந்துள்ளார். மறைந்த எழுத்தாளர்களான எம்.எச்.எம். ஷம்ஸ், கவிஞர் ஏ.இக்பால் போன்ற சிரேஷ்ட எழுத்தாளர்களின் வழிகாட்டலும், ஆலோசனையும், நட்பும் எழுத்தாளர் எம்.ஏ.ரஹீமாவின் வளர்ச்சிப்பாதையை செப்பனிட்டுள்ளது. சுமார் 45 வருடங்களுக்கு முன்னர் எழுத்துத்துறைக்குள் நுழைந்த மூத்த எழுத்தாளர் எம்.ஏ. ரஹீமாவுக்கு வழிகாட்டியாக விளங்கிய எம்.எச்.எம்.ஷம்ஸினால் உருவாக்கப்பட்ட பல நூறு எழுத்தாளர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கே பதிய விரும்புகிறேன்.

குருநாகல் தெலும்புகல முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியையாக முதல் நியமனம் பெற்று அங்கு கடமையாற்றிய போது அந்த மக்களோடு நெருங்கிப்பழகி அந்த மண்ணின் மனத்தை நுகர்ந்து தனது கதைக்களங்களை உருவாக்கிக்கொண்டார்.

பின்னர் கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும், அடுத்து கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் தொடர்ச்சியாக 22 வருடங்கள் சேவையாற்றிய இவர் 2008ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

1979 இல் இலங்கையில் இடம் பெற்ற உலக இஸ்லாமிய தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது அ.ஸ.அப்துஸ் ஸமது அவர்களால் தொகுக்கப்பட்ட சிறுகதைத் தொகுதியான 'பிறைப்பூக்கள்' சிறுகதைத் தொகுதியில் இவரது 'சூல்சோறு' எனும் சிறுகதையும் இடம்பெற்றது.

1978 – 1990 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தினகரன்.வீரகேசரி.மல்லிகை. அஷ்ஷூரா, நேர்வழி என்பன இவரது சிறுகதைகளைப் பிரசுரித்தன. வானொலி முஸ்லிம் சேவையிலும் இவரது சிறுகதைகள் வாசிக்கப்பட்டன. சிறுகதைகள் தவிர கவிதை, விமர்சனக் கட்டுரை எழுதுவதிலும் இவருக்கு ஈடுபாடு உள்ளது.

வானொலியில் முஸ்லிம் நிகழ்ச்சி மாதர் மஜ்லிசுக்கு அவ்வப்போது பிரதிகள் எழுதியுள்ளார். வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி விசேட தினங்களில் நடத்தும் கவியரங்குகளில் அதிகம் பங்கு பற்றி தனது கவிதை தொடர்பிலான பட்டறிவை பகிர்ந்துள்ளார்.

1992 களின் பின்னர் எழுத்துத்துறையிலிருந்து விழகியிருந்த எழுத்தாளர் ரஹீமா 2023ல் மீண்டும் எழுதத் தொடங்கியுள்ளார். இவரது பல சிறுகதைகளின் பிரதிகள் தவறியமையால் தொகுதியொன்றை வெளியிட முடியாதிருந்த நிலையில் திக்குவல்லைக் கமாலிடமிருந்து தனது சிறுகதைகளின் பிரதிகளைப்பெற்று

தன் ஆரம்பகால சிறுகதைகள் சிலதை சிரமத்துடன் தேடியெடுத்து, இவ்வருடம் எழுதிய சிறுகதைகள் சிலதையும் ஒன்று சேர்த்து இன்று 'சூல்சோறு' எனும் சிறுகதைத் தொகுதியை எமக்குத் தந்துள்ளார்.

**கேள்வி : எழுத்துத்துறை மீது ஆர்வம் ஏற்பட காரணமான காரணிகள் அல்லது உந்துசக்தி யாது?**

நான் சிறுமியாக இருந்த காலப்பகுதியில் எங்கள் வீட்டை சுற்றி இருந்த அதிகமான வீடுகளில் குமுதம்,ஆனந்த விகடன், ராணி, கல்கண்டு, கல்கி போன்ற வார இதழ்களை ஆண்களும் பெண்களும் வாசிப்பார்கள். இவற்றில் வரும் தொடர்கதைகளை சேகரித்துக் கட்டி நட்பு வட்டத்துக்கிடையே கைமாற்றிக் கொள்வார்கள். இவர்கள் எல்லாம் பெரிதாகப் படித்தவர்களில்லை. வாசிக்கும் பழக்கமுடைய இவர்களுடனான தொடர்பே எனக்கு வாசிப்பில் ஈடுபாட்டையும் எழுத வேண்டுமென்ற ஆர்வத்தையும் தந்தது.

**கேள்வி : 1980 களின் காலப்பகுதியில் சிறந்த சிறுகதையாசிரியராகக் அறியப்பட்ட நீங்கள் முதலாவது எழுதியது சிறுகதையா, அல்லது வேறு ஏதும் ஆக்கங்களா?**

நான் 10ம் வகுப்பில் படிக்கும் போது 'தாய்மை' என்ற தலைப்பில் எழுதிய கவிதையொன்று கவிஞர் ஈழவாணன்; அவர்களின் அறிமுகத்தோடு தினபதி கவிதா மண்டலத்தில் பிரசுரமானது. இதுவே பத்திரிகையில் வெளிவந்த எனது முதல் ஆக்கம். அதன் பின் எதுவும் எழுதவில்லை. பின் 1978 இல் நான் எழுதிய 'கனவுகள் கலைகின்றன' என்ற எனது முதல் சிறுகதை தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமானது.



**கேள்வி : சிறுகதைத் தவிர ஏனைய இலக்கியங்களில் உள்ள ஈடுபாடு எத்தகையது?**

பத்திரிகைகள், வானொலி, சஞ்சிகைகள் என்பவற்றுக்கு கவிதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்பன எழுதி இருக்கிறேன். வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியின் மாதர் மஜ்லிஸ்நெஞ்சோடு நெஞ்சம் நிகழ்ச்சிக்குப் பிரதிகள் பல எழுதி இருக்கிறேன். தவிர வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியின் விஷேடதின கவியரங்குகளில் அதிகமாகப் பங்கு பற்றியுள்ளேன்.

**கேள்வி : உங்கள் எழுத்துத்துறைக்கு உதவியவர்கள், உந்துசக்தியாக இருந்தவர்களை ஞாபகப் படுத்த முடியுமா?**

நிச்சயமாக. நான் எழுதத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே பிரபல எழுத்தாளர் மர்ஹூம் எம்.எச்.எம்;.ஷம்ஸ் அவர்களின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. அப்போது நான் எழுதி இருந்த இரண்டொரு சிறுகதைகளை வாசித்து விட்டு, சமூகப் பிரச்சினைகளைத் தேர்ந்தெடுத்து மண்வாசனையோடு எழுத வழிகாட்டினார். சிறுகதை இலக்கியம் தொடர்பாக விளக்கம் தந்து சிறந்த சிறுகதைத் தொகுப்புக்களை வாசிக்கவும் தந்தார். நான் அளுத்கமை ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் கற்றுக் கொண்டிருந்த போது அங்கே விரிவுரையாளராகக் கடமையாற்றிய கவிஞர் மர்ஹூம் ஏ.இக்பாலும் என்னைப் பெருமளவு ஊக்கப் படுத்தினார். வீட்டில் நூலகம் ஒன்றையே வைத்திருந்த இவர் மிகச் சிறந்த நூல்களையெல்லாம் வாசிக்கக் கொண்டு வந்து தருவார்.

14 ஆம் பக்கம் பார்க்க...

Senthooram செந்தூரம்

# கும்புறுமூலை விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சி







உலக சனத்தொகையில் 15 சதவீதமானவர்கள் மாற்றுத் திறனாளிகளென ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் அடிடிகோஸ் தெரிவித்துள்ளார். உலகில் விசேட தேவையுடையவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணருவதற்குப் போதிய சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை என்றும் அவர் கூறினார். விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சிபெறுவதற்கென மட்டக்களப்பு கும்புறுமூலையில் அமைந்துள்ள நிலையத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் சிறுவர் நிதியத்தின் ஆசிய பிராந்திய நாடுகளுக்கான பணிப்பாளர் ஹனிகே அவுட்கேர்க் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். விசேட தேவையுடையவர்கள் தொழில் பயிற்சிபெறுவதற்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் மொழிமூலமான முதலாவது நிலையம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. சிறுவர் நிதியம் சமூக சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து நாட்டின் பதினொரு மாவட்டங்களில் இத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. இங்குள்ள பயிலுநர்களுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் சிறுவர் நிதியம் வழங்கியுள்ளது. அத்துடன் இப்பயிற்சி நிலையத்திற்கு மல்டி மீடியா உபகரணம் ஒன்று இந்நிகழ்வின்போது சம்பிரதாயபூர்வமாக சிறுவர் நிதியத்தினால் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர் நிதியத்தின் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் பிரதி நிதிகள் பங்கேற்றனர். இங்கு முதல் தொகுதியாக 25 இளைஞர், யுவதிகள் தையல் மற்றும் இலத்திரனியல் பயிற்சிகளைப் பெறுகின்றனர். இப்பயிலுநர்கள் சுற்றாடலிலுள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கருவிகளினால் பேண்ட் வாத்தியம் இசைத்து அதிதிகளை வரவேற்றனர்.

(ஏறாவூர் நிருபர் நாஸர்)

# ராணி சீதரனின் கடவுள்தான் அனுப்பினாரா? என்ற நூலின் வெளியீட்டு விழா









ராணி சீதரனின் கடவுள்தான் அனுப்பினாரா? என்ற சிறுகதை நூலின் வெளியீட்டு விழா, சங்கானை கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வு விழிப்புணர்வு செயற்பாடாக இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது . இளந்தளிர் விசேடதேவையுள்ள பிள்ளைகளின் கதையைப் பிரதிபலிக்கும் கதை கடவுள்தான் அனுப்பினாரா? அந்தப்பிள்ளைகள் கலை நிகழ்வுகளைச் செய்தார்கள். தமிழ்த்தாய் வாழ்த்தினை ச. ரஸ்மிகா என்ற இளந்தளிர் மாணவியே பாடினார். நிகழ்வுக்குத் தலைமை வகித்த ஐ . சாந்தன், பிரதம விருந்தினர் இ .கிருஸ்ணகுமார், சட்டத்தரணி சோ தேவராசா , சபா குகதாஸ் போன்றோர் மங்கள விளக்கேற்றுவதையும் அறிமுக உரையை சபா தனுஷனும் நயவுரையை யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ குமரனும் ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.நூலாசிரியரால் இளந்தளிர் அமைப்பினரைக் கௌரவித்து அன்பளிப்பும் வழங்கப்பட்டது.



# கல்வித் துறையில் சவால்களை சாதுரியமாக எதிர்கொண்ட சனூலா அதிபர் ஓய்வு

இலங்கையின் தென்கரையிலே ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலையெனும் ஊரிலே 1963ம் வருடம் செப்டம்பர் மாதம் 20ம் திகதி மஹ்மூத் மொஹமட் அமீர் அபூதாலிப் ஸித்தி ஸனீஹா ஆகிய தம்பதியினருக்கு மூத்த புதல்வியாக இவ்வுலகில் பிறந்தேன். தங்காலை முஸ்லிம் வித்தியாலயத்தில் எனது ஆரம்பக் கல்வியைப் பயின்று திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலையிலே இடைநிலைக் கல்வியை முடித்து மாத்தறை தாருல் உளும் மகாவித்தியாலயத்திலே உயர்கல்வியைத் தொடர்ந்து முதன் முறையாகத் தேறிய யான் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே என்னைப் பதிவு செய்தேன்.

பாடசாலை வாழ்க்கையின் பின்னர் கலைத் துறையிலே நிறைய ஈடுபாடு காட்டினேன். வானொலி மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சிக்காக ஒரு முஸ்லிம் பெண் எவ்வாறு செயற்பட வேண்டும் என்ற கருத்துப்பட நிறைய கடிதங்களை எழுதினேன். அதில் ஆசிரியைக்கு ஒரு மடல், சகோதரிக்கு ஒரு மடல் மற்றும் ஏகத்துவம் என்ற முத்தான மூன்று தலைப்புகள் இன்னும் என் நெஞ்சில் நீங்காத தலைப்புக்களாகும். இதன் வழியேயே என் வாழ்க்கைப் பயணமும் அமைந்துள்ளதை இட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் ஒரு பெண்ணாகப் பிறந்தவள் வெட்டியாக முடங்காமல் சமூகத் தேவை கருதி தன்னைத் தியாகம் செய்ய வேண்டியவளாக இருப்பதை எனது எழுத்துக்களில் நான் பதித்திருக்கின்றேன்.

வாழ்க்கையின் நோக்கத்தையும் மறுமையின் தாக்கத்தையும் உணர்ந்தவளாக என் இருபத்திரண்டாம் வயதிலே ஒரு குடும்பத் தலைவியாக என்னை மாற்றிக் கொண்டேன். எனது அன்புக் கணவராக அன்பிலும் பண்பிலும் ஆன்மீகத்திலும் கூடிய அக்கறை கொண்ட எனது ஊரைச் சேர்ந்த செய்யது யாஸீன் மௌலானா செய்யது மசூர் அவர்கள் வாய்க்கப்பட்டார்கள்.

எனது குடும்ப வாழ்க்கையில் எனது குழந்தைகள் சிறந்த பண்புள்ளவர்களாக, ஆரோக்கியமுள்ளவர்களாக, வாழ்க்கைக்குத் தேவையான அறிவுள்ளவர்களாக வீடும், நாடும் ஏற்றுக் கொள்ளக்கூடிய செல்வங்களாக வளர்க்க வேண்டும் என்ற அவாவிலே பல பத்திரிகைகளை தினமும் வாசித்தேன். குடும்பநல மருத்துவர்களை நாடி அவர்களது உபதேசங்களைக் கொண்டு அவற்றைப் புத்தகங்களாக எழுதி வைத்துக் கொண்டேன். காலப் போக்கில் இவை அனைத்தும் என் வாழ்க்கைக்கு மட்டுமன்றி பலருக்கு உதவக்கூடியதாக இருந்தது.

அரச தொழிலை நாடாத யான் தையல் கலையிலே என் திறமைகளை வெளிக்காட்டி சிறந்த வருமானத்தைத் தேடிக்கொண்டிருந்தேன். இக்காலத்தில் நான் இரண்டு பிள்



ளைகளுக்குத் தாயாக எனது வாழ்க்கைப் பாதையில் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக நடைபோட்டுக் கொண்டிருந்தேன்.

இவவேளை என்வாழ்வில் ஒரு பேரிடி காத்துக் கொண்டிருந்தது. எனது இரண்டாவது குழந்தை நோய்வாய்ப் பட்டது. ஆம் அவருடைய உடலில் ஓடக்கூடிய இரத்தம் ஒரே இரத்தமாக இருப்பதை வைத்தியப் பரிசோதனைகள் தெரியப்படுத்தியது. குழந்தை பத்து மாதத்தில் எம்மைவிட்டுப் பிரிந்தது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். இந்த நிலையிலே மனம் நொந்து காணப்பட்ட எனதுள்ளத்துள் ஓர் எண்ணம் உதித்தது.

அக்கால கட்டத்தில் ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. ஒரு குழந்தைக்காக குழந்தைகளை வழிநடாத்துவதற்காக குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக பலருடைய வேண்டுதல்களை சிரம் மேற் கொண்டு எனது மடியில் தவழ்ந்த மழலைக்கு சேரும் விதத்திலே தூய எண்ணத்துடன் ஆசிரியப் பணிக்கு விண்ணப்பித்து சித்திரப் பாட ஆசிரியையாக நியமனம் பெற்றேன்.

ஆசிரியர் பயிற்சிக்காலத்திலே திறமையாக செயற்பட்டு நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டதுடன் உடனுக்குடன் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலிலே கற்பவற்றை செயற்படுத்தினேன். இதன் மூலம் பாடசாலையிலே தேசிய கல்வி நிறுவனத்தினால் வருகை தந்து கண்காணித்த போது அவர்களின் பாராட்டைப் பெற்றது இன்னும் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கின்றது.

ஒரு பாட ஆசிரியையாக நியமனம் பெற்றாலும் பல ஆசிரியர்களின் தேவையை என்னால் பூர்த்தி செய்ய முடிந்ததையிட்டு அல்லாஹ்வைப் புகழ்கின்றேன். ஆசிரியராகப் பொறுப்பேற்றதன் பின்னர் கலை கலாச்சாரத் துறையிலே எனக்கு இருந்த ஈடுபாடு மேலும் அதிகரித்தது. சிறுகதைப் பட்டறைகள், நாடகப் பட்டறைகள், சித்திர வகுப்பறைகள், களிகம்பாட்ட நிகழ்ச்சிகளை வடிவமைத்தல், தமிழ் மொழித் தினத்துக்காக சகல மாணவர்களையும் பயிற்றுவித்தல், போட்டிகளுக்கு அனுப்புதல் மாத்திரமல்ல மாணவர்களுக்கு வெற்றிவாகைசூடிக் கொடுத்துள்ளேன். பாடசாலையின் புகழ் ஓங்கச் செய்த காரியங்களை இன்று நினைத்துப் பார்க்கின்றேன். இருந்த பாடசாலைகளின் பாடசாலை கீதம் என்னால் இயற்றப்பட்டவையாக இப்பொழுதும் விழங்குவது கண்டு ஆனந்தமடைகின்றேன். அகில இலங்கை ரீதியிலும் மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளேன்.

ஆசிரியையாக பத்து வருடங்கள் கழிந்த பின்னர் எமது ஊரின் அறநெறிப்பாடசாலை பற்றியும், பெண்களின் நிலை பற்றியும் தேடவேண்டிய கடமைப்பாடு என் உள்ளத்தில் எழுந்தது. இதன் காரணமாக அந்நூர் மாதர் சங்கத்தை ஆரம்பித்து ஊரில் பல சேவைகளைச் செய்தேன். ஊரிலுள்ள பெற்றார்களின் நிலை கண்டு அஹதிய்யாப் பாடசாலையின் அதிபராகச் செயற்பட்டு பல வருடங்கள் எனது சேவையை எமதூர் சிறார்களுக்கு வழங்கினேன்.

இத்தோடு எனது ஆசிரியத் தொழில் காலத்தில் தங்காலைக் கல்விக்காரியாலயத்தின் மூலம் சிறந்த ஆசிரியை எனும் சான்றிதழ்களைப் பெற்றுள்ளேன். ஆகில இலங்கை ரீதியில் ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியிலே முதலாம் இடத்தைப் பெற்றேன் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்காலத்தில் எனது ஊர்ப்பாடசாலையிலே புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படாமை பற்றி ஓர் ஆய்வைச் செய்தேன். இதனால் சிங்கள மொழிப் பாடசாலைகளின் உதவியைப் பெற்றுக் கொண்டேன். அப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களும் கல்வியிலே பின்நிற்கின்றதை உணர்ந்தேன் . எனது இரு மகன்களையும் சிங்கள மொழியில் கற்க வைத்தேன்.அவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றனர்.ஏனைய பிள்ளைகளுக்கும் கல்வி புகட்டி சித்தியடைய செய்து பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினேன்.

தென் மாகாணத்திலே இன்றும் அன்றும் ஆரம்பப் பிரிவிலே வளவாளர் பற்றாக்குறை நிலவுவதை யாராலும் மறுக்க முடியாது. எனவே யான் ஆசிரியையாக இருந்த சமயம் ஆரம்பப் பிரிவு வளவாளராக பல செயலமர்வுகளுக்குச் சென்றுள்ளேன்.

2006ம் ஆண்டு விண்ணப்பிக்கப்பட்ட ஆசிரியர் ஆலோசகர் பதவி மற்றும் அதிபர் பதவிக்காக என்னை உரசிப்பார்க்கின்றேன். 2009ம் ஆண்டு அதிபராக நான் பொறுப்பேற்கின்றேன். நலகம முஸ்லிம் வித்தியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்ற நான் மாத்தறை மாவட்டத்தில் ஹக்மன (முலடியன) கல்வி வலயத்தில் மீஎல்லை ஊரில் அல்மினா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டேன். அதனைத் தொடர்ந்து தென் மாகாணத்தின் மாறை/அறபா தேசிய பாடசாலை 1000 பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அதன் ஆரம்பப் பிரிவு மாகாணப் பாடசாலையாக மாற்றம் பெற உள்ளதால் அதிபர் தேவை அங்கு நிலவுவதை அறிந்து அச்சிறார்களுக்கு உதவுவதற்காக என்னைத் தயார்படுத்தினேன். 2012.03.12ம் திகதி அறபா தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாறை வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையாக உருமாற்றம் பெற்று எனது தலைமையில் இயங்கி வந்தது எனலாம்.

**பொறுமை, அர்ப்பணிப்பு, மற்றவரை மதித்தல், விட்டுக் கொடுத்தல், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, அன்பு, பணிவு போன்ற நற்குணங்களை அள்ளித் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் அல்ஹம்து லில்லாஹ்.**








தொடர்புகளுக்கு:
ரொம்ப பிணி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com
Whatsap: 0714901181

# கடல் தன் மீனைச்சமைப்பதில்லை மீன் தன் கடலைச் சமைக்கிறது

'கடல் தன் மீனைச் சமைப்பதில்லை'

இந்தத் தலைப்பின் அழகியல் கடந்த யதார்த்தம்;ஆழ்ந்த பொருள்;குறியீட்டுச் சிந்தனை;கவர்ந்திழுக்கும் மாயம்; இழையோடும் மெல்லுணர்வு;உயிர் நேசமென கவிதையின் ஆழத்தை விரவி நிற்கிறது.

மீன் தன் கடலைச்சமைக்கிறது.அது தன் வாழ்வுரித்தை நீரின் மேனியில் எழுதுகிறது. ஜீவிதத்தை திசையடங்க வாழ்கிறது; மீன் தன் கடலைச் சமைக்கிறது.




உண்மையில் வெளிப்படையாகச் சொல்வதென்றால் கவிதை ஒரு கடினமான தொழில் இலையுதிர் காலத்தின் லயத்திற்கேற்ப கவிதையின் வெற்றி தோல்வி'என

பெரு நாட்டுக் கவி ஜேவியர் ஹெராட் பிறக்கிறது;உயிரில்லாச் செய்திகளுக்கு உயிர் மிகக் கொடுத்து ஒளியில்லாச் செய்திகளுக்கு ஒளியருள் புரிவதும் கவிதைதான்'என்கிறான் பாரதி.

வாழ்க்கைக்கும் கவிதைக்குமிடையில் நெருங்கிய உறவு இருக்கிறது. வாழ்க்கையைப் பிரதி செய்து தரும் நிழல்தான் கவிதை;

வாழ்க்கையை அப்படியே மீளக்காட்டும் கண்ணாடிதான் கவிதை.

லார்க் கண்ணாடியாகி நிற்கிறார். அவரது பெரும்பாலான கவிதைகளில் வரும் 'அவன்' கண்ணாடியின் விம்பமாகத்தான் தெரிகிறான்.

'ஒரே நிறமுள்ள ரத்தம்
இதில் எது அவனின் ரத்தம்
யோசிக்க முடியாமல் திணறுகிறான்'

இந்தக் கவிதைக்குள் பொதிந்துள்ள அர்த்தத்தின் வீச்சம் வாசகரின் இதயத்தில் இறங்குகிறது.

'கவிதைக்கலை'யை இப்படித்தான் தொடங்குகிறார். 'நமக்குத் தொழில் கவிதை'யென பாரதி பாடியது போல

கவிதையென்பது சொற்களையடுக்கியெடுக்கும் ஒரு தயாரிப்புக்கலை அல்ல.அது உயிர்ப்பான செயல்வாதம். மனப்புலத்தின் உணர்நிலை வெளிப்பாடு. லார்க் பாஸ்கரனின் கவிதைகளின் அடியாக உள்ளோடுமொரு உணர்வு நிலையைக் காணலாம்.

கவிதையில் சொற்கள் வெறுமனே கோர்க்கப்படுவதில்லை. அவை உள்ளார்ந்து நின்று எண்ணங்களினதும்,உணர்வுகளினதும் மனக்கொதிப்பை அல்லது மனச் சாந்தத்தை வெளிப்படுத்தி விடுவது.

லார்க்கின் கவிதைகளை வாசிக்கும் போது இயல்பு கெடாது சொற்கள் பொங்குவதை,கொதிப்பதை,தணிவதை,மனதிலொட்டுவதைக் காணலாம்.

இத்தகைய சொற்களூடாக கவிதைச்செயல்வாதமொன்று உருவாகிறது. கவிதைச்செயல்வாதம் புரிதலென்பது வாழ்வனுபவத்தின் ஒரு கணப்பொழுதை அல்லது உணர்நிலையை அல்லது சம்பவத்தை,சம்பவத்தின் கூறை ,அதனடியாகத் தோன்றும் குணாம்சத்தை வெளிக்காட்டும் நுண்மையான படைப்பு அல்லது ஊற்று.

'கவிதை அழகியலின் ஊற்றுநிலை.இயற்கையின் வண்ணத்தைப் பூசி வாழ்வைச் செழுமை செய்யும் அல்லது அர்த்தப்பட வைக்கும் அற்புதக்கலை கவிதை.

'அழகிய பொருள் ஒவ்வொன்றும் எப்போதும் மகிழ்ச்சியைத்தரும்'என்பார் ஜோன் கீட்ஸ்.

பெரும்பாலும் இயற்கையின் ஒவ்வொரு வடிவமும் வடிவழகானதுதான்.அது கவிதையின் முருகியல் நிலை.அது இதயத்தின் அழகியல்.

லார்க் என்கிற இதயத்தின் அழகியல் அவரது கவிதைகளில் நீந்துகிறது அல்லது அலையெனத் துள்ளிக்குதிக்கிறது.

'உண்மையில் கவிஞனின் இதயத்திலிருந்து கவிதை தில் இறங்குகிறது.

லார்க்கின் கவிதைகள்

'குவிக்கப்பட்ட மணல் மேடாய்
அவனின் அனுபவக்குப்பைகளை
தானியங்கிக் கருவியொன்று அகற்றியது'போல

கவிதையெனும் தானியங்கி அனுபவங்களை மழையாய்ப் பெய்கிறது அல்லது வெயிலாய்ச் சுடுகிறது.

கவிதையிடம் எப்போதும் ஒரு ஒளிக்கீற்று இருக்கிறது. சூரியனின் கதிர்கள் பரவிப்பொங்கி ஒளி கொடுப்பது போல கவிதையும் இருளுக்கு ஒரு சூரியன்;

ஒரு நிலவு;
ஒரு நட்சத்திரம்;
கவிதையும் இருளுக்கு ஒரு லாந்தர் தான்.

லாந்தர் வெளிச்சத்தில் வாழ்வின் குறுக்கும் நெடுக்குமான கோலங்களைத் தரிசிக்க முடியும்;

இந்தக்கவிதைக் கோலமென்பதற்கு எது பொருள் என்பது கிடையாது.எல்லாமும் பொருள்தான்.

லார்க் சொல்வது போல

'சிந்தனையின் பக்கவாட்டிலிருந்து
உயிர்த்தெழுகிறது நினைவுகள்
ஏக்கத்தின் ஒரு பகுதியில் நின்றபடி கடக்கிறது வாழ்வு'

வாழ்வுகடந்து வரும் பாதை லார்க்கின் கவிதை வழி வளைந்து நெளிந்து ஓடுகிறது நதியாகி.

'வாழ்ந்து மட்டுமே
கற்றுக்கொள்ள முடிந்தது
அவனின் வாழ்க்கை
பிறப்பதற்கு முன்பும்
மரணத்திற்கு பின்பும்
மௌனம் சாத்தியமானது'

லார்க் பாஸ்கரனின் 'அவன்' மௌனத்தை உடைத்துக்கொண்டு வெளிவருகிறான். (தொடரும்)

# செ.யோகராசா என்கிற செழுமை மனிதனின் பிரிவு

ஈழத்து இலக்கியத்தடத்தில் தன் பசுமையான பாதச்சுவடுகளால் ஒரு வழித்தடத்தைப்பதிவு செய்துவிட்டுப் பிரிந்திருக்கிறார் செழுமை பூத்த மனசுக்காரர் செ.யோகராசா என்கிற நமது முதுசொம்.



செ.யோகராசா ஈழத்தின் தமிழ் இலக்கியம், இலக்கணம், திறனாய்வு, ஆய்வு, பதிப்பு, பாடவிதானவாக்கம், உரையின் உயர்ந்த தளத்தில் இயக்கம் கொண்டவர். ஓயாத இலக்கிய அலையெழுச்சி அவர்; பக்குவமான, பண்பட்ட, மென்மையான, இதயபூர்வமான அலை இயக்கம் பேராசான் யோகராசா.

பல்கலைக்கழக விரிவுரையாளனான அவரிடம் ஆழ்ந்த தேடலும், சிந்தனையைக் கிளர்த்தும் தாகமும், பக்குவமான அணுகுமுறையும், மிக்கவர்.

பனுவல்கள் வழி அவரது ஆழ்ந்த ஆய்வறிவைக் கண்டடையலாம்.புதியபுதிய சிந்தனை வழியே எழுத்தை விரிக்க வல்லவர்.

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்க வல்லமுறையில் அணிந்துரைக்க வல்லவர். மலர்களிலும் சஞ்சிகைகளிலும் ஆயிரக்கணக்கில் எழுதியவர்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இலக்கிய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் படிக்கவல்ல ஆளுமை கொண்டவர்.

கல்வித் திணைக்களம் பாட நூலாக்கத்தில்,தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரிய அறிவுரைப்படி வழிகாட்டிக் மனுவில் ஆக்கம்,பரீட்சைத்திணைக்களத்தின் வினாக்கட்டமைப்பு,என தமிழ் இலக்கியப்புலத்தில் ஊன்றிநின்ற பெரியார் பேராசான்யோகராசா.

# இலக்கியப் பயில்வது: தமிழ் சிங்கள எழுத்தின் வாண்மை

இலக்கியப்பயில்வினூடாக அனுபவங்களைப் பரிமாறும் களமாக சிங்கள தமிழ் எழுத்தாளர் அமையத்தின் முன்னெடுப்பு கடந்த மாதம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடந்தேறியது. மொழியிணைவினூடாக சிங்கள தமிழ் மொழிவழி இலக்கியக்கலந்துரையாடலுக்கான முன்னெழுப்பும் இதனைப் பார்க்கலாம்.

தமிழ்சிங்களம் என வெவ்வேறாகப் பயிலுகை நிகழப்பெற்றாலும் தமிழ் முஸ்லிம்சிங்கள மொழிசார் பயிலுநர்கள் அளவளாவக்கிடைத்தமை நல்ல தருணமே எனலாம்.

மூன்று தினங்களில் முன்னெடுக்கப்பட்ட பயிலுகை கவிதை,சிறுகதை,நாவல்,மெல்லிசையென அனுபவமிக்க ஆளுமைகளில் முன்னெடுக்கப்பட்டன.மாணவர்கள்,இளைஞர் யுவதிகள்,மூத்தோர் என் ஆர்வமிக்க பயிலுநர் படைமொன்று உருவானது.

தமிழில் மேமன் கவியும்,சடகோபனும் இணைப்பாளர் மை செய்தனர்.

தலைநகரில் நீண்டகாலத்தின் பின்னரான ஒரு முன்மாதிரியாக இதனை ஆர்வலர்கள் பாராட்டுகின்றனர்.

வளவாளர்களாக பவானி சிறிதரன், பதுளை சேனாதிராஜா,(சிறுகதை) தி.ஞானசேகரன், இரா.சடகோபன்(நாவல்), சு.முரளிதரன், முல்லை முஸ்ரிபா(கவிதை), வதஇரஇ சி.ரவீந்திரன் (மெல்லிசைப் பாடல்) ஆகியோர் கலந்துகொண்டு இலக்கியப்பயிலுநர்களை ஆற்றுப்படுத்தினர்.

11 ஆம் பக்கத் தொடர்ச்சி...

**கேள்வி : *1990* களுக்கு முற்பட்ட காலங்களில் எழுதிய அதே கதைக்களம் இன்றும் இருக்கின்றதா? அல்லது 2023 இல் கதைக்களம் மாறி இருக்கின்றதா? அது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

வாழ்க்கைக் கோலங்கள் மாறும்போது கதைக்களங்கள் மாறுவது இயல்புதானே. உதாரணமாக 1990 களுக்கு முன்னைய கதைக்களங்கள் பெரும்பாலும் வீடு, கிராமம், நகரம், நாடு என்ற ரீதியில் அங்குள்ளோரின் பிரச்சினைகளையே மையமாகக் கொண்டிருந்தது. இன்று இவற்றோடு அரசியல் ரீதியான புலம்பெயர்வு, கல்வி தொழில் ரீதியான புலம் பெயர்வு என கதைக்களம் மாறி உறவுகளைத் தூரமாக்கி, உணர்வுகளைக் கேள்விக்குறியாக்கி இயந்திர மயமான வாழ்க்கையைக் கதைக்களங்கள் பெருமளவு கொண்டிருக்கின்றன என்பதை நாங்கள் பார்க்கத் தானே செய்கிறோம்.

**கேள்வி : *1980* களில் நீங்கள் எழுதிக் கொண்டிருந்த காலத்தில் எழுதிக் கொண்டிருந்தவர்கள் இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார்களா! அவர்களுடனான தொடர்பாடல் எப்படி இருக்கின்றது?**

எம்மை விட்டும் பலர் மறைந்து விட்டார்கள். பட்டியல் நீளும் என்பதால் பெயர் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. இவர்களுள் எனது எழுத்துலக வழிகாட்டிகளான எம்.எச். எம். ஷம்ஸ், ஏ.இக்பால் ஆகியோர் இன்று இல்லாததை நினைத்து மிகவும் மனம் வருந்துகிறேன்.

சுமார் 30 வருடகாலமாக எழுதுவதை விட்டிருந்ததால் எழுத்தாளர்களுடனான தொடர்புகளும் அற்றுப்போயிருந்தன. அண்மைக்காலங்களில் திக்வலைக் கமால் அவர்களோடு தொடர்பை பேணியதன் விளைவாகவும். அவர் வைத்திருந்த எனது சிறுகதைகள் சிலதை தந்ததன் விளைவாகவுமே இன்று இச்சிறுகதைத் தொகுதி வெளிவருகிறது எனலாம். தவிர புர்கான்பீ இப்திகார், அஷ்ரபா நூர்தீன், நூருல் அயின், நஜ்முல் ஹூஸைன் ஆகியோரோடும் தொடர்புகளைப் பேணி வந்திருக்கிறேன். வர்களெல்லாம் என்னை மீண்டும் எழுதச் சொல்லியும் சிறுகதைத் தொகுதியொன்றை வெளியிடுமாறும் அடிக்கடி வற்புறுத்துவார்கள்.

**கேள்வி : *1992* ஆம் ஆண்டுக்குப் பின்பு எழுத்துத்துறையை விட்டு விலகி மீள்பிரவேசத்திற்கு மிக நீண்ட இடைவெளியை எடுத்துக் கொண்டதற்கான காரணம் என்ன?**

எனது சொந்த வாழ்வில் ஏற்பட்ட சில நெருக்கடிகள் ஒரு காரணம்.

மற்றது நான் கற்பித்த பாடசாலையில் எனக்குத் தரப்பட்ட பொறுப்புக்களால் எனக்குக் கிடைத்த ஓய்வு குறைவு.

எழுதுவதற்கென்ற ஒரு மனநிலை எனக்கு அப்போது இருக்கவில்லை.

# போரத்தோட்டை அல் இஹ்லாஸ் சர்வதேச முன்பள்ளி பாடசாலையின் சிறுவர் விளையாட்டு போட்டி









நீர்கொழும்பு போரத்தோட்டை அல் இஹ்லாஸ் சர்வதேச முன்பள்ளி பாடசாலையின் 24வது வருடாந்த சிறுவர் விளையாட்டு போட்டி நீர்கொழும்பு அல்பலாஹ் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் ஷரீனா ஹசீம் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(26) நடைபெற்ற இவ் விளையாட்டு போட்டி நிகழ்வில் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸக்காஉல்லாஹ், முன்னாள் மாநகர சபை நஸ் மிஹார், முனவ்வர் ஆசிரியர், சட்டத்தரணி பஸீர், அல்பலாஹ் கல்லூரியின் உப அதிபர் சதீஸ் கான், ஹம்தா ப்ரடக்ட் உரிமையாளர் நௌபர், ஸ்கை மார்க்கட் உரிமையாளர் பரூஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும் , ஊடகவியலாளர் சில்மியா யூசுப் , அல் பலாஹ் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்களான ஹசீம், முஹம்மட் ரிஸ்லி,முஹம்மட் நவ்பர் ,கௌஸ், உட்பட பாடசாலையின் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தனர். இதேவேளை மாணவர்களின் மைதான நிகழ்ச்சிகளும்,வினோத உடை போட்டிகளும் சிறப்பாக இடம்பெற்றதுடன் 1999 ஆம் ஆண்டு ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தற்போது ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# புலவர் அருள்வாக்கி அப்துல் காதிர் நினைவுப் பேருரையும் விருது வழங்கலும்










தெல்தோட்டை ஊடக மன்றமும் அருள்வாக்கி கலை இலக்கிய கழகமும் கடந்த வியாழக்கிழமை கொழும்பு Y.M.M.A கேட்போர் கூடத்தில் ஈழத்து இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான புலவர் அருள்வாக்கி அப்துல் காதிர் புலவருக்கான நினைவுத் தினப் பேருரையையும் விருது வழங்கலையும் மூன்றாவது வருடமாகவும் நடாத்தின. நிகழ்வுக்கு தெல்தோட்டை எனசல்கொல்ல மத்திய கல்லூரியின் பழைய மாணவர் காப்பியக்கோ டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் தலைமை வகித்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

இக்கல்லூரியின் ஆரம்பப்பிரிவில் தான் பருகிய தமிழமுதமே தன்னை பிற்காலத்தில் பல காவியம் படைக்கவும் பல நூல்களின் பிதா மகனாகவும் தன்னை உருவாக்கியது எனவும் தமது ஆரம்ப கால பள்ளி வாழ்வின் நினைவுகளையும் மீட்டிக் கொண்டார்.

மற்றுமொரு பிரபல பேச்சாளரும் பன்னூலாசிரியரும் ஆய்வாளரும் அரசியல்வாதியுமான மல்லியப்பு திலகரால் ( திலகராஜா) மலையக இலக்கியமும் ஈழத்து இலக்கிய வரலாறும் எனும் தொனிப் பொருளில் இவ்வருட கருப்பொருள் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. இவ்வுரை மூலம் அவரின் ஆழ்ந்த தமிழ் புலமையும் வரலாற்றாதாரங்களுடனான முன் வைப்பும் பார்வையாளரை வசீகரிக்கத் தவறவில்லை.

அருள்வாக்கி அப்துல் காதிருப் புலவரை ஜனரஞ்சகப் படுத்துவதில் முதன்மைப் பெற்றவர்களுக்கான வருடாந்த விருது வழங்கும் நிகழ்வில் இவ்வருடம் அருள்வாக்கி பற்றிய பல நூல்களைப் பதித்து வெளியிட்ட கல்ஹின்னைத் தமிழ் மன்றம் தெரிவானது. அதன் தற்போதய தலைவர் கவிஞர் பௌமி ஹலீம்தீனுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. தவிர்க்க முடியாத நிலைமைக் காரணமாக வருகைத் தர முடியாமையினால் அவ்விருதை பிரபல கவிஞரும் வலம்புரி கவிதா வட்டம் வகவம் தலைவருமான நஜ்முல் ஹுஸைன் பெற்றுக் கொண்டார். கடந்த வருடம் இவ்விருது ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் ஞானசேகரனுக்கு வழங்கப்பட்டமைக் குறிப்பிடத்தக்கது.

இவ்வருட நிகழ்வில் விஷேட அம்சமாக அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கிய கழகம் முகநூல் வழியாக நடாத்திய கவிதைப் போட்டியில் ஒரு வருடமாக கூடுதலான கவிதைகளை எழுதிய கவிஞர்கள், வெற்றிக் கேடயம் மற்றும் சான்றிதழ்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர். விழாவில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹலீம், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மற்றும் சிரேஷ்ட இலக்கியவாதிகள் திணைக்களங்களின் தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# தற்காப்பு சீனடி பயிற்சி செயலமர்வு



கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றது. மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தொலஸ் மகே பஹன எனும் 12 மாத வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயலமர்வை கிண்ணியா கலாசார அதிகார சபை ஒழுங்கு செய்திருந்தது. இச் செயலமர்வில் வளவாளர்களாக எம்.எம்.ராபி,ஏ.பஸீகு இல்ஹாம்,ஏ.ஏ.கபூர்,ஏ.கே.பஸீர் ஆகியோர் தற்காப்பு சீனடி கலைகள் பற்றி இங்கு விரிவுரையாற்றினர். மகமாறு , சம்மாவ ஜதீவு , காக்காமுனை மற்றும் பெரியாற்றுமுனை சீனடி சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவர்களுக்கான சான்றிதழ்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முகம்மது கனி, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜே.எம். ஹில்மி, திருமலை மாவட்ட செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.எம்.எம்.சம்சீத், கலாசார அதிகார சபை ஆலோசகர் எம்.ஏ.அக்பர் சலீம், கலாசார அதிகார சபை உப செயலாளர் எம்.ஏ.முகமட் மற்றும் வளவாளர்கள் ஆகியோரால் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# கிருபாகரன் கரல்ட் பிரணவன் தேசிய மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று சாதனை

அகில இலங்கை ரீதியில் மும்மொழிக்கும் பொதுவாக நடாத்தப்பட்ட ரோபோ தொழிநுட்ப தேசிய மட்ட போட்டியில் கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த உயர்ந்த தொழில்நுட்பப் பிரிவு மாணவன் கிருபாகரன் கரல்ட் பிரணவன் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். மாகாணம் மற்றும் வலய மட்டத்தில் 1ம் இடத்தினை பெற்று பாடசாலைக்கும் கிளிநொச்சி மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த மாணவனுக்கு பாடசாலை சமூகமும் வாழ்த்து தெரிவித்துள்ளது. இவரது கண்டுபிடிப்பான Relief attempt monitoring system ஆனது பாடசாலையில் நிறுவப்பட்டு வெற்றி கரமாக செயல்படுத்தபடுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.










இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 டிசம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.